ANGAYAR MALAR
ஆகஸ்ட் '94 ரூ. 7/-

மங்கையர் மலர்



நம்மவர்க்கும் சிந்தது வேண்டும்!




You won't see another outfit quite like this.

Because there's no one quite like you.

Hazel Salwar Kameez sets.

Pre-styled. Pre-co-ordinated. Ready to stitch.



சில பிரச்னைகள்; சில வார்த்தைகள்!

அண்மையில் வடநாட்டில் ஒரு பெரிய 'செக்ஸ் மோசடி' வெளியாகி இருக்கிறது. நூற்றுக்கணக்கான பெண்களைக் கற்பழித்து இருக்கிறார்கள். சாமியார் போர்வையில் சிலர், அரசியல்வாதிகளின் உறவினர்கள் சிலர்... படிக்கப் படிக்க ரத்தம் கொதிக்கிறது...

இங்கே மட்டும் என்ன வாழுகிறதாம்? ஒரு பிக்பாக்கெட்டையோ, திருடனையோ பிடிக்க முடியவில்லையென்றால் அவன் வீட்டில் இருக்கும் மனைவியையோ, சகோதரியையோ இழுத்துச் செல்ல வேண்டியது. 'தன் இஷ்டம் போல' உபயோகித்துக் கொள்ள வேண்டியது. 'காவல் நிலையக் கற்பழிப்பு' என்பது சர்வ சாதாரணமாகிவிட்டது.

நம் முன்னோர்கள் எல்லாம் சும்மா சொல்லவில்லை, "எந்தக் குடும்பத்தில்' பெண்ணின் கண்ணீர்' அதிகமாகிறதோ, அந்தக் குடும்பம் உருப்படாது" என்று. குடும்பத்துக்கு மட்டுமல்ல, அது நாட்டுக்கும் பொருந்தும். 'ஆற்றாது அழுத கண்ணீரு'க்கு இவர்கள் எல்லாம் பதில் சொல்லித்தான் ஆகவேண்டும்.

பாருங்கள், ஒரு கல்லூரி மாணவி, "என்னுடைய கனவு மெடிகல் படிக்க வேண்டும் என்பது. ஆனால் நான் இங்கிருக்கும் தாதாக்களால் சின்னாபின்னப் படுத்தப்பட்டேன். நான் மயங்கிக் கிடந்த போது என்னைப் பலவாறாகப் புகைப்படம் எடுத்திருக்கிறார்கள். அதைக் காட்டி மிரட்டியே என்னைப் பல முறை சேதப்படுத்தி இருக்கிறார்கள். நான் எப்படி இனி நிம்மதியாக வாழ்வேன்" என்று கதறி இருக்கிறாள்.


இப்படி ஒன்றல்ல, நூற்றுக்கணக்கான பெண்கள்! அந்த மைனர்கள் ரோடில் ஜீப்பில் செல்வார்களாம், இவர்களுக்கு ரோடில் செல்லும் பெண் யாராவது பிடித்துவிட்டால் அவளை இழுத்துச் சென்று கற்பழிக்க வேண்டியது. அதை அப்படியே வீடியோவாகவும், புகைப்படங்களாகவும் எடுக்க வேண்டியது, அதைக் காட்டி மேலும் மேலும் அவர்களுடன் உறவு கொள்ள வேண்டியது...

அங்கே என்ன மனிதர்களின் ஆட்சிதான் நடக்கிறதா? இல்லை சாத்தான்களின் ஆட்டம் நடக்கிறதா? அதேபோல ஒரு சாமியார் பூஜைக்கு வந்த பெண்களையெல்லாம் மயக்கி, இதேபோல புகைப்படங்கள் எடுத்து, மீண்டும், மீண்டும்....

பெண்கள் என்றாலே இவர்கள் காமப்பொருளாக மட்டுமே இன்னும்... இந்த நூற்றாண்டின் கடைசியிலும் பார்த்துக் கொண்டு இருக்கிறார்கள்! அதுவும் எப்படி? சிலந்தி வலையில் விழுந்த புழு எப்படித் தப்பிச் செல்ல முடியாமல் தவிக்குமோ, அப்படி மாட்டிக் கொண்ட பெண்கள் தவிக்க, இந்த சதைச் சிலந்திகள் அந்தப் புழுக்களின் ரத்தத்தை உறிஞ்சி உறிஞ்சி சக்கையைத் துப்பிக் கொண்டு இருக்கின்றன. சை, இப்படி ஒரு காமவெறியா?

அடேங்கப்பா, நாம் விஞ்ஞான யுகத்தில், கம்ப்யூட்டர் யுகத்தில் இருக்கிறோம் தெரியுமா உங்களுக்கு? எத்தனையோ கோடிக்கணக்கான மைல்களுக்கு அப்பாலுள்ள வியாழனில் ஷூமேக்கர் மோதுகின்ற நேரத்தை மணி, நிமிடத்தோடு கரெக்டாகச் சொல்கிறோம். அதைப் பற்றி உலகமெங்கும் ஆராய்ச்சி செய்கின்றோம். ஏன், 'சூரியனின் உள்ளே' பூகம்பங்கள் நிகழ்கின்றனவாம். எரிந்து கொண்டு இருக்கும் அந்தக் கோளத்தைப் பற்றிக் கூட ஆராய்ச்சி செய்யமுடிகிறது.

என்னென்ன கண்டுபிடிப்புகள்! நினைக்க நினைக்க ஆச்சரியமாக இருக்கிறது.



இங்கே 'சதைச் சிலந்திகள்' ராஜ்ஜியம்!

மஞ்சுளா ரமேஷ்


ஒரே சிரிப்பு மயம்! என்று சொல்லும்படியான 51 வகையான சிரிப்பு நூல்கள்



சிரித்து மகிழ சிறந்த ஜோக்குகள் பாகம் - 1, 25.00, பாகம் - 2 16.50, சிந்திக்க வைக்கும் சிரிப்புகள் 14.00, படிக்கக் கூடாத ஜோக்குகள் 22.00, மாணவ மாணவியர் ஜோக்குகள் 10.00, கணவன் - மனைவி ஜோக்ஸ் 11.50, டாக்டர் வக்கீல்கள் ஜோக்ஸ் 12.00, அயல்நாட்டு ஜோக்ஸ் 21.50, அரசியல் ஜோக்ஸ் 16.00, அறுவை ஜோக்ஸ் பாகம் - 1 11.00, பாகம் - 2 7.00, ஹா... ஹா... ஹா... 11.00, நூறு சிரிப்புக் கதைகள் பாகம் - 1 13.00, பாகம் - 2, 12.00, கலைவாணர் வாழ்வில் நகைச்சுவையும் சிந்தனைகளும் 17.50, தமிழ்வாணனின் தலைசிறந்த நகைச்சுவை கேள்வி - பதில்கள் 22.00, ஜுவரின் அதிரடி ஜோக்குகள் 20.00, வேடிக்கை விடுகதைகள் 11.00, கடிஜோக்ஸ் 8.25, அவுட்டுச் சிரிப்புகள் 19.00, சிரிப்போ சிரிப்பு 15.50, வாங்கனோ் சிரிப்போம் 17.00, இளமை ஜோக்ஸ் 11.00, குபீர்ச் சிரிப்பு 15.00, அக்கரைச் சிரிப்பு 14.00, சிரிக்க சிரிக்க 23.00.

நகைச்சுவையுங்கள் (காடிக்குளம் ஜெயபாரதிப்ரியா) 27.50, சிரிக்க சிந்திக்க தெனாலிராமன் கதைகள் 17.00, சிரிக்க சிந்திக்க மரியாதை ராமன் கதைகள் 15.00, சிரிக்க சிந்திக்க பீர்பால் கதைகள் 14.50, சிரிக்க சிந்திக்க ராயர் - அப்பாஜி கதைகள் 19.00, சிரிக்க சிந்திக்க பரமார்த்த குரு கதைகள் 12.00, சிரிக்க சிந்திக்க முல்லா நஸ்ருத்தீன் கதைகள் 14.00, சிரிக்க சிந்திக்க பழமொழிக் கதைகள் 12.00, சிரிக்க சிந்திக்க மேதைகளின் நகைச்சுவை 15.50, சிரிக்க சிந்திக்க கிராமியக் கதைகள் 15.00, வால்கள் ஜாக்கிரதை! 12.60, அப்புசாமியும் ஹிப்னாடிஸப் பூனையும் 18.00, அப்புசாமியா குப்புசாமியா? 18.00, கமான் அப்புசாமி... கமான்! 27.00, ஹியூமன் பாம் அப்புசாமி 28.50, சீதாப்பாட்டியின் சபதம் 27.00, ஆகாசவாணியில் அப்புசாமி 21.00, அப்புசாமியின் கலர் டி.வி. (முழு நீளப் படக்கதை) 8.00, அலங்காநல்லூர் அப்புசாமி 16.00, அப்புசாமி பரீட்சை எழுதுகிறார் 18.50, அப்புசாமி செய்த கிட்னி தானம் 15.50, மாணவர் தலைவர் அப்புசாமி 23.95, பெண் பார்த்தல் - ஒரு பேத்தல் 25.50, மகாபலிபுரத்து அற்புதங்கள் 28.00

பெண்கள் படிக்க வேண்டிய பொது அறிவு நூல்கள்!



ஜெனரல் நாலெட்ஜ் (பொது அறிவு விஷயங்கள்) பாகம் - 1 28.00, பாகம் - 2, 52.00, பள்ளிப் பிள்ளைகளுக்கான பொது அறிவு விஷயங்கள் பாகம் - 1 34.00, பாகம் - 2 36.00, பொது அறிவுக் களஞ்சியம் 13.50, செஞ்சிலுவை சங்கத்தின் கதை 12.00, திறன் வளர்க்கும் விடுகதைகள் பாகம் - 1, 27.50, பாகம் - 2 32.50, வினாடி வினா விடைகள் 19.00, என்ன? எங்கே? எப்போது? 22.00, எப்படிப் பெயர் வந்தது? 12.00, எண்ணெய் வளநாடுகள் 15.50, அண்டார்டிகா பற்றிய வியப்பூட்டும் செய்திகள் 7.00, கண்ணுக்குள் நிற்கும் கங்காரு நாடு 32.00, ஒரு பத்திரிகையாளனின் மேலைநாட்டுப் பயண அனுபவங்கள் (தஞ்சை பல்கலைக் கழகத்தின் ரூ 5,000 பரிசு பெற்ற நூல்) 28.00, ஒரு பத்திரிகையாளனின் கீழைநாட்டுப் பயண அனுபவங்கள் 36,00, துபாய் அழைக்கிறது! 16.00, நினைவில் நின்ற அமெரிக்கப் பயணம் 15.50, நினைவில் நின்ற ஜப்பான் பயணம் 10.50, தேசிய ஒருமைப்பாட்டில் நமது பங்கு 11.00, இந்தியாவைப் பற்றிய பயனுள்ள செய்திகள் 27.00, மகாகவி பாரதியின் தாயகப் பாடல்கள் 5.75, நம் தேசியக் கொடி 12.00, நம் தேசிய கீதம் 9.00, தமிழ்நாடு பற்றிய சுவையான செய்திகள் 22.00, தமிழக வரலாறு 49.00, தமிழகப் பழக்க வழக்கங்களும் அவற்றின் காரணங்களும், பயன்களும் 16.25, தமிழக ஊர்களின் பெயர்க் காரணங்களும் சிறப்புகளும் பாகம் - 1, 31.00, பாகம் - 2 32.00.

மேற்கண்ட புத்தகங்களுள் தேவையானவற்றை வி.பி.பியில் பெறக் கடிதம் எழுதுங்கள். பாதுகாப்பாக அனுப்பி வைக்கிறோம். தபால்காரர் புத்தகங்களை உங்களிடம் தரும்போது பணம் செலுத்தினால் போதும். (தபால் செலவு தனி). சென்னையில் இருப்பவர்கள் நேரில்வந்து வாங்கிக்கொள்வது சிக்கனம். ஷோரூம் விற்பனை நேரம் : காலை 9 மணி முதல் மாலை 6 மணி வரை. ஞாயிறு விடுமுறை. கடிதம் எழுத வேண்டிய முகவரி :

மணிமேகலைப் பிரசுரம்

தபால் பெட்டி எண் : 1447,
4, தணிகாசலம் சாலை,
தியாகராய நகர், சென்னை - 600 017.
தொலைபேசி : 4342926 தொலைநகல் : 044-4346082

கையடக்கமாக உள்ள போனில் உலகெங்கும் பேசலாம், பார்க்கலாம். உலகத்தின் மேலே பறக்கலாம். அடா, அடா இன்னும் என் னென்னதான் செய்ய முடியாது?

ஆனால்... நாம் மனிதனாகத்தான் வாழ முடியவில்லை. மிருகங்களாக வாழ்கிறோம் என்று சொல்லி மிருகங்களைக் கேவலப்படுத்த நான் தயாராக இல்லை. அந்த மிருகங்களுக்கும் உணர்வுகள் உண்டு. அவை பருவ நிலைக்கு ஏற்பத்தான் தங்களின் விருப்பத்தைப் பூர்த்தி செய்து கொள்கின்றன. குட்டியுடன் கூடிய தாயினை எந்த ஆண் விலங்கும் சேருவ தில்லை. ஆனால் இங்கே பால் கொடுத்துக் கொண்டிருக்கும் தாயினை விருப்பத்திற்கு மாறாக வற்புறுத்தும் கணவர்கள் உண்டு.

பெண்ணே, என்ன படித்து என்ன சாதித்து என்ன, முன்னேறி என்ன? நீ பெண். ஆணின் இச்சைக்கு, காமவெறிக்குப் பலியாக வேண்டியவள்தான் என்னும் நிலை எத்தனை கேவலம்?

பசியைப் போல ஒரு தேவை உடல் அவா. எத்தனையோ அழகிய உணர்வுகளைப் போலக் காதலும் ஓர் உணர்வு. காதலனும் காதலியும், கணவனும் மனைவியும் அன்பு டன் இணைந்து வாழக் கொடுத்த ஒரு தொடர்பை இப்படியா கொச்சையாக... மகா கேவலமான கொச்சையாக ஆக்குவது...? இவர் கள் எல்லாம் ஒரு பெண்ணின் வயிற்றில் தான் பிறந்தார்களா?

இன்றைய பெண்கள் இவற்றையெல்லாம் மிகத் தெளிவாக உணர வேண்டும். பெண் களுக்காக என நீலிக் கண்ணீர் வடிக்கும் அர சாங்கங்கள் இவற்றைப் பற்றிய மாபெரும் விழிப்புணர்வுக்காக ஏதேனும் செய்தே ஆக வேண்டும்.

பெண்களின் சமுதாயத்திலும் விழிப்பு ணர்வு வேண்டும். பெண் என்றாலே அவ ளுக்கு மட்டும்தான் கற்பு சொந்தம் என்பதும், பெண் கற்பழிக்கப்பட்டு விட்டாள் என்ற வுடன் அத்தோடு அவள் வாழ்க்கை முடிந்து விட்டதாகப் பேசுவதும் இங்கே மறுபரி சீலனை செய்ய வேண்டிய விஷயங்களாகி விட்டன. ஒருவன் ஒரு பொருளைத் திருடி விட்டால் அவனுக்கே அதை அன்பளிப்பாகக் கொடுப்போமா? ஆனால் பெண் கற்பழிக்கப் பட்டால் அந்த ஆணுக்கே அவளைக் கல்யா ணம் என்று பேசுகிறார்கள்! நூற்றுக்கணக் கான பெண்களைக் கற்பழித்த இந்த ஆண்களுக்கு எத்தனை பேரைக் கட்டி வைப்பது?

பெண் அறிவார்ந்த மனுஷி, அவள் இன் பத்தைக் கொடுக்கும் போகப் பொருள் அல்ல என்ற உணர்வை ஆழமாக ஒவ்வொருவர் மனதிலும் புதைக்க வேண்டும். காதலும், காமமும் இருவர் இன்பமுடன் இணைந்து துய்க்க வேண்டியது என போதிக்கப்பட வேண்டும். அநீதி இழைக்கப்பட்ட பெண் வெளியே தைரியமாக வந்து சொல்ல இங்கே 'சமூகப் பாதுகாப்பு' தேவை. 'சோளி கே பீச்சே'க்கு வியாக்கியானம் எழுதும் பத்திரிகை களும், டீவிக்களும் இந்த விழிப்புணர்வைப் பெண்களிடம் ஏற்படுத்தப் பாடுபட வேண் டும்.

பெண்களைப் பற்றிய 'மானே தேனே' என்ற வர்ணனையையெல்லாம் விட்டுவிட்டு அவளை ஆணின் சிநேகிதியாகக் காட்ட மாபெரும் விழிப்புணர்வுக் கருத்தரங்குகளை ஏற்பாடு செய்தால் தேவலை.

முக்கியமாக --

பெண்களுக்கு ஒரு வேண்டுகோள். இதைப் பற்றி உங்களுக்குள் காரசாரமாக விவாதி யுங்கள். மற்றொரு பெண் கெட்டுப் போய் விட்டாள் (இந்தக் 'கெட்டுப் போய்விட்டாள்' என்ற வார்த்தையே எனக்கு உடன்பாடில்லை) எனத் தெரியவரும் போது அந்த வார்த்தை சரியா என ஆரம்பிப்பதில் இருந்து, அவளுக்கு ஏற்பட்ட கொடுமைக்கு எப்படி நீதி கிடைக்க வேண்டும் எனச் சிந்திக்க ஆரம்பியுங்கள்.

பெண்களைப் பற்றிய ஒரு 'புதிய பார்வை' இங்கே உடனே தேவை.



• கணவன் - மகளுடன்.....

வெற்றிப் பாதையில் -1

சௌம்யமா பேசு

வேலைக்குச் செல்லாத இல்லத்தரசியோ, வேலைக்குச் செல்லும் குடும்பத் தலைவியோ இன்றைய அவசர யுகத்தில் பல சுமைகளைச் சுமக்க நேரும் போது டென்ஷன் அடைந்து தவித்துப் போகிறார்கள். இதே ஒரு பெண்மணி ஒரு தொழிற்சாலையின் நிர்வாக அதிகாரியாக இருந்தால் இன்னும் கஷ்டம் இல்லையா? யாரோ ஒருவர் டாணென்று சம்பளம் கொடுக்கும் உத்தியோகம் இல்லையே! குடும்பம், நிர்வாகம் இரண்டையும் பார்த்துக் கொண்டு... உற்பத்தியில் நஷ்டம் வராமல் கண்காணித்து...

நிறைய போராட்டங்களைச் சந்திக்க வேண்டியதாக இருக்கும். அப்படி வெற்றி யடைந்த பெண் தொழில் முனைவோர்கள் பலர் இன்று இருக்கிறார்கள். அவர்களின் வெற்றிக் கதை நமக்கும் துணிவை, மனவுறுதியைக் கொடுக்கட்டுமே!

• கமலா பரசுராமன்



“நாங்கள் இரண்டு தொழிலாளர்களை வைத்துக் கொண்டு, சிறிய கடையின் ஒரு பாகத்தில் எங்கள் 'கப்பா' தொழிற்சாலையை ஆரம்பித்தோம்...” என்கிறார் 'கப்பா எலக்ட்ரிகல்ஸ்,' 'கப்பா கன்சால்டேட்டட் பிரைவேட் லிமிடெட்,' 'சதர்ன் எலக்ட்ரிகல்ஸ்,' 'கப்பா எக்ஸ்போர்ட்ஸ்' எனப் பல நிறுவனங்களை இன்று நிர்வகிக்கும் திருமதி கமலா பரசுராமன்.

கமலா பரசுராமனின் தந்தை பி. என். கணேசன் அந்தக் காலத்தில் மிகப் பெரிய பிஸினெஸ் மேக்னெட். பிரிட்டிஷார் கம்பெனியில் இந்தியா, பர்மா, மலேஷியா போன்ற கிழக்குக் கம்பெனிகள் முழுவதிற்கும் ஜெனரல் மானேஜர். அப்பேர்ப்பட்டவரின் மகளுக்கு ரத்தத்திலேயே 'தொழில் திறமை' ஊறியிருப்பதில் ஆச்சர்யமில்லை.

“என்னுடைய தந்தை மகா கண்டிப்பு. டிசிப்ளின் என்றால் அப்படி ஒரு டிசிப்ளின். கணக்கு வழக்குகளை படு கச்சிதமாக வைத்திருப்பார். அம்மா லலிதா நேர்மாறானவர். மிகவும் சாது. அதிர்ந்து ஒரு வார்த்தை பேச மாட்டார். எங்களையும் 'இனிமையாக இரு. குறிப்பா ஃபோனில் பேசும்போது 'சௌம்யமா' பேசணும். எதிர்ப்பக்க ஃபோனில் யார் எந்த நிலையில் இருக்கிறார் என்று நமக்குத் தெரியாது' என்பார். அப்போதெல்லாம் எனக்குச் சிரிப்பாக வரும். 'அதென்ன ஃபோனில் சௌம்யமா பேசறது?' என நினைத்துக் கொள்வேன். ஆனால் இப்போது தொழிற்சாலையை வைத்து நடத்தும்போது தான் அர்த்தம் புரிகிறது” என்கிறார்.

இரண்டு பேரின் குணாதிசயங்களையும்



• அலுவலக ஊழியர்களுடன்.....

ஒருங்கே கொண்டதால்தான் அவரால் இன்று இவ்வளவு பெரிய நிலைக்கு உயர முடிந்திருக்கிறது. ஸ்டெல்லா மேரீஸில் கல்லூரிப் படிப்பை முடித்து கல்கத்தாவில் தன்னுடைய கம்பெனியைப் பார்த்துக் கொண்டு இருந்த போதுதான் இன்ஜினியர் பரகராமனை மணந்து கொண்டார். 'ஜிஇஸி'யில் வேலை செய்த பரகராமன் சொந்தமாகத் தொழில் தொடங்கினால் வளமாக எதிர்காலம் அமையும் என நினைத்தார். மனைவியிடம் கேட்ட போது,

"நல்லா இருக்கே. அருமையான வேலையை விட்டுவிட்டு அல்லாட வைக்கும் சுய தொழில் ஆரம்பிக்கவா? பைத்தியமா உங்களுக்கு?" என்று சொல்லவில்லை. 'சரி, செய்யலாமே' என்றார். சென்னை வந்து 1966 இல் ஆரம்பத்தில் சொன்ன சிறிய அளவில் 'கப்பா எலக்ட்ரிகல்ஸ்' எனும் டிரான்ஸ்ஃபார்மர் தயாரிக்கும் தொழிற்சாலையை ஆரம்பித்தனர்.

"அந்த ஆரம்ப நாட்களில் நாங்கள் மிகக் கடுமையாக உழைக்க வேண்டி இருந்ததால் ஆரம்பத்திலேயே அவர் சொல்லிட்டார், 'நிர்வாகம் முழுக்க நீ பார்த்துக்கோ. தொழிற்சாலையை நான் பார்த்துக்கறேன்' என்று. இன்றுவரை அவர் என் நிர்வாகத்தில் குறுக்கிட்டதே இல்லை. பாங்க் ஆபீசர்களைச் சந்திப்பதோ, முடிவுகளை எடுப்பதோ எல்லாம் என் பொறுப்பு. அதனால்தான் அவரால் முழுமையாக தரமான தயாரிப்புக்களைத் தர முடிகிறது.

"சொன்னேனே, முதல் சில வருடங்கள் ரொம்ப சிரமப்பட்டோம். ராத்திரி இரண்டு மணிவரை உட்கார்ந்து வேலை செய்வோம். அதே சமயம்தான் என் மகள் மீராவைக் கருவுற்று அவன் பிறந்ததும். அவளைச் சிறு குழந்தையாக இருக்கும்போது மடியில் போட்டுக் கொண்டு கணக்குகள் எழுதுவேன். அவர் மூலப் பொருட்கள் வாங்குவது,


• தொழிற்சாலையில்.....



ஆர்டர் பிடிப்பது, தயாரிப்புகளின் தரம் குறையாமல் பார்த்துக் கொள்வது எனச் சுற்றிக் கொண்டே இருப்பார்.

ஆனால் ஆரம்ப நாட்களில் இருந்தே இரண்டு விஷயங்களைத் தாரக மந்திரமாக நாங்கள் வைத்திருந்தோம். தரம், மற்றொன்று சொன்ன நேரத்தில் பொருட்களைச் சப்ளை செய்து விடுவது. என்ன ஆனாலும் இந்தத் தேதியில் முடித்துத் தருகிறேன் என்றால் அவர் முடித்துத் தந்துவிடுவார். வேலையாள் வரவில்லையென்றாலும் தானே செய்து விடுவார். இதனால் எங்களை நம்பி ஆர்டர் கள் வந்தன. அடுத்தது மவுண்ட்ரோடில் தொழிற்சாலை ஆரம்பித்தோம், பிறகு வேளச்சேரியில் அமைத்தோம். இன்று நிறைய ஏற்றுமதி செய்யும் நிலையில் இருக்கிறோம்..." என்கிறார் கமலா.

"தொழிற்சாலை என்றால் எழுச்சியும் உண்டு, வீழ்ச்சியும் உண்டு இல்லையா?



• தெய்வபக்தி அவசியம் தேவை

எழுச்சியைச் சொன்னீர்கள், வீழ்ச்சி நிலையும் இருந்திருக்கும் இல்லையா?"

"இல்லை. அதுதான் தெய்வ அனுக்கிரஹம். நாங்கள் நாள் பூரா கடுமையாக உழைத்தோம். படிப்படியாக முன்னேறினோம். நான் எப்போதும் வணங்கும் மதர் என்னைக் கைவிடவில்லை..."

"மதர்....?"

"ஆம். பாண்டிச்சேரியில் வாழ்ந்த, இப்போதும் பக்தர்களின் கண்கண்ட தெய்வமாகத் திகழும் மீரா என்னும் அன்னைதான். இவருடைய பக்தை நான். என் தந்தை அன்னையின் மகத்துவத்தை உணர்ந்தவர். அம்மா ரமண மகரிஷியின் பக்தை. இரண்டு பேரையும் நான் வழிபடும் தெய்வங்களாக ஏற்றுக் கொண்டேன்.

என்னைப் போல தொழிற்சாலை நிர்வாகிக்குப் பூஜை, புனஸ்காரம் தோதுப்படாது. எப்போதும் மனதில் அன்னையின் பெயரைச் சொல்லிக் கொண்டே இருப்பேன். எத்தனை இடர்கள் வந்தாலும் நாங்கள் தாண்டினோம்..."

"இந்தத் தெய்வ பக்தியால்தான் உங்களால் எப்பொழுதும் பதற்றப்படாமல் காரியங்களைச் செய்ய முடிகிறதா...?"

"நிச்சயமாக. பெண்களுக்கு அதுவும் என்னைப் போல தொழிற்சாலை நிர்வாகிகளாக இருப்பவர்களுக்கு நிச்சயம் ஆழ்ந்த பக்தியும், தியானமும் அவசியம் தேவை. தினம் தினம் அவர்கள் சந்திக்க நேரும் சூழ்நிலைகளை மிக அற்புதமாக அவர்களுக்குச் சாதகமாக மாற்றிக் கொள்ளலாம்..."

திருமதி பரசுராமன் பல முகங்கள் கொண்டவர். சிறந்த நிர்வாகி. அருமையான பெண்ணைப் பெற்று நல்ல முறையில் கல்விமானாக வளர்த்து, அந்தப் பெண்ணும் இன்று நிர்வாகத் துறையில் உயர்ந்திருக்கிறாள் என்று பெருமைப்படும் குடும்பத் தலைவி. சிறந்த சமூக சேவை. நிறைய பேருக்கு உதவிகள் செய்திருக்கிறார். ஆந்திராவில் உள்ள நெல்லூர்ப்பேட்டையானாலும் சரி, தாம்பரத்திலுள்ள ஏழைகளானாலும் சரி, இவரிடம் வந்து உதவி கேட்டுப் பயனடைந்தவர்கள் ஏராளம். இதைப் பற்றி இவரிடம் கேட்டபோது சங்கோஜமாகச் சிரித்து,

"எங்களிடம் இருக்கிறது, கொடுக்கிறோம்" என்கிறார். ஆனால் இருக்கிறவர்கள் எத்தனை பேர் கொடுக்கிறார்கள்? அமல்ராஜ் என்ற கண் இழந்தவர் இவரை இந்தப் பேட்டி எடுக்கும் நேரம் வந்திருந்தார். அவரைக் கேட்டபோது,

"அம்மாவைப் பத்தி சொல்லுவதற்கு நான் அருகதை உள்ளவன் இல்லை. என் குழந்தைகளுக்கு எவ்வளவோ உதவி செய்திருக்கிறார். என் மூன்றாவது பெண் குட் ஷெப்பர்டில் படிக்கிறாள். அவளுக்கு ஒவ்வொரு டெர்ம் ஃபீஸ் கட்டுகிறார். இதையெல்லாம் விட நான் அவரிடம் வியக்கும் விஷயம், அவர் ஒரு தடவை கூட என்னிடம், "உன் நிலைக்கு நீ அவளை குட்ஷெப்பர்டில் படிக்க வைக்கணுமா" என்று கேட்டதில்லை. ஆனால் நான் உதவி கேட்டுப் போன அத்தனை பேரும் முதலில் இந்தக் கேள்வியைத்தான் கேட்பார்கள். இதைவிட அவரைப் பற்றி





வியக்கிறோம்!

மலைக்கிறோம்!!

திகைக்கிறோம்!!!

சென்ற மாதம் "அப்புசாமியும் மிஸ் ட்விங்கிளும்" இலவச இணைப்பில் நாங்கள் அறிவித்திருந்த "மங்கையர் மலர்" வாசகர் விசேஷச் சலுகைத் திட்டத்தின் கீழ்

எங்கள் பயிற்சியில் சேர்ந்து வருவோரின் எண்ணிக்கை எங்களை வியக்க, மலைக்க, திகைக்க வைக்கிறது.

விவேகானந்தாவின் சிரியபயிற்சி இவர்களது வெற்றிக்கு வழி வகுக்கும் என்பதில் ஐயமில்லை. நீங்களும் சலுகைத்திட்டத்தின் கீழ் பயிற்சியில் சேரக் கடைசி தேதி 15.8.94 என்பதை நினைவூட்டுகிறோம். உங்களது வசதிக்காக விண்ணப்ப மனுவைக் கீழே கொடுத்திருக்கிறோம்.

சலுகைக் கட்டணம் மற்றும் இதர விபரங்களுக்கு ஜூன் '94மங்கையர் மலர் இலவச இணைப்பைப் பார்க்கவும்.

விண்ணப்பமனு

ஆம். நானும் மங்கையர் மலர் வாசகர்களுக்காக தாங்கள் அறிவித்துள்ள விசேஷ சலுகைத் திட்டத்தின் கீழ் ஆங்கிலப் பயிற்சி பெற விரும்புகிறேன்.

★ நான் சேர விரும்பும் பிரிவு

☐ அடிப்படை ஆங்கிலம் ☐ இலக்கணம்

☐ உரையாடல் ☐ இலக்கணம் & உரையாடல்

☐ அடிப்படை, இலக்கணம் & உரையாடல்.

(விரும்பும் பிரிவில் ✓ குறியிடவும்)

★ பயிற்சிக் கட்டணமாக ரூ..........ஐ ☐ DD ☐ MO அனுப்பியுள்ளேன்.

கீழ்க்கண்ட என் முகவரிக்கு பாடங்களை பதிவுத் தபாலில் அனுப்பவும்

(முகவரியைத் தெளிவாக எழுதவும்)

பெயர் : ____________________

முகவரி : ____________________


____

____

பின்கோடு: | | | | | | |

கையொப்பம்

மறவாதீர்கள் விசேஷச் சலுகைபெற கடைசி தேதி 15.8.94



வரமிளகாய், புளி, உப்புடன் வெங்காய வடகத்தைச் சிறிது எண்ணெயில் வதக்கி இதனுடன் சேர்த்து அரைக்க சுவையான வடாம் துவையல் ரெடி. சாதம் சாப்பிடாதவர்கள் கூட ஒரு பிடி சாதம் அதிகமாகச் சாப்பிடுவார்கள்.

- எஸ். சாந்தி

நான் சொல்ல என்ன இருக்கிறது?" என்றார்.

இப்படி நிறைய சமூக சேவை, ஆழ்ந்த பக்திநிலை, அமைதியான குடும்பச் சூழ்நிலையை ஏற்படுத்திக் கொண்டது இவற்றால்தான் இவரால் இவ்வளவு உயரமும் ஏற முடிந்தது போலும்!

ஒரு பெண் தொழிற்சாலையை ஆரம்பிக்க நினைத்தால் அவருக்கு நீங்கள் கூறும் அறிவுரை என்ன என்று கேட்டோம் --

"முதலில் பெண்கள் அனாவசிய பயம், தயக்கம், மூடநம்பிக்கை இவற்றை விட வேண்டும். நாங்கள் ஆடி மாதத்தில்தான் தொழிற்சாலையை ஆரம்பித்தோம். நாம் ஒன்று நினைப்போம். அதற்குத் தடையாக ராகு காலம், எமகண்டம், ஆடி, மார்கழி எனும்போது ஒரு 'மென்டல் ப்ளாக்' ஏற்பட்டுவிடும். அதேபோல இதைச் செய்யலாமா தோற்றுவிடுவோமோ எனும் பயம், இவரிடம் பேசலாமா நாம் நினைத்ததைச் செய்வாரா எனும் சந்தேகம் இவையெல்லாம் இருக்கவே கூடாது.

நாம் போய் உட்கார்ந்து தன்னம்பிக்கையாகப் பேசும்போதே எதிராளி கவனிக்க ஆரம்பிப்பார். அவரிடம் எடுத்துச் செல்லும் விஷயத்தை நாம் முதலில் முழுமையாகப் புரிந்து கொண்டு சரியாக எடுத்துச் சொல்வோமானால் எந்தக் காரியமும் முடியும். அதில் சந்தேகமே இல்லை.

அதேபோல தொழிற்சாலை ஆரம்பிக்கும்போது சின்னதாக ஆரம்பிக்க வேண்டும். அதைப் பற்றிய முழுமையான அறிவு நமக்கும் இருக்க வேண்டும். ஒரு தொழிலாளி வரவில்லையென்றால் அந்த வேலையை நாம் முடித்துவிடும் அளவு தெரிந்திருக்க வேண்டும். அதிலிருந்து படிப்படியாக முன்னேறலாம்.

அடுத்தது தரம். மேலைநாடுகளிலே நம்மைப் பற்றிய ஒரு குறைவான அபிப்பிராயத்தைக் கேட்கும்போதெல்லாம் வருத்தமாக இருக்கும். 'இந்தியர்கள் முதலில் காண்பிக்கும் சாம்பிள்கள் நன்றாக இருக்கும். அதே தரம் பிறகு இருக்காது' என்பார்கள். எனவே, நாங்கள் ஏற்றுமதி செய்தபோது ஒவ்வொரு முறையும் கடுமையான தரக் கட்டுப்பாடு சோதனைகள் நடந்தன. நாங்கள் தரம் குறையாமல் பொருட்களைச் செய்து அனுப்பி இன்று வெற்றிகரமான ஏற்றுமதியாளர்களாக விளங்குகிறோம்.

தொழில் முனைவோர்கள் கடைப்பிடிக்க வேண்டிய மிக முக்கியமான மற்றொன்று குறித்த நேரத்தில் பொருட்களைச் சப்ளை செய்துவிடுவது. அந்தப் பெயரையும் காப்பாற்றிக் கொள்ள வேண்டும்.

தொழிலாளர்களையும், அவர்களுடைய உணர்வுகளையும் மதிக்க வேண்டும். நீங்கள் ஆத்மார்த்தமாக அவர்களை உணர்ந்து, அவர்களின் கஷ்டநஷ்டங்களில் கைதூக்கி விட்டால் நிச்சயம் அவர்களும் உங்களை மறக்க மாட்டார்கள். அதேபோல யாரேனும் தொழில் தெரிந்துகொண்டு தனியே செல்ல விரும்பினால் வாழ்த்தி அனுப்ப வேண்டும். 'இங்கேருந்து போறியே, எப்படி உருப்படுவேன்னு பார்த்துடறேன்' எனச் சாபமிடக் கூடாது. யாரும் நமக்கே வேலை செய்ய வேண்டும் என்றும் கட்டாயமில்லை. எல்லோரிடமும் பகையில்லாமல் இருந்தால் அவர்களாலும் பல சமயங்களில் நமக்கு உதவி கிடைக்கும். இதைத்தான் அம்மா, 'சௌம்யமா பேசு' என்றாள்," என்றார் கமலா பரசுராமன்.

ஒரு வெற்றிகரமான தொழில் நிர்வாகிக்கு எத்தகைய பண்புகள் இருக்க வேண்டுமோ அத்தனையும் அமையப் பெற்றதால்தான் இன்று இவரை அறிந்த அத்தனை பேர் மனதிலும் உயர்ந்த இடத்தில் வீற்றிருக்கிறார்.

- மஞ்சுளா ரமேஷ்

படங்கள் : ராஜு


பல தேசப்
பெருமைகளை
முகத்திலே பிரதிபலிக்கும்
பேரெழில் பெண்மணி
குட்டிகூராவின் மூன்று இன்டர்நேஷனல் ப்யூட்டி டால்க்குகள். உலகிற் சிறந்த நறுமணங்கள் நிரம்பியவை. பட்டுப்போன்று மென்மை யானவை. உங்கள் முகத்திற்குப் பேரெழில் சேர்ப்பவை. பல தேசங் களின் பெருமைகளின் சிறப்பை உங்கள் முகத்தில் பிரதிபலிக்கச் செய்பவை.
Cuticura
Lavender Mist
Cuticura
Classic
Cuticura
International
BEAUTY TALCS
Chaitra Leo Burnett B MP 10/93 - TAM

பசுமையான நினைவுகள்



எனக்கு டீன் ஏஜ் அப்போது. 1958 முதல் 1960 வரை இருக்கலாம். நாங்கள் மாம்பலத்தில் இருந்தோம். அங்கு வெங்கட நாராயணா ரோடில் இருக்கும் ஸ்ரீ சிங்கேரி மடத்தில் ஸ்ரீ பாலகிருஷ்ண சாஸ்திரிகள் ஸ்ரீமத் பாரதம் கதா காலட்சேபம் செய்வதாய் இருந்தது. என் பாட்டிக்குக் கண்பார்வை ரொம்பவும் சரியில்லை அதனால் அவருக்குத் துணையாக நான் தினமும் காலட்சேபம் கேட்கப் போவேன். ஸ்ரீ பாலகிருஷ்ண சாஸ்திரிகள் கம்பீரமாக ஆரம்பிக்கும் த்வனியே தனி அழகுதான்.

தினமும் ஒரு த்யான ஸ்லோகம் சொல்லி விட்டு கதையைத் தொடங்குவார். 2, 3 நாட்கள் கவனித்தேன். அந்தத்யான ஸ்லோகம் ஒன்றையேதான் தினம் சொன்னார். நான் ஸமஸ்கிருத ஸ்டூடண்ட். நாம் ஏன் இதை மனப்பாடம் செய்யக் கூடாது என்று தோன்றியது. தினமும் பேப்பர், பேனா சகிதம் சென்று எழுதி வந்தேன். இருந்தும் சில வார்த்தைகள் சரியாகப் புரியாமல் தவித்தேன். என்ன செய்வது என்று யோசித்தேன். அடுத்த நாள் சற்று முன்பாகவே பாட்டியுடன் சென்று பாட்டியை இடம் பார்த்து உட்கார வைத்து விட்டு, பாலகிருஷ்ண சாஸ்திரிகள் வந்ததும் தங்க ஒரு ரூம் இருந்தது. அங்கு சென்று அவருக்கு நமஸ்காரம் சொல்லி விட்டு அவர் சொல்லும் த்யான ஸ்லோகத்தைச் சற்று நிதானமாக இன்று மட்டும் சொன்னால் நான் சரியாக எழுதிக் கொள்வேன் என்று சொன்னேன். "அதற்கென்னம்மா குழந்தை ஆகட்டும்" என்றார்.

எப்போதும் போல் ஸ்டேஜில் ஏறியதும் சுற்றும் முற்றும் ஒரு பார்வை (நான் எங்கு இருக்கேன் என்பது தெரியாததால்) பார்த்தார். "என்னம்மா ஆரம்பிக்கலாமா" என்றார். நானும் கணீர் என்று "ஆரம்பிக்கலாம்" என்றதும் அவர் மெதுவாகச் சொல்ல, சொல்ல நான் முழுமையாக எழுதி முடித்தேன். இதை பக்கத்தில் இருந்தவர்கள் பார்த்தார்கள். எனக்கும் எழுதித் தா அம்மா என்றும் எனக்கு தமிழில், எனக்கு சமஸ்கிருதம் தெரியாது என்றும் கேட்க ஆரம்பித்தார்கள். நானும் தினமும் வீட்டில் கார்பன் வைத்து காப்பிகள் எடுப்பேன். கதை கேட்கப் போனதும் எனக்கு உனக்கு என்று எல்லோரும் என்னை மொய்த்துக் கொள்வார்கள். ஒரு 10 நாட்களில் அனைவரும் ஒரு ஸ்லோக காப்பியுடன் கதை கேட்க ஆரம்பித்தார்கள். சாஸ்திரிகள் "ஸ்ரீ காந்தோ மாதுலோ யஸ்ய ஜனனீம் ஸர்வமங்களா" என்று ஆரம்பிக்க எல்லோரும் கோரஸ்தான் போங்களேன். பலர் 'எல்லாம் இந்தப் பெண்ணால்' தான் என்பார்கள். நான் அந்தச் சமயம் பெரிய ஹீரோயின் தான். இந்த வயதில் நினைத்துக் கொண்டாலும் டீன் ஏஜில் செய்த அந்தக் காரியம் எனக்கு ஆத்ம திருப்தியளிக்கிறது.

— வத்ஸலா சாரி

நோயும் சிகிச்சையும்

பல டாக்டர்களைச் சந்தித்து எழுதிய மருத்துவப் பகுதி. ஆசிரியர் - ரா. பாலகிருஷ்ணன். சுவையான கேள்வி - பதில்களாகப் பல மருத்துவ சந்தேகங்களுக்கு விடையளிக்கப்பட்டுள்ளன.

விலை ரூ. 25.00

தயா

வார்த்தைகளால் மயக்கி கற்பனையுறச் செய்யும் லா. ச. ராமாமிருதத்தின் சிறுகதைத் தொகுப்பு. நிதானமாகப் படித்துப் படித்துச் சுவைக்க வேண்டியவை.

விலை ரூ. 25.00

(இரண்டும் - வானதி பதிப்பகம், 13, தீனதயாளு தெரு, தி. நகர், சென்னை - 17)

சிருங்கேரி நாயகருக்கு சிந்தூர ஆரத்தி

பாரதி காவலர் டாக்டர் கே. ராமமூர்த்தி கவிதைகளால் தன் குருவை அர்ச்சித்திருக்கிறார்.

விலை ரூ. 6.00

(சங்கர பாரதி, 3, கிருஷ்ணசுவாமி தெரு, அபிராமபுரம், சென்னை - 18.)

லைட் ரீடிங்

நிறைய படிக்கச் சுவையான துணுக்குகள். ஆசிரியர் - 'மானா' மக்கீன்.

(நவமணி பதிப்பகம், சென்னை - 600 004.)

விழியோரம் அருவி

பணத்தாசை கொண்டு வாழ்க்கையை நரகமாக்கும் மனிதர்களைப் பற்றியும், அதனால் அவதிப்பட்டுப் போராடும் பெண்களைப் பற்றியுமான நாவல். ஆசிரியர்- ஆர்னிகா நாசர்.

விலை ரூ. 36.00

கேட்டதெல்லாம் போதும்

உண்மையைத் தேடிப் புறப்பட்ட புத்தபிரானின் கதையை அழகு தமிழில் கதையாகக் கூறுகிறார் ஆசிரியர் ர. சு. நல்லபெருமாள்.

விலை ரூ. 26.00

(இரண்டும் - வானதி பதிப்பகம்)

பயணக் கட்டுரைகள்

தமிழகத்தின் பல முக்கிய சுற்றுலாத் தலங்களை விவரிக்கிறார் கருப்பூர் மு. அண்ணாமலை.

விலை ரூ. 42.00

(டி. எஸ். புத்தக மாளிகை, 6, ஜெய்சங்கர் தெரு, மேற்கு மாம்பலம், சென்னை - 33.)

ஆவிகளுடன் பேசுவது எப்படி?

இத்துறையில் விருப்பமுள்ளவர்களுக்குப் பல தகவல்களைத் தருகிறார் பி. டி. நாயகம்.

விலை ரூ. 12.50

(வள்ளி புத்தக நிலையம், 8-ஏ, சுந்தரேஸ்வரர் கோயில் தெரு, இராயப்பேட்டை, சென்னை - 14.)

குப்பையும் செல்வமாகும்

சாதாரணமாக நமது நாட்டில் உற்பத்தியாகும் பொருட்களில் இருந்து எப்படித் தொழில்களை ஏற்படுத்தலாம், மேம்படுத்தலாம் எனக் கூறுகிறார் டாக்டர் என். கே. சண்முகம். மிகப் பயனுள்ள நூல்.

விலை ரூ. 23.00

(நர்மதா பதிப்பகம், 16/7, ராஜாபாதர் தெரு, பாண்டி பஜார், தியாகராயநகர், சென்னை - 17.)

நீர்க்குமிழிகள்

கணையாழியில் வந்த சுஜாதாவின் கட்டுரைகள்.

விலை ரூ. 11.00

(குமரிப் பதிப்பகம், 8, நீலா தெற்கு வீதி, நாகப்பட்டினம் - 611 001.)



கடுக்காய்

கடுக்காய் பல நோய்களைக் குணப்படுத்துவதைக் கூறுகிறார் டாக்டர் பி. ஏ. சத்ய நாராயணன்.

விலை ரூ. 8.00

திரிகடுகம்

சுக்கு, மிளகு, திப்பிலி இவற்றின் மருத்துவக் குணங்கள். ஆசிரியர் - டாக்டர் பி. ஏ. சத்ய நாராயணன்.

விலை ரூ. 15.00

(இரண்டும் - உயிர்நாடி பதிப்பகம், பி-5, லோட்டஸ் காலனி, முதல் தெரு, நந்தனம், சென்னை - 35.)

இயற்கை உணவே நோய் தீர்க்கும் மருந்து

இயற்கை உணவு, அது நோய்களைத் தீர்க்கும் விந்தை, பலரின் அனுபவங்கள், உணவு உட்கொள்ளும் முறை என மாபெரும் முயற்சியாகச் செய்திருக்கிறார்கள். எளிமையான சுவையான நடையில் எழுதியவர் மூ. ஆ. அப்பன்.

விலை ரூ. 100.00

(ஸ்ரீ இந்து பப்ளிகேஷன்ஸ், 2, முத்து கிருஷ்ணன் தெரு, த. பெ. எண் : 1040, பாண்டி பஜார், சென்னை - 600 017.)

பெற்றோர் மாணவர் கையேடு

ஒரு புதிய முயற்சி. இரு பாலருக்கும் பல யோசனைகளைக் கூறியிருப்பவர் அப்துல் பாரி.

விலை ரூ. 25.00

(நவமணி பதிப்பகம், 12, 2 வது பெருஞ் சாலை, சென்னை - 600 004.)

திறந்தவெளிச் சிறையில் பாரதி

புதுச்சேரியில் பாரதியார் வாழ்ந்த வரலாற்றைச் சித்திரிக்கிறார் ஆசிரியர் இரா. பழனி சாமி.

விலை ரூ. 26.00

(பழநி பதிப்பகம், 2/38, சத்யமூர்த்தி நகர், அன்பு காலனி, சென்னை - 35.)

சிறப்புத் திருத்தலங்கள்

ராகு கேது தலம், திருமணஞ்சேரி, ஒப்பிலியப்பன் போன்ற திருத்தலங்களின் மகிமைகள். ஆசிரியர்கள் - கே. என். சரஸ்வதி, பா. அர்த்த நாரீசுவரன்.

விலை ரூ. 9.00

தமிழ் அறுபது ஆண்டுகள்

தமிழில் வரும் அறுபது ஆண்டுகளைப் பற்றிய பாடல்கள் மற்றும் விளக்கம். ஆசிரியர் கே. என். சரஸ்வதி.

விலை ரூ. 7.00

(கடலங்குடி பப்ளிகேஷன்ஸ், 38, நடேச அய்யர் தெரு, தி. நகர், சென்னை - 17.)

சுவையான செய்திகள்

சிறிய சிறிய செய்திகள். தொகுப்பு - அருணா. நடராஜன்.

விலை ரூ. 17.00

(டி. எஸ். புத்தக மாளிகை, 6, ஜெய்சங்கர் தெரு, மேற்கு மாம்பலம், சென்னை - 33.)

ஞாபக சக்தியை வளர்ப்பது எப்படி?

ஆசிரியர் எஸ். ரகுநாதன்.

விலை ரூ. 15.00

(ஆர். ஆர். நிலையம், 32/2, அம்மையப்பன் தெரு, இராயப்பேட்டை, சென்னை - 14.)

குரலும் பதிலும்

பொறுப்பற்ற கணவனால் சீரழியும் பெண்ணின் தத்தளிப்பை மூத்த எழுத்தாளர் கு. ப. சேது அம்மாள் அருமையாகச் சித்திரிக்கிறார்.

விலை ரூ. 20.00

(இந்திரா பதிப்பகம், சி-2, 198, டவுன்ஷிப், திருச்சி - 620 014.)

அம்மா

குடும்பத்தின் மைய வேரான தாயினைச் சுற்றிப் பின்னிய கதை. புத்தக விற்பனைத் தொகை முழுவதையும் ஹெல்ப்-ஏஜ் இந்தியா நிறுவனத்திற்கு அளித்திருக்கிறார். ஆசிரியர் - ஈஸ்வர்.

விலை ரூ. 45.00

(ஹெல்ப் ஏஜ் இந்தியா, சி-14, குதாப் இன்ஸ்டிடியூஷனல் ஏரியா, புதுதில்லி - 110 016.)

ஐஸ்வர்யம் அருளும் அஷ்டலட்சுமி அர்ச்சனை

ஆசிரியர் - கே. எஸ். பதஞ்சலி ஐயர்

விலை ரூ. 10.00

ஏற்றுமதி வியாபாரத்திற்கான ஆங்கிலக் கடிதங்களை எழுதும் முறைகள்


ஆசிரியர் பி. சி. கணேசன்

விலை ரூ. 15.00

(இரண்டும் - நர்மதா பதிப்பகம், 16/7, ராஜாபாதர்தெரு, பாண்டி பஜார், தி. நகர், சென்னை - 600 017.)

ஸ்ரீகந்தசுவாமி
பர்மனென்ட் பண்டு லிமிடெட்

மத்திய அரசால் அங்கீகரிக்கப்பட்ட நிதி நிறுவனம் துவக்கம் 1990
பதிவு அலுவலகம் : 60, சாமி பண்டாரம் தெரு, சிந்தாதிரிப்பேட்டை, சென்னை - 600 002.
கிளை அலுவலகம் : 36, ஜீனிஸ் ரோடு, சைதாப்பேட்டை, சென்னை - 600 015.



பிக்சட் டெபாசிட்

46 நாள்	90 நாள்	6 மாதம்	1 ஆண்டு	2 ஆண்டு	3 ஆண்டு	4 ஆண்டு	5 ஆண்டு
13%	14%	15%	17%	18%	18.5%	19%	20%★

ரொக்கப் பத்திரங்கள்	தொகை	பத்திரங்கள் மதிப்பு	தொகை	பத்திரங்கள் மதிப்பு
36 மாதங்கள்	Rs. 2,925/- Rs. 5,850/-	Rs. 5,000/- Rs. 10,000/-	Rs. 8,775/- Rs. 11,700/-	Rs. 15,000/- Rs. 20,000/-

காமதேனு மாபெரும் திரும்பப் பெறும் திட்டம்

டிபாசிட் திட்டம் 15ஆம் ஆண்டுகள்	5ஆம் ஆண்டு நீங்கள் பெறும் தொகை	10ஆம் ஆண்டு நீங்கள் பெறும் தொகை	15ஆம் ஆண்டு பெறும் தொகை
Rs. 6,320	Rs. 6,000	Rs. 6,000	Rs. 56,320
Rs. 25,280	Rs. 24,000	Rs. 24,000	Rs. 2,25,280

21% 5 வருடங்கள் ரூ. 50,000/- அதற்கு மேலும்

செல்வக்களஞ்சியம்

டிபாசிட்	காலம்	வருவாய்
Rs. 7,500	15 Yrs	Rs. 1,25,000
Rs. 9,000		Rs. 1,50,000

பொற்குவியல் திட்டம்

டிபாசிட்	காலம்	வருவாய்
மாதா மாதம் ரூ. 100/-	25 Yrs	Rs. 3,00,000

பென்ஷனர் நலத் திட்டம்

20%
வயோதிகர், விதவைகள், ஊனமுற்றோர், கல்வி மற்றும் அறக்கட்டளை பயன் பெறலாம்

மறு முதலீட்டுத் திட்டம்

உங்கள் தொகை 45 மாதங்களில் இரட்டிப்பு ஆகும்

டிபாசிட்	12 மாதம்	24 மாதம்	45 மாதம்	60 மாதம்
Rs. 1,000	Rs. 1,184	Rs. 1,430	Rs. 2,000	Rs. 2,535
Rs. 7,500	Rs. 8,880	Rs. 10,725	Rs. 15,000	Rs. 19,010

சேமிப்புத் திட்டம்

வட்டி 10%
காசோலை பெறும் வசதி உண்டு

ரெக்கரிங் டிபாசிட் திட்டம்

டிபாசிட் ரூ.50ன் பெருக்கம்	மாதங்கள் முடிவில் கிடைக்கும் தொகை			
	12 மாதம்	24 மாதம்	36 மாதம்	48 மாதம்
Rs. 50	Rs. 660	Rs. 1,430	Rs. 2,360	Rs. 3,600
Rs. 100	Rs. 1,320	Rs. 2,860	Rs. 4,720	Rs. 7,200

தங்க நகை கடன்

Rs. 3,000 PER 10 GRAM
கடனுக்கு உச்ச வரம்பு இல்லை
வீடுகளின் பேரில் கடன் வழங்கப்படும்

மாத வைப்புக்கான செக்குகள் முன்கூட்டியே வழங்கப்படும்.
தனயோகம் டிபாசிட் திட்டம் 20% குறைந்த அளவு ரூ. 20,000
★ டிபாசிட் காலம் 5 ஆண்டுகள்

சேர்மன் P. பாலசுப்பிரமணியம், B.Sc.,
சீனியர் டிரஸ்டி, ஸ்ரீகந்தகோட்டம்,
சென்னை - 3.



பங்குதாரர்களுக்கு மட்டும்
H.O. : Friday Holiday
B.O. : Tuesday Holiday

சேமிப்பே செழிப்புக்கு வழிகாட்டி

பாதுகாப்பு பெட்டகம் குறைந்த வாடகைக்கு கிடைக்கும்

தனியாக விருந்து வைப்பது கௌரவம்

சொல்ல விரும்புகிறோம்!

• சில சமயம் பேனா முனை கூட கூர்வாளாக உருமாறும் என்பதை ஆசிரியரின் "சில பிரச்னைகள் சில வார்த்தைகள்" கட்டுரை மூலமாகக் கண்டு கொண்டேன். ஆசிரியர் அவர்களின் சீறும் சிந்தனைச் சிதறல்களில் விளைந்த கட்டுரையின் ஒவ்வொரு வரியிலும் தீப்பொறியின் வெப்பம் தெறித்தது. இன்றைய இளைய தலைமுறைகள் தவறான பாதையில் திசை திருப்பி விடப்படுவதைச் சாடியிருந்த ஆசிரியரின் குரலுக்குப் பின்னே, மானுட நலவிரும்பிகளின் ஒட்டுமொத்த குரல்களும் முரசு கொட்டுவதை உணர வேண்டும்.
பரமக்குடி, பா. உஷாராணி.

• மிஸ் யுனிவர்ஸை எப்படித் தேர்ந்தெடுக்கிறார்கள் என்பதைப் படித்தேன். அழகு மட்டும் இருந்தால் போதும் உலக அழகியாகிவிடலாம் என்று இது நாள்வரை தவறாக நினைத்துக் கொண்டிருந்தேன். ஆனால், உயர்ந்த பண்பும் தேவை என்பதை உலக அழகி '94 சுஷ்மிதாசென் தேர்ந்தெடுக்கப்பட்ட விதத்தை வைத்துத் தெரிந்து கொண்டேன்.
லால்குடி, ஆர். கெஜலெக்ஷ்மி.

• இனிமேல் அப்புசாமியை சீதாப்பாட்டி தன் புலமையான ஆங்கிலத்தால் திட்டவோ, முனகவோ முடியாது... அப்புசாமிக்குத்தான் A to Z எல்லாம் தெரிஞ்சு போச்சே! விவேகானந்தர் மாதிரி வெளிநாட்டிலே 'பிரதர்ஸ் அண்ட் சிஸ்டர்ஸ்'னு பேசிட மாட்டாரா! பலே பலே!!
திருப்பத்தூர், விஜயா முரளி.

• பிரமிக்க வைக்கும் பிரமிடுகள் கட்டுரைச் செய்தியைப் படித்தேன். சரித்திரத்தில் படித்த பிரமிடுகள் உலக அதிசயம் மட்டுமல்ல; அற்புத மருத்துவகுணம் கொண்ட இடம் என்னும் செய்தி என்னை மேலும் வியப்புக்குள்ளாக்கியது.
தாத்தையங்கார்பேட்டை, எஸ். விமலா.

• கோவை மகளிர் விழா, மாறுவேடக் காட்சி வண்ணத்தில் மின்னியது. உயிரோட்டம் மிகுந்ததாக உயர்வாக இருந்தது. நேரில் காண முடியாத ஆதங்கம், ஏக்கம் அத்தனையும் தீர்ந்தன.
மதுரை - 16, எல். எம். அபிநாட்சயா.

• "பெண்டிர் மனது வைத்தால்" கட்டுரை கண்டேன். பிள்ளை வீட்டாருக்கு இன்னொன்றும் சொல்ல விரும்புகிறேன். கல்யாணத்தில் சாப்பாடு செலவு பெண் வீட்டாரைச் சேர்ந்ததுதானே என்று தங்கள் பக்கம் 1000, 500 என்று பத்திரிகை அடித்துக் கும்பலைச் சேர்த்து பெண் வீட்டாரைத் திணற அடிக்கக் கூடாது. தங்கள் செலவிலேயோ தனியாக விருந்து வைத்துக் கொள்வது கௌரவம்.
சென்னை - 61, ஜானகி ரங்கநாதன்.

• விமலா ரமணி அவர்கள் அருகம்புல் பற்றி அனைவர்க்கும் விளக்கிய விதம் அருமை. வீட்டுத் தோட்டத்தில் அழகுக்காக நான் வைத்துள்ள அருகம் புல்லை இனி காலையில் ஒரு தம்ளர் அருந்தும் வழக்கம் கொண்டு விட்டேன்.
இடவை, கோமதி வீரபாகு.

• சிறுகதைப் போட்டியில் முதல் பரிசு பெற்ற 'சரயு'வின் 'ஆண் மனம்' படித்தேன். அசந்து விட்டேன். தேர்வுக்குழுவின் திறன்மிக்க தேர்வுக்கு எனது பாராட்டுக்கள் - கதாசிரியருக்கும்தான்!
இராமேஸ்வரம், மு. முருகேசன்.

• 'சிறுகதைப் போட்டி'யில், "முதல் பரிசு" பெற்ற கதை 'ஆண் மனம்' படைக்கப்பட்டிருந்த விதத்தினால் பிரமிப்பூட்டியது. சரயு அவர்கள் திருமணம் நடைபெறுவது நல்ல இல்லறத்திற்கே தவிர 'ஈகோ' பார்த்துப் பாழ்படுத்த அல்ல என்பதைத் தெளிவுபட விளக்கியுள்ளார்.
திருவிடைமருதூர், ஏ. சிந்துபாரதி.

• கே. என். ராமச்சந்திரனின் 'செல்வம் கொடுத்துக் கெடுத்த பிள்ளைகள்' கட்டுரையைப் படித்து முடித்தபோது "எந்தக் குழந்தையும் நல்ல குழந்தைதான், மண்ணில் பிறக்கையிலே! அவன் நல்லவனாவதும் தீயவனாவதும் அன்னை வளர்க்கையிலே!" என்ற பாடலின் வரிகள் மனதில் ரீங்காரமிட்டன.
நெய்வேலி - 3, எஸ். இந்துமதி.

'பின்'னும் கொண்டை போட உதவும்!

தலை அலங்காரம் என்றவுடன் பின்னலும், குதிரைவால் கட்டும் என்பது போய், அழகு நிலையம் சென்று பலவிதமான கொண்டைகள், பின்னல்கள், அலங்காரங்கள் செய்து கொள்வது தற்கால நாகரீகமாகிவிட்டது. எதைச் செய்தாலும் தனித்தன்மையுடனும் புதுமையாகவும் செய்ய வேண்டும் என்ற தாகமும், உள்ளுணர்வும் கொண்ட திருமதி லலிதா கௌதம், மேல் நாட்டினர் பயன்படுத்தும் சிறிய 'யூ' (U) வடிவப் பிளாஸ்டிக் பின் போன்ற சாதனத்தைக் கொண்டு அருமையான சிகையலங்காரங்களை அழகுணர்வுடன் செய்கிறார்.

இந்த 'யூ' பின் தயாரிக்க நினைத்ததன் பின்னணிதான் என்ன?

"எனக்கு எப்போதுமே தொழில் ஏதேனும் செய்ய வேண்டும் என்ற ஆசையுண்டு. சமீபத்தில் கூட கம்ப்யூட்டரில் எட்டு மாத டிப்ளமா கோர்ஸ் முடித்தேன். சிறிதுகாலம் ஐஸ்கிரீம் விற்பனை ஏஜென்ஸியும் எடுத்துச் செய்திருக்கிறேன். என் அண்ணி சுமதி ஒருமுறை பத்திரிகையில் வந்த இந்த 'யூ' பின் பற்றிச் சொல்லியதும் இந்தப் புதிய சாதனத்தை வாங்கிப் பார்க்க ஆசைப்பட்டேன். அப்போது என் மாமியார் அமெரிக்கா சென்றதால் என் விருப்பப்படி வாங்கி வந்தார். நானே என் கற்பனையைக் கலந்து பலவிதமான வடிவங்களில் தலை அலங்காரம் செய்து பார்த்தேன். மிகச் சில மணித்துளிகளில் நிறைய ஸ்டைல்கள் செய்ய முடிந்ததைக் கண்டு இங்கும் இந்தச் சாதனம் இருந்தால் நன்றாக இருக்குமே என நினைத்தேன்.

என் கணவர் லூகாஸ் நிறுவனத்தின் துணை மேலாளராக இருப்பதால் பிளாஸ்டிக் சாதனம் செய்வது புதிதாக இல்லை. அவர் உதவியும் ஒத்துழைப்பும் கிடைத்தது. பிறகு இந்த பிளாஸ்டிக் 'பின்னை' போடும் கவர், செய்முறை விளக்கத்துடன் கூடிய அட்டை இவைகளைத் தனித்தனியே தயாரிக்க ஆரம்பித்தோம். இதுதான் இந்த 'யூ'



பின் பிறந்த கதை" என்றார்.

"மேலை நாட்டுப் பாணி என்பதால் நமக்கு எந்த அளவு ஒத்துப் போகும்?"

"மேலைநாட்டுப் பாணி என்றுதான் பெயரே தவிர முடி ஓரளவாவது இருக்கும் நம்மூர் பெண்களுக்கு ஏற்ற ஸ்டைல்தான் இது. வேலைக்கு, கல்லூரிக்குச் செல்லும் பெண்கள் மிகக் குறைந்த நேரத்தில் சிகையலங்காரத்தை முடித்துக் கொள்ளலாம். எங்கள் அட்டையில் நான்கு வித ஸ்டைல் கள்தான் தந்திருக்கிறோம். அவரவர் கற்பனைக்கேற்றபடி பத்துக்கும் மேற்பட்ட ஸ்டைல்களைச் செய்து கொள்ளலாம்.

இந்தப் பாணி சிகையலங்காரத்திற்கு வயது வித்தியாசமில்லை. சிறியோர் முதல் பெரியோர் வரை போடலாம்.'டெய்ல் ஸ்டைல்' என்பது பின்னின் பெயர்.

"தலையலங்காரத்தைப் படித்துத் தானே செய்து கொள்ளத் தெரியாதவர்களுக்கு நீங்கள் சொல்லித் தருகிறீர்களா?"

"தாராளமாக. ஆனால் அந்த அட்டையில் உள்ளபடி பலர் செய்து பார்த்துள்ளனர். ஓரிருவர் கேட்டபோது நானே செய்து காட்டியும் இருக்கிறேன். 'பாண்டிச்சேரி அன்னை' பக்தையான நான் என் தயாரிப்புக்கு மீரா என்று பெயர் வைத்துள்ளேன்."

"பின்னை உபயோகிக்கு முன் கவனிக்க வேண்டியது ஏதாவது...?"

"எண்ணெய்ப் பசையுள்ள முடியாக இல்லாமல் ஷாம்பு அல்லது சீயக்காய் போட்டு அலசிக் காய்ந்ததாக இருக்க வேண்டும். ஆரம்பத்தில் 'ரப்பர்பேண்ட்' போடும்போது மிக இறுக்கமாகப் போடாமல் சிறிது தளர்ச்சியாகப் போட வேண்டும். ஒரு ஸ்டைல் போட்டுப் பார்த்து வரா விட்டால் அலுத்துக் கொள்ளாமல் வேறொரு ஸ்டைலைப் போட்டு விட்டுப் பிறகு திரும்ப முதல் ஸ்டைலைப் போட்டுப் பார்க்கலாம். தானே வந்துவிடும். பல முறை கைகளும், மனமும் இணைந்து, கற்பனையும் கலந்து செயல்படும்போது பிரமாத

வயிற்றுப் போக்கிற்கு நெல் பொரி கஞ்சி தவிர மற்றுமொரு மருந்து இதோ!

ஓமத்தை வாணலியில் வறுத்து வெடிக்க ஆரம்பித்தவுடன் எடுத்து, அம்மியிலோ, மல்டி மிக்ஸியிலோ பொடி செய்ய வேண்டும். பொடியானவுடன் வெல்லத்தையும் வைத்து நன்றாக இழைத்து அரைத்து உலர்ந்த பாட்டிலில் மூடி வைத்துக் கொள்ளவும். வயிற்றுப் போக்கு அதிகமாகும்போது 1 ஸ்பூன் பொடியை எடுத்துத் தேனில் குழைத்துச் சாப்பிடலாம். எந்த வயதினருக்கும் ஏற்ற மருந்து இது. குழந்தைகளுக்குக் குறைந்த அளவில் கொடுக்க வேண்டும். ஒரு முறை இம்மருந்து சாப்பிட்ட உடனேயே குணம் தெரியும். அவசியமானால் மற்றும் ஒரு முறை கொடுக்கலாம். தேன் இல்லாமலும் சாப்பிடலாம்.

- ரேவதி சம்பத்



மான சிகையலங்காரத்துடன் விளங்கலாம்."

செய்முறை விளக்க அட்டையை நாம் படித்துக் கொண்டிருக்கும் போதே அங்கு வந்திருந்த தன் உறவினருக்கு 'யூ' பின் கொண்டு மிக நேர்த்தியான, அழகான தலையலங்காரங்களைச் சுறுசுறுப்புடன் செய்து காட்டி நம்மை மகிழ்வித்தார் லலிதா கௌதம்.

"கிளம்பியாச்சா!" என்று கணவர் வாசலில் நின்று கேட்டதும் "இருங்க வரேன்" என்று நேரமாக்கி அவரது வசவுக்கு ஆளாகாமல் 'இதோ வந்துட்டேங்க!' என்று நடந்துவரும் மணித் துளிகளில் நிமிஷமாய் அலங்கரித்து அவர் ரசிப்புக்கும் ஆளாகக் காரணமாகலாம்.

- பானுமதி ராமச்சந்திரன்

எங்கள் பச்சரிசி மாவு



பச்சையரிசி மாவு (அரிசிமாவு) ஞாபகம் இருக்கிறதா? ஏகதேசம்பேர் இதை மறந்தே விட்டார்கள். என்றாலும் பெண்களின் சமய சஞ்சீவியாக, ஆபத் பாந்தவனாக, என்றும் கை கொடுக்கும் உற்ற தோழனாக இருப்பது அரிசிமாவே ஆகும். இடித்து, சலித்து, வறுத்த இந்த அரிசிமாவு, இரண்டு பக்கா அளவாவது சமையல் அறையில் இருந்து கொண்டே இருக்க வேண்டும். வேளை கெட்ட வேளையில் வந்து நிற்கும் உறவினர் களின் வயிற்றுப் பசியையும், பள்ளி விட்டு வந்து பசி, பசி என்று நம்மைப் பிறாண்டும் பிள்ளைச் செல்வங்களின் வயிற்றுத் தேவை யையும் இதை வைத்தே சமாளித்து விடலாம்.

பச்சரிசி மாவு பலகாரம் என்றால் புட்டு, ஆப்பம், இடியாப்பம், கொழுக்கட்டை என்பது மட்டுமே நினைவுக்கு வரும் உங்களுக்கு இதோ, அறிமுகப்படுத்துகிறோம் மற்றும் சில பரதவர்களின் தயாரிப்புக்களை.

தேவையான அளவு பச்சரிசியை (சம்பா அரிசியாக இருந்தால் நலம்) ஊறவைத்து இடித்து, புட்டரிப்பை வைத்துச் சலித்து, நன்கு முறுவ வறுத்து வைத்துக் கொள்ள வேண்டும். மிஷினில் அரைக்கலாம். வறுத்தவுடன் முறத்தில் கொட்டி ஆற விட்டு பின் டப்பாவில் எடுத்து வைக்கவும்.

உரட்டி: வறுத்த அரிசி மாவு 2 கப், தேவையான அளவு சீனி, சிட்டிகை உப்பு, அரை மூடித் தேங்காய்.

தேங்காயைப் பூப்போலத் துருவி, மாவு, சீனி ஆகியவற்றுடன் கலக்கவும். சிறிது தண்ணீரில் உப்பு போட்டுக் கரைத்து மாவுக் கலவையில் விட்டு, சப்பாத்திமாவு போல் பிசையவும். அடுப்பில் தோசைக் கல்லைப் போட்டு, சூடானதும் எண்ணெய்த் துணியால் தடவி விட்டு, மாவுக் கலவையில் இருந்து ஒரு நார்த்தங்காய் அளவு மாவு எடுத்து தோசைக் கல்லில் வைத்து, சப்பாத்தி போல் பரத்தவும். ஒரு பக்கம் சிவக்க வெந்ததும், மறு பக்கம் திருப்பிப் போட்டு சிவக்க எடுக்கவும். எண்ணெய் ஊற்றத் தேவையில்லை. உரட்டி எனப்படும் இந்த அரிசி மாவு சப்பாத்தியை மக்களிடம் கொடுக்க, அது மாயமாக மறைந்து வயிற்றுக்குள் போய் விடும்.

இலைப் பணியாரம்:- வறுத்த அரிசி மாவு, கருப்புக்கட்டி, தேங்காய்த்துருவல், தேவையான அளவு உப்பு. இந்தப் பொருட்களின் அளவுகள் அனைத்தும் நம் தேவைக்குப் போல எடுத்துக் கொள்ளவும். தண்ணீரில் சிறிது உப்பிட்டு மாவில் கலந்து பிசைந்து, சப்பாத்தி மாவு போல் ஆக்கிக் கொள்ளவும். கருப்புக் கட்டியை கத்தி கொண்டு இழைத்துக் கொள்ளவும். கருப்புக் கட்டியை நம் தேவைக்குப் போல் ஒவ் வொன்றாக இழைத்துக் கொண்டால் போதுமானது.

பூவரசம் மரத்திலிருந்து நல்ல பெரிய பூச்சி விழாத இலைகளை (உங்க ஊரில் பால் கவர்!) எடுத்துக் கொள்ளவும். நன்கு கழுவி தண்ணீரை வடித்துவிட்டு, ஒரு பெரிய எலுமிச்சங்காய் அளவு மாவு எடுத்து இலையின் மேல் பரத்தவும். இருதய வடிவத்தில் பரந்திருக்கும் மாவின் மீது துருவிய தேங்காயைச் சமமாக பரத்தவும். அதன்

மேல் இழைத்து வைத்திருக்கும் கருப்புக் கட்டியைப் பரத்தவும். இலையோடு சேர்த்து மாவை இரண்டாக மடிக்கவும். இவ்வாறே எல்லா மாவையும் செய்து முடிக்கவும். இட்லி பாத்திரத்தில் தண்ணீர் விட்டு அடுப்பில் வைத்து, இட்லி தட்டு வைத்து அதன்மேல் ஐந்தாறு இலை மடக்குகளை வைத்து ஆவியில் வேக விடவும். இவ்வாறே அனைத்தையும் வேக வைத்து எடுக்கவும். ஆவியில் வேகுவதாலும், கருப்புக் கட்டி சேர்ந்திருப்பதாலும் குழந்தைகளுக்கு இது மிகவும் நல்லது. இலையை எடுத்து விட்டு, பணியாரத்தை ஆறவிட்டு குழந்தை களுக்குக் கொடுக்கவும்.


பால் கொழுக்கட்டை:- வறுத்த அரிசி மாவு இரண்டு கப், பெரிய தேங்காய் ஒன்று, தேவையான அளவு சீனி, தேவையான அளவு உப்பு, நேந்திரப் பழம் எனப்படும் ஏத்தன்பழம் இரண்டு. துருவிய தேங்காய் அரை கப். மாவில் சிறிது உப்பு, இரண்டு மேஜைக் கரண்டி சீனி, துருவிய தேங்காய் போட்டுக் கலந்து சிறிது நீர் விட்டுப் பிசைந்து சப்பாத்தி மாவு போல் ஆக்கவும். பெரிய தேங்காயைத் துருவி ஒரு கப் நீர் விட்டு அரைத்துப் பிழிந்து கிடைக்கும் தலைப் பாலை தனியே வைக்கவும். மேலும் நான்கு கப் தண்ணீர் எடுத்து இரண்டு முறையாக அரைத்துப் பிழிந்து பாலெடுத்து அடுப்பில் வைக்கவும். தேங் காய்ப் பால் கொதிக்கும் பொழுது பிசைந்து வைத்துள்ள அரிசிமாவை நெல்லிக்காயளவு சிறுசிறு உருண்டையாக உருட்டிப் பாலில் போடவும். மேலும் ஐந்து நிமிடங்கள் கொதிக்க விட்டு, உருண்டை வெந்ததும் தேவையான அளவு சீனியைப் போடவும். சீனி கரைந்ததும் ஏத்தன் பழத்தை வட்ட வடிவில் கனம் குறைச்சலாக சிறுசிறு துண்டு களாக வெட்டிக் கொதிக்கும் பாலில் இடவும். பழம் போடுவதால் சீனி சற்று குறைந்திருக்க வேண்டும். சிட்டிகையளவு உப்பும் இடவும். அனைத்தும் நன்றாக வெந்ததும், தலைப் பாலில் இரண்டு தேக்கரண்டி வறுத்த மாவை கூழாகக் கரைத்து ஊற்றிக் கலந்து மேலும் இரண்டு நிமிடம் அடுப்பில் வைத்துவிட்டு இறக்கவும். விருப்பமானால் இரண்டு ஏலக் காயையும் தட்டிப் போடலாம். பழமோ, உருண்டையோ கரையாமல் பார்த்துக் கொள்ளவும். பிள்ளை களுக்கு மிகவும் விருப்பமானதொரு சிற்றுண்டி இது.

மாவுருண்டை:- இடித்து, சலித்த அரிசி மாவோடு, தேங்காயைப் பூப்போலத் துருவி கலந்து வறுக்க வேண்டும். (ஒரு படி அரிசிக்கு இரண்டு தேங்காய் என்ற அளவில்) நன்கு முறுகவறுத்து ஆறவிட்டு டப்பாவில் போட்டு வைக்கவும். இதில் இரண்டு கப் மாவெடுத்து தேவையான அளவு சீனியும் பேயன் பழமும் கலந்து பிசைந்து உருண்டையாக்கி மக்களுக் குக் கொடுக்க அவர்கள் மனம் மகிழாதோ!

இதே மாவில் தேவையான அளவு கருப் புக் கட்டி சேர்த்து உரலில் இட்டு மெழுகு போல் இடித்துச் சிறு சிறு உருண்டைகளாக் கிப் பிள்ளைகளுக்குக் கொடுங்கள். இந்த உருண்டை ஒரு வாரம் வரையிலும் கெடாது.

புழுப்புட்டு:- இதன் பெயர் ஒரு மாதிரி இருந்தாலும் ருசிக்கு எந்த வகையிலும் குறைவு கிடையாது. கட்டியில்லாமல் சலித்த இரண்டு கப் வறுத்த மாவை, உப்பு சேர்த்து கொதிக்க விட்ட நீரைக் கலந்து பிசைந்து கொள்ள வேண்டும். இந்த மாவை முள் முறுக்கு அச்சில் இட்டு நேரிடையாக புட்டுக் குழலுக்குள் பிழிய வேண்டும். சிறிய சிறிய சுற்றுக்களாகப் பிழிந்து அதனிடையே தேங் காய்த் துருவலும் சீனியும் வைத்து வேக வைத்து எடுத்துத் தள்ள, வெள்ளை ஜாங் கிரிகளாக வெளியே வரும். புழு,புழு என்று சொல்லிக் கொண்டே பிள்ளைகள் அனைத் தையும் தீர்த்து விடுவார்கள்.

-ஏஞ்சல் பாப்டிஸ்ட்,
கன்னியாகுமரி.



எங்கள் வீட்டிற்கு விருந்தாளி வந்திருந் தார்கள். நானும் அவர்களுடன் பேசிக் கொண்டே வடைக்கு உளுந்திற்குப் பதிலாக பாசிப் பருப்பை ஊறவைத்துவிட்டேன். வேறு வழியின்றி தேங் காய் வெங்காயம் போட்டுத் தட்டி எடுத்தேன். வடை மிகவும் நன்றாக மேல்புறம் மொறு மொறு என்றும் உள்ளுக்கு மெதுவாக இருந்தது. வடை நன்றாக இருக்கு எப்படிச் செய்தாய் என்று என்னை மிகவும் பாராட்டினார்கள்.

- வி.லெக்ஷ்மி


Ruchi
"மீன் மற்றும் முட்டைகளில் மிக அதிக புரதச்சத்து உள்ளது என்பதை பலரும் கூறுவதை நான் கேட்டிருக்கிறேன்"
"இருக்கலாம். ஆனால் சைவ உணவு உட்கொள்பவர்கள் என்ன செய்வது?"
சாம்பார் சாதத்தில்
நியூட்ரெலா
Nutrela


ஆனந்தா -வின்
மாபெரும்
40%
தள்ளுபடி விற்பனை
பேபி பிராக்குகள், பிராக்குகள், டூபீஸ் மிடிகள், சுடிதார்கள், சராரா, நைட்டிகள், டிராயர்கள், புல்பேண்டுகள், பாபாசூட், புல்பேண்ட் புல் சர்ட் செட், குர்த்தா செட், T சர்ட்கள், ஜீன்ஸ் பேண்ட், ஜிப்பா மற்றும் எண்ணற்ற ரகங்களுக்கு ஈடு இணையில்லா ஆனந்தாவின் சிறப்பு தள்ளுபடி 40% வரை.
ஆனந்தா
கார்ப்பரேஷன்
N.S.B. ரோடு / சின்னக்கடை வீதி - திருச்சி - 2

மங்கையர் மலரும் விஜி.பி. கோல்டன் பீச்சும் நடத்திய சுற்றுலா போட்டியில் பரிசுபெற்ற கட்டுரைகள்

ஊட்டிக்குச் சுற்றுலாவிற்காக வருப வர்கள் முக்கியமாக பொட்டானிக்கல் கார் டன், போட் ஹவுஸ், தென் இந்தியாவின் மிக உயரிய சிகரமாகக் கருதப்படும், "தொட்ட பெட்டா சிகரம்" போன்ற வகைகள் பார்ப் பார்கள். இன்னும் கார்போன்ற வசதி உள்ள வர்கள் குந்தா, பைகாரா, கிளன் மார்கன் போன்ற இடங்கள் பார்ப்பார்கள். இதைத் தவிர நடந்தே பார்க்க வேண்டிய இடங்களும் உள்ளன.

அவற்றுள் ஒன்று "மஞ்சக்கொம்பை".

காஷ்மீருக்குப் போக இனியும் இல்லையா?

இது ஊட்டியிலிருந்து சுமார் 12, 13 கி.மீ. தூரத் தில் உள்ளது. அங்கு போக பஸ் வசதியும் உள்ளது. இது சுற்றிலும் பசுமையான மலைகள் சூழப்பட்ட அழகிய இடமாகும். இங்கு சல சலத்து ஓடும் அருவியை இன்றைக்கெல்லாம் பார்த்துக் கொண்டிருக்கலாம். இங்கு ஒரு பாம்புப் புற்றுக் கோவிலாக உள்ளது. அமாவாசையன்று ஊட்டியிலிருந்தும், சுற்றுப் புறத்திலிருந்தும் திரளான கூட்டம் வரும். வருடத்தில் மே மாதம் சிறப்புப் பூஜை, தீ மிதி போன்றவை நடக்கும்.

ஜன சந்தடி, ரேடியோ, டீ.வி. போன்ற வற்றின் சத்தத்தினின்றும் விடுபட்டு ஓரிரு நாட்கள் இயற்கையை ரசித்து, அத்துடன் ஒன்றிடலாம் வாருங்களேன், ஊட்டியின் மஞ்சக்கொம்பைக்கு!

- *மீனா கிருஷ்ணன், ஊட்டி.*

தமிழ்நாட்டில் ஒரு சிரவணபெலகோலா

நம்மில் பலர் சுற்றுலா மேற்கொள்ளும் போது தவறாமல் சிரவணபெலகோலா செல்லத் தவறமாட்டார்கள். பக்தியுடன் மலை மீது ஏறி, ஒரே கல்லில் செய்யப்பட்ட மிக உயரமான பாகுபலியின் சிலையை வணங்கி விட்டுத்தான் வருவார்கள்.

நம் தமிழ் நாட்டிலும் இதே வடிவத்துடன் கூடிய உயரமான சிலை உள்ளது. வேலூரி லிருந்து சுமார் 30-35 கி.மீ. தூரத்தில் திரு வண்ணாமலை செல்லும் மார்க்கத்தில் (போளூருக்கு முன்பாக) உள்ளது திருமலை.

இங்குள்ள பழைமையான கோயிலைக் கடைசியாக இராஜ ராஜ சோழனின் தமக்கை



• திருமூர்த்திமலை நீர்வீழ்ச்சி

யான குந்தவைப் பிராட்டியார் புதுப்பித்துக் கட்டியுள்ளார். இங்குள்ள குகைகளில் சிற்பங்கள் செதுக்கப்பட்டுள்ளன. வர்ணப் பூச்சுக்கள் பாறையின் மேல் பகுதியில் பூசப்பட்டுள்ளன. இவ்வர்ணப் பூச்சுக்கள் இன்றும் ஒட்டிக் கொண்டிருப்பது ஆச்சரி யமே!

மலைக்கு மேல் பகுதிக்குச் செல்ல பாறையிலேயே படிக்கட்டுகள் செதுக்கப் பட்டுள்ளன. அங்கு 16½ அடி உயரமுள்ள நேமிநாத சுவாமிகள் என்ற 22 - வது தீர்த்தங் கரரின் கம்பீரமான சிலை செதுக்கப்பட் டுள்ளது.

பலரும் அறியாத இக்கோயிலை நம் அர சாங்கம் புதுப்பித்து சுற்றுலா மையமாக மாற்றினால் பலரும் இங்கு வருவார்கள்.


- *கல்யாணி சந்திரசேகரன், வேலூர் - 2.*

மணாலி - குலு - ரோதங்ஸ்பாஸ்

திரைப்படங்களிலோ, விளம்பரங்களிலோ பனியையும் பனிபடர்ந்த மலையையும் நாம் பார்க்க நேர்ந்தால் நம்மை மறந்து அந்த வெண் அழகில் லயிப்போம். ஆனால் இயற்கை அழகு கொட்டிக் கிடக்கும்



• ஏழைகளின் ஊட்டி - கல்வராயன் மலை...



• [illegible]...

காஷ்மீருக்குப் போக யார் துணிவார்கள்? இப்படியிருக்க எந்தவித ரிஸ்க்கும் எடுக்காமல் பனிபடர்ந்த இமயமலையின் அழகினையும், பள்ளத்தாக்குகளையும், பனிபடர்ந்த இடத்தில் ஸ்கியீஸ், குதிரை மற்றும் எருமை மேல் சவாரி செய்ய விருப்பமா? இதோ இருக்கவே இருக்கிறது இமாச்சல பிரதேசத்தில் உள்ள மணாலி, - ரோதங்ஸ்பாஸ் - குலு போன்ற இடங்கள்.

பீஸ் ஆறு : ஏறக்குறைய 6000 முதல் 7000 அடி உயரத்தில் உள்ள இவ்விடத்தில் பாறாங்கற்களையே கரைகளாகக் கொண்ட பீஸ் ஆற்றின் அழகே அழகுதான். தொங்கும் பாலங்கள் எத்தனை! இரு கரைகளிலும் இயற்கையாய் வளர்ந்த மரங்கள்தான் எத்தனை!

குலு - மணாலி : கடும் கோடையிலும் பனிமழை, சூரியனின் இதமான பார்வை நடுவே மேகங்களின் குறுக்கீடுகள், பனி படர்ந்த இடங்கள். வானத்தையே தொடுவது போன்ற மலை உச்சி, அழகிய ஆபத்தான பள்ளதாக்குகள் பனிப் பாறை உருகி ஆறாக அருவியாக அங்கும் இங்கும் பாறைகளில் மோதி அலைபாயும் காட்சி.

ரோதங்ஸ்பாஸ் : ஏறக்குறைய 13000 அடி உயரத்தில் அப்படி ஒரு பனி படர்ந்த மலை முகப்பு, ஸ்கியிங்குக்கு மிகவும் ஏற்ற இடம். மணாலியில் இருந்து 50 கிலோ மீட்டர் தொலைவில் உள்ளது. சாலைகளின் குறுக்கே கரைந்து ஓடும், பனிகட்டிகள் பாறாங்கற்களாய் சாலையை மறித்து இருக்கும். சில இடங்களில் சாலைகள் பனி நீரால் அரித்து இருக்கும். இங்கு சென்றோமானால், அவ்விடத்தை விட்டு அகல மனமே இராது.

செல்லும் வழி: சிம்லாவில் இருந்து 250 கி.மீ; அம்பாலாவில் இருந்து - 600 கி.மீ; சண்டிகரில் இருந்து - 550 கி.மீ; டெல்லியில் - இருந்து - 800 கி.மீ.

டெல்லி, சிம்லா, அம்பாலா, சண்டிகர் ஆகிய இடங்களில் இருந்து அரசாங்க பஸ்கள் நிறைய உள்ளன. நடுத்தரவர்கத்தினருக்காக ஏராளமான ஓட்டல்களும் உள்ளன. மேலும் இமாசலப் பிரதேசச் சுற்றுலா கழகத்தை நாடினோமானால், எதற்கும் பிரச்னை இல்லை.

டெல்லி மற்றும் சண்டிகரில் இருந்து வாயுதூத் விமானத்தில் குல்லுக்கு அருகில் உள்ள புன்டூர் விமான நிலையம் வரை செல்லலாம். சிம்லா அல்லது பதன்கோட் வரை ரயிலில் சென்று பிறகு பஸ்ஸில் செல்லலாம்.



• மணாலி...



• குலு...



• ரோதங்பாஸ்...

தனியார் பஸ்களும் டூரிஸம் டெவலப்மெண்டின் பேக் கேஜ் டூர்களும் உண்டு.

- லீலா வாசுதேவ், சென்னை - 99.

தொட்டி(ல்) பாலம்!

கன்னியாகுமரி மாவட்டத்தில் எழில் கொஞ்சும் ஒரு கிராமம் மாத்தூர். இக்கிராமத்தில் இயற்கை அன்னையின் கைவண்ணம் காண்பவரை வியப்பு கொள்ளச் செய்யும். மேடு பள்ளங்களான நிலப் பரப்பு அதன்மேல் பச்சைக் கம்பளம் போர்த்தியதைப் போன்று நெருக்கமாக ஒரே மரங்களும், செடிகளும் பின்னிப் பிணைந்துள்ளன. இங்கு காண வேண்டிய முக்கியமான காட்சி 'தொட்டி(ல்) பாலம்' ஆகும். இப் பாலம் இரு மலைகளுக்கு இடையே கட்டப்பட்டுள்ளது. இது ஆசியாவிலேயே மிக உயரமான பாலம் ஆகும். இப்பாலம் ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்தில் கட்டப்பட்டது. இப் பாலத்தின் உள்ளே ஒருபுறம் நடைபாதையும் மறுபுறத்தில் பாசனக் கால்வாயும் இரு கிராமங்களையும் இணைக்கும் விதத்தில் செல்கிறது. இப்பாலத்தில் மக்கள் நடந்தும், சைக்கிளில் மட்டுமே செல்ல முடியும். மற்ற வாகனங்கள் ஏதும் செல்ல இயலாது.

இப்பாலத்தில் நடக்கும் போது கீழே பார்த்தால் தலை சுற்றும். காரணம் அவ்வளவு பாதாளம். பச்சைக் கம்பளங்கள் போர்த்திய பச்சைப் பள்ளத்தாக்கு! மாத்தூர் அருகேயுள்ள 'திற்பரப்பு' எனும் அருவியும், குற்றால அருவியின் சிறப்புகள் அனைத்தும் கொண்ட அருவியாகும்.

- ரோஸலின் மேரி, நெய்யூர்.

கின்னஸ் புத்தகத்தில் இடம்பெற்ற ஆலமரம்!

உலகின் மிகப் பெரிய ஆலமரம் ஆந்திராவில் அனந்தப்பூரிலிருந்து 125 கி.மீ. தூரத்திலுள்ள குடிபாயலு என்னும் கிராமத்தில் இருப்பது சமீபத்தில் தான் கண்டு பிடிக்கப்பட்டு, அது கின்னஸ் புத்தகத்திலும் இடம் பெற்று விட்டது. 1100 கிளை (விழுது) மரங்களைக் கொண்ட இது இரண்டு ஹெக்டேர் விஸ்தீரணத்துக்குப் பரந்து, ஒரு பசுமையான தனி நகரமாகவே காட்சியளிக்கிறது. புட்டபர்த்தியிலிருந்து இதற்கு 80 கி.மீ. தூரமே இருப்பதால் சத்ய சாயிபாபா ஆசிரமத்துக்கும், லேபாக்ஷி ஆலயத்துக்கும் வரும் யாத்ரீகர்கள் இங்கும் வரலாம். கடப்பைக்கும், ராயச்சோட்டிக்கும் செல்லும் அரசு பஸ்களிலிருந்து ரேகமன்னு சந்திப்பு என்னுமிடத்தில் இறங்கி 8 கி.மீ. தூரம் ஆட்டோக்களில் பயணித்து இங்கு வரலாம். இங்கு உணவு, தங்குமிடங்களுக்கு இன்னும் தக்க ஏற்பாடுகள் செய்யப்படவில்லையாதலால் உணவுப்


இயற்கை அழகிற்கு
SILVER JUBILEE YEAR
25
1969 1994
MEDIMIX
AYURVEDIC TOILET SOAP
சருமப்பாதுகாப்பிற்கு
18 மூலிகைகள்!
மெடிமிக்ஸ்
ஆயுர்வேத சோப்
• முகப்பரு
• வேர்க்குரு
• பொடுகு
• கரும்புள்ளி
• சொறி
• தேமல்

பொட்டலங்கள், ஃபிளாஸ்கில் காப்பி யுடன் செல்வது நல்லது.

- அ. ஷண்முகசுந்தரம், சிட்லபாக்கம்.

அழகுச் சூழலில் தெங்குமராட்டா!

பவானிசாகர் பேருந்து நிலையத்திலிருந்து தெங்குமராட்டா என்ற இடம் 20 கி.மீ. தூரத்தில் உள்ளது. ஒருநாளைக்கு நான்கைந்து முறை பேருந்து செல்கின்றது. மூன்று கிலோ மீட்டர் தூரம்தான் ஊரை ஒட்டினாற்போல செல்லும். பிறகு அடர்ந்த அருமையான காட்டின் உள்ளே பேருந்து சென்று கொண்டேயிருக்கும். அழகான நீரோடைகள் வரும். வழியில் அழகிய மான்கள் துள்ளி ஓடுவதையும் அழகான மயில்கள் பறப்பதையும், யானைகளின் கூட்டத்தையும் பேருந்தில் உட்கார்ந்து கொண்டே காணலாம். இருபுறமும் காடுகள் இருக்குமென சொல்வதைவிட காட்டுக்குள்ளே பேருந்து செல்கின்றது என்பதுதான் சரி. பவானிசாகர் அணையைப் பற்றிப் பல பேர் கேள்விப்பட்டிருப்பார்கள். ஆனால் அங்கிருந்து 20 கிலோமீட்டரிலுள்ள தெங்குமராட்டா பார்க்க வேண்டிய இடம்.

செல்ல வேண்டிய வழி : ஈரோட்டிலிருந்து பவானி சாகர் 83 கிலோ மீட்டர். வழி கோபிசெட்டிப்பாளையம், சத்திய மங்கலம் பேருந்தில்தான் செல்ல வேண்டும்.

அடுத்து பவானிசாகரிலிருந்து தெங்குமராட்டா 20 கிலோ மீட்டர், வழி பவானி சாகர் அணைக்கட்டு.

வேனில், காரில்சுற்றுலா வருபவர்கள் பவானிசாகரிலிருந்து மைசூருக்குக் குறுக்கு வழியாகவும் செல்லலாம்.

- ஷாஜிதா ஷேக், திருச்சி.

அதே தெங்குமராட்டா!

நகரச் சூழலை விட்டுச் சற்றே மாறுபாடான இயற்கை எழில் கொஞ்சும், வனம் சூழ்ந்த தெங்குமராட்டாவிற்குச் செல்லலாமே!

இயற்கை அன்னை குடியேறிய, குடியிருக்கும் கோயில் எங்கு திரும்பினாலும் பசுமை. ஆம்! பருவத்திற்கேற்ப பயிர்வகை பயிரிடப் படுவதினால் அதற்குப் பின்னால் என்னைத் தொட உங்களால் முடியுமா? என்ற சவாலுடன் நிமிர்ந்து நிற்கும் கூரான பாறைகள் மலைகள்!!

பவானிசாகரிலிருந்து பஸ்ஸில் சென்று தெங்குமராட்டாவில் இறங்கியவுடன் நம்மை முதலில் வரவேற்கும், கண்ணில் படும் நீரோடை. அந்நீரோடையில் தோணியின் மூலம் ஒரு ரூபாய் கொடுத்தால் இக்கரையிலிருந்து, அக்கரைக்கு நம்மை அக்கறையோடு விட நாம் தெங்குமராட்டா என்ற ஊரில் கால் பதிக்கிறோம்.

தென்றல் காற்றும், தென்னங்கீற்றும் கை குலுக்கும் காலம் நாம் தெங்குமராட்டாவில் காணலாம்.

கே.எஸ். பானு, பவானிசாகர்.



• தமிழ்நாட்டில் சிரவணபெலகோலா

மணிமுத்தாறு அணை அருகே ஒரு கொடைக்கானல்!

திருநெல்வேலியிலிருந்து சுமார் 30 கி.மீ. தூரத்தில் மணிமுத்தாறு அணை உள்ளது. அதற்கு மேல் ஒரு நீர்வீழ்ச்சி உள்ளது. எந்த நேரமும் தண்ணீர் விழும். இயற்கைக் காட்சிகள் அருமையாக இருக்கும். மணிமுத்தாறு விட்டு இன்னும் கொஞ்ச தூரம் போனால் பாபநாசம் ஆறு உள்ளது. அதற்கு மேல் அகஸ்தியர் நீர்விழ்ச்சி உள்ளது. அதுவும் அருமையாக இருக்கும். இன்னும் கொஞ்சம் மேலே போனால் டீ எஸ்டேட் நிறைய இருக்கும். கொடைக் கானல் மாதிரி பனிப்படலமும், இயற்கைச் சூழ்நிலையும் அழகான ரம்மியமான காட்சியாக இருக்கும்.

- ஜீவிதா ராஜசேகரன்,
தூத்துக்குடி.

அமெரிக்க மடிசார் மாமி

ஒரு நாட்டைப் பற்றி மற்ற நாட்டவருக்கும் பரவலான அபிப்ராயங்கள் இருப்பது உண்மை.

உதாரணமாக அமெரிக்கர்கள் பலருக்கும் இந்தியா என்றாலே தெருவில் சகஜமாக புலிகள் நடமாட்டம் உண்டு. எங்கு பார்த்தாலும் நல்ல பாம்பு படமெடுத்து ஆடும் என்று நினைத்துக் கொண்டிருக்கிறார்கள். என்னிடமே ஒரு சிலர், "மின்சார வசதி கூட அங்கு உண்டா?" என்று கேட்டிருக்கிறார்கள் என்றால் பார்த்துக் கொள்ளுங்களேன்.

அது போலவேதான், அமெரிக்க வாழ்க்கை முறை பற்றியும் நம்மில் பலர் தவறான சில கருத்துக்களைக் கொண்டிருக்கிறோம். இங்கே விவாகரத்து அதிகம்தான். அதற்காக எல்லா அமெரிக்கப் பெண்களும் ஆண்களும் காரணமே இல்லாமல் ரத்து பண்ணிக் கொள்வது இல்லை.

தினமணி ஆசிரியர் திரு. மாலன் சமீபத்தில் அமெரிக்கா



வந்திருந்த போது, தன்னுடைய நண்பர் – படித்து டாக்டர் பட்டம் பெற்றவர் – தன்னிடம் கேட்ட கேள்வியை என்னிடம் சொன்ன போது ஆச்சரியமாக இருந்தது.

"அமெரிக்காவில் கற்பழிப்பு அதிகமாமே! அங்கே பெண்கள் யாரிடமும் போக தயக்கப்படாத போது ஏன் கற்பழிப்பு நடக்க வேண்டும்?" என்று அந்த நண்பர் கேட்டாராம். இது எப்படி இருக்கு?

அமெரிக்கப் பெண்கள் என்றால் பரவலான அபிப்ராயம் "அவர்கள் மிகவும் PROMISCUOUS அதாவது எந்த ஆணோடும் உறவு வைத்துக் கொள்ளத் தயங்குவதில்லை என்பது!"

இது உண்மை அல்ல!

நிறைய அமெரிக்கப் பெண்மணிகள், தம் ஒரே கணவரோடு உண்மையாக தாம்பத்தியம் நடத்துகிறார்கள். முப்பது வருடம், நாற்பது வருடங்கள் மண விழா கொண்டாடுபவர்கள் நிறைய பேர்.

இந்தக் கட்டுரை அது மாதிரியான ஒரு அமெரிக்கப் பெண்மணி பற்றியது! அவள் பெயர் வேலரி. என் கணவர் பென்னெட்டின் பாட்டி. அம்மாவின் அம்மா! தன்னுடைய நாற்பத்தைந்தாவது வயதிலே லேயே, ஹார்ட் அட்டாக்கில் தன் கணவரை இழந்து விட்டார். அதன் பின் நாற்பத்தி எட்டு வருடங்கள் வேறு மணம் புரியாமல் வாழ்ந்தார்.

அது மட்டுமில்லை. தன் கணவரும் தானும் சேர்ந்து செங்கல் செங்கலாக பார்த்துக் கட்டிய அந்த வீட்டை விட்டு எங்கும் போக மாட்டேன் என்றும் அந்த வீட்டில் தான் தனக்குச் சாவு என்றும் சொல்லி விட்டார்.

தொண்ணூறாவது வயதில் நினைவு இழந்த "Senile" நிலையில், வேலரிக்கு யாரையுமே ஞாபகம் இல்லை. என் கணவர், அவருடைய தம்பிகள், அப்பா என்று கடந்த நாற்பது வருடங்களாக அவர் தினம் பார்த்துக் கொண்டிருந்த யாரையுமே அவரால் அடையாளம் கண்டுகொள்ள முடியவில்லை.

ஆனால் பேச்சுக்குப் பேச்சு தன் கணவரைப் பற்றியே சொல்ல ஆரம்பித்தார். "இன்னும் கொஞ்சம் நாழியில் அவர் வந்து விடுவார். நான் டின்னர் ரெடி பண்ண வேண்டும். இன்றைக்கு அவருக்குப் பிடித்த ஸ்டேக் (STEAK) பண்ணப் போகிறேன்" என்று தான் கணவரோடு வாழ்ந்த நாட்களையே மறுபடியும் வாழ ஆரம்பித்து விட்டார்.

நாற்பத்தைந்து வருடங்களாக தன் மனத்தில் தன் கணவரை எவ்வளவு பொக்கிஷமாக வைத்திருந்தார் என்பது அந்தக் கடைசி நாட்களில்தான் தெரியவந்தது. கணவர் இறந்த பிறகு வேறொருவரை மணந்து கொள்வது அமெரிக்காவில் பெரிய விஷயமில்லை. அப்படி இருந்தும் வேலரி வேறு மணமும் செய்து கொள்ளவில்லை. அவரை ஒரு கணமும் மறக்கவும் இல்லை.

அமெரிக்கனாக இருந்தாலும் என் கணவர் பென்னெட்டுக்கு மறு பிறப்பு போன்றவற்றில் நம்பிக்கை அதிகம் உண்டு. தன் உயிருக்குயிரான பாட்டி இறந்த போது அவர் அழவில்லை. "மறு பக்கத்தில் வேலரியின் கணவர் காத்திருக்கிறார். அவருடன் அவள் சந்தோஷமாக போய் சேர்ந்து கொண்டு விட்டாள்" என்றுதான் சொன்னார்.

சமீபத்தில் "மடிசார் மாமி" கதை படித்த போது, அது எனக்கு வேலரியின் கதையாகத்தான் தோன்றியது.

– கீதா பென்னெட்


சில வஸ்துக்கள் காலத்துக்கு ஏற்ப
விலை மதிப்பிற்கு அரிய அதிக
அளவில் வளர்ச்சி அடைகிறது.
*அசல் இயற்கையான
சந்தன எண்ணெய் உயர்ரக
சந்தன மரங்களிலிருந்து எடுக்கப்படுகிறது.
இதன் அரிய அழகூட்டும் குணங்கள்
நூற்றாண்டு காலமாக நம்பிக்கை வாய்ந்தது.
அடர்த்தியான ஒவ்வொரு மைசூர் சந்தனசோப்
வில்லையும் உங்கள் மேனியை தழுவுகிறது.
மென்மையாக்குகிறது.மேலும்பளிச்சிடுகிறது.
ஒரு அழகின் இரகசியம் விலைமதிப்பிற்கு
அரிய அதிக அளவில் வளர்ச்சி அடைகிறது.
மைசூர் சந்தன சோப்
75 ஆண்டுகாலமாக மேனியின் வளர்ச்சிக்கு
GOVT. SOAP FACTORY BANGALORE
MYSORE Sandal SOAP
FROM THE HOUSE OF MYSORE SANDAL SOAP
கர்நாடகா சோப்பு மற்றும் டிடர்ஜண்ட் லிமிடட், பெங்களூர் 55.
MASS/KSDL/94

அஸ்திகள் பூக்கின்றன

மங்கையர் மலர் &
பாஹிமாஸ் ஜுவெல் ஹவுஸ்
போட்டியில் இரண்டாம் பரிசு பெற்ற கதை


மருத்துவமனையில் இன்னதென்று புரியாமல் வீசும் ஒருவித நெடி, குறுக்கும் நெடுக்கும் செல்லும் வெள்ளை உடை நர்ஸ்கள், டாக்டரின் அறையின் வாசலில் ஸ்டூலில் உட்காருவதையே பாக்கியமென கருதும் பணியாளர்கள், உருண்ட விழிகளும் கதுப்புக் கன்னங்களும் கொண்டு 'சத்தம் செய்யாதே' என்று சொல்லும் வெள்ளைக்கார சிறுமியின் படம் இதெல்லாம் மாதவனுக்குப் பழகி விட்டது.

சிறிது நாட்களுக்கு முன் இருந்த அருவருப்பு, வெறுப்பு அனைத்தும் இப்பொழுது போய் விட்டது. ஏதோ ஒரு ஜடம் போல அந்த மருத்துவமனையின் பெஞ்சில் உட்கார்ந்து இருந்தான். அருகில் உள்ளவர்களின் நோய் பற்றிய, டாக்டர் பற்றிய உரையாடல்கள், நோயை வென்ற பிரதாபங்கள் அவன் காதுகளில் விழவில்லை. எதைப் பறிகொடுத்தோம் என்று புரியாதவாறு அவன் கண்கள் நிலைக்குத்தி நின்றன. சே! என்ன வாழ்க்கை இது? என்று அவன் மீது வெறுப்பு வந்தது. எல்லாம் ஒரு புயல் போல அடித்து ஓய்ந்து விட்டது.

பணியாளர் நான்கு என்ற டோக்கன் எண்ணை அழைத்ததும் ஒரு நிறைமாத கர்ப்பிணியை அவளது கணவன் ஆதரவாக அணைத்து உள்ளே அழைத்துச் செல்வதை மாதவன் பார்த்தான்.

அருணாவின் நினைவு மனத்தில் மெல்லிய தென்றலைப் போல தவழ்ந்து வந்தது. அந்த நினைவு சில கணநேரந்தான். சோகமாக மீண்டும் பழைய நிலைக்கு வந்தது அவன் மனம்.

எல்லாம் முடிந்து 20 நாட்களாகி விட்டது. சாதாரண காய்ச்சலுக்கு இந்த மருத்துவமனையில் நுழைந்து ரொட்டீன் இரத்தப் பரிசோதனை எனத் தொடங்கி முடிவினை மறுநாள் வாங்கச் செல்லும் பொழுது பரிசோதனைக் கூட அதிகாரி டாக்டர் முரளியை பார்க்குமாறு கூறிய போது புரியாமல் விழித்து டாக்டர் முரளியைப் பார்த்து அவர் மெல்ல மெல்ல சொல்லச் சொல்ல அவன் தன்னை இழந்தான். டாக்டர் அருகில் வந்து ஆதரவாக



தோளைத் தட்டி,

"மிஸ்டர் மாதவன்! இனிமேல்தான் நீங்கள் தைரியமாக இருக்க வேண்டும். இந்த ரிசல்ட்டை வைத்துக் கொண்டு மேலும் பல டெஸ்டுகள் செய்ய வேண்டும். பல சென்டர்களுக்கு அனுப்பி 'க்ராஸ்-செக்' செய்யணும். நல்ல காலமாக தொடக்க நிலையில் நாங்கள் கண்டுபிடித்து விட் டோம். நாளை மாலை என்னை என் வீட்டில் வந்து பாருங்கள்" என்றார்.

மாதவன் அப்படியே அருகில் இருந்த இருக்கையில் சரிந்தான். எனக்கா? எனக்கு எப்படி? நான் அப்படிப்பட்டவன் இல்லையே? என்ற கேள்விகள் அவன் நெஞ்சை மாற்றி மாற்றி துளைத்தன.

அப்படியே எத்தனை நேரம் போனதோ! மெதுவாகக் கடிகாரத்தைப் பார்த்தான். அது

ஜெயா முத்துஸ்வாமி

ஏழு மணிக்கே நின்று விட்டது. இனி இப்படி ஒவ்வொன்றாக நிற்கப் போகிறது என்பதை எண்ணும் போது கண்களில் நீர் திரண்டது. சிறிது தைரியத்தை வரவழைத்துக் கொண்டு மெதுவாக நடந்து வீடு வந்து சேர்ந் தான். மாதவனின் வாடிய முகத்தையும், தளர்ந்த நடையையும் பார்த்த அருணா ஓடி வந்து அவன் கைகளை ஆதரவாகப் பற்றி னாள். தீயைத் தொட்டவன் போல அதை உதறி னான் மாதவன். விக்கித்துப் போனாள் அருணா. ஆனால் வெளியே காட்டாமல்,

"ஏங்க! ஆஸ்பத்திரியில் கூட்டம் அதிகமோ? டாக்டர் வர லேட்டானதா? டாக்டர்



முரளி என்னதான் சொன்னார்?" என்று கேள்விகளை அடுக்கிக் கொண்டே டைனிங் டேபிளில் தட்டை வைத்தாள்.

"அருணா!" என்று மெல்லிய குரலில் அழைத்து, "எனக்குப் பசியில்லை. எனக்குச் சாப்பாடு வேண்டாம்" என்று திக்கித்திக்கிச் சொல்லி பாத்ரூமிற்குள் நுழைந்து கொண்டான். எங்காவது அழுது விடுவோமோ என்ற பயம் கவ்வ, கண்ணாடியில் முகத்தைப் பார்த்தான். 3 நாட்களாக ஷேவ் செய்யப்படாததால் உள்ள தாடி, கண்களைச் சுற்றி வளையங்கள், கண்கள் உள்ளடங்கியதைப் போல பார்வை, இது நானா? ஒருநாள் கூட தவறாது ஷேவ் செய்யும் நானா இது? கூடாது நான் இவ்வாறு இருப்பது அருணாவை மேலும் சங்கடப்படுத்தும். சந்தேகம் எழச் செய்யும். குழாயைத் திறந்து நீரை முகத்தில் வாரி இறைத்துக் கொண்டான். மெல்லத் துண்டால் துடைத்து பாத்ரூமை விட்டு வெளியே வந்தபொழுது துண்டை வாங்க வந்த அருணாவை விட்டு தள்ளிச் சென்று துண்டைக் கீழே போட்டான்.

அருணா அதிர்ந்துதான் போனாள். சாதாரணமாக அவளது முந்தானையில் முகம் துடைக்கும் இவருக்கு இன்று என்ன ஆயிற்று? என புரியாதவாறு அவனுக்குப் படுக்கை விரித்தாள். குழந்தை சங்கர் தூக்கத்தில் சிரித்தான். மெல்ல அவன் அருகில் வந்து முத்தமிட சென்றான் மாதவன். திடீரென ஷாக் அடித்தவன் போல விலகி படுக்கையில் விழுந்தான். இதைக் கவனித்த அருணா கலங்கினாள். ஒரு டம்ளரில் பாலை எடுத்து வந்து அவனிடம் கொடுத்தாள். இனியும் இப்படி இருந்தால் அருணாவால் பொறுமையாக இருக்க முடியாது என்று எண்ணிப் பாலைக் குடித்தான்.

"அப்பாடி! இப்பத்தான் நிம்மதியாச்சு. ஏங்க என்னமோ போல் இருக்கீங்க?" என்று கேட்டவாறு அவன் அருகில் வந்து தலையைக் கோத முயன்றாள் அருணா.

"அருணா! எனக்கு ரொம்ப டயர்டாக இருக்கும்மா! டாக்டர் பயப்படும்படி ஒன்றும் இல்லை என்றார். நாளை அவரை வீட்டில் வந்து பார்க்க வேண்டும் என்று சொல்லியுள்ளார். நீ கவலைப்படாதே" என்று படுக்கையில் சாய்ந்தான் மாதவன். அருணாவிடம் நெருங்கி விடுவோமோ என்ற அச்சத்தில் அவளை விட்டுத் தள்ளிப் படுத்தான் மாதவன். தூக்கம் வர மறுத்தது.

அருணா அப்படியும் இப்படியுமாக புரண்டு இறுதியில் ஏதோ ஸ்லோகம் சொல்லியவாறே தூங்கிப் போனாள்.

மாதவன் தன் மனத்திற்குள், "அருணா! என்னைக் காப்பாற்ற அந்தக் கடவுளாலும் முடியாது! பாவம் நீ" என்று சொல்லிக் கொண்டான். இரவின் நிசப்தத்தில் யதார்த்தங்களை அலசினான்.

அன்று மாலை டாக்டர் முரளி மாதவனின் இரத்தத்தில் எய்ட்ஸ் கிருமியின் ஆன்டிபாடிஸ் இருப்பதாகக் கூறியவுடன் பதறினான் மாதவன். நோயின் பயங்கரம், அதை எப்படிச் சமாளிக்கப் போகிறோம், இன்னும் எத்தனை நாள் வாழ்வோம்? எனக்குப் பிறகு சங்கர், அருணாவின் கதி! அவர்களுக்கு இந்தச் சமூகம் கொடுக்கும் அந்தஸ்து? என பல எண்ணங்கள் மனத்தில் அலைமோதின.

எப்பொழுது தூங்கினோம் என்று தெரியாமல் சங்கரின் அழுகையில் கண் விழித்தான் மாதவன். எங்கோ யாருக்காகவோ சேவல் ஒன்று கூவியது. யார் வீட்டிலோ வாசல் தெளிக்கும் சப்தம் சன்னமாகக் கேட்டது. குழந்தை சங்கரை மீண்டும் அணைக்கச் சென்று அணைக்காமல் கைகளை இழுத்துக் கொண்டான். அருணா எழுந்து சென்று சங்கரை தூக்கிக் கொண்டு அடுத்த அறைக்குச் சென்றாள். குழந்தை சிறிது நேரம் அழுது பின் ஓய்ந்தான்.

காலை விடிந்ததும் மிகவும் வித்தியாசமாகக் காட்டிக் கொள்ளக் கூடாது என்று எச்சரிக்கையாக இருந்தான். வழக்கமான காலை நேர அவசரங்கள். அலுவலகம் செல்வதா வேண்டாமா என்று பலமுறை யோசித்து இறுதியில் செல்வது என்று முடிவு செய்தான்.

அருணா இரண்டு நாள் நல்லா ரெஸ்ட் எடுத்துக் கொண்டு அப்புறம் ஆபீஸ் போனால் போதும். இன்னைக்குப் போக வேண்டாம் என்றாள். கூடிய விரைவில் ரெஸ்ட்! நீண்ட ரெஸ்ட்! எடுத்துக் கொள்ளத்தானே

சனோலா, எண்ணெய் கவர்களை மிக்ஸிக்குக் கவராகப் போடலாம் என்று எழுதியிருந்தார்கள். அதில் பை கூடத் தைக்கலாம். சர்க்கரை அதில் ஒட்டாது. மற்றும் அரிசி, கோதுமை அரைத்து வரவும் உதவும்.

- எம். சௌம்யா




உங்கள் கூந்தலை
இளமையாக வைத்திருங்கள்.
AVT
DEEPIKA
COCONUT OIL
இதோ அறிமுகம்! ஏ.வி.டி.யின் செழுமையான, புதிய தீபிகா தேங்காய் எண்ணெய். இதன் செழுமை உங்கள் கூந்தலுக்கு அளிக்கிறது, அதிக பளபளப்பு, மற்றும் உற்சாகமான, இளமையான தோற்றம்.
ஏனெனில் தீபிகா, மிகச் சிறந்த தேங்காய்களிலிருந்து, இயற்கை தந்த வளம் குன்றாமல் சிறந்த முறையில் தயாரிக்கப்படுகிறது.
ஏ.வி.டி யின் தரம் - இன்னும் சொல்ல வேண்டுமா என்ன?
AVT
DEEPIKA
COCONUT OIL
செழுமையான தேங்காய் எண்ணையின் சக்தியைக் கண்டறியுங்கள்.
100 மி.லி, 200 மி.லி மற்றும் 500 மி.லி அளவுகளில் கிடைக்கும்.

போகிறோம்? என எண்ணி,

"இல்லை அருணா! சில முக்கியமான பைல்களில் நான் முடிவு எடுத்தாகணும். அதனால் ஆபீஸ் போய் ஆக வேண்டும். நான் நார்மலாகத்தான் இருக்கேன். ஒரு வாரமாக ஜுரம் இருந்ததால் கொஞ்சம் களைப்பாக இருக்கு. நீ கவலைப்படாதே" என்று கூறி கிளம்பினான்.

முக்கியமான முடிவுகள் என்றவுடன் தனக்குப் பின் அருணாவிற்கு என்ன வருமானம்? யார் தருவார்கள்? சேமிப்பு என்பது குறிப்பிடும்படி இல்லை! என்ன செய்யப் போகிறோம்? என்று மீண்டும் பல சிந்தனைகள் மனத்தில் அலைமோதின. மெதுவாக அலுவலகம் அடைந்தான். சக அலுவலர்களின் குசல விசாரிப்புகள், ஆறுதல்கள் என அன்றைய அலுவலகப் பொழுது நகர்ந்தது. முக்கியமான கோப்புகளில் கையெழுத்து போட்டான்.

மாலை அலுவலகம் முடியும்முன் அருணாவிற்குப் போன் செய்தான். "அருணா! நான் இப்பொழுது டாக்டர் வீட்டிற்குப் போகிறேன். நைட் வர லேட்டாகலாம்! கவலைப்படாதே!" என்றான்.

அருணா போனில், "ஏங்க! நானும் வேணுமின்னா டாக்டர் வீட்டிற்கு வரட்டுங்களா? உங்களுக்குத் துணையாக இருக்கும். நேற்று பாவம் ரொம்ப டயர்டாக திரும்பி வந்தீர்கள்" என்றாள்.

உடனே, மாதவன் பதறி, "அதெல்லாம் வேண்டாம் அருணா. நான் பார்த்துக் கொள்கிறேன்!" என்று கூறி அவசரமாக போனை வைத்தான்.

முகம், கழுத்து, கைகளில் வேர்வைத் துளிகள். அழுந்த துடைத்துக் கொண்டு, பாத்ரூம் சென்று முகம் கழுவினான். கண்ணாடியில் முகம் எலும்புக்கூடு போல தோன்றியது. வெளியே வந்து ஒரு டம்ளர் குளிர்ந்த நீர் குடித்து விட்டு அலுவலகத்தை விட்டு வெளியே வந்தான்.

டாக்டர் வீட்டை அடைந்து பணியாள் மூலம் சொல்லியனுப்பியபோதே தன்னம்பிக்கையூட்டும் முகமலர்ச்சியோடு டாக்டர் அறைக்கு வெளியே வந்து அவனை உள்ளே கூட்டிச் சென்றார்.

"வாங்க மிஸ்டர் மாதவன்! வாங்க! உட்காருங்க. என்ன சாப்பிடுறீங்க? ஹாட்டா? கூலா?" என்று கடகடவென்று கேட்டார் முரளி. எப்படி இவர்களால் இப்படி இருக்க முடிகிறது என்று எண்ணினான் மாதவன்.

"இதோ பாருங்க! இப்படி யாரிடமும் பேசாமல் இடிந்து போய் உட்கார்ந்து இருப்பதால் உங்களைச் சுற்றி ஒரு சோக வட்டத்தை



மெல்லிய தோசை வேண்டுமா? 4 தம்ளர் அரிசியில் ஒரு தம்ளர் ஜவ்வரிசி இட்டு மிஷினில் அரைத்துக் கொண்டு வரவும். பிறகு அதில் மைதா, கோதுமை மாவிற்குப் பதில் ரவை சேர்த்தால் சுவை கூடுதலாக இருக்கும். தோசை வார்ப்பதற்கு முன் ஒரு மணி நேரம் ஊற வைக்கவும். பச்சை மிளகாய் சீரகம், உப்பு சேர்த்து வார்த்தால் பட்டு போல் தோசை கிடைக்கும்.

- எம். சௌம்யா

நீங்களே போட்டுக் கொண்டு மற்றவர்களையும் துன்பப்படுத்துவது எந்த விதத்தில் நியாயம்? போராடணும் மிஸ்டர் மாதவன். You have to fight!"

"பாலு, இரண்டு டம்ளர் கூல்ட்ரிங்க் கொண்டு வா!" என்று கூறி பணியாளை அனுப்பினார்.

"இங்க பாருங்க மாதவன்! பிரச்னை வந்து விட்டதே என்று கலங்கி நிற்பதை விட எப்படிச் சமாளிக்கப் போகிறோம் என்று திட்டமிடுவது புத்திசாலித்தனம். உங்களை நான் இங்கு வரச் சொன்னதே உங்களுடன் மனம் விட்டுப் பேசத்தான்! அதனால எங்கிட்ட வெளிப்படையா உங்க பிரச்னையை சொல்லுங்க!" என்றார்.

மாதவன் கண்களில் நீர் அவனை அறியாமல் வழிந்தது. இதற்குள் பழரசம் வந்து விடவே டாக்டர், "பாலு! நான் இவருடன் முக்கியமாக பேசிக் கொண்டிருப்பதால் யாரையும் என்னைப் பார்க்க அனுமதிக்க வேண்டாம்" என்று கூறி கதவைத் தாளிட்டார்.

மாதவன், "டாக்டர்! இவ்வளவு பெரிய தண்டனை கிடைக்கும் என்று நான் நினைக்கவே இல்லை. நான் பேச்சுலராக இருந்த போது நண்பர்களுடன் காம்ப் சென்ற பொழுது ஒருமுறை தவறான பெண்ணுடன் ஒரு இரவைப் பகிர்ந்து கொண்டேன். இது தவிர நான் எதுவும் அதன்பின் செய்யவில்லை டாக்டர்! என்னை நம்புங்கள்" என்று கதறினான்.

"லுக் ஹியர் மிஸ்டர். மாதவன். இவ்வளவு உணர்ச்சிவசப்படாதீங்க. கூல்டவுன்" என்றார்.

"ஸார்! அந்தச் சம்பவத்தை நினைத்து மிகவும் வெட்கமும் வேதனையும் பட்டேன்.

நன்கு படித்திருந்தும் ஏதோ ஒரு உந்துதலில் அதைச் செய்து விட்டோம் என்று எண்ணிக் கொண்டு இருந்தேன். இதனால் என் திருமணத்தையும் தள்ளிப் போட்டுக் கொண்டு வந்தேன். நான் ஏதோ ஒரு பெண்ணின் வாழ்வைக் கெடுப்பதாக என்னுள் ஒரு பிரமை. ஆனால் குடும்பத்தாரின் வற்புறுத்தலால் நான் அருணாவை மணந்தேன். அந்த முடிவை எடுத்த வினாடி முதல் திருமணத்திற்கு முன் செய்த அந்தத் தவறை வாழ்வில் ஒருபோதும் இனி செய்வதில்லை என்றும் அதை ஏதோ கெட்ட கனவு என்றும் எண்ணி மறந்து விட்டேன். அருணா ரொம்ப நல்ல பெண். படித்தவள். அவளுடன் நான் மிகவும் மகிழ்ச்சியாக குடும்பம் நடத்தினேன். எனக்கு எப்படி இது?" என்று தேம்பினான். டாக்டர் ஆதரவாக அவன் கைகளைப் பிடித்து,

"மாதவன்! இனிமேல் யாரால் வந்தது? எப்படி வந்தது? என்ன பாவம் செய்தேன்? என்று உங்களையே கேள்விகள் கேட்பதால் ஒன்றும் ஆகப் போவதில்லை. இதை நான் எப்படிச் சமாளிக்கப் போகிறேன் என்று தீர்மானம் செய்ய வேண்டும்" என்று கூறும் போது மாதவன்,

"டாக்டர்! தயவுசெய்து அருணாவிடம் இதைச் சொல்ல வேண்டாம். அவள் சின்னவள். பயந்து விடுவாள். நான் இருக்கும் கொஞ்ச நாளை அவளுடன் சந்தோஷமாகக் கழிக்கிறேன். ப்ளீஸ் டாக்டர்" என்று கெஞ்சினான்.

டாக்டர், "பாருங்க மாதவன்! நீங்க கோழையாகிகிட்டே போறீங்க. இந்தச் சமூகத்தை ஃபேஸ் பண்ண தைரியம் வேண்டும். இதை மறைத்து விடுவதால் மிகப் பெரிய தீமையை நீங்கள் இந்தச் சமுதாயத்திற்கு செய்வீர்கள். அதனால் மாதவன் மேலும் சில டெஸ்டுகளுக்காக உங்கள் ரத்தத்தை சில சென்டர்களுக்கு அனுப்பியுள்ளேன். நாளை அதன் ரிசல்டுகளை எதிர்பார்க்கிறேன். நாளை என்னை வந்து பார்க்கும் பொழுது உங்கள் மனைவி அருணாவையும் கூட்டி வாருங்கள். கவலைப்படாதே என்று நான் சொன்னால் நீங்கள் சிரிக்கக்கூடும். ஆனால் மிஸ்டர். மாதவன் தைரியமாக இருங்கள். குட்நைட்!"

என்று சிரித்து அவனை ஆதரவாக அழைத்து வாசல் வரை கொண்டு வந்து கார் ஓட்டுனரை அழைத்து அவனை வீட்டில் விட்டு வரச் சொன்னார்.

உயிரும் உணர்வும் இல்லாத ஜடப் பொருள் போல் காரில் ஏறி ஒரு இயந்திரத்தைப் போல வழியைக் காட்டி வீடு வந்து சேர்ந்தான். வழக்கம் போல அருணா வாசலில் கண்ணில் கவலையுடன். இவன் காரில் இறங்குவதைப் பார்த்ததும் பதறிப் போய், "என்னங்க! என்னாச்சு?" என்றாள்.

அவன் லேசாக முறுவலித்து, "ஒண்ணுமில்லை! நேரமானதால் டாக்டர் தன் காரில் விட்டு வரச் சொன்னார்" என்று சொல்லி அருகே வந்த அருணாவை விட்டு சற்று விலகி, டிரைவரை அனுப்பி விட்டு வீட்டினுள் வந்தான். குழந்தை அழகாக பூப்போல தூங்கிக் கொண்டிருந்தது. இவர்களை எல்லாம் பிரியப் போகிறோமே அவன் தலை சுற்றியது. அருணா மெல்ல அவனை தாங்கிக் கொண்டாள். அவள் அணைப்பு இதமாகவும் ஆதரவாகவும் இருந்தது. சில விநாடிகள் தன்னை மறந்தான். சட்டென்று விலகி, "சாப்பிட ஏதாவது இருக்கா?" என்று சம்பந்தமில்லாமல் கேட்டான்.

அருணா, "என்னங்க! இப்படியெல்லாம் பேசறீங்க! வாங்க சாப்பிடலாம்" என்று கூறி டேபிளில் தட்டை வைத்தாள்.

குளியலறைக்குச் சென்று குளிர்ந்த நீரில் முகத்தை அலம்பிக் கொண்டு, சாப்பாட்டு டேபிளின் முன்வந்து உட்கார்ந்தான். இயந்திரம் போல அருணா போட்டதைச் சாப்பிட்டு கை கழுவி, படுக்கையில் விழுந்தான். 'தினமும் இப்படி யுத்தம் போல இருக்கிறதே. நாளை அருணாவிற்கு விஷயம் தெரிந்து விட்டால் அவள் என்னை விட்டு விலகி விடுவாளோ' பயம் கவ்வியது. கூடாது. டாக்டரிடம் காலையில் சென்று சொல்லி தடுத்து விடுவோம் என்று எண்ணி தூங்கிப் போனான். தூக்கத்தில் தன் மேல் விழுந்த அருணாவின் கரத்தை மெதுவாக ஒதுக்கினான். தானும் படுக்கையின் ஓரத்திற்கு ஒதுங்கினான்.

இப்பொழுது எல்லாரும் 'அல்வா மிக்ஸ்' வாங்கித் தான் அல்வா செய்கிறோம். அந்த அல்வாவும் நிறைய கிடைக்க வேண்டுமென்றால் ஜவ்வரிசியை இரண்டு மணி நேரம் முன்பே ஊற வைத்து மிக்ஸியில் அரைத்து அந்த விழுதையும் 'மிக்ஸ்'டன் கலந்தால் அல்வாவில் கண்ணாடி போன்ற ஒரு பளபளப்பும் கிடைப்பதோடு அல்வாவும் அதிகம் காணும்.

- மு. சுகந்தி



பால் 'திக்'காக இல்லையே! வந்த விருந்தினருக்கு எப்படித் 'திக்' காகக் காப்பி தருவது? என்று குழம்ப வேண்டாம். ஒரு மெல்லிய வெள்ளைத் துணியில் கொஞ்சம் ஜவ்வரிசியை முடிந்து காய்ச்சும் பாலில் போட்டு விட்டால் அது கரைந்து கொஞ்சம் கொஞ்சமாகப் பாலைத் 'திக்'காக்கும். காப்பி சுவையும் மாறுபடாது. பாலில் வெந்து போன ஜவ்வரிசியை வீணாக்க வேண்டியதில்லை. அதில் கொஞ்சம் சர்க்கரையும், பாலும் விட்டுப் பாயசமாகக் குழந்தைகளிடம் கொடுத்து விடலாம். (அதனால் 'திக்'கான காப்பி எல்லாம் ஜவ்வரிசி போட்டது என்ற முடிவுக்கு வந்து விடாதீர்கள்! ப்ளீஸ்!)

- மு. சுகந்தி



பணியாளர், "ஸார்! உங்களை டாக்டர் கூப்பிடுகிறார்!" என்று சொன்ன போது சுய உணர்வு பெற்றான். அவசரமாக உள்ளே சென்று,

"குட்மார்னிங் டாக்டர்!" என்றான்.

"வாங்க மிஸ்டர் மாதவன்! என்ன காலையி லேயே?" என்றார்.

மாதவன், "டாக்டர்! இன்னிக்கு அருணாவை கூட்டி வரச் சொன்னீர்கள். வேண்டாம் டாக்டர். ப்ளீஸ் அவளுக்குத் தெரிய வேண்டாம். தெரிந்தால் என்னை விட்டுப் போய் விடுவாளோ என்று பயமாக இருக்கிறது. அவளும், குழந்தையும் இல்லாமல் இருக் கிற கொஞ்ச நாளிலும் நரகமாக இருக்கும் ஸார். ப்ளீஸ்" என்றான்.

"மாதவன்! சில விஷயங்கள் தெரியப் படுத்த வேண்டும். நீங்கள் இதை மறைப்பதால் ஆகப் போவதும் ஒன்றும் இல்லை. உங்களால் மீண்டும் அவர்களுடன் பழக முடியாது. இதற்கிடையில் சந்தேகம் என்னும் பேய் உங்கள் குடும்பத்தை அலைகழிக்கும். அருணா படித்தவள் என்று சொன்னீர்கள். கட்டாயம் உங்களைத் தவறாக எடுத்துக் கொள்ள மாட்டார்கள். நீங்கள் வேறு எந்த முடிவையும் எடுக்கக் கூடாது. உங்களின் நிலைமை எனக்கு நன்றாகப் புரிகிறது. உங்கள் நிலைமையில் இத்தகைய மனக் குழப்பங்கள் வரலாம். ஆனால் உறுதியாக இருங்கள். நீங்கள் இந் நோயை வெல்லவும் கூடும். இன்று மாலை சந்திப்போம்" என்று கூறிக் கைகுலுக்கினார்.

வெளியே வந்த மாதவன், ஆபீஸுக்கு லீவ் சொல்லி விட்டு அருகில் உள்ள கோயிலுக்குச் சென்றான். "ஆண்டவா! என்ன சோதனை இது? இனி நான் எப்படி இருக்கப் போகிறேன்!" என்று அப்படியே உட்கார்ந் தான். நேரம் போனது தெரியவில்லை. ஆனால் மனத்தில் ஏதோ தெம்பு பெற்றவன் போல வீட்டிற்குப் புறப்பட்டான். முகத்தைச் சாதாரணமாக வைத்துக் கொண்டான்.

மாதவனைக் கண்ட அருணா, "என்னங்க இவ்வளவு சீக்கிரம்?" என்று கதவைத் திறந் தாள்.

"குழந்தை எங்கே?" என்றான்.

"என் அக்கா சுமதி காலையில் வந்தாள். குழந்தையைச் சாயங்காலம் கொண்டு விடு கிறேன் என்றாள். பாவம் அவளுக்கும் குழந்தை இல்லையே அதனால்தான் எடுத்துப் போங்கள் என்றேன். என்ன கோபமா?" என்றாள்.

மாதவன், "சேச்சே! குழந்தையைக் காணுமே என்று கேட்டேன் என்று கூறி, "அருணா! இன்னிக்கு டாக்டர். முரளி உன்னைப் பார்க்கணும் என்றார். இன்னும் கொஞ்ச நேரத்தில் நானும் நீயும் அவரைப் பார்க்கப் போக வேண்டும்" என்றான்.

ஆச்சரியம் கலந்த முகபாவனையுடன் தலைஅசைத்தாள்.

டாக்டர் முரளி மிகவும் மெதுவாக பதற்றப்படாமல் அருணாவிற்கு ஒவ்வொரு விஷயமாக சொன்னார். முதலில் அதிர்ந்து வெளுத்த அருணாவின் முகம் போகப் போக தெளிவதைக் கண்டான் மாதவன். டாக்டர் சொல்லி முடித்தவுடன் ஒரு சில விநாடிகள் மிகவும் நிசப்தமாக இருந்தது. கடிகார முள்ளின் மெல்லிய டிக்டிக் ஓசையையும், குளிர் ஊட்டும் இயந்திரத்தின் ரீங்காரமும் மட்டுமே இருந்தது.

அருணா, "டாக்டர்! இப்போது நான் என்ன செய்ய வேண்டும்?" என்றாள்.

முரளி, "வெரிகுட்! இதுதான் பாஸிடிவ் அப்ரோச். இதைத்தான் நான் உங்களிடம் எதிர்பார்க்கிறேன். உங்கள் கணவரின் ரத்தத்தை வேறு சில இடங்களுக்கு அனுப்பி கிராஸ் வெரிபை செய்த ரிப்போர்ட் வந்துள் ளது" படபடத்த மாதவனின் கரத்தை தன் கரத்தைக் கொண்டு அழுத்தி ஆதரவாகப் பற்றினாள். முரளி இதைப் பார்த்து மகிழ்ந் தார்.

"மிஸஸ் அருணா! மாதவன் மிகவும் பயந்து போயுள்ளார். இதில் பயப்படுவதற்கு ஒன்றுமில்லை. நம்மைச் சுற்றி ஒரு பச்சாதாப அலை ஏற்படாமல் பார்த்துக் கொள்வது முக்கியம். அது பச்சாதாப அலை மட்டு மில்லாமல் சமூகம் நம்மை அதைச் சொல்

லியே ஒதுக்கி விடும். நீங்கள் இருவரும் நன்றாக உட்கார்ந்து யோசனை செய்து வரும் நாட்களை எவ்வாறு கழிக்கப் போகி றோம் என்று திட்டமிடுங்கள்.

"மாதவன்! இந்த வேலையிலேயே தொட ரலாம். ஆனால் இன்ஃபெக்ஷன் வந்து மிக வும் சிரமப்படும் வேளையில் அவர் வேலையை விட்டு விடலாம். அதை நீங்கள் ஏற்றுச் செய்யலாம். பொருளாதார விஷயங் களிலும் தீர்மானமாக ஒரு முடிவு எடுக்கவும். உங்களுக்கு என்ன உதவி வேண்டுமானாலும் நான் செய்யத் தயாராக இருக்கிறேன்" என்று சொல்லி எழுந்தார் டாக்டர்.

மாதவனும், அருணாவும் மெல்ல வெளியே வந்தனர். நன்றாக இருட்டி விட்டது. அவர்கள் வாழ்க்கையும் அப்படித் தானோ. மெல்ல அவனின் கையைப் பிடித்து நடந்தாள். இருவரும் பேசவே இல்லை. "என்னங்க! என்னங்க!" என்றாள். மாதவன் ஏதோ யோசித்தவனாக 'ம்' என்றான்.

"இதைக் காரணமாக வைத்து நீங்கள் என்னை விட்டு விலகிப் போவதை நான் அனுமதிக்க மாட்டேன். இதே எனக்கு வந்தி ருந்தால் நீங்கள் என்னை விட்டுப் போய் விடுவீர்களா?"

மாதவன், "பைத்தியம் போல பேசாதே அருணா! எனக்காவது அப்பா, அம்மா சொந்த பந்தம் என்று சொல்லிக் கொள்ள யாரும் இல்லை. ஆனால் உன்னை எண்ணிப் பார். அப்பா, அம்மா, அக்கா, அண்ணன் என்று பெரிய குடும்பம். நல்ல பெயர் உள்ளது. அருணா! நீ அங்கு சென்று அவர் களுடன் இருந்து விடு. நான் எப்படியும் இன்றோ, நாளையோ, எப்படியோ போய்க் கொள் கிறேன்" என்றான்.

"நோ. நான் உங்களை இழக்க மாட் டேன்!"

அருணா அருகில் வந்த ஆட்டோவை அழைத்து வீட்டு விலாசம் சொன்னாள். ஆட்டோவில் மாதவன் மடியில் முகத்தைப் புதைத்து அழுதாள். டாக்டரின் முகம் நிழ லாடியது. 'பச்சாதாப அலை உங்கள் கஷ்டத் தைத் தீர்க்காது' என்ற அவரின் தீர்க்கமான வரிகள் காதில் கேட்டன. சட்டென கண்க ளைத் துடைத்துக் கொண்டு மாதவனைப் பார்த்துச் சிநேகமாகச் சிரித்தாள்.

வீடு வந்தது. ஆட்டோவை அனுப்பி விட்டு அப்படியே சோபாவில் விழுந்தான் மாதவன். அருணா, "என்னங்க! நான் உங்க ளுடன் வந்தது இந்த உடம்பிற்காக இல்லீங்க. உங்க நல்ல மனத்திற்காக! அதனால் இந்த உடம்புக்கு நோய் வந்தால் என்ன? நீங்க மனதால் சுத்தமானவர்."

"இல்லை அருணா! நான் அப்படியும் இல்லை. சாக்கடை. ஒரு நல்ல பெண்ணின் வாழ்வை கெடுத்த பாவி. என்னை இதற்கு மேலும் உன்னால் எப்படிக் கணவனாக எண்ணிப் பார்க்க முடிகிறது?"

"அதுதான் கணவன் - மனைவி பந்தம். வேறு எந்த சொந்தத்திற்கும் இல்லாத சிறப்பு இதற்கு உண்டு. சரி போகட்டும். இனிமேல் இதைப் பற்றித் துருவித் துருவி ஆராய்ச்சி செய்வதை விட்டு விட்டு டாக்டர் சொன்னது போல ப்ளான் செய்யலாம். வாங்க சாப்பிட லாம்" என்று கூறி சாப்பாடு எடுத்து வைத் தாள்.

அடுத்த சில மாதங்களில் மாதவன் உடல் நலம் கருதி அலுவலகத்திலிருந்து விலகினான். மருத்துவரின் ஆலோசனை பெயரில் அருணா அதே அலுவலகத்தின் வேறு கிளையில் வேலை யில் அமர்ந்தாள்.

டாக்டர். முரளியுடன் கலந்து ஆலோ சித்து அந்த ஊரில் இந்நோயில் பாதிக்கப் பட்டவரின் விலாசங்கள் அறிந்தான். மாதவன் மெல்ல அவர்களைச் சந்தித்து எல்லோரும் சேர்ந்து 'ஆல்கஹால் அனானிமஸ்' மாதிரி 'எய்ட்ஸ் அனானிமஸ்' என்று கூடினார்கள். அவர்களின் வீட்டில் பல விஷயங்கள், பணம், வேலை போன்றவை குறித்துப் பேசப்பட்டது. குடும்பத்தைக் காப்பாற்ற இயலாத ஏழை நோயாளிகளின் குடும்பத்தினருக்கு சுய தொழில் செய்ய உதவிகள் நாடப்பட்டன. முதலில் தயங்கிய நிறுவனங்கள் மெல்ல மெல்ல இசைந் தன.

டாக்டர். முரளி, அருணா மாதவனின் முயற்சியை பெரிதும் பாராட்டினார். மாதவன் உடலால் பலகீனம் அடைந்தாலும், மனத்தில் தெம்பு பெற்றான். பள்ளிக்கூடங்களில் சென்று நோயைப் பற்றிப் பேசினான்.

சிதிலமடைந்த குடும்பங்கள் அருணா மாதவனின் முயற்சியால் வாழ்க்கையை அமைத்துக் கொண்டனர். ஒருவருக்கு ஒருவர் ஆதரவாகவும் அன்பாகவும் இருக்கக் கற்றுக் கொண்டனர்.

[illegible] பொரியலுக்கு நறுக்கும்பொழுது [illegible] பொழுதும் [illegible] சமித்துக் கொண்டாங்கள். அதுபோல் குக்கரில் நன்றாக வேகவிட்டு எடுத்துக் கொண்டு ஆறியவுடன் கொத்தமல்லி, புளி, காரப்பொடி, பெருங்காயம் போட்டு மிக்ஸியில் மைய அரைத்து [illegible] நல்லெண்ணெய் கொஞ்சம் கூடவே ஊற்றிக் காய்ந்ததும் அரைத்த விழுதைப் போட்டு நன்கு சுருள வதக்கி ஆறியதும் பாட்டிலில் அடைத்து வைத்துக் கொண்டு சாப்பாட்டுக்கும் [illegible] [illegible] கொண்டு சாப்பிடலாம்.

– [illegible]



இனிக்க, மணக்க, சுவைக்க...



சமையல் என்பது ஒரு கலை. எல்லோருமே தயாரித்து விடலாம் உணவை. உப்பு, புளி, மிளகாய் சேர்ந்தால் உணவுதான். ஆனால் எது ஒன்றையும் செய்யும் வகையறிந்து, பக்குவமாகச் செய்தால் அதன் மகிமையே தனிதான்.

சமையலை இனிக்க... மணக்க... சுவைக்கச் செய்திட இதோ சில டிப்ஸ் பார்க்கலாமா?

பால் விட்டுச் செய்யப்படும் எந்தப் பாயசமாக இருந்தாலும், குக்கரில் வைப்பதை விட பரந்த பாத்திரத்தில் விட்டு குறுகக் குறுக காய்ச்சுவதே சுவைபட அமையும். பால் பாயசத்திற்கு, ஒரு லிட்டர் பாலுக்கு, அரிசி ஒரு பிடிதான் எடுக்க வேண்டும். அதற்கு மேல் சேர்த்தால் அது வெறும் பால் சாதமாகி விடும். அரிசியைக் களைந்து ஒரு மணி நேரம் ஊறவிடுங்கள். பால் நன்றாகக் கொதிக்கத் துவங்கியதும் அவ்வப்போது அரிசியைச் சேர்த்துக் கிளறிக் கொண்டே இருங்கள். பால் குறுகக் குறுக மேலும் பால் சேர்க்க வேண்டும். மொத்த பாலையும் முதலிலேயே சேர்க்கக் கூடாது. மில்க் மெய்ட் சேர்ப்பதாயிருந்தால் அரிசி நன்றாக வெந்திருக்க வேண்டும். சர்க்கரை, மில்க் மெய்ட் இவற்றைச் சேர்த்தபின் அரிசி வேகாது. பால் பாயசத்திற்கு, அரிசியுடன் முதலிலேயே முந்திரியையும் பொடித்து சேர்த்துக் கொதிக்க விட வேண்டும். மற்ற பாயசங்களுக்குச் செய்வது போல் கடைசியில் நெய்யில் வறுத்துக் கொட்டக் கூடாது.

ஒரு அவசர சந்தர்ப்பத்திற்கு பால் பாயசத்தை வேண்டுமானால் குக்கரில் வைக்கலாம். ஆனால் சேமியா பாயசத்தை ஒருபோதும் குக்கரில் வைக்காதீர்கள்.

பாலில் செய்யப்படும் பாயசங்களுக்கு முந்திரி, பாதாம், பிஸ்தா எது வேண்டுமானாலும் சேர்க்கலாம். ஆனால் கிஸ்மிஸ் (உலர் திராட்சையை)யைத் தவிர்த்து விடுங்கள்.

ஒரு கப் சர்க்கரையுடன், ஒரு ஜாதிக்காய், 10-15 ஏலக்காய் இவற்றை மிக்ஸியில் பொடித்து எப்போதும் கைவசம் வைத்திருங்கள். இதை எந்தப் பாயசமாக இருந்தாலும் (வெல்லம் உட்பட) இறக்கும் தருவாயில் இரண்டு ஸ்பூன் சேர்த்து ஒரு கிளறு கிளறி இறக்கினால் பாயசம் ஓகோதான். இறக்கிய பின்னரே சர்க்கரை சேர்க்கவும்.



நன்றாகக் குறுகிய பாயசத்தில் 'பாதாம் மிக்ஸ்' பௌடரை இரண்டு கரண்டி பாலில் கரைத்து கடைசியில் சேர்த்தால் இது பாயசமா? பாதாங்கீரா? பாஸந்தியா? என்ற கேள்வியை நீங்களே கேட்பீர்கள். அந்த அளவுக்கு சூப்பராக இருக்கும்.

மேலே குறிப்பிட்ட, ஜாதிக்காய் + ஏலக்காய் + சர்க்கரைப் பொடியை, பாயசத்திற்கு மட்டுமல்லாமல்,



கண் பார்வையில் முன்னேற்றம் தெரிய தினமும் காலையில் வெறும் வயிற்றில் காரட் ஜூஸ் அருந்த வேண்டும். முருங்கைக் கீரையை கால் வேக்காட்டில் வேக வைத்து தினசரி உணவில் சேர்த்துக் கொள்ள வேண்டும். சர்க்கரை சேர்த்துக் கொள்ளக் கூடாது. காப்பி, டீக்கு பதில் பால் அருந்தலாம். வாரம் இருமுறை இளநீர் அருந்த வேண்டும். பேரீச்சை, அத்திக்காய், பப்பாளிப்பழம் தினமும் சிறு துண்டு உண்ண வேண்டும். வெண்டைக்காய், புடலங்காய், பூசணி, காரட், கோஸ், முள்ளங்கி, பீன்ஸ், பீட்ரூட், கோவைக்காய் இவற்றைப் பச்சையாய்ச் சாப்பிட வேண்டும். சர்க்கரைக்குப் பதிலாக வெல்லம் சேர்த்துக் கொள்ளலாம். . ஏனென்றால் சர்க்கரையில் கண்களுக்குக் கேடு விளைவிக்கும் ரசாயனப் பொருட்கள் சேர்க்கப்படுகின்றன.

இவை அனைத்தும் நான் அனுபவத்தில் கண்ட உண்மை. என் பார்வை இரண்டு வருடங்களுக்கு முன் -9 ஆக இருந்தது. இப்போது -3தான். எனவே நீங்களும் இம்முறையைப் பின்பற்றலாமே!

- பூர்ணிமா பாலு

ஸ்வீட், ஸ்வீட் பச்சடி, மில்க் ஷேக், பாதாங்கீர், சர்பத், ஏன் அன்றாடம் தயாரிக்கும் தேநீரில் கூட கலந்தால் அதன் சுவையும் மணமும் அலாதிதான்.

பாயசத்தை அலசியாயிற்று. இனி சாம்பாருக்கு வருவோமா? சாம்பார்ப் பொடி அரைக்கும் போது, தனியாவையும், சீரகத்தையும் சற்று கூடுதலாகச் சேருங்கள். கசகசா, வெந்தயம், தனியா, இவற்றைத் தனித்தனியே பொடித்து வைத்துக் கொண்டு, ஒவ்வொன்றையும் ஒரு ஸ்பூன் கடைசியில் சேர்த்துத் தாளித்தால் சாம்பார் 'ஓகோ'வென்றிருக்கும்.

துவரம் பருப்பு ஒரு மேஜைக்கரண்டி எடுத்துக் கொண்டு, அதனுடன் ஒரு ஸ்பூன் தனியா, இரண்டு ஸ்பூன் மிளகு, சீரகம் இவற்றைத் தனியே பொடித்து வைத்துக் கொண்டால், சாம்பார் பொடி ஒரு ஸ்பூனும், இந்தப் பொடி ஒரு ஸ்பூனும் சேர்த்து ரசம் வைக்கலாம். சுவையும் மணமும் பிரமாதமாக இருக்கும். ரசத்திற்குத் தாளிக்க, டால்டாதான் சிறந்தது. ஒரு ஸ்பூன் டால்டாவுடன், கடுகு, சீரகம், பெருங்காயம், கருவேப்பிலை இவற்றைத் தாளித்து பின் கொத்துமல்லி சேர்த்தால், ரசத்தை எல்லோரும் குடித்தே தீர்த்து விடுவார்கள்.

கடலைப் பருப்பு, உளுத்தம் பருப்பு, சமமாக எடுத்துக் கொண்டு, ஒரு கைப்பிடி பொட்டுக்கடலை, தனியா, கருவேப்பிலை, பெருங்காயம் இவற்றுடன் 100 கிராம் வெள்ளை எள்ளையும் வறுத்துப் பொடி செய்து வைத்துக் கொண்டால், இட்லி தோசைக்கு தொட்டுக் கொள்ளவும், வாழைக்காய், சேப்பங்கிழங்கு, உருளைக்கிழங்கு, கத்தரிக்காய் போன்ற 'ரோஸ்ட்' கறிகள் செய்யவும் பயன்படுத்தலாம். வேறு எந்தப் பொடியும் தேவையில்லை.

சர்க்கரைப் பொங்கலுக்கு நல்ல வெண்ணெய் காய்ச்சிய நெய்யைப் பயன்படுத்துங்கள். ஆனால் வெண் பொங்கலுக்கு, டால்டாவே சிறந்தது. கட்லெட், சமோஸா, டிக்கி, ஆகியவற்றிற்கு டால்டா உபயோகப்படுத்தினால் வெகு நேரத்திற்கு மொறுமொறுவென்றிருக்கும். சமோசாவிற்குப் பிசையும் மைதாவில் வெண்ணெய் சேர்த்துப் பிசைந்தால் மொறுமொறுப்பு நீண்ட நேரம் நீடிக்கும்.

உருளைக் கிழங்கு ரோஸ்ட் செய்யும் போது, பிரெட்டை சிறு துண்டுகளாக பிய்த்து, அதை எண்ணெயில் முதலிலேயே பொரித்து வைத்துக் கொண்டு, ரோஸ்டை தனியே செய்து வைத்துக் கொண்டு, பரிமாறும் போது ஒன்றாகக் கலந்து பரிமாறுங்கள். மிக மிகச் சுவையாக இருக்கும்.

எந்தக் காய்கறியாக இருந்தாலும், வதக்கல் கறியாகச் செய்யும் போது அதில் இஞ்சியைத் தோல் நீக்கி துருவிப் போட்டு சிறிது ஓமமும் சேர்த்து இறக்குங்கள். தனிச் சுவையுடன் இருப்பதுடன் உடம்புக்கும் நல்லது. வாயுத் தொல்லை இருக்காது.

மிளகு சீரகத்துடன் ஒரு கைப்பிடி ஓமம் வறுத்துப் பொடித்து எப்பவும் கைவசம் வைத்திருங்கள். கெட்டியாகப் புளியை கரைத்துக் கொண்டு அது கொதித்து புளி வாசனை போனவுடன் இந்தப் பொடியை இரண்டு ஸ்பூன் சேர்த்து உப்பு வெல்லம் சேர்த்துக் கெட்டியானவுடன் இறக்கினால், இரவு நேரத்தில் பிடித்துச் சாப்பிட சுவையாக இருக்கும்.-

- சாந்தா ராமசாமி



உங்கள் மழலைச் செல்வம் அவனது
மென்மையான மிருதுவான உலகம்.
அவனுக்கு நீங்கள் கொடுக்கும் முதல்
திட உணவும் அவனைப் போலவே
மிருதுவாக இருக்கட்டும்.
உங்கள் குழந்தைக்கு இப்பொழுது 4 மாதங்களாகிறது. இச்சமயம் அவனுக்கு தாய்ப்பால் மட்டுமல்லாமல் வேறு வகை உணவும் தேவை. ஏதாவது ஒரு திட உணவு. அதே சமயம் நீங்கள் அவனுக்கு தரும் திட உணவு மிருதுவானதாகவும் போஷாக்கு நிறைந்ததாகவும் இருந்திடல் அவசியம்.
ஆம், நெஸ்டம் தரும் போஷாக்கு போல - இது எளிதில் ஜீரணிக்க உகந்த குழந்தை ஆகாரம். அரிசியிலிருந்து தயாரிக்கப்படும் நெஸ்டம், உங்கள் மழலைச் செல்வத்தின் மிகச் சரியான முதல் திட உணவாக அமைகிறது.
பாலுடன் நெஸ்டம் சேர்த்து உங்கள் குழந்தைக்கு ஸ்பூனால் ஊட்டுங்கள். இந்த ஆகாரத்தின் மூலம் அவன் வேகமாய் வளர்வதற்கு வேண்டிய எல்லா போஷாக்கு சக்திகளும் கிடைக்கின்றன.
உங்கள் செல்வ மகன் வளர வளர, நீங்கள் அவனுக்கு படிப்படியாய் புதிய ருசியுள்ள உணவு வகைகளை அறிமுகப்படுத்த வேண்டும். இவ்வகை ருசியை நீங்கள் எளிதில் மிருதுவாய் ஆரம்பிக்க நெஸ்டம் உங்களுக்கு உதவுகிறது. நெஸ்டம், பால் சேர்க்காத ஒரே குழந்தை ஆகாரமாய் இருப்பதால், இதை மிகச் சுலபமாய் மற்ற உணவு வகைகளுடன் கலந்திட முடியும். உதாரணமாய், குழைய வைத்த வாழைப்பழம் காய்கறிகள் மற்றும் தயிருடன் உங்கள் குழந்தைக்கு நெஸ்டம் கொடுங்கள். நெஸ்டம் தரும் எல்லா வித மிருதுவான தனிச் சிறப்பான போஷாக்குகளுடன் அவன் வளருவதைப் பாருங்கள்.
Nestlé
NESTUM
Baby Cereal
Weaning Food
Rice
mix with milk
Refill Pack
லேபிளில் குறிப்பிடப்பட்டுள்ள விதி முறைகளை கவனமாய் பின்பற்றுங்கள்.
இலவசம்
நெஸ்டம் செய்முறை
புத்தகத்திற்கு எழுதுங்கள். போஸ்ட் பேக் 25.
புதுதில்லி-110016
நெஸ்டம்
எளிதில் ஜீரணிக்க உகந்த குழந்தை ஆகாரம்.
முக்கிய அறிவிப்பு : உங்கள் குழந்தைக்கு தாய்ப்பால்தான் மிகவும் சிறந்தது. உங்கள் குழந்தைக்கு 4 மாதங்கள் ஆனதில் இருந்து தாய்ப்பாலுடன் குழந்தைத் தானிய உணவும் கொடுங்க

பிரசவம் ஒரு மறுபிறப்புத்தான்

"சித்த மருத்துவத்தின் பெருமையைப் பற்றிச் சில மாதங்களா சொல்லிக்கிட்டு வர்றீங்க. ரொம்ப முக்கியமான அம்சமான டெலிவரியை உங்களால பண்ண முடியுமா? அதேபோல பிரசவத்திற்கு முந்தைய கவனிப்பு, பிரசவத்திற்குப் பிந்தைய கவனிப்பு இதெல்லாம் உங்ககிட்ட இருக்கா?"

இந்தச் சவாலை விட்டபோது பதினெண் சித்தர் மருத்துவ மனையின் (ஏசி-18, 2வது அவென்யூ, முதல் மெயின் ரோடு, அண்ணாநகர், சென்னை - 40. தொலைபேசி எண் : 6264150) இளம் மருத்துவர்களான மத்தியாஸ், சிவராமன், முத்துக்குமார், சியாமளா, செல்வம் அனைவரும் "ஏன் இந்தச் சந்தேகம்? அற்புதமான ஆரோக்கியமான பிரசவத்தை எங்களால் செய்யமுடியும். அதே போலத் தாய்மை அடைந்த பெண்கள் எங்களிடம் முதலிலிருந்து ரெகுலர் செக் அப்பிற்கு வரட்டும். எந்தவிதப் பக்க விளைவுகள் இல்லாத இயற்கையான மருந்துகளைக் கொடுத்து அவர்களை உடல் வலுவுள்ளவர்களாக ஆக்கி, சிக்கலில்லாத பிரசவத்தைச் செய்ய முடியும்" என்றார்கள்.

"இவர்கள் ஏதோ சவாலுக்குச் சவால் என்ற ரீதியில் இதைச் சொல்லவில்லை. நம்முடைய சித்தர்கள் கருவுற்ற முதல் மாதத்தில் இருந்து தாய்மார்களை எப்படிக் கவனிக்க வேண்டும், எந்தப் பிரச்னை வந்தால் அதற்கு என்ன மருந்து இருக்கிறது என்றெல்லாம் கூடச் சொல்லி இருக்கிறார் கள்," என்கிறார் மருத்துவமனையின் மேனேஜிங் டைரக்டரான ஸ்நேகலதா.

"மசக்கை எனும் மூன்றாம் நான்காம் மாதம் வரும் வாந்திப் பிரச்னைகளுக்கு மாதுளம்பழ லேகியம் அத்தனை சிறந்தது. சாதாரணமாக மாதுளம்பழ ஜூஸையும் குடிக்கலாம். இது ரத்த விருத்தியைச் செய்து கருவுற்ற பெண்கள் ஆரோக்கியமாக வாழ உதவுகிறது."

"சாதாரணமாக கர்ப்பிணிகள் பப்பாளி சாப்பிடக் கூடாது. உஷ்ணம்



என்பீர்கள். ஆனால் இன்று டாக்டர்களோ பப்பாளி மிகச் சத்தான பழம் என்கிறார்களே...?"

"பப்பாளி நல்லதுதான். ஆனால் உஷ்ணமானது. அதைக் கருவுற்ற பெண்கள் கர்ப்பத்தின் ஆரம்ப நாட்களில் சாப்பிடாமல் இருப்பது நல்லது. உஷ்ணம் என்பதையே இன்றைய மருத்துவர்கள் ஏற்றுக் கொள்வதில்லை. ஆனால் நம் சித்தர் மகான்கள் உடம்பையே வாத, பித்த, கப உடம்பு என்றுதான் பிரிக்கிறார்கள்.

வாதம் என்பது நம்மை உண்டாக்குவது. அதாவது படைத்தல். நரம்புகள், எலும்புகள் இவற்றோடு தொடர்புடையது.

பித்தம் என்பது ஜீரண சம்பந்தப்பட்டது. அதாவது காத்தல். சாப்பிட்டால்தானே இயங்க முடியும். வளர்ச்சியும் அதிலிருந்து வருவதுதானே?

கபம் என்பது அழித்தல். இருதயம், நுரையீரல் சம்பந்தப்பட்டது. சளி, மூக்கடைப்பு போன்றவை அதிகமாவதும், குறைவதும், நிற்பதும் கபம் சம்பந்தப்பட்டதுதான்.

ஒவ்வொரு மனிதனுமே இந்த மூன்றையும் பெற்றிருப்பவர். ஆனால் அவன் பிறக்கும் போதே தாய் தந்தை, சுற்றுச் சூழல் இவை காரணமாக இந்த மூன்றில் ஏதோ ஒன்றின் தாக்கம் அதிகம் கொண்டவனாக இருப்பான். இதைத்தான் நாங்கள் இவன் வாத உடம்புக்காரன், பித்த உடம்புக்காரன் என நாடி பார்த்துச் சொல்லுவோம்.

நீங்களே பார்க்கலாம், சிலருக்கு நரம்பு சம்பந்தப்பட்ட வியாதியே வரும். சிலருக்கு எப்போதும் வயிற்றுப் பிரச்னையே இருக்கும். ஏப்பம், அஜீரணம் இப்படி. சிலருக்கு எப்போதும் சளி தான்.

ஒரு மருத்துவர் என்கிற முறையில் நாங்கள் இதை அறிந்து கொண்டு அவரவருக்குத் தகுந்தாற்போல் மருந்து கொடுப்போம். ஒவ்வொருவருமே தான் என்ன உடம்புத் தத்துவத்தில் இருப்பவன் என்பதை அறிந்து அதற்கேற்ற உணவு முறையைப் பழகிக் கொண்டால் நிறைய வியாதிகள் வராது.

இதையே கருவுற்ற பெண்ணுக்கு எடுத்துக் கொள்வோம். வயிற்றில் குழந்தையைச் சுமக்கும் பெண் ஆரோக்கிய மாக தன்னையும் பார்த்துக் கொள்ள வேண்டும். குழந்தையையும் பார்த்துக் கொள்ள வேண்டும். எளிதாக ஜீரணம் ஆகும் உணவு, பச்சைக் காய்கறிகள், கீரைகள் எனச் சத்தான ஆகாரம் நிறையச் சாப்பிட வேண்டும். ஒரு நல்ல சித்த மருத்துவரை அணுகி தன் வயிற்றில் வளரும் குழந்தை புத்திசாலியாக, ஆரோக்கியமானவனாகப் பிறக்க என்ன உணவு முறை மேற்கொள்ளலாம் என ஆலோசிக்கலாம்.

இன்றைய நவீன மருத்துவ முறையில் தாய்ப்பால் கொடுக்கும் தாய்மார்களுக்கு மருந்து கொடுத்து நோயுற்ற குழந்தை யைக் குணப்படுத்தலாம் என்கிறார்கள். ஆனால் அந்தக் காலத்தில் நம் சித்தர்களோ ஒரு படி மேலே போய் கருவுற்ற தாய்மார்கள் ஆரோக்கியமாகத் தங்கள் குழந்தையைக் கருவில் தாங்க வழியைச் சொல்கிறார்கள். அதே போல, "மன உளைச்சலே எல்லா வியாதிகளுக்கும் காரணம்" என்கிறார்கள்.

வல்லாரைக் கீரை, தூதுவளைக் கீரை போன்றவற்றையெல்லாம் கருவுற்ற தாய்மார்கள் சாப்பிடுவதன் மூலம் புத்திசாலியான, ஆரோக்கிய

பிறரைப் பற்றிய உங்கள் அபிப்பிராயத்தை, உங்கள் கணிப்பை, அது சரியோ தவறோ, அதை உங்கள் குழந்தைகள் உள்ளத்தில் விதைக்காதீர்கள். இளம் நெஞ்சங்களில் நீங்கள் விதைத்த வித்துக்கள், விஷ வித்துக்களாக இருந்தால் பாதிக்கப்படுவது உங்கள் செல்வங்கள் தான். அடுத்தவரைப் பற்றிய அபிப்பிராயத்தை வளர்த்துக் கொள்ள அவர்களுக்குப் பூரண சுதந்திரம் அளியுங்கள். ஒருவருக்கு விஷமென்றால் அடுத்தவருக்கு அமிர்தமாகலாம்.

- கோமதி



சவுத் ஈஸ்ட் பெனிபிட் பண்ட் லிமிடெட்

மத்திய அரசால் அங்கீகரிக்கப்பட்ட 'நிதி' நிறுவனம் துவக்கம் - 1989.
கார்த்திக் அப்பார்ட்மெண்ட்ஸ், அடித்தளம், 6, செயிண்ட் மேரீஸ் சாலை, மந்தைவெளி,
சென்னை - 28. போன்: 49 40 255.
(தொடர்புகள் பங்குதாரர்களுடன் மட்டும்)

பிக்சட் டிபாசிட் திட்டம் (மாதங்கள்)					'உதவும் கரங்கள்' டிபாசிட் திட்டம் (மாதங்கள்)				சேமிப்பு நிதித் திட்டம் 9% வட்டி
12	24	36	48	60	12	24	36	60	வீடு மற்றும் குடியிருப்பு (FLAT) கடன்
17%	18%	19%	19.5%	20%	19.5%	20%	20.5%	21.0%	பதிவு அலுவலக மதிப்பில் பாதி

'குத்து விளக்கு' மறு முதலீட்டுத் திட்டம் - 1			'குத்து விளக்கு' மறு முதலீட்டுத் திட்டம் - 2		
36 மாதங்கள் THIRTY SIX MONTHS	Rs. 2,925/-	Rs. 5,000/-	252 மாதங்கள் (21 வருடங்கள்) 252 Months (21 YEARS)	Rs. 295/-	Rs.20,000/-
	Rs. 5,850/-	Rs. 10,000/-		Rs.590/-	Rs.40,000/-
	Rs. 8,775/-	Rs.15,000/-		Rs.885/-	Rs.60,000/-
	Rs.11,700/-	Rs.20,000/-		Rs.1,180/-	Rs.80,000/-
	Rs.14,625/-	Rs. 25,000/-		Rs. 1,475/-	Rs. 1,00,000/-

'கலங்கரை விளக்கம்' மறு முதலீட்டுத் திட்டம் - 1 (மாதங்கள்)						'கலங்கரை விளக்கம்' மறுமுதலீட்டுத்திட்டம் - 2		
டிபாசிட்	12	24	36	45	60	டிபாசிட்	120 மாதங்கள்	180 மாதங்கள்
1,000/-	1,184/-	1,430/	1,735/	2,000/	2,535/	2,500/	16,500/	45,500/

'கல்பதரு' மாபெரும் திரும்பப் பெறும் திட்டம்

டிபாசிட் திட்டம் 15 ஆண்டுகள்	5-ம் ஆண்டு முடிவில் பெறும் தொகை	10-ம் ஆண்டு முடிவில் பெறும் தொகை	15-ம் ஆண்டு முடிவில் பெறும் தொகை	ரெக்கரிங்டிபாசிட்திட்டம் மாதாந்திரவட்டி 19%
Rs. 6,320/-	Rs. 6,000/-	Rs.6,000/-	Rs.56,300/-	

'காமதேனு' மாபெரும் திரும்பப் பெறும் திட்டம்

டிபாசிட் திட்டம் 30 ஆண்டுகள்	10-ம் ஆண்டு முடிவில் நீங்கள் பெறும் தொகை	மேலும் 20 ஆண்டுகள் கழித்து நீங்கள் பெறும் தொகை
Rs. 12,500/-	Rs. 12,500/-	Rs.25,00,000/-
Rs. 25,000/-	Rs. 25,000/-	Rs.50,00,000/-
Rs.50,000/-	Rs.50,000/-	Rs.1,00,00,000/-

தங்க நகைக் கடன்
ஒரு கிராமுக்கு
ரூ. 300/ -
மதிப்பீட்டுக்கட்டணம் இல்லை
ஆர்.டி.தேவையில்லை.
உச்சவரம்பு இல்லை.
வட்டி வரி இல்லை.

ஏ.வி. இராமநாதன்
இயக்குநர் ஆடிட்டர்

எம்.பி. பாண்டுரங்கம்
துணைத் தலைவர் மற்றும் தலைமை நிர்வாகி

பி.கே. சாமிநாதன், தலைவர்
ஓய்வு பெற்ற மாநில அரசு துணைச்செயலாளர்

நேரம்: 9-12.30 & 3 - 5.30 பங்குத் தொகை ரூ.1/-தான் மாதத்தின் கடைசி நாள் வேலை நாளாகும்.

மான குழந்தைகளை பெறலாம்.

என்று டாக்டர் சிவராமன் சொல்லிக் கொண்டிருக்கும்போதே டாக்டர் மத்தியாஸ் குறுக்கிட்டார்.

"தயவு செய்து கட்டாயம் நீங்கள் இதைக் குறிப்பிட வேண்டும். தாயின் மன அதிர்ச்சியோ, சந்தோஷமோ குழந்தையைப் பாதிக்கிறது; அவள் எந்த மன உணர்வோடு இருக்கிறாளோ அதே குணாதிசயங்களோடு தான் குழந்தை பிறக்கிறது என்று இன்றைய மனவியல் நிபுணர்கள் கூறுகிறார்கள். ஆனால் அன்றே நம் முன்னோர்களும் அறிந்து இருக்கிறார்கள். கருவுற்ற தாய்மார்கள் தயவு செய்து இன்றைய வன்முறை, செக்ஸ் போன்ற விஷயங்கள் அடங்கிய திரைப்படங்களையும், டி. வி. தொடரையும் பார்க்காமல் இருப்பது நல்லது. அதனால்தான் அந்தக் காலத்தில் கர்ப்பிணித் தாய்மார்களை நல்ல கதைகள், நல்ல பாடல்கள், இனிய இசை இவற்றைக் கேட்கச்சொல்வார்கள். அதனால் குழந்தை நல்ல மனத்தோடும், அமைதியாகவும், ஆரோக்கியமான உடலோடு பிறந்தது. ஆனால் இன்றோ பயங்கரமான காட்சிகளைப் பார்க்கும்போது தாயின் உடலில் ஏற்படும் மாற்றங்கள், பரபரப்பு, மனப் படபடப்பு அப்படியே குழந்தையையும் பாதிக்கிறது. அது அதனுடைய ஆரோக்கியத்தையும் பாதிக்கிறது. கர்ப்பிணிகளை நல்லதைப் பார்க்கச் சொல்லுங்கள், நல்லதைக் கேட்கச் சொல்லுங்கள், நல்லதைப் பேசச் சொல்லுங்கள்..." என்றார்.

"பார்க்கக் கூடாதவையும் உண்டோ...?"

"அதைத்தான் நான் முன்பே சொன்னேனே. அடக்கக் கூடாதவை என்ற ஓர் ஆச்சர்யமான விஷயம் கூட சொல்லப்பட்டு இருக்கிறது. இது கர்ப்பிணிகளுக்கு மட்டுமல்ல, அனைவருக்கும் பொதுவானவை. பதினொன்று அடக்கக் கூடாதவைகளைச் சொல்கிறார்கள். சிறுநீர், மலம், ஏப்பம், ஆசனவாய் வழிவரும் வாய்வு, கொட்டாவி, தூக்கம் என விளக்கி எதையெதை அடக்குவதால் என்னென்ன வியாதிகள் வரும் என்று கூடச் சொல்கிறார்கள். அவை அத்தனையும் இன்று இருப்பதை நாம் பார்க்கிறோம். ஆனால் நவீன நாட்களில் நாம் நாகரிகம் கருதியும், வேலைப் பளுவின் காரணமாகவும் மேலே சொன்ன பலவற்றை அடக்குகிறோம். அதனால் வரும் வியாதிகளையும் அனுபவிக்கிறோம்..."

"குங்குமப் பூவினை பாலில் போட்டுச் சாப்பிட்டால் குழந்தை சிவப்பாகப் பிறக்கும் என்பார்களே...?"

"அது உண்மையில்லை. ஆனால் அதிகச் சிரமமில்லாத எளிதான பிரசவத்திற்குக் குங்குமப்பூ உதவுகிறது. அதேபோல பிரசவ நேரத்தில் அதிகச் சிரமம் இல்லாமல் இருப்பதற்கு பெண்களுக்கு நிறைய உடல்ரீதியான உழைப்பு இருக்க வேண்டும். நிறைய வீட்டு வேலைகள் செய்ய வேண்டும். இவை அவர்களை ஆரோக்கியமாக வைத்திருக்கும்..."

"பிரசவ நேரத்தில் எத்தனையோ சிக்கல்கள் வருகிறதே...?"


"முறையான உணவு, சரியான உடலுழைப்பு இவை இருக்குமானால் நிச்சயம் எந்தப் பிரச்னையும் வராது. அதே போல வலி சரியாக எடுக்கவில்லையென்றால் ஒரு கஷாயம் தயாரித்துக் கொடுக்க



பாண்டவர்கள் ஏதேனும் ஒரு பிரச்னைக்கு முடிவெடுக்கும்பொழுது, இளையவர்களான நகுலன், சகாதேவன் இருவருக்கும் தங்கள் கருத்தைக் கூற முதல் சந்தர்ப்பத்தை அளிப்பாராம் மூத்தவரான தர்மர். பெரியவர்கள் பேசி முடிவெடுத்த பிறகு இளையவர்கள் தங்கள்கருத்தை வெளிப்படுத்தாமலேயே இருந்து விடுவார்கள் என்பதால் இந்த விதி. இந்த அருமையான விதிமுறை பல குடும்பங்களில் அறவே இல்லாததால் சின்னச்சின்ன விஷயங்கள் கூடப் பூதாகாரமாக்கப்பட்டுக் குடும்பம் பிளவுபட்டு விடுகின்றன. மகாபாரதமும் இராமாயணமும் வெறும் பொழுது போக்குக்காகப் படைக்கப்படவில்லை.

- கோமதி


MAKE YOUR OWN 'SHAKE'
The Shake with the twist
Now real fun and real milk come together in one delicious swirl. And that's the twist. The shake is New Santosa Milkshake powder. Real spray-dried milk packed with calcium, protein and vitamins. In three lip-smacking flavours – strawberry, mango and pista. Whip up with chilled water and crushed ice in a mixer. Pour straight into a tall glass. Schlurp! Now go ahead and have another round!
NEW
Santosa
Sold at all Arun Ice Cream parlours in Tamil Nadu.
Santosa
MILK SHAKE POWDER
Ogilvy&Mather 5502



● PEARLS ● AMERICAN DIAMONDS ● BIRTH STONES ● KUNDAN ITEMS
● MOHAN MALA GOLD BEADS ● CORALS BIG SIZE
● TULASI SETS ● CORAL FLOWERS
HYDERABAD LEGACY
CHERISHED BY EVERY
GENERATION
Visit today for Hyderabad pearls
NARAYANA pearls
Shop No.4, Basement, Kasi Arcade
116, Thyagaraya Road, T. Nagar, Madras-600 017.
COME AND REPAIR YOUR PEARL SETS (PURCHASED ANYWHERE) WITH OUR SPECIALIST..FREE OF COST



பதமாக பாலைக் காய்ச்சிட
மிருதுவான இட்லிக்கு
சுத்தமான, சுகாதாரமான குடிநீருக்கு
Murugan
இணையற்ற எமது மற்ற தயாரிப்புகள்
★ தோசை திருப்பி ★ குழிக்கரண்டி
★ சாஸ்ஃபான் ★ அன்னவெட்டி
★ சட்டுவம்
அனைத்து முன்னணி பாத்திர விற்பனையாளர்களிடம் கிடைக்கும்
முருகன் மெட்டல் இண்டஸ்ட்ரீஸ்
21, பொன்னப்ப செட்டி தெரு, சென்னை-3. போன்: 582182

வேண்டும். இயற்கையாகப் பிரசவ வலி எடுக்கும். அதேபோலப் பிரசவம் ஆனவுடனே ஒரு கிண்ணம் விளக்கெண்ணெய் சாப்பிடக் கொடுப்பார்கள். இது பிரசவத்தால் குளிர்ந்து போன உடம்பிற்கு உடனடியாக உஷ்ணத்தைக் கொடுக்கும்.

பிரசவத்திற்குப் பின் ஜன்னி கண்டுபோய், அதிக இரத்தப் போக்கு ஏற்பட்டு இறப்பவர்கள் இருக்கிறார்கள். அதாவது பெண்களுக்கு இந்த நேரத்தில் கபத்தன்மை அதிகமாகி விடும். உடல் குளிர்ந்துவிடும். பல்ஸ் குறைகிறது என்பார்கள். நாங்கள் ஜன்னி என்போம். அந்த நேரத்தில் உடம்பிற்கு உடனடியாக உஷ்ணம் தேவை. சாதாரணமாக ஒரு மனிதனோ மனுஷியோ இறந்து விட்டால் 'குளிர்ந்து போய்விட்டான்' என்று சொல்கிறோம் இல்லையா?

சாதாரணமாக ஒரு பெண் எந்த உடல்வாகு கொண்டவளாக இருந்தாலும் பிரசவ நேரத்தில் கபத்தன்மை கொண்ட உடல் உடையவளாக ஆகிறாள். கபநாடி அதிகமாக இருக்கும். அதற்குத்தான் உடனே உஷ்ணம் தரக்கூடிய ஆகாரம் கொடுப்பது. அதனால் தான் பிரசவத்தை 'மறுபிறப்பு' என்று சொல்கிறார்கள்.

அதேபோலப் பிரசவமாகி முதல் பதினாறு நாட்களில் அவளுக்குக் கொடுக்கப்படும் ஆகாரமே அவளைப் பழைய நிலைக்குக் கொண்டுவரும். எனவே அந்த நேரத்தில்தான் சரியான வழிகாட்டுதலைத் தாய்மார்கள் பெறவேண்டும்.

குழந்தை பெற்றவர்களுக்குப் பிரசவ லேகியம் எனக் கொடுப்பார்கள். இதில் கலந்துள்ள பொருட்களால் கருப்பை நன்கு சுருங்கி உள்ளே உள்ள அழுக்குகளை எல்லாம் வெளியேற்றி விடும். அதேபோலத் தாய்ப்பால் குறைவாகச் சுரப்பவர்களுக்கும் நல்ல சித்த மருந்துகள் இருக்கின்றன. அவை இயற்கையான மூலிகைகள். எந்தத் தீங்கும் செய்யாதவை. எனவே, தாய்மார்கள் தாய்ப்பால் இல்லையே என ஏதேதோ செயற்கை மருந்துகளை உண்பதைவிட இயற்கையான மருந்துகளை உண்டு நல்ல தாய்ப்பால் வளம் பெறலாம்."

"கர்ப்ப காலத்தில் சிலருக்கு வெள்ளைப் போக்கு இருக்கிறதே!"

"அது ஆரம்ப நாட்களில் இருக்கும் இயற்கையான ஒன்று. அதனால் தவறு ஒன்றும் இல்லை..."

"அப்போ உங்களால் பிரசவம் கூடப் பார்க்க முடியும் என்கிறீர்கள்..."

"அதாவது நம் சித்தர்களின் நோக்கமே ஆரோக்கியமான உடல், தெளிவான மனது என்பதுதான். இந்த இரண்டும் இருந்தால் எந்தக் காரியத்தையும் சாதிக்க முடியும். எனவே ஒவ்வொரு விஷயத்திலும் இவ்விரண்டையும் பிணைத்தே அவர்கள் சொல்லி வந்தார்கள். கர்ப்பஸ்திரீகளுக்கும் அது பொருந்தும். இயற்கையான உணவு முறைகள், நல்ல ஆரோக்கியமான மனது என இருந்தால், நல்ல குழந்தைகளைப் பெறலாம். ஆரோக்கியமான குடும்பம் எங்கே ஆரம்பிக்கிறது என்றால் கருவிலேயே ஆரம்பித்து விடுகிறது. எனவே, அங்கேயே நம் வாழ்க்கையைச் செம்மைப்படுத்த ஆரம்பித்தோமானால் ஒரு நல்ல வளமான சமுதாயம் நம் நாட்டில் அமையும்."

என்கிறார்கள் உற்சாகமாக இந்த இளம் மருத்துவர்கள்.

- 'ஜ்வாலா'

ஒருவனுடைய இழப்பால் எத்தனை உள்ளங்கள் உண்மையாகக் கலங்குகின்றனவோ, எத்தனை நெஞ்சங்கள் நடிக்காமல் வாடுகின்றனவோ, அவை வடிக்கும் கண்ணீர்த் துளிகள் ஒவ்வொன்றும் அவனை இறைவனின் அடிகளுக்கு இட்டுச் செல்லும் படிக்கட்டுகள் என்பதை மறந்துவிடாமல் வாழ்க்கையை அர்த்தமுள்ளதாக்குவோம். அர்த்தமுள்ள வாழ்க்கையே இனிமையான வாழ்க்கை.

- கோமதி



மங்கையர் மலர் &
மீரா ஹெர்பல் பவுடர்
வழங்கும்

கூந்தல் பராமரிப்புப் பக்கங்கள்



ஸ்கால்ப் மசாஜ் : வாரம் ஒருமுறை செய்யலாம். பொடுகுகளை நீக்கவும், கூந்தல் உதிராமல் இருக்கவும், கூந்தல் வளரவும், சத்து இல்லாத கூந்தல் உடையவர்களுக்கும், நரை முடியைத் தடுப்பதற்கும், தலைவலியைப் போக்குவதற்கும், புத்துணர்விற்கும் ஸ்கால்ப் மசாஜ் உதவும். நம்முடைய முன்னோர்கள் செய்து கொண்டு வந்த முறைதான் இது. தலைமுடியின் வேர்ப் பாகத்தில் அழுந்தத் தேய்ப்பதால் வேர்ப் பாகங்கள் பலப்பட்டு முடி உதிருவது தடுக்கப்படும்.

பத்மா ராகவன், அறந்தாங்கி.

மருதோன்றி ஒரு ஹேர்டை போன்றது என்று அதை அரைத்துத் தலையில் தடவிக் கொண்டு ஒரு மணி நேரம் ஊறியபின் முடியை அலசிக் கொண்டேன். தலை, மயிர் எல்லாம் சிவந்து போய், தலையில் என்ன என்று எல்லோரும் கேட்கும்படி ஆயிற்று. மருதோன்றியை வேறு எந்த வகையில் பயன்படுத்துவது?

மருதோன்றியைத் தலைமுடியில் அப்படியே அரைத்துத் தடவக் கூடாது. எண்ணெயும் சரியான விகிதத்தில் கலந்து ஊற வைத்து (இரும்புக் கடாயில்) பயன்படுத்தினால் சிவப்பாக முடி மாறாது.

அனுபல்லவி, சென்னை.

என் தலைமுடி 'ஸ்டைலை' மாற்றலாம் என்று இருந்த போது தோழி வந்து 'கம்ப்யூட்டர் டிசைன்' கட்டிங் வந்துள்ளது என்கிறாள். தலைமுடி ஸ்டைலை மாற்ற இது முதல் காரணம். முடியில் வெடிப்பும் சிக்கும் விழுகிறது. கூந்தல் குட்டையாக இருந்தால் பராமரிக்க சுலபம் என்று நினைக்கிறேன். முடி வெட்டுதலுக்குச் செல்லலாமா? நல்லது தானா?

முடி வெட்டிக் கொள்வதால் முடியின் வெடிப்பு தடுக்கப்படும். முடி வெட்டுவதால் முடி அடர்த்தியாக நன்கு வளரும். எனவே நீங்கள் விரும்பியபடி, அதேசமயம் உங்கள் முகத்திற்கு ஏற்ற ஹேர்ஸ்டைல்தானா எனப் பார்த்து 'டிரிம்' செய்து கொள்வதில் தவறில்லை.

உஷா வேணுகோபாலன், சென்னை - 83.

எனக்கு இரண்டாவது டெலிவரி ஆகி 6 மாதம் ஆகிறது. வயது 28. இயற்கையிலேயே அடர்த்தியான நீளமான கூந்தல், இந்தக் குழந்தை பிறந்தது முதல் முடி மிக

கூந்தலைக் குட்டையாக்கலாமா?

அதிகமாகக் கொட்டுகிறது. கையில் எடுத்தாலே வருமளவுக்கு அதிக முடி கொட்டுவது கவலை தருகிறது. தாய்ப்பாலும் நாளுக்கு 3 அல்லது 4 தடவை மட்டுமே கொடுக்கிறேன். வாரம் ஒரு நாள் வெந்தயம் தேய்த்துக் குளிக்கிறேன். முடி உதிராமல் தடுத்து அடர்த்தியாக வளர என்ன செய்ய வேண்டும்?

பிரசவமாகி முடி கொட்டுவது, அதிகம் கொட்டுவது இதெல்லாம் இயற்கையான விஷயங்கள்தான். சாதாரணமாக முடி கொட்டுவதற்குக் காரணம் சத்துக் குறைவு, மன உளைச்சல். இரும்புச் சத்து அதிகமுள்ள முருங்கைக் கீரை, அகத்திக் கீரை, புளிச்சக் கீரை, கறிவேப்பிலை போன்ற கீரை வகைகளையும் பால், நெய் மற்றும் பருப்பு வகைகளையும், காய்கறிகளையும் உணவில் அதிகம் சேர்த்துக் கொள்ளவும். மாமிசம், மீன், முட்டை சேர்த்துக் கொள்ளலாம். வாரம் ஒரு முறை அழுக்கு போக கேசத்தைச் சுத்தப்படுத்த வேண்டும். வெந்தயம் தேய்த்துக் குளிக்கலாம். செம்பருத்தி இலையை அரைத்துத் தேய்த்துக் குளிக்கலாம். நல்ல பலன் கிடைக்கும். அதற்காகத் தாய்ப்பாலை இத்தனை தடவைதான் கொடுப்பது என இருக்காதீர்கள். தாய்ப்பாலைக் குழந்தைகளுக்குத் தாராளமாகக் கொடுக்க வேண்டும்.

ஆர். ஸ்வர்ணலதா, சென்னை.

என் தோழி சொல்கிறாள் தலையில் பேன் உள்ளவர் அருகில் தலை வைத்துப் படுத்தால் நமக்கும் பேன் ஒட்டிக் கொள்ளும் என்பது உண்மையா? முதலில் பேன் பிடிப்பது ஏன்?

நன்றாகச் சுத்தம் செய்யப்படாத கூந்தல்கள்தான் பேன் வரக் காரணம். அழுக்கு, பிசுக்கு தலையில் அதிகம் இருந்தாலும் கூந்தலில் ஈரமுள்ள போது சிக்கலை எடுக்காமல் அப்படியே பின்னிக் கொள்வதாலும் பேன் வரும். பேன் உள்ளவர் அருகில் தலை வைத்துப் படுத்தால் நமக்கும் பேன் ஒட்டிக் கொள்ளும்.

திருமதி கலைப், பெங்களூர்.

என் வயது 45. எனக்கு முடி நரைக்க ஆரம்பித்து உள்ளது. இயற்கைதான் என்றாலும் ஓரளவுக்கு மாற்ற என்ன செய்யலாம்? டை எல்லாம் இதுவரை உபயோகித்தது இல்லை. இதுவே பழக்கமாகி அதிகச் செலவு, உடம்புத் தொந்தரவு வருமோ என பயம். மெகந்தியால் தலைமுடி சிவப்பாக மாறி விடுமோ என்று பயம். கருமை நிறம் வர என்ன பயன்படுத்த வேண்டும்?

நரையை மறைக்க மெகந்தி போட்டுக் கொள்ளலாம். தேர்ந்த அழகுக்கலை நிபுணரிடம் போட்டுக் கொண்டால் நல்லது. சரியான விகிதத்தில் மெகந்தியைப் போட்டுக் கொண்டால் சிவப்புக் கலர் வராது! கருமையாகத் தலைமுடியை மாற்ற வேண்டுமானால் டைதான் சிறந்தது!

ஹெச். லக்ஷ்மி, திருவாரூர்.

வாரம் எத்தனை முறை தலைக்குக் குளிக்கலாம்? என்ன தேய்த்துக் குளிக்கலாம்? இயற்கை முறையில் கூறவும்.

வாரம் இரு முறை தலைக்குக் குளிக்கலாம். இரவில் தேங்காய் எண்ணெயை மயிர்க்கால்களில் படும்படி அழுந்தத் தேய்த்துவிடவும். பதினைந்து நிமிடங்கள் கழித்துத் தலைமுடியை நன்கு வாரவும். காலையில் சீயக்காய்ப் பொடியுடன் போதுமான அளவு வெந்தயம் ஊற வைத்து அரைத்ததைப் போட்டு நன்கு தேய்த்துக் குளிக்கவும். பட்டுப் போன்ற முடியைப் பெறலாம்.

- ஹேமா லக்ஷ்மண்,
(தலையலங்கார நிபுணர்,
21/3, டைப் III,
ஹெச்.வி.எஃப் எஸ்டேட்,
ஆவடி, சென்னை - 54.)

பரிசு பெற்ற கட்டுரை

என்னைக் கவர்ந்த கூந்தலழகி

அடிமுடி காணா தலைமுடி!

நான் ஒன்பதாம் வகுப்பு படித்துக் கொண்டிருந்தேன். என்னுடைய வகுப்பு ஆசிரியையாகப் புதிதாக ஒருவர் வந்திருந்தார். அவர் வகுப்பில் நுழையும்போதே எல்லோருடைய கவனத்தையும் ஈர்த்தார். காரணம் என்னவெனில் அவருடைய அழகான தோற்றமும் கூடவே அவருடைய தலையைவிடப் பெரிதான கொண்டையும்தான். அப்பொழுதே அவருடைய தலைமுடியின் அளவைக் கற்பனை செய்து, இயற்கை முடியா, செயற்கை முடியா எனப் பலருக்குச் சந்தேகம். அந்த ஆசிரியையும் பள்ளி ஆசிரியர் விடுதியில் தங்கி வேலை பார்த்துக் கொண்டிருந்தார். விடுதியில் தங்கியிருந்து படிக்கும் என் வகுப்பு மாணவிகள் என்னுடைய ஆசிரியையின் முடியின் நீளத்தைப் பார்க்க முடிந்ததாகவும், மிகவும் நீளமாக இருப்பதாகவும் கூறி என்னுடைய ஆவலை அதிகப்படுத்தினர். ஆனால் அதற்கான சந்தர்ப்பம் அமையவில்லை.

இவ்வாறாக மனம் அலைபாய்ந்து கொண்டிருக்கும் வேளையில் ஒரு நல்ல செய்தி கிடைத்தது. அதாவது ஒரு சனிக்கிழமையன்று எங்கள் வகுப்பு ஆசிரியை ஸ்பெஷல் கிளாஸ் வைக்கப் போவதாக அறிவித்தார். பொதுவாகவே ஆசிரியைகள் ஸ்பெஷல் கிளாஸ் வைக்கும் சமயம், கொண்டை போடாமல் பின்னல் போட்டுக் கொண்டுதான் வருவார்கள். அந்த நாளும் வந்தது. நினைத்தபடி ஆசிரியை பின்னல் போட்டுக் கொண்டுதான் வந்தார். ஆனால் அவருடைய பின்னலைக் கொண்டு அவருடைய முடியின் அளவை முழுமையாக அறிந்து கொள்ள முடியவில்லை. காரணம், தரையிலிருந்து அரையடிக்கு மேல் தொங்கிய பின்னலின் நுனியில் ஒரு டென்னிஸ் பால் அளவுக்கு ஒரு பின்னல் கொண்டை. அந்தக் கொண்டை பிரிந்தால் அது தரையில் புரளும் என்பதில் எனக்குச் சந்தேகமில்லை.

எங்கள் பள்ளி மாணவிகள் அனைவரையும் மீண்டும் மீண்டும் பார்க்க ஆவலைத் தூண்டிய அந்தக் கூந்தலின் கருமை, பருமன், நீளம் என்றுமே என் நெஞ்சை விட்டு மறையவே மறையாது. கூந்தல் என்றாலே எனக்கு என் ஒன்பதாம் வகுப்பு ஆசிரியைதான் நினைவிற்கு வருகிறார். நான் இன்றுவரை அவரை மிஞ்சிய நீள முடியுடைய ஒருவரைப் பார்த்ததில்லை.

- குணசாந்தி, நெய்வேலி - 3.

காய்கறிகள் நறுக்க உபயோகிக்கும் கத்தி கூர்மை மழுங்கிவிட்டதா? தீட்டுவதற்குச் சுலபமாக இதோ ஒரு வழி : வீட்டில் கிரைண்டரை ஓடவிட்டு சுற்றிக்கொண்டிருக்கும் உருளையில்க்கல் உரலில் கத்தி முனையை வைத்துத் தீட்டுங்கள். இரண்டு நிமிடத்தில் கத்தி கூராகிவிடும். ஜாக்கிரதை விரலை வெட்டிக் கொள்ளப் போகிறீர்கள்.

- சித்ரா நாராயணன்



பரிசு பெற்ற கட்டுரைக்கு மீரா அளிக்கும் பரிசு : ரூ. 1000/- மதிப்புள்ள குக்கர்

அடுத்த இதழுக்கான போட்டி -
நான் பார்த்து ஆச்சர்யப்பட்ட 'ஹேர்ஸ்டைல்'
கடைசி தேதி 9.8.94

பிரசுரத்திற்குச் சில கட்டுரைகள்

மாட்டுச் சாணமே உபயோகிக்கிறேன்!

நான் பத்தாம் வகுப்பு படிக்கும் பொழுது என்னுடன் சுஜாதா என்ற மாணவி ஒருத்தி படித்தாள். அவளுக்கு நீண்ட கூந்தல். அழகென்றால் அழகு, அவ்வளவு அழகு. அவளுடைய கூந்தலைப் பார்த்துப் பொறாமைப் படாதவர்களே இருக்க மாட்டார்கள். அவ்வளவு நீளமான பளபளப்பான கூந்தல். தினமும் எண்ணெய் தேய்த்துக் குளித்து அழகாகக் கட்டிக் கொண்டு வருவாள்.

எங்களுக்கும் சுஜாதா மாதிரி பளபளப்பான அழகான கூந்தல் வளர வேண்டும் என்று மிகவும் ஆசையாக இருந்ததால் அவளிடம், "உனக்கு மட்டும் எப்படி இவ்வளவு அழகான முடி இருக்கிறது? நீ புதிதாக ஏதாவது தேய்த்துக் குளிக்கிறாயா?" என்று கேட்டோம். அவளும்,

"நான் புதிதாக ஒன்றும் தேய்க்க மாட்டேன். சிகைக்காய் தேய்த்துத்தான் குளிப்பேன்" என்றாள். நாங்கள் அதை நம்பாமல்,

"சிகைக்காய் சேர்த்தால் மட்டும் இவ்வளவு அழகாக இருக்காது. நீ பொய் சொல்கிறாய். உண்மையைச் சொல்" என்று நச்சரித்துக் கொண்டே இருந்தோம்.

அவளும் நச்சரிப்புத் தாங்க முடியாமல், "ஆமாம், நான் தினமும் மாட்டுச் சாணத்தை எடுத்துக் காய வைத்துப் பொடி செய்து அதைத் தலையில் தேய்த்துக் குளிப்பேன்" என்று கோபமாகச் சொல்லிவிட்டுப் போய்விட்டாள்.

எங்களுடன் இருந்த ஒருத்தி இதை உண்மை என்று நினைத்துக் கொண்டு அடுத்த நாள் சுஜாதா சொன்னபடி குளித்துவிட்டு ஸ்கூலுக்கும் வந்துவிட்டாள். அவள் வகுப் பறைக்குள் வந்தவுடன் வகுப்பெல்லாம் ஒரே சாணி நாற்றம். நாங்களும் 'என்ன திடீரென்று சாணி நாற்றம்' என்று நினைக்க ஒருத்தி, 'சீதாவிடமிருந்துதான் நாற்றம்' என்று கூற சீதாவும் சுஜாதா சொன்னபடி செய்தேன் என்று வெகுளித்தனமாகக் கூற சுஜாதா உள்பட அனைவரும் சிரித்துவிட்டோம். வகுப் பறை அன்று சிரிப்பறை ஆகிவிட்டது. இன்று நான் பி. காம் இரண்டாம் ஆண்டு படிக்கிறேன். இன்றும் சீதாவைப் பற்றி நினைத்தாலே சிரிப்பாய் வரும்.

- டி. அமராவதி, கோவை - 4.

பாடுபட்டு வளர்த்தேனே!

என்னைக் கவர்ந்த கூந்தலழகி வேறு யாருமில்லை. அது நானேதான். 'அட டம்பமே!' என்று உதட்டைப் பிதுக்குகிறீர்களா? எனக்கு வருத்தமேயில்லை.

வெகு நீளமும், அடர் கருமையுமாயிருந்த என் கூந்தல், எனக்குப் பல பெயர்கள் கிட்டக் காரணமானது. மோகினிப் பிசாசு, பன்றி முடிக்காரி, முடிக்காரியா இல்லை முடிக்கடைக்காரியா என்ற பல பட்டங்கள் எனக்குச் சொந்தமாயின. நீள் கூந்தல் உடையவள் என்ற பெயர் எனக்குக் கிடைத்தாலும், பாடுபட்டு பயிர் மாதிரி மயிர் வளர்த்த பெருமை என் தாயைச் சாரும். அழுகிய தேங்காயை வீணாக்காமல் அரைத்துத் தலையில் தேய்த்து விடுவதாகட்டும், சுத்தமான தேங்காய் எண்ணெயைச் செக்கில் இருந்து வாங்கி வந்து அதில் துளசியும் கறிவேப்பிலையும், செம்பருத்தியும், மருதாணியும் அரைத்துக் கலந்து காய்ச்சி ஆற வைத்து அதைத் தினமும் தலையில் தடவித் தருவதிலாகட்டும், என்

தாய் சளைத்ததேயில்லை. எனவே, என் முடியும் செழித்து வளர சளைக்கவேயில்லை.

திருமணம் முடிந்து தனிக்குடித்தனம் செய்யக் கணவரோடு வெளிநாடு சென்றேன். அங்கு நான் பழகிய பல தேசத்து நண்பிகள் என் கூந்தலைப் பாராட்டி ஒரு வார்த்தையேனும் சொல்லாமல் விட்டதில்லை! 'இத்தனை முடி இருக்கிறதே, பராமரிக்கக் கஷ்டமாக இல்லை?' என்று கேட்பவர்களுக்குப் பதிலாக, இல்லையென்று மறுத்துத் தலையை பலமாக ஆட்டுவேன். பராமரித்தால்தானே கஷ்டம், நான்தான் பராமரிக்கவேயில்லையே, பாடுபட்டு என் தாய்வளர்த்துக் கொடுத்த என் தலைமுடி என் அக்கறையின்மையால் பாழ்பட்டுத்தான் போனது. குடும்ப வேலைகளைச் செய்வதும், குழந்தைகளைக் கவனிப்பதும் மீதமுள்ள நேரத்தில் வீடியோ பார்ப்பதுமாக இருந்த என் கண் பார்வை என் கார்க் கூந்தல் மீது படவேயில்லை. அதனால் என்னைக் கவர்ந்த என் அடர்க்கூந்தல் என் அனுமதி இல்லாமலேயே என்னை விட்டு அகன்று போகத் துவங்கியது. அப்போதே விழித்துக்கொள்ளவில்லையே நான்...

மீண்டும் என் சொந்த ஊரில் வந்து செட்டில் ஆனபோது, "பாடுபட்டு வளர்த்தேனே, சர்வேசுவரா" என்று என் தாய் வருத்தம் கொண்டாள். என்னைவிடக் குறைந்த அளவு தலைமுடி கொண்ட என் சகோதரிகளின் கூந்தல் அளவைவிட என் தலைமுடி குறைந்தே...தே...தே போய்விட்டது. கண் கெட்ட பின்பு சூரிய நமஸ்காரம் செய்வது போல், என்ன தைலம் தடவினால் மீண்டும் நன்றாக முடி வளரும், நரைமுடிக்கு நல்ல மருந்து எது என்று இப்போது கடும் ஆராய்ச்சியில் இருக்கிறேன். என்ன செய்து என்ன, என் மீது கொண்டுள்ள என் கூந்தலின் பிணக்கம் இன்னும் தீரவில்லை. தீர்ந்து போன பெருங்காய டப்பா போல, என் கூந்தல் அழகைப் பற்றி ஞாபகம் வைத்துள்ள என் தோழிகள், "எங்கேடி போச்சு உன் தலைமுடி?" என்று துக்கம் விசாரிக்க, "அது போயே போச்சு" என்று விளம்பர பாணியில் சொல்லச் சலிக்கவில்லை நான்.

வளர்ப்பதைவிட பேணிக் காப்பாற்றுவது மிகக் கஷ்டம் மட்டுமல்ல, மிகமிக முக்கியமானதும்கூட என்பதை என் கூந்தல் அனுபவபூர்வமாக என்னை உணர வைத்தது.


- ஏஞ்ஜல் பாப்டிஸ்ட், கன்னியாகுமரி.

தோழிகளைக் கொண்டு வந்த கூந்தல்!

தலைப்பைக் கண்டவுடனேயே - நீண்ட, அடர்ந்த, கருமையான கேசத்தினாலேயே அனைவரையும் கவர்ந்த என் மகளே (திலகம்) என்னைக் கவர்ந்த கூந்தலழகி. அவளுக்கு நல்ல நீளமான முடி. நானும் நன்கு அதைப் பராமரித்து வந்தேன்.

அவள் பி. யு. சி. முடித்தபின் அவளை ஹாஸ்டலில் சேர்க்க முடிவு செய்தோம். ஹாஸ்டலுக்கு வந்த மறுநாள் கல்லூரிக்குக் கிளம்பும் முன்தான் தலைமுடியைச் சீவ வேண்டும், அதுவும் தானே என்பது அவளுக்கு நினைவு வந்தது. வீட்டை விட்டு வந்த வருத்தம் வேறு. ஒரு ரிப்பனை வைத்துத் தனக்குப் பிடித்த, தெரிந்த 'குதிரை வால்' போட்டுக் கொள்ள - கையைப் பின்னுக்குக் கொண்டு போய் வாரத் தெரியாமல் (கைவலி வேறு) விழித்தாள். அதைக் கண்ட அவளது தோழிகள் என்ன அக்கா சடை போடத் தெரியாதா? என்று கேட்ட பின் உண்மையைக் கூறச் சொக்கம்மாள் என்ற தோழி தலைவாரி விடும் வேலையைத் தனதாக்கிக் கொண்டாள்.

ஆக அவளது கூந்தலே அவளுக்குப் பல தோழிகள், விசிறிகளைப் பெற்றுத் தந்தது. இதற்கிடையில் இரு பின்னல்கள் போடுவதே சௌகரியமாகவும், வாடிக்கையாகவும்



குழந்தைகளுடைய வாட்டர்பேக்கின் மூடி தொலைந்து போனால், அவற்றைப் பழைய பிளாஸ்டிக் வாங்குபவனிடத்தில் போட்டு விடாமல், வாஷ் பேசினுக்கருகே ஆணி அடித்து மாட்டினால், டூத் பிரஷ் போன்றவற்றைப் போட்டு வைத்துக் கொள்ளப் பயன்படும்.

- உஷா விஜயக்குமார்



உருளைக்கிழங்கு பெரியது 4 அல்லது 5 நன்றாக வேக வைத்து மசித்துக் கொள்ளவும். அதில் கோதுமை மாவைப் போட்டு, உப்புப் போட்டுப் பிசையவும். தண்ணீருக்குப் பதிலாக எண்ணெய் 2, 3 ஸ்பூன் விட்டுப் பிசைந்தால் பஞ்சு போல ரொட்டி மாவு ஆகிவிடும். அதை ரொட்டி இடுவது போல் இட்டு, எண்ணெய் ஊற்றி பரோட்டா செய்யவும். இதற்குத் தொட்டுக் கொள்ள ஊறுகாய் கூட போதும். இரண்டு மூன்று மணி நேரம் கழித்துச் சாப்பிட்டாலும் மிருதுவாக இருக்கும். ஆனால் சிறிது தடியாக இட வேண்டும், அப்பொழுதுதான் மிருதுவாக இருக்கும்.

- சாரதா

ஆகிவிட்டதால் 'இரட்டைவால் ரெங்குடு' என அவளது தோழிகள் பெயர் வைத்து விட்டனர். வகுப்பிலேயே அவளது கூந்தலே அனைவரையும் கவர்ந்த நீண்ட அடர்ந்த கூந்தல். இரவில் மேல் கட்டிலில் தூங்கும் பொழுது சடைகள் இரண்டும் இரண்டு பாம்புகள் போல் எங்களை மிரட்டுகின்றன என கீழ் கட்டிலில் படுக்கும் தோழியர் கூறுவதுண்டு. பலர் கூந்தலை வாரி விடுகிறேன் என்று போட்டியிடுவதும் உண்டு. இன்று இரு குழந்தைகளின் தாய் அவள். அவள் குழந்தைகளும் இரவில் அம்மாவின் சடையைக் கையில் பிடித்துக் கொண்டு தூங்குவதே வழக்கம். என் பேத்தி இப்பொழுதெல்லாம், 'பாட்டி, எனக்கும் அம்மாவைப் போல் நீண்ட முடி வளருமா பாட்டி?' என்று என்னைக் கேட்டு வருகிறாள். உண்மையில் இது இயற்கை அளித்த வரம்.

கே. வி. லக்ஷ்மி,
சென்னை - 20.

என்ன கொண்டை, என்ன கொண்டை!

ஒருநாள், மாலை ஆறு மணிக்கு நான், கொரடாச்சேரியில் இருந்து கும்பகோணத்திற்குப் பஸ்ஸில் சென்று கொண்டிருந்தேன். அப்போது ஒரு பெண் பஸ்ஸில் ஏறி எனக்கு முன் இருந்த இருக்கையில் உட்கார்ந்தார். அவர் உட்கார்ந்தாரோ இல்லையோ, பஸ்ஸில் இருந்த அனைவரும் ஆர்வத்துடன் பார்க்கத் துவங்கிவிட்டனர். ஆம், அவரின் சிகை அலங்காரம் எல்லோரையும் ஒருகணம் அசத்தி விட்டது. நன்கு கருகருவென்று முடியை வாரி, 'பன்'கொண்டை போட்டு மல்லிகையையும், கனகாம்பரத்தையும் நெருக்கமாகத் தொடுத்து அந்தக் கொண்டை மேல் வைத்திருந்தார்.

உட்கார்ந்த சில நிமிடங்களில் அவர் தலையைச் சாய்த்து உறங்க ஆரம்பித்துவிட்டார். கொரடாச்சேரி கும்பகோணம் பாதை நிறைய இடங்களில் சர்க்கஸ் காட்டும் பாதை. ஒவ்வொரு தடவையும் பஸ் குலுங்கும்போதும் அந்தப் பெண்மணியின் கொண்டை பின் பக்கம் இருந்த கம்பியில் இடித்துக் கொண்டே இருந்ததைப் பார்த்த பஸ்ஸில் இருந்தவர்களுக்கெல்லாம் 'அழகான கொண்டை இடிபடுவதைப் பார்த்து ஏக வருத்தம்! 'என்ன செய்வது... அந்தக் கொண்டைக்காகவாவது ஒரு குஷன் வைத்திருக்கலாம்' என்று கண்டக்டர் வருத்தத்துடன் கூறிக் கொண்டு சென்றார்.

சிறிது நேரத்திற்குப் பிறகு அவரவரும் கொண்டை மீதிருந்த பார்வையை அகற்றித் தூங்க ஆரம்பித்தனர். நானும் கண்ணயர்ந்து தூங்கி விட்டேன்.

திடீரென்று என் காலில் வழவழப்பாக ஏதோ தட்டுப்பட்டது. சடாரென்று காலை உதறினேன். மீண்டும் என் காலடியில் வழவழப்புடன் தட்டுப்படவும் குனிந்து பார்த்தேன். அங்கே ஒரு கறுப்பு நிறப் பாம்பு அசைவற்றுக் கிடந்தது. 'என்னடா இது, இப்படியொரு கருமை நிறத்தில் நாம் பாம்பைப் பார்த்ததில்லையே!' எனச் சந்தேகப்பட்டு, நன்கு உற்றுப் பார்க்கவே, அது பாம்பு இல்லை என்று தெரிந்தது. சரி, என்னவாக இருக்கும் எனக் கையில் எடுத்தேன். எடுத்துப் பார்த்த எனக்குப் பேரிடி ஒன்று தலையில் இறங்கியது போல் இருந்தது. ஆம், அது ஒரு 'சவுரி முடி'. இப்போது அந்தப் பெண்மணியின் தலையில் இரண்டு சாண் நீளமுள்ள கூந்தல் மட்டுமே! சற்று தொலைவில் மல்லிகையும், கனகாம்பரமும் கொத்தாக விழுந்திருந்தன.

அம்மணியின் தூக்கக் கலக்கத்தில் கொண்டை கம்பியில் இடித்து இடித்து, (பாவம், அதுவும்தான் எவ்வளவு இடிகள் வாங்கும்) அவிழ்ந்து 'சவுரிமுடி' கீழே விழுந்து விட்டது.

கையில் சவுரியுடன், கொண்டை பெண்மணியை எழுப்பினேன். ஸ்டைலாகத் திரும்பியவரிடம் சவுரியைக் கொடுத்து, "கீழே விழுந்து விட்டது" என்று கூறினேன். அவர் முகம் போன போக்கைப் பார்க்கச் சிரிப்பு வந்தது. கஷ்டப்பட்டு அடக்கிக் கொண்டேன்.

- புவனேஸ்வரி பாலாஜி,
கொரடாச்சேரி.



ஒரு காசுமாலையின் தபஸ்...

எஸ்.பட்டம்மா

மங்கையர் மலரும் & ஃபாஹிமாஸ் ஜுவெல் ஹவுஸும் நடத்திய சிறுகதைப் போட்டியில் ஆறுதல் பரிசு பெற்ற கதை - 1

"ஆனாலும் ஓங்கம்மாவுக்கு தீசல்தனம் ஜாஸ்தி. அந்தக் காசுமாலையை என்னதான் செய்யப் போகிறாராம்? தெரியாமத்தான் கேட்கிறேன். நானும் இந்தாத்துக்கு வந்து இருபத்தியஞ்சு வருஷமாறது. வாயைத் தொறந்திருக்கேனா? அவரோட ஒரே பேத்திக்குத்தானே கல்யாணம்... கொடுத்தா என்னவாம்? பேத்தியை "மாலு... என் ராஜாத்தீ...''ன்னு கொஞ்சறதிலே கொறச்சல் இல்லே. அத்தனையும் வேஷம்..."

ஆத்திரமும் அங்கலாய்ப்புமாக பொருமூம் மனைவியை சமாதானம் செய்ய வழிதெரியாது மௌனித்தேன்.

"என்னா? நான் சொல்றது காதில விழுறதா?"

"நல்லாவே விழுறது'' என்ன செய்யச் சொல்றே... அம்மா காசுமாலையை தானா கொடுத்தாத்தான் உண்டு... கேக்க முடியுமா?"

''நகையை பொத்தி பொத்தி' வச்சிண்டிருக்காரே...'இந்த வயசுக்கும் அதென்ன பேராசை.. காசுமாலை தபஸ் செய்யறதா?''

"அது மட்டும் சொல்லாதே ராஜம். இது வரைக்கும் ஒன்னை பொறந்தாத்துல 'அதைக் கேளு இதைக் கேளு'ன்னு இம்சை பண்ணியிருக்காளா? ஏதாவது எதிர்பார்த்திருக்காளா... சொல்லு..."

"ஐயே... போறுமே.. பெரிய்...ய தாராளம். தெரியாதோ? எங் கல்யாணத்தும் போது, ஓங்கம்மா அமுக்குன்னியாட்டம் வாயே தொறக்காம... எல்லாம் தன்னோட மாமியாரை விட்டு கேக்கச் சொல்லிட்டா...! அந்தக் கிழவி - அதான் ஓங்க பாட்டி - ஏதோ அப்பத்தான் தூணைப் பொளந்துண்டு வந்த நரசிம்மம் மாதிரி அடேயப்பா 'அது நொள்ளை இது நொள்ளை'ன்னு எங்காத்து மனுஷாளை நாரா கிழிச்சு தோரணமா கட்டிட்டாளே!"

"சரி அதை விடு! அந்தக் காசுமாலையை எப்பவாவது எங்கம்மா போட்டுப் பாத்திருக்கியோ?"

''போட்டுப்பாரரா? தேய்ஞ்சுடாதோ? எனக்கு ஒரு நாள் கிழமையிலே கூட, சித்த நாழி போட்டுக்க தரமாட்டாரே!"

''ஏன்.. தன்னோட மூணு சொந்தப் பொண்களுக்கே தந்ததில்லை. ஒனக்குத் தெரியாதா... என் தங்கைகளோட கல்யாணத்தும் போது கூட அம்மா காசுமாலையை





வெளியே எடுக்கல்லே...!"

"அதுக்குத்தான் வக்கணையா பதில் சொல்லிட்டாரே... 'சும்மா அலங்காரத்துக்கு போட்டாக்கூட சம்பந்திக்காரா, பொண் ணுக்கு நாம போட்டதா நெனைச்சுப்பா.. வீண் வம்பு.. மூணு பொண்ணுக்கும் காசு மாலை பண்ணிப் போட முடியுமோடீ'ன்னு நீட்டி முழக்கினார். எனக்கும் அப்ப நியாய மாப்பட்டது. விட்டுட்டேன்..."

"இப்ப மட்டும் நியாயமாப்படலையோ?"

"சும்மா இருங்கோ. ஒரே பொண்ணு ஒரே புள்ளை வச்சிண்டிருக்கோம். ஒரே பேத்திக்குப் போட்டா என்னவாம்? சம் பந்தியாத்துல அம்பது பவுன் கேக்கறா. காசுமாலை முப்பது பவுன் தேறும்.. மீதிக்கு என் நகைகளை வச்சு பாத்துக்கலாம். ஒங்க தங்கை கல்யாணத்துக்கு ஒங்கம்மா நகைகள் மட்டுமில்லே, என்னோட நகைகளையும்தான் போட்டு ஒப்பேத்துனது ஞாபகமிருக்கோ?"

"ஒன்னோட நகைகளுக்குப் பதிலா, எங்கம்மாதான், நகைச் சீட்டு போட்டு அத் தனையும் ஒனக்கு மறுபடி பண்ணிப் போட்டுட்டாளே... ஞாபகமிருக்கோ?"

"போறுமே பித்தல... ஒங்கம்மாவுக்கு நகைச் சீட்டை விட்டா வேறென்ன தெரியும்? மாமனார் போனப்புறம், இவருக்கு வர்ற பென்ஷன் பணமெல்லாம், 'ஸ்டார் ஜ்வெல்லரி'க்காரனுக்குத்தான் போறது.. ஆத்துக்கு ஒரு பைசா கண்லே காட்ற தில்லே...!"

"ஏண்டீ... நகைச்சீட்டு போட்டு எங்கம்மாவா அலங்காரம் பண்ணிக்கிறா! ஒனக்கு 'பதில் நகை' பண்ணினா. அப்புறம் பொண்களுக்குச் சீமந்தம் வளைகாப்பு.. மாப்பிள்ளைகளுக்குத் தலைதீபாவளினா மோதிரம், பேரக் குழந்தைகளுக்கு செயின் அரைஞாண்... காது குத்தலுக்கு சீர்னு வரிசையா அந்தச் சீட்டுகள்ளேதான் செய்யறா. நம்மளை ஏதாவது தொந்திரவு செய்யறாளோ?"

"அம்மாவை விட்டுக் கொடுக்க மாட்டேளே!" என சடக்கென நொடித்துக் கொண்டு புயலாக அடுக்களைக்குள் போனவள் –


காரணமின்றி, சமையல்கார மாமியின் பெண் ஆண்டாளிடம் 'காச்மூச்' எனச் சத்தமிட்டபடி, பாத்திரங்களை உருட்ட லானாள்!

எனக்குச் சிரிப்பு வந்தது! பாவம்... ராஜம் நல்லவள்தான்! அம்மாவும் அதைவிட நல்லவளே! ஆனாலும் இந்தக் காசுமாலை விஷயத்தில் மட்டும் அம்மா ஏன் இப்படி இருக்கிறாள்? எனக்குப் புரியவில்லை. காரணம் கேட்க, இனம்புரியாத தயக்கம்.. புதுமெருகு குலையாமல், இரும்புப் பெட்டகத்தினுள்.. பழங்கால வட்டமான பித்தளை நகைப் பெட்டியில், கருநீல வெல் வெட் பின்னணியில், குட்டிக் குட்டி முழு நிலாக்களை வரிசையாக இடைவெளியின்றி அடுக்கியது போன்ற அந்த அழகிய காசு மாலை, எதற்காக, யாருக்காக தவமிருக்கிறது?

"ஏண்டாப்பா.. ரகு! தூங்கறயா?" - அம்மாதான்! சட்டென ஈஸிசேரிலிருந்து எழுந்தவன், "இல்லேம்மா. என்ன வேணும்?" என்றேன்.

"எனக்கு ஒண்ணும் வேண்டாம். ராஜம் பேசினது ஒண்ணுரெண்டு காதிலே விழுந்தது. அவ கோபம் ரொம்பவும் நியாயமானது தானேடா! பாவம்... என்னோட ரெட்டை வடம் சங்கிலி, வளையல்கள் எல்லாம் இருக்கு

சேமியா கருடாம்



செய்முறை:

சேமியா - 250 கிராம், ஜவ்வரிசி - 50 கிராம், பச்சை மிளகாய் - தேவையான அளவு (காரம் தங்களுக்கு எவ்வளவு தேவையோ அவ்வளவு போடலாம்)

பெருங்காயம் - ஒரு சிறு துண்டு, உப்பு - தேவையான அளவு. முதலில் சேமியா, ஜவ்வரசி இரண்டையும் தண்ணீர் நிதானமாக விட்டு நன்கு வேக வைத்து ஆறவிடவும். பிறகு மிளகாய், பெருங்காயம், உப்பு இவற்றைப் போட்டு மசிய அரைத்து வேக வைத்த சேமியா ஜவ்வரிசியுடன் நன்கு கலந்து ஒரு கரண்டியால் வெய்யிலில் சிறிது வட்டமாக வைத்துக் காய வைக்கவும். மறுநாள் பொரித்துப் பாருங்கள், எல்லோரும் அசந்து விடுவார்கள் (ருசியில்தான்)

- வாஸன்

எடுத்துக்கோ. இனிமே எனக்கு எதுக்கு அதெல்லாம்.. போதாதற்கு இப்பல்லாம் மாலுவோட பேர்ல தான் சீட்டு போடறேன். அதுல கொஞ்சம் தேறும். பத்தாததுக்கு அங்கே இங்கே பொரட்டிப் போட்டு செஞ்சுடு.. அடுத்த வருஷமே ஒம்புள்ளை ரமேஷ் டாக்டராயிடப் போறான். அமோகமா இருப்பான்! ஒனக்குக் கடன் அடைக்கறது ஒண்ணும் கஷ்டமாயிருக்காது. மாலுவுக்கு அவா கேட்ட பவுன்லே ஒரு குந்துமணி கொறயாம செஞ்சுடு.. என்ன? புரியறதோ?" - அம்மா சென்று விட்டாள்!

காசுமாலை பற்றி ஒரு பேச்சு? மூச்! இருந்தாலும், மீதி இருக்கும் ஓரிரு அம்மாவின் நகைகளிலும் கைவைப்பதாவது? ஊஹூம்.. எப்படியோ, அம்மாவை மூளியாக ஆக்காமல் கடனோ உடனோ வாங்கி மாலுவின் கல்யாணத்தை சிறப்பாகவே நடத்தி விட்டேன். மேலும் -அடுத்து வந்த -

இந்த மூன்று வருடங்களில், மாலுவுக்கும் ஒரு ஆண் குழந்தை பிறந்து 'ஓகோ!' என்று கணவனோடு வாழ்கிறாள். ரமேஷும் டாக்டராகி, பிராக்டிஸ் கொழிக்கிறது. கடனும் அநேகமாக அடைந்து விட்டது. அந்தத் திருப்தியில்

போர்டிகோவில், விஸ்ராந்தியாக ஊஞ்சலில் உட்கார்ந்து வெற்றிலை போட்டுக் கொண்டிருந்த போது -

"ஏண்டாப்பா ரகு... சும்மாத்தானே இருக்கே!" என்றபடி அம்மா வந்தாள்.

"ஆமாம்மா... உட்கார்" என நகர்ந்து ஊஞ்சலில் இடம் கொடுத்தேன். உட்கார்ந்தாள்.

"என்னவோப்பா... தாயார் கடாஷத்துல எல்லாம் நல்லபடியா ஆயிடுத்து... கையோட ரமேஷுக்கும் ஒரு கால்கட்டு போட்டுட்டா உன் பொறுப்பு தீர்ந்தது. தரகர்கிட்டே சொல்லு" என்ற போது -

"ஏன்னா! இந்த அக்கிரமத்தை கேட்டேளா? ரமேஷ் திடீர்னு இப்படி தலையிலே கல்லைத் தூக்கிப் போட்டுட்டானே!" என அரற்றியபடி ராஜம் அரக்கப் பரக்க வர -

"என்னடீ... ரமேஷுக்கு என்ன ஆச்சு!" - பதறி எழுந்தேன்.

"ரமேஷுக்கு ஒண்ணும் ஆகல்லே. ஒரே புள்ளைன்னு செல்லம் கொடுத்ததுக்கு நமக்குத்தான் எல்லாம் ஆச்சு. இந்த அநியாயம் உண்டோ.." என அழ ஆரம்பிக்க.

"சொல்லிட்டு அழேண்டி... சனியனே!" - பொறுமையிழந்து கத்தினேன்.


"அவனுக்கு... வெளியிலே பெண் பாக்க வேணாமாம்...!"

"ச்சே! இதுக்குத்தானா... இத்தனை ஆர்ப்பாட்டம் பண்ணினே! அத்தை பொண்ணுன்லே யாரையாவும் பண்ணிக் கறானாமா? போனாப் போச்சு.. ஆனா அத்தைகள், பைய

ஃப்ரிட்ஜும், மிக்ஸியும் இல்லாதவர்கள் கூட வீட்டில் வெண்ணெய் தயாரிக்கலாம். தினமும் பாலைக் காய்ச்சி இறந்து வைத்தால் நன்றாக ஆடைவரும். அதைச் சிறிய ஹார்லிக்ஸ் பாட்டிலில் முதல் நாள் மட்டும் சிறிது மோர் சேர்த்து ஆடை எடுத்து வைக்க வேண்டும். பிறகு காலை, மாலை 2 வேலைகளிலும் ஆடை எடுத்து அதன் மேல் போட்டுக் கொண்டு வந்தால் 4,5 நாட்களில் பாதி பாட்டிலுக்கும் மேலாக வந்து விடும். பாட்டிலைத் தினமும் தண்ணீரில் மூழ்கும்படி டைட்டாக மூடி வைக்க வேண்டும். பிறகு பாட்டிலில் ஒரு டம்ளர் தண்ணீர் சேர்த்து நன்றாக மூடி கைகளாலேயே ஒரு 10 நிமிடம் நன்றாகக் குலுக்கிக் கொண்டே இருந்து பிறகு பாட்டிலைத் திறந்து பார்த்தால் மூடியின் மேல் வெண்ணெய் படிந்திருக்கும். பிறகு இன்னும் சிறிது தண்ணீர் அதன் மேலே சேர்த்து பாட்டிலை ½ மணிநேரம் தண்ணீரில் மூழ்கும் படி வைத்துவிட வேண்டும். பிறகு பாத்திரத்தில் கொட்டினால் நன்றாக வெண்ணெய் வந்திருக்கும். பிறகு கைகளாலேயே எடுக்க, வெண்ணெய் தயார். மீதமுள்ள மோரை மோர்க் குழம்பிற்கு உபயோகப் படுத்தலாம். அந்த வெண்ணெயை வாணலியில் எடுத்துத் திரும்பவும் நல்ல நீரால் சிறிது அலம்பி தண்ணீரை வடித்து பின் காய்ச்சினால் வெண்ணெய் எந்தவித வாடையில்லாமல் நெய் கமகம என இருக்கும்.



—லதா நரசிம்மன்.



தயாரிப்பாளர்களுக்கு வாசகியின் யோசனை!

குக்கரில் வைக்கும் இட்லி தட்டுகளின் அடியில் பொருத்தி இருக்கும் பாதங்கள் மிகவும் சிறியதாக அமைப்பதால் பாதி இட்லி மேல் தட்டின் அடிப் பாகத்திலே ஒட்டிக் கொள்கிறது. தயாரிப்பாளர்கள் இட்லி தட்டின் அடியில் வரும் பாதத்தின் நீளத்தைக் கொஞ்சம் அதிகரிப்பதால் இட்லியின் வடிவத்தை நாங்கள் அழகாகப் பெற முடியும்.

- திருமதி. சங்கரதாஸ்

ளாத்தாளே பெத்து வச்சிருக்கா! இருக்கற ஒண்ணு ரெண்டு பொண்ணும் ஏழு வயசும் அஞ்சு வயசுமான்னா இருக்கு! தேவலையான்னு ஒம் புள்ளையை கேளு!"

"பத்திண்டு வர்றது.. நீங்களும் ஒங்க ஜோக்கும்... அவன் அத்தனை தூரம் கூட போகல்லே. இந்த ஆத்துக்குள்ளேயே பாத்துட்டான்!"

"ஆத்துக்குள்ளே... அம்மாவை விட்டா நீ, நான், ரமேஷ் மூணு பேருதானேடீ இருக்கறோம்...!"

"ஏன்... சமையல்கார மாமி.. அவர் பொண் ஆண்டாளு இல்லையா?"

"ஆண்டாளுவையா?" - நான் பேச்சிழந்தேன். பெண் பரம ஏழை என்றாலும் கொள்ளை அழகுதான். ஆனால் அது என் பிள்ளையின் மனசை கொள்ளை கொள்ளும் அழகு என எப்படி எனக்குத் தோன்றாமல் போயிற்று?

"என்ன பேச்சே காணோம்!"

"பேசறதுக்கு என்னடீ இருக்கு. நீதான் மூச்சுக்கு முன்னூறு தரம் காரியம் கப்பலா செய்யறா. கண் நிறைஞ்ச அழகுன்னு மெச்சிண்டு இருந்தியே...!"

"அதுக்காக... நாட்டுப் பெண் ஆக்கிக்கறதா? நல்லாயிருக்கு நியாயம்! ஒரு குந்துமணி தங்கத்துக்கு வழி கெடையாது. அவ்வளவு ஏன்? நம்ப ஆத்தை விட்டு இறங்கினா, அடுத்த வேளைச் சாப்பாட்டுக்கு வழி கெடையாது. நாட்டுப் பொண்ணாமே! இந்தாத்துல ஒவ்வொரு பொண்ணுக்கும் அம்பது பவுனுக்குக் கொறையாம போட்டு அனுப்பியிருக்கோம்" - என்றவள் டக்கென பேச்சை நிறுத்தி -

"பாத்தேளா... பாத்தேளா... ஒங்கம்மா இதை கேக்கவே பிடிக்காம விருட்டுன்னு எழுந்திருச்சு போயிட்டா... பாவம் அவராலே இதை எப்படி சகிக்கக்க முடியும்?" - என்று சொல்லிக் கொண்டிருக்கும்போதே.

அம்மா போன சுருக்கில் திரும்பி வந்து கொண்டிருந்தாள். கையில்... கையில்.. அது என்ன?

கண்களை நம்ப முடியாமல் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டோம்! ஆம். அவர் கையில் அந்த பழங்கால வட்ட பித்தளை நகைப் பெட்டி! ஆம். காசுமாலைப் பெட்டி!

அமைதியாக அதை ராஜத்திடம் நீட்டியவள், "அம்மா, ராஜம்! இந்த காசுமாலையும் என் நகைகளுமா தாராளமா அம்பது பவுன் தேறும். அந்தப் பொண்ணுக்கு போட்டு ஒன் மருமகளாக்கிக்கோ..." என்றாள். அவ்வளவுதான்.

ராஜம் முகம் சிவக்க, "நல்லாயிருக்கே... பொண்களுக்குப் போடாத காசு மாலை... பேத்திக்குத் தராத காசு மாலை... எங்கேயோ கிடக்கற சமையல்காரப் பொண்ணுக்குத் தர்றதாமே... பேத்தியை விட பொண்ணை விட அந்த ஆண்டாளு என்ன அத்தனை ஒசத்தி!" பொரிந்தாள்.

"ஒசத்தி... அவ ஆண்டாளா... அம்புஜமாங்கறதுல இல்லே ராஜம். இந்த வீட்டுக்கு நாட்டுப் பொண்ணா வர்றவ... யாராயிருந்தாலும் ஒசத்திதான். அதனாலதான்.."

"அப்படீன்னா... நான் நாட்டுப் பொண் இல்லையா?" - எனக்கு மட்டும் கேட்கும்படி ராஜம் பல்லைக் கடிக்க.. 'ஸ்ஸ்' என அவளை அடக்கினேன்.

அம்மாவுக்குப் பாம்புச் செவி! 'அவளை ஏண்டா முறைக்கறே.. அவ கேக்கறது அத்தனையும் நியாயம்தானே! பதில் சொல்ல நான் கடமைப்பட்டவண்டா!" என்றவள்,

படியில் உட்கார்ந்து, போர்டிகோ தூணில் சாய்ந்துக் கொண்டாள். பழைய கனவுகளில் மூழ்குபவளைப் போல சில நிமிடம் கண்களை மூடிக் கொண்டிருந்தவள் மெள்ள பேச ஆரம்பித்தாள்.

"சொல்றேன் ராஜம்... ரகு நீயும் கேளு! என்னோட பொறந்த வீடு வசதியான இடம் தான். எனக்கு அந்தக் கால வழக்கப்படி வங்கி, நாகொத்து, ஒட்டியாணம்னு எல்லா நகையும் போட்டுச் சீரும் சிறப்புமாத்தான் இங்கே கல்யாணம் செஞ்சு கொடுத்தா. ஆனா காசு மாலை மட்டும் பாக்கி. அதை ஒரு வருஷத்துல செஞ்சு போடறதா பேச்சு. ஆனா அந்த வருஷம் வெள்ளம் வந்ததுல, அறுவடையுமில்லாம, நெலங்களும் எல்லாம் இனி சாகுபடி செய்ய தோது இல்லாம மண்மூடி மேடிட்டுப் போச்சு! ஆனாலும் என் மாமியார் விட்டுக் கொடுக்கத் தயாரில்லை. காசு மாலையோட நீ மறுபடி வந்தா போறும்னுட்டு என்னை பொறந்த வீட்டுக்கே அனுப்பி வச்சுட்டா! ரகு! அப்ப நீ வயத்துல ஆறு மாசம்! 'உங்கப்பா வாயில் லாப்பூச்சி..! பொறந்த வீட்டுலே முழுசா அஞ்சு வருஷம் இருந்தேன். சீமந்தம் வளை காப்பு ஒண்ணும் கெடையாது. நீ பொறந்ததுக்குக் கூட யாரும் வந்து பார்க்கல்லே! வாழாவெட்டின்னு எத்தனை கேவலப் பட்டேன் தெரியுமா? பொறந்த வீடு ரொம்பவும் நொடிச்சுப் போயிடுத்து. இந்தக் காசு மாலைக்காக... எங்கப்பா பட்ட கஷ்டம்... வேண்டாம்... அதையெல்லாம் தெரிஞ்சுண்டு நீங்க வேதனைப்பட வேண்டாம்!" என்றவள் தலையைச் சிலுப்பி, விழி நீரைச் சுண்டி எறிந்தாள்.

அம்மா! உனக்குள் இத்தனை சோகமா? ராஜம் சிலையாக நின்றாள். அம்மாவே தொடர்ந்தாள்–

"எப்படியோ கடைசி பைசா கூட இந்தக் காசுமாலைக்கே கஷ்டப்பட்டு உழைத்து, கடன் வாங்கி, செய்து போட்டு என்னை இங்கே அனுப்பி விட்டு, கடமை முடிந்தது என்றோ என்னவோ அப்பா போய்ச் சேர்ந்து விட்டார். அம்மா, குழந்தைகளை வைத்துக் கொண்டு வீடுகளில் சமையல் செய்து கொண்டிருந்ததாகக் கேள்வி. அப்புறம் விசாரித்ததில் அவர்கள் அங்கே இல்லை. என்ன ஆனார்கள் என்றும் தெரியவில்லை. மொத்தத்தில் ஒரு குடும்பமே நசித்து விட்டது என் மாமியாரின் பிடிவாதத்தினால்..."

''அந்தக் காலத்து மாமியார்களே அப்படித்தான்!'' என்றேன் ஏதோ சொல்ல வேண்டும் என்பதற்காக!

"இந்தக் காலத்துலேயும் அப்படித்தான் இருந்திண்டுருக்கா... ஆனா... மாமியார் பொல்லாதவள் என்றில்லை. மாமியார்னு ஒரு தனி இனமும் இல்லை. ஒரு பொண்ணுக்கு அம்மா, அக்கா, மகள்னு பல நிலைகள் இருக்கறாப்பல... மாமியார்ங்கறதும் அவளோட வாழ்விலே ஒரு நிலை அவ்வளவு தான்! மற்ற நிலைகள்லே சாந்தஸ்வரூபியா இருக்கறதால.. மாமியார் ஸ்தானத்துல மட்டும் அசுரயை பிடிச்சவளாயிடறா... ஏன்னா... அவளோட மாமியார்கிட்ட அனுபவிச்ச கொடுமை.. அதை மருமகள்கிட்ட காட்டறா. அவ்வளவுதான்.. என் மாமியாரும் அப்படித்தான்.. பாவம்! இத்தனைக்கும், புராணங்கள்லே கோசலையோ, குந்தியோ. ஏன்... மண்டோதரி கூட மருமகளைப் படுத்தினதாகவோ, சீர் சௌத்தி கேட்டதாகவோ இல்லை. இந்தக் கொடுமை எப்ப ஆரம்பிச்சுதோ தெரியல்லை. தலைமுறை தலைமுறையா ஒவ்வொரு விஷ கண்ணியா சங்கிலி நீண்டுண்டு வர்றது. இந்த விஷ சங்கிலியை

ஐடியா ஆல்பம்:



கொத்துமல்லி நன்றாக பச்சையாக இருக்கிறதே என்று விலையைக் கூடப் பார்க்காமல் ஒரு கட்டு வாங்கி வந்து விட்டேன். முன்தினம் தான் புதினா துகையல் செய்திருந்ததால், கொத்துமல்லி போட்டு எதுவும் செய்ய முடியாத நிலை. வீட்டிலும் பிரிட்ஜ் கிடையாது. இரண்டு ரூபாய் கொடுத்து வாங்கிய கொத்துமல்லியை ரசத்திலும் குழம்பிலும் போட்டது போக எப்படி பத்திரப்படுத்துவது? வெயிலும் கொளுத்துகிறதே!

வெள்ளிக் கிழமை என்று கொத்துமல்லியுடன், மல்லிகைப் பூவும் வாங்கி வந்தேன். இலையில் சிதறிய பூவை எடுத்து பாலிதீன் கவரில் போட்டு விட்டுப் பார்த்தால் புத்தம் புதிய வாழையிலைத் துண்டு கையில் இருந்தது. கொத்து மல்லியை எடுத்து வாழையிலையில் சுற்றி தண்ணீர் பானை மேல் வைத்து விட்டேன். வாழையிலையின் பசுமை மாறும் வரை கொத்துமல்லியும் 'பிரஷ்'ஷாக இருந்தது. தினமும் ரசம், சாம்பாருக்குப் போட்டு விட்டு இரண்டு நாள் கழித்து அழுகாத, வாடாத, கொத்துமல்லியில் துகையலும் அரைத்தேன்.

- கே.பாக்யலக்ஷ்மி



11 புள்ளி, 11 வரிசை

- என்.ஆர்.சித்ரா

அறுத்து எறியணும்னா இந்த ஆத்தைப் பொறுத்தவரைக்குமானும் செய்யணும்! அதுவும் இந்தக் காசுமாலையைக் கொண்டே.. என் மாமியார் செஞ்ச தப்பை நான் செய்யக் கூடாது. இந்தக் காசுமாலையை நான் போடக் கூடாது. பதிலாக இந்த வீட்டுக்கு வர்ற நாட்டுப் பொண்ணுக்கு, எல்லா சீரும்நானே செஞ்சு இதே காசுமாலையை அவளுக்குப் போட்டு... அவளோட பொறந்த வீட்டுக்கு எந்தக் கஷ்டமும் தராம இந்த வீட்டுக்கு அழைச்சுண்டு வரணும்'னு நெனைச்சேன். ராஜம்... அப்படிப் பார்த்தா நியாயமா ஒனக்குத்தான் நான் போட்டிருக்கணும். ஆனால் அப்ப என் மாமியார் மாமனார் உயிரோட இருந்தா.. நான் வாயைத் திறக்க வழியில்லாம போயிட்டுது. அதுக்கப்புறம் அடுத்த நாட்டுப் பொண்ணுக்காக, காசு மாலை தபஸ் இருக்கும்படி ஆகி விட்டது! தபஸ் வீண் போகல்லே. அதுவும் ஒரு ஏழைப் பெண்ணுக்கு வாழ்வு தர்றது எத்தனை பெரிய பாக்கியம்...

"சமையல்காரப் பெண் மருமகளா, வர்றது பாக்கியமா?" - ராஜம் ஈனஸ்வரத்தில் முனகினாள்!

"வைரத்தோடும் மூக்குத்தியுமா இருந்த என் அம்மா கடைசி காலத்திலே சமையல் காரியாத்தான் ஆயிட்டா.. யாரோட அந்தஸ்து யாருக்கு சாஸ்வதம் சொல்லு! நீ இதையெல்லாம் போட்டு, எதிர்ஜாமீன் வாங்காம.. அந்தக் குழந்தையை நாட்டுப் பொண் ஆக்கிக்கோ! ஒரு பையனை பெத்தவ எப்படி நடந்துக்கணும்னு மத்தவாளுக்கு நீ வழிகாமிச்சுக் குடு அம்மா!"

"கேக்கறதுக்கு சந்தோஷமா இருக்கும்மா! ஆனா நீ இந்த வயசுக்கு, இதே போல எடுத்துச் சொல்லி எத்தனை பேரை திருத்தியிருக்கலாம்... பேசாம இருந்துட்டியே அம்மா!" என்றேன் நிஜமான ஆதங்கத்துடன் நான்.

"நானா? மத்தவாளுக்கு உபதேசம் பண்றதா?" - வெறுமையாக சிரித்தவள்,

"ரொம்ப நாளைக்கு முன்னாலே ஏதோ பேப்பர்லே ஒரு கதை படிச்சேன். ஒரு தாய் தன் சிறு பையனை அழைச்சுண்டு ஒரு மகான் கிட்ட வந்தாளாம். 'பையன் ரொம்ப வெல்லம் திங்கறான். புத்தி சொல்லுங்கோ'ன்னு கேட்டுண்டாளாம். அதுக்கு அவர் -

"அடுத்த வாரம் வாம்மா!" என்று சொல்லி விட்டாராம். அதே போல அந்தத் தாய் மறுவாரம் வந்ததும், பையனுக்கு வெல்லம் அதிகம் சாப்பிடக் கூடாதுன்னு கார ணத்தோட புத்தி சொல்லி அனுப்பினாராம். இதைப் பார்த்த நண்பர் -

"இதை நீங்கள் போன வாரமே சொல்லியிருக்கலாமே" என்று கேட்டாராம். அதுக்கு அந்த மகான் -

"அதெப்படி? போன வாரம் வரை நானே நிறைய வெல்லம் சாப்பிட்டுக் கொண் டிருந்தேனே" என்றாராம். எத்தனை பெரிய தத்துவம், பாத்தியோ? நான் சீர் செனத்தி எதிர்பார்க்காம நாட்டுப் பெண்ணை இந்த வீட்டுக்குக் கொண்டு வந்திருந்தா.. மத் தவாளுக்குச் சொல்ல அதிகாரம் உண்டு! எனக்குக் கொடுப்பினை இல்லை. ராஜத்துக்கு அந்தச் சந்தர்ப்பம் கெடச்சிருக்கு! பக வானோட அநுக்ரகம். விட்டுடாதே. செய்... செஞ்சுக் காமி. அப்புறம் பேசு.

"இந்த வீட்டுக்கு பொண் கொடுத்து, பெத்தவா கடனாளியாகப் படாது" - இதை உன் வரப் போற நாட்டுப் பெண்ணுக்கு சொல்லிக் கொடு. அப்புறம் ஒன்னோட பொண்ணுக்கு, நாத்தனார்களுக்குச் சொல்லிக் கொடு. அவாளை மத்தவாளுக்கு சொல்லித் தரச் சொல்லு. தலைமுறை தலை முறையா வேரோடு புரையோடிப் போன நஞ்சு.. மாற நாளாகும். வாஸ்தவம். அதுக் காக... கையைக் கட்டிண்டு பேசாம இருந்துடறதா? நீ ஆரம்பி... ராஜம்... வரப் போற தலைமுறைகளானும் நன்னாயிருக்கட்டும். இந்தா.. வாங்கிக்கோ!" என நகைப் பெட்டியை நீட்ட -

குனிந்து, 'சட்'டென அந்தக் கருணைப் பெருங்கடலை விழுந்து சேவித்து, பய பக்தியுடன் அதை ராஜம் பெற்றுக் கொண்டாள்.

ஹூஸ்டனில் ஒரு சகலகலாவல்லி!

பாட்டு, நடனம், சித்திரம், சிற்பம் போன்ற மென் கலைகளில் தேர்ச்சி; வீணை, வயலின் போன்ற வாத்ய இசைக் கருவிகளில் இசைக்கும் திறமை; சாஸ்த்ரபுராண இதிகாசங்களில் ஆழ்ந்த ஞானம்.. போதுமா... இன்னும் கொஞ்சம் வேண்டுமா என்பது போல இத்தனை அறிவைப் பெற்றிருந்தாலும் அன்பும் , பணிவும், அடக்கமும் ஒருங்கே அமையப் பெற்ற ஒரு அபூர்வ பிறவியைக் காண வேண்டுமா! வாருங்கள் ஹூஸ்டனுக்கு!

திருமதி இந்துமதி கிருஷ்ணமூர்த்தி அவர்கள் ஒரு சகல கலாவாணி! காரணம் இந்துமதி கிருஷ்ணமூர்த்தியின் குடும்பமே கலைக் குடும்பம். நாதமும், ஞானமும் அவர்களது பூர்வீக சொத்து.

பதினைந்து வயதிலேயே இந்துமதி அகில இந்திய ரேடியோவில் பாட ஆரம்பித்தார். வாய்ப்பாட்டு மட்டுமின்றி, சகல இசைக் கருவிகளிலும் அவருக்குத் தேர்ச்சி உண்டு. சிறு வயதிலேயே பெற்றோர் அவருக்கு, பள்ளிக்கூடக் கல்வியுடன் சேர்த்து, ராமாயணம், உபநிஷத்துகள், ப்ரும்மஸூக்தம்; தெலுங்கு, சமஸ்கிருதம் போன்ற பலவிதத்திலும் ஞானத்தை ஊட்டினர். 15 வயதிலிருந்தே அவரது இசைத் திறமை அனைவரையும் கவர்ந்தது. இசையில், மியூஸிக் அகாடமியில் தங்கப் பதக்கம் பெற்ற தாரகை அவர்! அவரது குரலினிமையும், கம்பீர அழுத்தமும், சுருதிலயங்களும் கேட்போரை பரவசமூட்டும்.

திருமணமான பின், இந்துமதி தனது கணவருடனும் குழந்தைகளுடனும் வேலை நிமித்தம் பல ஊர்களுக்குப் பிரயாணம் செய்ய நேர்ந்தது. அப்பொழுதெல்லாம், என் திறமை என்னாவது என நொந்து கொள்ளாமல் தனது குழந்தைகளுக்குத் தன்னுடைய கலைஞானத்தை எல்லாம் சொல்லிக் கொடுத்து வளர்த்து, ஆளாக்கினார். 1973-ல் அவர் அமெரிக்கா வந்தார். குழந்தைகள் யாவரும் படித்துப் பெரியவர்கள்





ஆனபின், கணவரின் தூண்டுதலால் ஓவியத்தில் இறங்கினார்.

எதைத் தொட்டாலும் சட்டென பிடித்துக் கொள்ளும் அவரது திறமை ஓவியக் கலையிலும் ஓங்கியது. அவரது ஓவியபாணி, தற்சமயம் தஞ்சாவூர் பாணியைப் பின்பற்றியிருக்கிறது. 'நிர்மல் கலை வழியும், கலங்காரி கலை வழியும் அவருக்குத் தண்ணீர் பட்டபாடு. அவர் தீட்டின தெய்வத்திரு உருவங்களின் சித்திரங்கள், காண்போரை தேவலோகத்திற்கே கொண்டு சேர்க்கும். அவருடைய பக்தியும், ஞானமும், இலக்கிய அறிவும் அடித்தளமாக இருப்பதை அவருடைய ஒவ்வொரு சித்திரத்திலும் காணலாம். அது ஒரு ஆத்ம அனுபவம். பலருடைய பூஜை அறைகளிலும் அவை இடம்பெறுகின்றன.



"அந்த வெண்ணை திருடி கிருஷ்ணனை அப்படியே இடுப்பில் தூக்கி வைத்துக் கொள்ள வேண்டும் போலிருக்கு" என்பார்கள்.

அவரது ஓவியங்கள் சிகாகோ பல்கலைக் கழகங்களிலும், தெலுங்கு மகாநாட்டு சந்திப்புகள் போன்ற பலவிடங்களிலும், கண்காட்சிகளாக நடத்தப்பட்டு வருகின்றன. இது மட்டும் அன்று, அடுத்த முயற்சியிலும் இறங்கி விட்டார். அவ்வப்போது இசையுடன் சேர்ந்து கதாகாலக்ஷேபம் பண்ணுவதே ஒரு அழகு. அவருடைய "சீதா கல்யாணம்; நந்தனார் சரித்திரம்; மீராவின் கதை; முதலியவை, கேட்போரின் கண்களில் கண்ணீரை வரவழைக்கும்.

ஹூஸ்டனில் 13 வருடங்கள் முன்பு ஸ்ரீ த்யாகராஜ ஆராதனையை துவக்கி வைத்தார். அவரது "ஸ்ரீ கண்பதினி" என்னும் முதல் ஸௌராஷ்ட்ர கீர்த்தனை, இன்னமும் என் காதில் ஒலிக்கிறது.

சமீபத்தில் அவர் நடத்திய "ஸ்ரீ முத்துஸ்வாமி தீக்ஷிதரின் விழாவில்" பங்கு பெற்றவர்கள், பாக்யசாலிகள். ஸ்ரீ தீக்ஷிதரைப் பற்றி இசையுடன் கூடிய உரையில் அவரது ஆழ்ந்த புலமை பிரகாசித்தது.

அப்பாடி.. இந்தச் சகலகலா வல்லியின் திறமைகளைப் படிக்கும் போது மூச்சு முட்டுகிறது இல்லையா... பெண்கள் நினைத்தாலும் எவ்வளவு தூரமும் உயரலாம் என்பதற்குச் சிறந்த எடுத்துக்காட்டு இவரே.

-லலிதா பாலசந்திரன்





நம்மவர்க்கும் சிறந்தது வேண்டும்

ஆண்பெண் இருவரும் சமம் என்பது கொள்கை அளவில் மட்டுமில்லாமல் உடை அளவில் வந்தும் கொஞ்ச நாள் ஆகிவிட்டதே! ஜீன்ஸ் பேண்ட், பனியன் டைட் ஷர்ட்ஸ், டி-ஷர்ட்ஸ் என இருபாலருமே போட ஆரம்பித்திருக்கின்றார்களே! அதிலே டி-ஷர்ட் இன்றைய நவீன பெண்களுக்கு அழகாகத்தான் பொருந்துகிறது. பார்த்தார் பரமானந்தகா! விதவிதமாகத் தயாரித்து குவித்துக் கொண்டு இருக்கிறார்.

யார் இந்த பரமானந்தகா?

ஆர்.டி.பரமானந்தகா டெக்ஸ்டைல்ஸ் லிமிடெடின் நிறுவனர் திருபரமானந்தகா தான். சொந்த ஊரான கல்கத்தாவிலிருந்து தமிழ்நாட்டிற்கு வியாபாரத்திற்கு வந்தார். திருப்பூரில் தன் வாழ்க்கையை அமைத்துக் கொண்ட இவரின் கவனம் ஒன்றிரண்டு வருடங்களுக்கு முன் டி-ஷர்ட் பக்கம் திரும்பியது. ஏன்?

"நாங்கள் விரில் 2000 என்ற பெயரில் ஏற்கனவே பனியன்களைத் தயாரித்துக் கொண்டு இருந்தோம். அந்த பனியன் துணி



யிலேயே இன்னும் உயர்ரக பருத்தி இழைகளை உபயோகப்படுத்தும் போது டி-ஷர்ட்டிற்கான துணி தயாராகிறது. இன்று டி-ஷர்ட்ஸ் தயாரிக்கும் நிறுவனங்கள் மேலை நாடுகளுக்கு ஏற்றுமதி செய்கின்றன. அதில் மிஞ்சும் அல்லது ஒதுக்கப்படும் துணிகளே இண்டியன் மார்க்கெட்டிற்கு வந்தன. ஆனால் நம்மவர்களுக்காகவே பிரதானமாக டி-ஷர்ட்ஸ் தயாரித்தால் என்ன என்று தோன்றியது. அதன் விளைவு தான் ஜுங்க் ஃப்ரு டி-ஷர்ட்ஸ்!"



"ரெண்டு கேள்விகள். ஒன்று டி-ஷர்ட்ஸ் என்று ஏன் அதன்மேல் கவனம் போயிற்று. ரெண்டு அதென்ன ஜுங்ஃப்ரூ?"

"டி-ஷர்ட்ஸ் என்னை எப்போதுமே கவரும். ஏனெனில் அது அணிவதற்குச் சௌகரியமான உடை. மேலை நாடுகளிலே மிக அதிகமாக டி-ஷர்ட்ஸ் அணிகிறார்கள். 'ஃபார்மல் டிரஸ்' எனப்படும் இடங்களில் மட்டுமே கோட் - டை சகிதம் இருப்பார்கள். சாதாரணமாக இருக்கும்போது டி-ஷர்ட்ஸ் தான். இது பனியன் துணி என்பதால் உடம்போடு ரொம்பவும் பொருந்தி விடும். பார்க்கவும் அழகாக இருக்கும்.

நம் நாட்டில் டி-ஷர்ட்டை அணியும் போது மனரீதியாக தாங்கள் கொஞ்சம் இளமையாக இருப்பதைப் போல உணரு கிறார்கள். ஏனெனில் குழந்தைகள் டி-ஷர்ட் அணிகிறார்கள். விளையாட்டு வீரர்கள் அணிகிறார்கள். எனவே நடுத்தர வயதுக் காரர்களோ, வயதானவர்களோ டி-ஷர்ட்ஸ் அணியும்போது தாங்கள் இளமையாகவும், சுறுசுறுப்பாகவும் இருப்பது போல உணருகிறார்கள்.


தவிரவும், நம் நாட்டைப் போன்ற வெப்ப நாடுகளுக்கு மிகப் பொருத்தமான உடை. மெல்லியதாக இருக்கும், வியர் வையை உறிஞ்சும். இன்று டி-ஷர்ட்டை அணிந்து சௌகர்யம் காணும் இளைய தலைமுறையினர் பெரிய வர்கள் ஆனாலும் இதையேதான் நாடுவார்கள். எனவே தேவை அதிகரிக்கும். இத்தனையையும் கருத்தில் கொண்டு தான் நான் இந்த வியாபாரத்தில் இறங்கினேன்...



அடுத்தது ஜுங்ஃப்ரூ. ஸ்விட்சர் லாந்திலுள்ள ஆல்ப்ஸ் மலையில் இருப்பதுதான் ஜுங்ஃப்ரூ சிகரம்! என்னுடைய சுற்றுப் பயணத்தின் போது இந்தச் சிகரத்தின் அழகைப் பார்த்து மயங்கிப் போனேன். கூடவே அதனுடைய குளுமை. எங்களுடைய தயாரிப்பான இந்த டி-ஷர்ட்டுகளை அணியும்போது இதே குளுமையும், அழகும் கிடைக்கும் என உணர்த்தவே என்னைக் கவர்ந்த இந்தப் பெயரை வைத்தேன்..."

"சரி, எல்லோரும் தான் டி-ஷர்ட்ஸ் தயாரிக்கிறார்கள். நீங்கள் மற்றவர்களிடம் இருந்து எப்படி வேறுபடுகிறீர்கள்?"

"நான் முன்னமேயே சொன்ன மாதிரி நம் நாட்டுக்கு ஏற்ற மாதிரி, அளவுகளில் டி-ஷர்ட்




சின்னஞ் சிறிய விதை. அது முளைவிட்டு வலுவாக வேரூன்றி மாபெரும் ஆலமரமாக வளர்ந்து விடுகிறது. பரந்து விரிந்த கிளைகள். அவற்றிலிருந்து கீழிறங்கி பூமியில் பதியும் விழுதுகள். ஆலமரம் நீண்ட காலத்துக்கு நிலைத்து நின்று அதனடியில் வருகிறவர்களுக் கெல்லாம் நிழல் தருகிறது.

சக்தி பைனான்ஸும் அப்படித்தான். உங்களுடைய சேமிப்புக்கு அதிக பாதுகாப்பு அளிக்கிறது. உங்கள் நலனில் அக்கறை கொண்டு உங்கள் டெபாசிட்டுகளுக்கு நீங்கள் அதிக வருமானம் பெற வகை செய்கிறது. ஸ்திரத்தன்மையைப் பற்றிச் சொல்லவே வேண்டாம்.

சக்தி நிறுவனங்களின் எண்ணிக்கை 20. மொத்த ஆண்டு வர்த்தகம் ரூ. 700 கோடி. 1.5 லட்சம் டெபாசிட்தாரர்கள். மிகுந்த நம்பிக்கையோடு வைத்திருக்கும் டெபாசிட் தொகை ரூ. 150 கோடி. நாடு முழுவதும் 37 கிளைகள். 25 சேமிப்புமையங்கள். பரவலாகப் பாதுகாப்புப் பெட்டகங்கள்.

சக்தி பைனான்ஸ் ஒவ்வொரு வாடிக்கை யாளரின் தேவையையும் பூர்த்தி செய்வதில் தனிப்பட்ட கவனம் செலுத்துகிறது. அதற்காகவே அவர்களின் தேவைகளைப் புரிந்து கொண்டு பல புதுமையான திட்டங்களை முதன் முதலாக அறிமுகப் படுத்திய



சிறப்பையும் பெற்றுள்ளது. அது மட்டு மல்ல. இத்தகைய திட்டங்களைப் பல ஆண்டுகளாகத் தொடர்ந்து அறிமுகப்படுத்தி விரைவாகச் செயல் படுத்துவதிலும் முன்னோடியாகத் திகழ்கிறது.

உங்கள் சேமிப்புகளை சக்தி பைனான்ஸில் டெபாசிட் செய்யுங்கள். நிம்மதி பெறுங்கள்.

சக்தி
பைனான்ஸ் லிமிடெட்

பதிவு அலுவலகம் :
475 டாக்டர் நஞ்சப்பா சாலை கோயம்புத்தூர். 641018.
தொலைபேசி எண் :
231471/231472/231473/234174

என்றாலே ஒன்று மலிவு விலையில் தரமில்லாத முறையில் இருக்கும். ஒரு தடவை தண்ணீரில் நனைத்தால் பஞ்சு பஞ்சாக தோற்றம் தரும். இல்லையென்றால் மிகவும் விலை அதிகமாக இருக்கும். இந்த இரண்டுக்கும் இடையில் தரமாக, வாங்கக் கூடிய விலையில் நான் தர விரும்பியதுதான் வேறுபாடு.

தவிர இன்றைய பிரிண்டிங் முறையில் தொழில் நுட்ப ரீதியாகப் பார்த்தால் அற்புதங்கள் நிகழ்ந்து கொண்டு இருக்கின்றன. அயல் நாட்டு டி-ஷர்ட்டுகளில் பிரிண்டிங்கைப் பார்த்தால் அசந்து விடுவோம். மனிதன் முகம் போன்றவற்றைப் பிரிண்ட் செய்யும் போது ஏதோ ஃபோட்டோவை வைத்து ஒட்டியது போல இருக்கும். இங்கு கையால் பிரிண்ட் செய்யப் படுவதுதான். அதனால் என் மனதில் உறுத்தல். இவ்வளவு தொழில் நுட்பம் இருக்கும்போது நாம் ஏன் அதைப் பயன் படுத்தக் கூடாது என எண்ணினேன். அதன் விளைவாக ஒரு பிரிண்டிங் மிஷினை இறக்குமதி செய்துள்ளேன். அதில் நாங்கள் வேலையை ஆரம்பித்து விட்டோமானால் அயல்நாடுகளுக்கு இணையாக நாம் டி-ஷர்ட் பிரிண்டிங்கில் முன்னேறி விடலாம். ஆனாலும் இப்போதைய டிசைன்களும் மக்களிடையே நல்ல வரவேற்பைப் பெற்றுத் தான் இருக்கின்றன."

"டிஷர்ட்டுகளில் எப்போதுமே இரண்டு பிரச்னைகள் வரும். ஒன்று சுருங்குவது, மற்றொன்று 'ஷேப்' போய் அப்படியே நீண்டு கொள்ளும். இதற்குக் காரணம் அவை தயாரிக்கப் பயன்படும் பருத்தி இழைதான். கோம்ப் போன்ற பருத்தி இழைகள் மிக உயர்ந்தவை. இவற்றால் இழைகளைத் தயாரித்து உடை தயாரிக்கும்போது இந்தப் பிரச்னைகள் வராது. அதைத்தான் நாங்கள்




• பரமானந்தா


செய்கிறோம்" என்கிறார் மார்க்கெட்டிங் மானேஜர் ராகவன்.

இவர்கள் விளம்பரங்களிலே கூட புதுமை செய்திருக்கிறார்கள். வெறுமனே விதவிதமான போஸ்களிலே டி-ஷர்ட் அணிந்த ஆண்கள், பெண்களை நிறுத்தாமல் ஒரு வேடிக்கையான நிகழ்ச்சி நடப்பது போல இளம் பெண்களையும், ஆண்களையும் வைத்துச் செய்திருக்கிறார்கள்.

"அதன் ஒரு நோக்கம் டி-ஷர்ட்ஸ் இரு பாலாருக்குமே உரியது என்பதைச் சொல்ல. மற்றொன்று உடைகளின் சௌகர்யம் பற்றியும் அதில் குறிப்பிடுகிறோம். அதை பெங்களூரில் வைத்து 'ஷூட்' பண்ணினோம். முப்பது நாற்பது படங்கள் எடுத்தால் அதில் ஒன்று முழு திருப்தி கொடுக்கும். பக்கத்தில் பக்கத்தில் நிற்பவர்களின் உடை, கலர் காம்பினேஷன் என ஒவ்வொன்றையும் பார்த்து எடுக்க வேண்டியதாக இருந்தது. நல்ல அனுபவம்" என்கிறார் இதனைச் செய்த அட்வைஸ் அட்வர்டைஸிங் ஏஜென்சியின் சீஃப் எக்ஸிகியூட்டிவ்வான வசந்தி ரங்கநாத்.



• பெரிய தக்காரியில் பனியன் துணி நெய்யப்படுகிறது



• ப்ளீச்சிங்...

• காயவைத்து...



தொழிற் சாலைக்குப் புறப்பட்டோம்.

தக்களியில் நூல் நூற்பதைப் பார்த்திருப்போம். நூற்றுக் கணக்கான தக்களி போன்ற உபகரணங்களை நிறுத்தி உயரமாக இயந்திரங்களை அமைத்திருக்கிறார்கள். சுவிட்ச் போட்டவுடன் மடமடவென்று சுழன்று நூல் நூற்று பனியன் துணியாக ஆகும் அழகே அழகு.

இந்தத் துணி நெய்யப்படுவது சிலிண்டர் வடிவத்தில்தான். அதாவது வட்டமாக. நீளத்துணியாக இருக்காது. சாதாரணமாக பனியனைப் பார்த்தீர்களானால் இரண்டு பக்கமும் தையல் இருக்காது. அப்படியேதான் நெய்யப்படும். அந்தந்த சுற்றளவிற்குத் தகுந்தாற்போல உபகரணங்களை அட்ஜஸ்ட் செய்து தயாரிக்கிறார்கள்.

இப்படி நூற்கப்படும் துணி மஞ்சள் நிறத்தில் இருக்கும். இதனை பெரிய பெரிய தொட்டிகளில் 'ப்ளீச்' செய்யும் ரசாயனக் கலவைகளைக் கலந்து வேக வைக்கிறார்கள். இதனையே நவீன முறையிலும் செய்கிறார்கள். இப்படி ப்ளீச் செய்யப்பட்ட துணி இரசாயனக் கலவை போக அலசப்பட்டு, நீலம் சேர்க்கப்பட்டு 'பளீர்' என மின்னிடும் வெண்மையோடு காயவைக்கப் படுகிறது.

இந்த இடத்தில் ஒன்று. பனியனோ, டி-ஷர்ட்டோ உடுத்த உடுத்த பொட்டு பொட்டாக ஓட்டையாகிறது தெரியுமா? இதற்குக் காரணமே பனியன் துணிகளை 'ப்ளீச்' செய்த பிறகு அந்த இரசாயனக் கலவையைச் சரியாக அகற்றாததுதான். ப்ளீச் செய்த பிறகு குறிப்பிட்ட பல மணி நேரங்களில் நல்ல நீரில் ஊற வைக்கப்பட்டு இரசாயனக்கலவை அகற்றப் பட வேண்டும். அப்படி இல்லையென்றால் அது துணியிலேயே தங்கி விடுகிறது என்கிறார்கள் இவர்கள்.

இப்படி பளீரென வெண்மையோடு தயாராகும் துணி கசங்கியிருக்கும். அதை ஒரு மிஷினில் செலுத்தி 'நீட்'டாக இஸ்திரி செய்தது போல ஆக்குகிறார்கள்.


இது பிறகு தையற் கலைஞர்களின் கையில் வருகிறது. நூற்றுக் கணக்கான தையல் கலைஞர்கள் பகுதி பகுதியாகத் துணியைத் தைத்துக் கொண்டு இருக்கிறார்கள். வேகம், ஒரே வேகம்தான். மாஸ்டர் கட்டர் துணியைக் கட் செய்வார் ஒரு கோடியில். ஒருத்தர் கை, ஒருத்தர் கீழே மடித்தல், மற்றொருவர் காலர் என வரிசையாகப் பயணம் செய்யும் துணி மற்றொரு கோடியில் அழகிய டி-ஷர்ட்டாக உருப் பெறுகிறது.

குடை ராட்டினம் போல ஓர் இயந்திரம். அதிலுள்ள விசைகளை ஒரு மேலை நாட்டவர் டக்கு டக்கு என அழுத்த அதே வேகத்தில் குடை ராட்டினம் சுற்றுகிறது. ஏராளமான இணைப்புகள் என்னது இது?

ராகவன் விளக்கினார்– "இதுதான் மிஸ்டர் பரமானந்தகா சொன்ன பிரிண்டிங் மிஷின். நவீன தொழில் நுட்ப முறையில் டி-ஷர்ட்டில் டிசைன்களை அச்சிடுவது.



• அத்தனை பேரும் தைக்கிறார்கள்



• இறக்குமதியான நவீன ப்ரிண்டிங் மிஷின்

இப்போதுதான் இறக்குமதி ஆகியிருக்கிறது. இது 'செட்' ஆகி விட்டால் மேலை நாட்டுத் தரத்திற்கு பிரிண்டிங் செய்யலாம்."

இப்போதே அழகிய பூக்கள், கம்ப்யூட்டர் டிசைன்கள் செய்து கொண்டுதான் இருக்கிறார்கள். அதைச் சாதாரணமாக பார்க்கும் போது ஒரு குறையும் தெரிய வில்லை. ஆனால் மேலை நாட்டுப் பிரிண்டிங் தரத்தைப் பார்த்துவிட்டு வந்த பரமானந் தகாவிற்குக் குறையாகத்தான் இருக்கிறது. இப்போது அந்த நவீன இயந்திரத்தை 'செட்' செய்து கொண்டிருந்தார்கள.

"இப்படி டி-ஷர்ட் கலாசாரத்தைப் புகுத்துகிறீர்களே. இது நம் கலாசார உடை களுக்கு எதிரானது இல்லையா?"

பெரிதாகச் சிரிக்கிறார் அவர். "நாம் என்ன வேஷ்டியும், ஜிப்பாவும் அணிந்து கொண்டா இருக்கிறோம். இன்றைய வேகமான உலகத்திற்குச் சௌகர்யம் என பேண்ட், ஷர்ட்தானே அணிகிறோம். அதே போலத்தான் பெண்கள் விஷயமும். இப் போது புடவை அளவிற்கு சுடிதாரும் பயன் படுத்த ஆரம்பித்துவிட்டார்கள். இதுவும் சௌகர்யத்தின் அடிப்படையில்தான். அதே போலத்தான் இதுவும். டி-ஷர்ட்ஸ் மிகவும் சௌகர்யமானதே. அதே சமயம் நம் சீதோஷ்ண நிலைக்கு மிகவும் ஏற்றவை. இதை நான் பரப்புவதில் என்ன தவறு?"

"பெண்கள் அதிகம் டி-ஷர்ட்ஸ் அணிவதில்லை, இல்லையா?" "அது உண்மைதான். ஆனால் நைட்டி' போன்ற உடைகளை சாதாரணமாக ஏற்றுக் கொண்டு இருக்கிறார்கள். நவீன பெண்கள் டி-ஷர்ட்ஸ் அணிகிறார்கள். இந்தத் தன்மை பெருகும் என்றுதான் நினைக்கிறேன்." எப்படியோ இருபாலருக்கும் பொதுவான உடைகளைத் தயாரித்து வெற்றி கண்டிருக்கிறார் ஜுங் ஃப்ரு நிறுவனத்தினர். பிரிண்டிங் டெக் னாலஜி எவ்வளவோ முன்னேறி இருக்கும் இன்றைய நிலையில், சிறந்தது எல்லாம் ஏற்றுமதிக்கே என்றில்லாமல் நம்மவர்க்கு தான் முன்னுரிமை என்கிறார்களே, அதை நிச்சயம் பாராட்ட வேண்டும்தான்.

- பவித்ரா

புகைப் படங்கள்- விடிவெள்ளி ஆறுமுகம்.
அட்டைப் பட உதவி- பரமானந்தா டெக்ஸ்டைல்ஸ்.

சட்டென ஐடியா!



ஸ்ரீரங்கம் சித்திரைத்தேரை தரிசனம் செய்ய எங்கள் கிராமத்து ஜனங்கள் 50 பேர் திடீரென வந்து விட்டார்கள். அன்று பார்த்து இரட்டிப்பு முனை வரியை எதிர்த்து கடைகள் முழுகதவடைப்பு செய்தன. மக்களை எப்படி உபசரிப்பது என்று யோசித்தேன். மரியாதை + அனுதாபம், நிமித்தம் அவர்களுக்கு திருச்சியை சுற்றிக் காண்பிக்கப் போக வேண்டும். காஸின் இரண்டு அடுப்பிலும் 6படி வெண் பொங்கல் செய்ய ஏற்பாடு செய்தேன். தொட்டுக் கொள்ள சாம்பார் செய்ய குறைந்தது 2படி பருப்பு வேக வைக்க டயம் இல்லை.

தொக்குகிளற 4 கல்லாமணி மாங்காய் வாங்கி வைத்திருந்தேன். அதைப் பார்த் ததும் 'சட்டென ஐடியா' வந்தது. மாங்காய், வாழைத்தண்டு, தேங்காய், பீட்ரூட், காரட், வெங்காயம், பூண்டு, தக்காளி, வீட்டில் விளைந்த பொன்னாங்கண்ணிக் கீரை, பச்சைக் கொத்தமல்லி, பப்பாளிப்பழம் (½ கவுளி வெற்றிலை) எடுத்து அத்தனையும் சுத்தம் செய்து நறுக்கி, பொட்டுக் கடலை, இஞ்சி, மிளகாய், உப்புச் சேர்த்து கிரைண்டரில் அரைத்துக் கடுகு தாளித்து பெரிய அடுக்கில் சட்னி தயாரித்தேன். எல்லாவற்றையும் பச்சையாக அரைத்ததால் எரி பொருள் மிச்சமானதுடன் உடலுக்கு ஆரோக்கியமாக புதிய ருசியுடன் இருந்ததால் பொங்கலும், சட்னியும் சாப்பிட்ட கிராமத்து மக்கள் வாயார வாழ்த்தினர்.

மீந்த சட்னியை கொதிக்க வைத்து 2 டீஸ்பூன் மசாலாப் பொடி சேர்த்து ''திடீர் சாதம்'' கலந்து கையிலும் எடுத்துச் சென்றார்கள்.

– என்ஷா

நோயாளியைப் பார்க்கப் போகிறீர்களா?

ஆஸ்பத்திரியில் சிகிச்சைக்காக அட்மிட் செய்யப்பட்டிருக்கும் உங்கள் நண்பர் ஒருவரைப் பார்க்க நீங்கள் செல்லும்போது, உங்களைப் பார்த்தவுடன், சிரித்த முகத்துடன் வரவேற்கிறாரா? அல்லது முகத்தைத் திருப்பி, மறுபுறம் திரும்பிப் படுக்கிறாரா? உங்கள் வருகை வரவேற்கப்படுகிறதா?

நமக்குத் தெரிந்தவர்கள் ஆஸ்பத்திரியில் இருக்கும்போது, அங்கு சென்று அவர்களைச் சந்தித்து, அவர்கள் விரைவில் குணமடையுமாறு தைரியம் கூறி, நன்கு பேசுவது ஒரு கைதேர்ந்த கலை என்றே கூறலாம்.

ஒரு நிமிடம் இந்த மாதிரி கற்பனை செய்யுங்கள். உங்களுடன் பணியாற்றுபவர் ஆஸ்பத்திரியில் அட்மிட் ஆகியிருக்கிறார். நீங்கள் அவரைப் பார்க்கச் சென்றவுடன், அன்று உங்களுக்குக் கிடைத்த பெரிய ஆர்டரையும், அதனால் உங்களுக்கு வரப் போகும் கொள்ளை இலாபத்தையும் பற்றிக் கூறத் துடிக்கிறீர்கள். ஆனால் அவரோ, தன்னுடைய வலி பற்றி உங்களிடம் கூறத் துடிக்கிறார்.



நீங்களே ஆஸ்பத்திரியில் இருப்பதாக நினைத்துக் கொள்ளுங்கள். உங்கள் அத்தை, அட்டகாசமாக, அடுக்கடுக்காக அடைகள் செய்து கொண்டு உங்களைப் பார்க்க வருகிறார்கள். அடை உங்களுக்கு ரொம்பப் பிடிக்கும் என்று அத்தைக்குத் தெரியும். ஆனால், இப்போது அடை தின்ன உங்களுக்கு அனுமதி கிடையாது. அத்தை அடைகளை உங்கள் படுக்கைக்கு அருகிலேயே வைத்து விட்டுச் செல்கிறார். அடை தின்ன வேண்டும் என்ற ஆவலை ஓர் இரவு முழுதும் மிகக் கஷ்டப்பட்டு அடக்கிக் கொள்ள நேர்கிறது. அடை தின்னக் கூடாது என்று அத்தையிடம் கூறப் பயம்.

இம்மாதிரியான நேரங்களில் நமக்குச் சரியான முறையில் ஆலோசனை கூறி, நோய் வாய்ப்பட்ட நபரைக் காணச் செல்லும்போது, எப்படி நடந்து கொள்ள வேண்டும் என்பது பற்றிக் குறிப்புகள் இருந்தால் எவ்வளவு நன்றாக இருக்கும் என்று தோன்றுகிறதல்லவா?

1. தின்பண்டங்கள் போன்றவற்றை எடுத்துச் செல்ல வேண்டாம். சில ஆஸ்பத்திரிகளில் இதுபற்றி மிகக் கண்டிப்பாக இருக்கிறார்கள். தின்பண்டங்கள் கொண்டு வரப்படும்போது, நோயாளிக்கு விபரீதமான ஆவல் ஏற்படுவது இயற்கை. இதனால் கடுமையான விளைவுகள் ஏற்படுகின்றன. பொதுவாக ஆஸ்பத்திரிகளில் நோயாளிகளுக்குத் தேவையான உணவு கொடுக்கப்படுகிறது. எனவே, பார்வையாளர்கள், தின்பண்டங்களைக் கொண்டு செல்வதைத் தவிர்க்க வேண்டும். கட்டாயம், ஏதாவது கொண்டு செல்ல

வேண்டுமென்று நீங்கள் நினைத்தால், நோயாளியோடு இருக்கும் நபரிடம், எந்த மாதிரியான உணவு அனுமதிக்கப்படுகிறது என்று கேட்டு அதைக் கொண்டு செல்லலாம். இது முடியாவிட்டால், பழங்கள் எடுத்துச் செல்வது மிகச் சிறந்தது. நோயாளி திரவ ஆகாரமே உட்கொள்ள வேண்டும் என்று கூறப்பட்டிருக்கும்போது, பார்வையாளர்கள் பரோட்டா, குருமா எடுத்துச் சென்றால் எப்படி இருக்கும்? ஒரு நிமிடம் நினைத்துப் பாருங்கள்.

2. மலர்களை எடுத்துச் செல்ல வேண்டாம். மலரினால் ஒவ்வாத்தன்மை ஏற்படலாம். மேலும், ஒரு மலர், சில இனத்தவருக்கு சிநேகத்தையும் சில இனத்தவருக்கு இறப்பையும் குறிக்கக் கூடியதாகும்.

3. மிகவும் கண்டிக்கப்பட வேண்டியது பார்வையாளர்கள் தாங்கள்சாப்பிடுவதற்குப்



பலவிதமான உணவுப் பண்டங்களைக் கொண்டு வருவதுதான். ஏதோ பண்டிகை கொண்டாடுவதுபோல, பலவிதமான ஆகாரங்களை நோயாளியின் அறையிலேயே பரப்பிக் கொண்டு, அமர்க்களம் செய்வது. தாங்கள் பார்க்க வந்த நபரை மட்டுமல்ல, அதே அறையிலுள்ள மற்றவர்களையும் சட்டை செய்யாமல் இந்த விருந்துபசாரம் நடைபெறும். ஆஸ்பத்திரி, உல்லாசப் பயணத்துக்காக ஏற்பட்ட இடமில்லை என்பதை இவர்கள் புரிந்து கொள்ளக் கூடாதா?

நோயுற்றவரைப் பார்க்கச் செல்லும்போது, அந்நபர் மேல் அக்கறை காட்டுவது மிக முக்கியம். முகமலர்ச்சியுடன் பார்க்கச் செல்லுங்கள். அவருடன் பேசும்போது, துக்ககரமான செய்திகளைச் சொல்ல வேண்டாம். தமாஷாகப் பேசுங்கள். அதற்காக, ஜோக் அடித்துவிட்டு அட்டகாசமாகச் சிரிக்க வேண்டாம்.

நோயுற்றவரின் உணர்ச்சிகளுக்கு மதிப்புக் கொடுங்கள். அவரின் மனநிலை எவ்வாறு இருக்கிறதோ, அவருக்கு எது தேவையாக இருக்கிறதோ, அதற்குத் தகுந்த மாதிரி நீங்கள் நடந்து கொள்ள வேண்டும். தன் நோய் பற்றி, நோய் தனக்கு எப்போது எவ்வாறு ஏற்பட்டது, டாக்டர் என்ன கூறுகிறார் என்று அவருக்கு வேறொருவரிடம் கூற வேண்டும் என்ற விருப்பம் ஏற்படும்போது, அந்த விருப்பத்துக்கு மதிப்புக் கொடுத்து அவரைப் பேச விடுங்கள்.

பேசும்போது, மிகவும் மெல்லிய தொனியில் பேசுங்கள். நீங்கள் எவ்வளவு உரத்துப் பேச முடியும் என்பதைப் பரீட்சிக்க ஆஸ்பத்திரி பொருத்தமான இடமில்லை. மகிழ்ச்சியற்ற நிகழ்ச்சிகளைப் பற்றிப் பேச வேண்டாம். அவருக்கு ஆகியுள்ள ஆபரேஷன், உங்கள் உறவினருக்கு ஆனது பற்றியும், அதனால்



பின்பு அவருக்கு ஏற்பட்ட சிக்கல்கள் பற்றியும், அவர் தற்போது எவ்வளவு பலவீனமாக ஆகிவிட்டார் என்பது போன்றவற்றையும் ஒருபோதும் பேச வேண்டாம்.

நோயுற்றவரின் படுக்கையைச் சுற்றிக் கூட்டம் போட வேண்டாம். ஏற்கெனவே நோயால் பலவீனமாக இருப்பவருக்குக் கூட்டத்தைக் கண்டால் மேலும் அயர்ச்சி ஏற்படலாம். நீங்கள் செல்லும்போது, அறைக்குள்ளே அதிக நபர்கள் இருந்தால், நீங்கள் வெளியே காத்திருந்து, அவர்கள் வெளியே வந்தபின், உள்ளே செல்லவும். ஒருவேளை, நீங்கள் உள்ளே உள்ள கூட்டத்தில் ஒருவராக இருந்தால், விரைவில் வெளியே வந்து, மற்றவருக்கு வாய்ப்புக் கொடுங்கள்.


கூடியவரை, குழந்தைகளை அழைத்துச் செல்ல வேண்டாம். குழந்தைகளின் நோய் எதிர்க்கும் சக்தி மிகவும் குறைவாக இருக்கும்.

அதனால் எளிதில் நோய்கள் தொற்றிக் கொள்ளக் கூடிய அபாயம் ஏற்படும். குழந்தைகளை அழைத்துச் செல்ல வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்படுமானால், அதிக நேரம் ஆஸ்பத்திரியில் இருக்க வேண்டாம். குழந்தைகள் தொடர்ந்து ஓரிடத்தில் நீண்ட நேரம் இருக்க மாட்டார்கள். நீண்ட நேரம் ஓரிடத்தில் இருக்க வேண்டி கட்டாயப்படுத்தப்படும் போது அங்குமிங்கும் ஓட ஆரம்பித்து, ஆஸ்பத்திரியில் பல பாகங்களுக்கும் ஓடி, பலவிதமான தொற்றுகளுக்கு உள்ளாகலாம். இந்த அபாயத்தைத் தவிர்க்க, குழந்தைகளை அழைத்துச் செல்லாமல் இருப்பது உத்தமம்.

சில நேரங்களில் நோயுற்றவரைப் பார்க்க பார்வையாளர்கள் எல்லோரையும் உள்ளே அனுமதிக்க மாட்டார்கள். எடுத்துக்காட்டாக, கடுமையான இருதய நோயால் தாக்கப்பட்டவரை இன்டென்ஸிவ் கேர் யூனிட் [illegible] என்ற இடத்தில் படுக்க வைப்பார்கள். சிறு ஓசைகூட, அவர்களுக்குத் தீங்கு ஏற்படுத்தும் என்பதால் பார்வையாளர்கள் அனுமதிக்கப் பட மாட்டார்கள். மிகவும் நெருங்கிய ஒரு நபர் மட்டும் அந்த யூனிட்டின் உள்ளோ அல்லது வெளியிலோ இருக்க அனுமதிக்கப் படுகிறார். இவரின் அனுமதி பெற்றே, பார்வையாளர்கள் அனுமதிக்கப்படலாம். இவர், நோயாளியின் நலன் கருதி, பார்வையாளர்களை அனுமதிக்கவில்லையென்றால், அவர் மீது கோபம் கொள்ளாதீர்கள். அவரோடு அனாயாசமாக, வாக்குவாதம் செய்யாதீர்கள். குறிப்பாக, நோயாளிக்குக் கேட்கும் வகையில் வாக்குவாதம் செய்ய வேண்டாம். நோயாளி, நலம் பெற்று வீடு திரும்பும்போது, அவரைப் பார்த்துக் கொள்ளலாமே! கண்டிப்பாக, நீங்கள் அவரைப் பார்த்துத்தான் ஆக வேண்டும் என்ற நிர்ப்பந்தம் இருந்தால் டாக்டரிடம் ஆலோசனை கேட்டு அவர் சொற்படி செய்யவும்.

பார்வையாளர்கள் பலர், எந்த மாதிரியான சிகிச்சை செய்யப்பட வேண்டும், எந்த மருந்துகள் சாப்பிட வேண்டும் போன்ற யோசனைகளைக் கூறுவதைத் தவிர்க்க வேண்டும். நீங்கள் கூறும் அறிவுரை, உண்மையிலேயே சரியாக இருந்தாலும், அதை நீங்கள் கூறுவது தவறு. அறிவுரை கூறத் தகுதி வாய்ந்தவர் டாக்டரே. அப்படியே, ஒருவேளை, நோயாளி, உங்களை அறிவுரை கேட்டாலும் 'டாக்டருக்குத் தெரியும், அவர் அறிவுரையைப் பின்பற்றுங்கள்' என்று கூறி, நைசாக நழுவி விடுவது புத்திசாலித்தனம்.

பார்வையாளராகச் செல்லும் நீங்களே ஒரு டாக்டராக இருந்தாலும், உங்கள் மருத்துவ அறிவைப் பறைசாற்ற வேண்டாம். நோயுற்றவரைப் பார்க்க வந்த ஒரு டாக்டர் உறவினர் அடிக்கடி சிகிச்சை முறையில் தலையிட்டதாக ஒரு நர்ஸ் கூறுகிறார். அந்த டாக்டர் உறவினர், தானாகவே, நோயாளியின் உடலில் செலுத்தப்பட்டுக் கொண்டிருக்கும் 'டிரிப்'பின் வேகத்தை அதிகரித்து விட்டதால் நோயாளியின் உடல்நிலையில் சிக்கல்கள் ஏற்பட்டது. இறுதியில் அந்த டாக்டர் உறவினரிடம், நர்ஸ், தலையிடாமல் இருக்குமாறும், இல்லாவிட்டால், ஏற்படும் விளைவுகளுக்குத் தான் பொறுப்பில்லை என்றும் கண்டித்துக் கூற வேண்டியதாயிற்று என்று ஒரு நர்ஸ் நினைவுகூர்கிறார்.



ஒரு டாக்டரை, வேறொரு டாக்டரோடு ஒப்பிட்டுப் பேசாதீர்கள். உங்களைப் பொறுத்த வரை, உங்கள் டாக்டர் திறமைசாலியாக இருக்கலாம். ஆனால், நோயாளி, தம் டாக்டரைப் பற்றி உண்மையிலேயே அதிருப்தி தெரிவித்தாலொழிய, உங்கள் அபிப்பிராயத்தை வெளிப்படையாகக் கூற வேண்டாம். அவருக்குச் சிகிச்சை அளிக்கும் டாக்டரின் திறமை பற்றி நீங்கள் சந்தேகிப்பதாக, நோயாளி நினைக்கும்போது, அவருக்கு மனோரீதியாகப் பிரச்னைகள் ஏற்பட்டு அதாவது, தன் டாக்டர் திறமையில்லாதவர், அவர் கொடுக்கும் சிகிச்சையால் தனக்குக் குணம் ஏற்படுமா? என்ற ரீதியில் பிரச்னைகள் ஏற்பட்டு சிக்கல்கள் ஏற்பட வாய்ப்புகள் உண்டு.

எடுத்துக்காட்டாக இந்நிகழ்ச்சியைச் சற்றே கவனியுங்கள். ஒருவருக்கு, ஒரு

பாமோலிவ் எக்ஸ்ட்ரா கேர் ஒயிட்டில் உள்ளது கூடுதல் ஊட்டச்சத்தை வழங்கும் வைட்டமின் "ஈ"
(நீருடன் எடுத்துக் கொள்ளுங்கள், தினமும் இருமுறை)







சாதாரண சருமத்திற்கும் கூடுதல் ஊட்டச்சத்து தேவைப்படுகிறது. வைட்டமின் "ஈ" செறிந்த புதிய பாமோலிவ் எக்ஸ்ட்ரா கேர் ஒயிட் சாதாரண சருமத்திற்கு ஊட்டச்சத்தை அளிக்க தனிச்சிறப்பாக தயாரிக்கப்பட்டுள்ளது. இதன் தவழும் நுரைவளம் சருமத்தை முதலில் மென்மையாகத் தூய்மைப்படுத்தி பிறகு சாதாரண சருமத்திற்கு தேவையான ஊட்டச்சத்தையும் அளிக்கிறது. சாதாரண மேனியும் மிருதுவாக, பட்டுபோன்று எழில் கொழிக்கிறது.

தொட்டால் தெரியும் பட்டின் மென்மை.

Ambience-EC-138 C-Tam

குறிப்பிட்ட டாக்டர் ஆபரேஷன் செய்து, குணமாகி வந்தது. ஆனால் ஆபரேஷன் ஆகியவரின் இரண்டு பெண்களுக்குத் (அவர்களும் டாக்டர்கள்) திருப்தி ஏற்படவில்லை. இரண்டாவது அபிப்பிராயம் கேட்பதற்காக அவர்கள் இன்னொரு டாக்டரை அழைத்து வந்தனர். இந்த டாக்டர், நோயாளியைப் பரிசோதித்துவிட்டுச் சிகிச்சையை மாற்றினார். துரதிர்ஷ்டவசமாக நோயாளியின் உடல்நிலையில் சிக்கல் ஏற்பட்டது. எனவே, மற்றொரு டாக்டர். டாக்டர்கள் மாறும்போது, சிகிச்சை முறை மாறத்தானே செய்யும்? ஆனால் எந்தச் சிகிச்சையும் பலனளிக்கவில்லை. நோயாளியின் உடல்நிலை சீர்கேடடைந்தது. தன்னைச் சுற்றி நடக்கும் குழப்பங்களால் மிகத் தொந்தரவுக்குள்ளாகிய நோயாளி, எந்த முறையிலும் ஒத்துழைக்க மறுத்துவிட்டார். நடக்கக் கூடாதது நடந்தது அவர் இறந்து விட்டார்.

நோயாளியின் உடல்நிலை முன்னேற்றம் பற்றி பார்வையாளர், தாங்களே டாக்டரை விசாரிக்க முற்படுவது தவறு. உடல்நிலை முன்னேற்றம் பற்றிக் கூறுவதற்கு டாக்டர்கள் தயங்க மாட்டார்கள். ஆனால் நோயாளிகளின் உடல்நிலை பற்றி ஒவ்வொருவரிடமும் கூறுவது டாக்டர்களுக்குப் பிடிக்காத ஒன்று என்பதை நாம் நினைவில் கொள்ள வேண்டும். நோயாளிக்கும், டாக்டருக்கும் இடையே ஒரு நபர் பிரதிநிதியாகச் செயல்பட்டு அவ்வப்போது நோயாளியின் உடல்நிலை முன்னேற்றம் பற்றித் தெரிந்து கொள்ள வேண்டியது அவசியம். பார்வையாளர்கள் பலரும் டாக்டரைக் கண்டு நோயாளியின் முன்னேற்றம் பற்றித் தெரிந்து கொள்ள முற்படும் போது, ஒவ்வொருவரும் ஒவ்வொரு மாதிரி புரிந்து கொண்டு பெரிய குழப்பம் ஏற்படும் என்கிறார் ஒரு டாக்டர்.

நோயாளியின் உடல்நிலை கடுமையாக இருந்து, ஆனால் அவருக்கு நல்ல நினைவு இருக்கும்போது, பார்வையாளர்கள் மிக எச்சரிக்கையுடன் இருக்க வேண்டும். நோயாளியுடன் இருக்கும் நபரை, இரகசியமான குரலில் அந்தப் பக்கம் அழைத்து, அவரிடம் குசுகுசுப்பது நோயாளியின் மனத்தில் பீதியை உண்டாக்கும். ஒரு நபர் நோய்வாய்ப்படும்போது, தன்னைச் சுற்றி என்ன நடக்கிறது என்பதில் மிக்க கவனம் செலுத்த ஆரம்பித்துவிடுகிறார். அதனால் இம்மாதிரியான நிலைமைகளைத் தவிர்ப்பது மிக்க அவசியம். நோயாளிக்குக் கேட்காத வகையில், வேறு ஏதாவது விஷயம் பேசிக் கொண்டிருந்தாலும், சந்தேகம் எழுந்து அதனால் நோயாளி சோர்வடையலாம்.

நோயாளியைப் பார்க்கச் செல்வதற்குச் சரியான நேரம் எது? எத்தனை நேரம் ஆஸ்பத்திரியில் இருக்கலாம்? பார்வையாளர்களுக்காக ஒதுக்கப்படும் நேரத்தில் மட்டும் செல்லுங்கள். உடல்நிலை சரியாக இல்லாத போது, நீங்கள் அவரிடம் பேச முற்படுவது அவருக்குச் சோர்வினை உண்டாக்கலாம். பார்வையாளர்கள் நேரத்துக்குப் பிறகு நீங்கள் சென்றால், அப்போதுதான் பார்வையாளர்கள் நேரம் முடிந்திருப்பதால், ஓய்வு எடுத்துக் கொள்வதற்குத் தடையாக ஆகிவிடுகிறீர்கள் அல்லது பக்கத்துப் படுக்கையில் இருப்பவருக்குத் தொந்தரவு ஏற்படலாம். இக்காரணங்களுக்காகவே, பார்வையாளர்கள் நேரம் பற்றி ஆஸ்பத்திரிகளில் மிகக் கண்டிப்பாக இருக்கின்றனர்.

நோயுற்றவர், வீட்டிலேயே இருந்தால், அவர் ஓய்வு எடுக்கக் கூடிய சமயங்களில் போவதைத் தவிர்க்கவும். அவரைப் பார்ப்பதற்கு எந்த நேரம் சரி என்று முன்கூட்டியே தெரிந்து கொண்டு செல்லவும். இதனால், வீட்டினருக்கும் தொந்தரவு இல்லாமல் இருக்கும்.


நோயாளியுடன் எத்தனை நேரம் இருக்கப் போகிறோம் என்பது நமக்கும் அவருக்கும் இருக்கும் உறவின் நெருக்கத்தைப் பொறுத்தது. ஏதோ, ஒரு மரியாதைக்காக ஒருவரைப் பார்த்து வர வேண்டுமென்றால், பார்வை நேரத்தை மிகக் குறைத்துக் கொள்வது நல்லது. 10 (அ) 15 நிமிடங்கள் போதுமானது. மிகவும் நெருங்கியவராக இருந்து அவர் உங்களை இன்னும் கொஞ்சம் அதிக நேரம் தம்முடன் இருக்கும்படி வேண்டினால், அந்த வேண்டுகோளைப் பூர்த்தி செய்யுங்கள்.

ஆனால் அவரைக் களைப்படையச்

அரிசித் திப்பிலி, சீரகம் இரண்டையும் பொடித்து பாட்டிலில் போட்டு வைத்துக் கொள்ளவும். விக்கல் வரும்போது சிறிதளவு எடுத்துத் தேனில் குழைத்துச் சாப்பிடவும். விக்கல் நின்று விடும்.

– ஜே. சங்கீதா





எங்கள் வீட்டில் பாட்டில் தேய்க்கிற பிரஷ் உள்ளது. ஸ்பாஞ்ச் கொஞ்சம் இருந்தது. ஸ்பாஞ்சைச் சிறுசிறு ரிப்பன் போல் கட் செய்து, நடுவில் நூலால் கட்டி, பிரஷ்ஷின் பின்புறம் உள்ள ஓட்டையில் சமமாக வைத்துக் கட்டிவிட்டேன். டூ-இன்-ஒன். பிளாஸ்க் தேய்க்கிற பிரஷ் பின்னால்; பாட்டில் தேய்க்கிற பிரஷ் முன்னால்!

- ஜே. சங்கீதா

செய்து விடாதீர்கள். அவருடைய மனநிலை மாறுதல்களைக் கவனித்து, அதற்குத் தகுந்தவாறு இருங்கள். உங்களைப் போலவே, அவருக்கு மிக நெருக்கமானவர் வரும்போது, விடைபெற்றுக் கொள்ளுங்கள்.

ஆஸ்பத்திரிகளில் நோயாளியின் படுக்கைக்கருகே, ஒரே ஒரு நாற்காலி மட்டும் போடப்பட்டிருப்பதை நீங்கள் கவனித்திருக்கிறீர்களா? இது ஏன் என்று யோசித்திருக்கிறீர்களா? பார்வையாளர்கள் அதிக நேரம் தங்கி விடாமல் தடை செய்வதற்காகவும் பார்வையாளர் ஒவ்வொருவருக்கும் நோயாளியைப் பார்க்க வாய்ப்பளிக்கவும் இந்த ஏற்பாடு. எனவே, இந்த ஏற்பாட்டை மதித்து நடக்கவும். பார்வையாளர் நேரம் முடியும்வரை, நீங்களே இந்த நாற்காலியில் உட்கார்ந்து கொண்டு ஆக்கிரமிப்பு நடத்த வேண்டாம்.

ஆபரேஷனுக்கு முன்போ அல்லது பின்போ நோயாளியைப் பார்க்க வரும் பார்வையாளர்களுக்கு ஓர் எச்சரிக்கை. ஆபரேஷனுக்கு முன்பு, நோயாளிக்குத் தைரியம் ஊட்ட வேண்டியது அவசியம் என்றாலும், இதைச் செய்வதாக நினைத்து, ஒரே சமயத்தில் பல பேர் நோயாளியிடம் பேசுவது நோயாளியைக் கவலைக்குட்படுத்தும்.

ஆபரேஷன் முடிந்து நினைவு திரும்பும் போது 'இப்போது உடல்நிலை எப்படியுள்ளது? ஆபரேஷன் செய்த இடத்தில் வலி தெரிகிறதா?' என்று நோயாளி விடை அளிக்கும் வரையில் கேள்விமேல் கேள்வி கேட்டுத் துளைக்க வேண்டாம். பாவம், அந்த நபர், முடிந்த மட்டும் விடையளிக்க முயற்சிக்கிறார் - பலஹீனமாக இருப்பதால், அவர் பேசுவது பார்வையாளர் காதுகளில் சரியாக விழாமல், மறுபடியும் கேள்விமேல் கேள்வி கேட்டு, இப்படித் தொடரலாம். ஆகையால், ஆபரேஷனுக்கு முன்பும், பின்பும், நோயாளிக்கு மிக நெருங்கிய ஓரிருவர் மட்டுமே கூட இருப்பது உத்தமம்.

ஆஸ்பத்திரியில் பிறந்துள்ள குழந்தையைப் பார்க்கச் செல்லும்போது சில விதி முறைகளை அனுசரிக்க வேண்டும். குழந்தைக்குப் பலவிதமான தொற்றுகளால், குறிப்பாக, காற்றினால் பரவக் கூடிய நோய்களால், அபாயத்துக்கு உட்படக் கூடிய அபாயம் இருக்கிறது. உங்கள் உடல்நிலை சரியில்லையென்றால், குழந்தையைப் பார்க்கச் செல்ல வேண்டாம். உங்களைப் பொறுத்தவரை, உங்கள் உடல்நிலைக்குள்ள கோளாறு, மிகச் சாதாரணமாக இருக்கலாம். ஆனால் குழந்தைக்கு அது பெரிய அபாயத்தை விளைவிக்கக் குடியதாக இருக்கலாம். சில வெளிநாடுகளில், குழந்தை உறங்கிக் கொண்டிருக்கும் அறைக்குள் வரும், எந்தப் புதியவரும், முகமூடி அணிந்து கொண்டு, செருப்புகளை மாற்றிக் கொண்டு வரவேண்டும் என்ற விதிமுறை உள்ளது.

ஆஸ்பத்திரியில், பார்வையாளர் நேரத்தில், குழந்தையைத் தாயிடமிருந்து பிரித்து வேறு இடத்தில் படுக்க வைப்பதன் காரணம் தெரியுமா? குழந்தையைப் பார்வையாளர்கள் ஒவ்வொருவரும் தூக்க முற்படும்போது, கைகள், அசுத்தமாக இருக்கும்போது - குழந்தைக்குத் தொற்று ஏற்படக் கூடிய அபாயத்தைத் தவிர்க்கவே இந்த ஏற்பாடு. அசுத்தமான கைகள் என்றால் கைகளில் அழுக்கு ஒட்டிக் கொண்டிருப்பதாக அர்த்தம் கொள்ள வேண்டாம். கைகள் சுத்தமாக இருந்தாலும் ரோடிலுள்ள புழுதி, அழுக்கு அவர்கள் கைகளில் படிந்திருந்து குழந்தைக்கு அபாயம் ஏற்படலாம்.

மருத்துவரீதியாக, தாயைத் தவிர, வேறு யாரும் குழந்தையை மிக நெருக்கமாகக் கையாள்வது தவறு என்று கூறப்படுகிறது. தாயும் கூட, குழந்தையைத் தழுவிக் கொள்ளலாமே ஒழிய, முத்தமிடக் கூடாது என்று கூறப்படுகிறது. ஒவ்வொரு நபருக்கும் ஏதாவது ஒரு தொற்று இருக்கலாம். குழந்தையை, மிக நெருக்கமாகக் கையாளும்போது தொற்று பீடிக்கலாம்.

முதன் முதலாகப் பிரசவித்துள்ள பெண்ணிடம் "குழந்தையை எப்படி வளர்ப்பது?" என்பது போன்ற ஆலோசனைகளைக் கூறுவதைத் தவிர்க்கவும். பார்வையாளர் ஒவ்

வொருவரும், ஒவ்வொரு ஆலோசனை கூறும் போது, தாய் மனக்குழப்பம் அடையலாம். அப்படியே, பிரசவித்த பெண், உங்களை ஆலோசனை கூறும்படி வேண்டினாலும், ஆலோசனை கூறுவதைத் தவிர்க்கவும். ஆலோசனை கேட்டவுடனேயே உங்களை டாக்டராகப் பாவித்துக் கொண்டு, ஆலோசனைகளைக் கூறுவது வேண்டாம்.

இன்றும், கிராமப்புறத்தில் வீட்டில் பிரசவம் நடந்தால், பிரசவ அறையில் பிரசவித்த பெண்ணோடு இன்னொரு பெண்மணியும் இருப்பார் - யாராவது குழந்தையைப் பார்க்க வந்தால், இப்பெண்மணிதான் குழந்தையை எடுத்துக் காட்டுவார். இவர் மற்றும் பிரசவித்த தாய் இருவரைத் தவிர குழந்தையை வேறு எவரும் எடுக்க அனுமதிக்கப்பட மாட்டார்கள். மேலும் பிரசவ அறையின் வாயில் ஒரு மர உலக்கையைப் படுக்கையாகப் போட்டு விடுவார்கள். இந்த உலக்கையைத் தாண்டி அந்தப் பக்கம் யாரும் போகக் கூடாது என்று எல்லை காட்டத்தான் இந்த உலக்கை ஏற்பாடு. மேலும் வீட்டு வாசலிலும், பிரசவ அறையின் வாசலிலும், கொத்துக் கொத்தாக வேப்பிலையைச் செருகி இருப்பார்கள்.

வேப்பிலை சிறந்த கிருமிநாசினி. பிரசவ அறையிலுள்ள மற்றொரு பெண்மணி வெளியே வரும்போது குளிப்பார். மறுபடியும் பிரசவ அறைக்குள் செல்வதற்குமுன், மறுமுறை குளிப்பார். பிரசவித்திருக்கும் தாய்க்கும், குழந்தைக்கும் எந்தத் தொற்றும் ஏற்படக் கூடாது என்பதற்காகவே இந்த முன் எச்சரிக்கை.

ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டிருக்கும் நோயாளிக் குழந்தையைப் பார்க்கச் செல்லும்போது அனுசரிக்க வேண்டிய விதிமுறைகள் :

ஒருபோதும், பொம்மை, தின்பண்டங்கள் போன்றவற்றை எடுத்துச் செல்லாதீர்கள். பொம்மையுடன் விளையாடக் கூடாது, தின்பண்டங்களைத் தின்னக் கூடாது என்று குழந்தை எச்சரிக்கப்பட்டுத் தடுக்கப்படும் போது, குழந்தையின் மனநிலை பாதிக்கப்படுகிறது. வெறுங்கையுடன் போகக் கூடாது என்பதற்காக, நீங்கள் ஏதாவது எடுத்துச் சென்றால், குழந்தையிடம் காட்டாமல் பெற்றோரிடம் கொடுக்கவும்.

குழந்தையின் வாயில் எதையும் கொடுக்க வேண்டாம், புனிதமான நதியிலிருந்து எடுத்து வரப்பட்ட நீரானாலும் சரி. நோய்வாய்ப் பட்ட குழந்தையைப் பார்க்க, குழந்தைகளை அழைத்துச் செல்லாதீர்கள். உங்கள் குழந்தைகளுக்குத் தொற்று ஏற்படலாம் அல்லது நோயாளிக் குழந்தைக்கு உங்கள் குழந்தைகளிடமிருந்து புதியதான தொற்று ஏற்படலாம்.

நீங்கள் குழந்தைக்கு மிக நன்றாகப் பரிச்சயமானவர் என்றாலும், சில சமயத்தில் நோய்க் குழந்தை உங்களுடன் பேச விருப்பப்படாமல் இருக்கலாம். இதைத் தவறாகப் புரிந்து கொள்ள வேண்டாம். பேச முற்படாத குழந்தையிடம் பலவந்தமாகப் பேச முற்பட வேண்டாம்.

குழந்தையுடைய விருப்பங்களுக்கு மதிப்புக் கொடுங்கள். குழந்தையின் உடல் நிலை பற்றி, பெற்றோரிடம் கேட்டு அமைதியாக இடம் விட்டு அகலுங்கள்.

ஒருவேளை குழந்தை பேச முற்பட்டால் அதற்கு விருப்பமான விஷயங்களை மட்டும் பேசவும். குழந்தையைப் பேசவிட்டு, அதற்குத் தகுந்த மாதிரி உங்கள் பேச்சைக் கொண்டு செல்லுங்கள். பள்ளிக்கூடத்தைப் பற்றி மட்டும் கேட்க வேண்டாம். குழந்தை, ஆரோக்கியமாக இருக்கும்போது, பள்ளியை ரொம்ப விரும்பினாலும், ஆரோக்கியமற்று ஆஸ்பத்திரியில் இருக்கும்போது, பள்ளியைப் பற்றிய பேச்சைக் கண்டிப்பாக விரும்பாது.

- ராஜி

டிசைன் இட்லி!

சிறு குழந்தைகளுக்கு இட்லி செய்யும்போது தட்டின் குழிமேல் நான்கு வெவ்வேறு டிசைன் கப்புகளிலோ, தட்டிலோ வைத்து இட்லி வார்த்துக் கொடுத்தால் 'டிசைன் இட்லி'ப் பிரியர்களாகி விடுவார்கள்.

- கி. மஞ்சுளா



அல்ட்ரா கிரைண்ட்+ வீட்ல இருந்தா வேலை எவ்வளவு ஈஸி!




ULTRA
GRIND+

12 month warranty

இந்தியாவின் முதல் ''டேபிள் டாப்'' ஆட்டுக்கல்

என்னைப் போல ஒங்களப் போல பிஸியா இருக்கற புதுயுகப் பெண்களுக்காகவே தயாரிச்சிருக்காங்க இந்த அல்ட்ரா கிரைண்ட் + ஆமாம்! இந்த அல்ட்ரா கிரைண்ட் + வந்ததிலேருந்து இட்லி தோசைக்கு மாவு அரைக்கறது ஈஸி! சட்னிக்கு தேங்காய் துருவறது ஈஸி! சப்பாத்தி மாவு பிசையறது ஈஸி! இப்படி, நம்மளோட வேலையெல்லாம் எவ்வளவு ஈஸியாயிடுச்சு பாத்தீங்களா?

என்னப் பொருத்தவரைக்கும் இல்லத்தரசிக்கு வசதி மட்டுமில்ல; இல்லத்திற்கே பெருமை தர்றது இந்த அல்ட்ரா கிரைண்ட் + என்ன, நான் சொல்றது சரிதானே!



மாவு பிசை சாதனம்



தேங்காய்த் துருவி

எல்ஜி தயாரிப்பு

எல்ஜி அல்ட்ரா அப்ளையன்சஸ் லிட்
எல்ஜி ஹவுஸ், திருச்சி ரோடு, கோயம்புத்தூர்-641 045.
போன்: 0422-216132. பேக்ஸ்: 0422-212810
மண்டல அலுவலகம்: சிந்தூர் டவர்ஸ்,
95, லஸ் சர்ச் சாலை, சென்னை- 600 004. தொ.பே: 4992101

PATENT PENDING DESIGN REGD. NO. 163445 & 163446.

புதுயுக வசதி அல்ட்ரா. புதியதோர் அனுபவம் அல்ட்ரா.

Anugrah 1693/94

என் வெற்றிக்குக் காரணம் என் கணவரே!



இங்கே ஒரு பெண்ணின் வெற்றிக்குப் பின்னால் ஒரு ஆண் இருக்கிறார். ''என்னுடைய சாதனைக்கு...வெற்றிக்குப் பின்னால் முழுக்க முழுக்க என் கணவர் தான் இருக்கிறார்'' என்கிறார் சென்னை முகப்பேர் சாம்ராக் மெட்ரிக்குலேஷன் பள்ளி தலைமை ஆசிரியையான திருமதி. சரளாதேவி ரமேஷ் குமார் அவர்கள்.

என்னதான் பள்ளியில் கல்லூரியில் முதன்மையாகப். படித்தாலும் திருமணமானதும், குடும்ப வாழ்க்கை எனும் வண்டியில் ஏறியதும் தான் பெற்ற பட்டத்தை, அதன் சக்கரத்திலேயே போட்டு நசுக்கி விட்டு வாழ்க்கைப் பயணம் செய்யும் பெண்கள் நிறைந்த நம் நாட்டில், திருமணத்தின்போது பி.எஸ்.ஸி.பட்டம் மட்டுமே பெற்றிருந்த இவர் திருமணத்திற்குப் பிறகு தான் கணவரது தூண்டுதலால் பி.எட்.படித்து, எம்.எட்.முடித்து அத்துடன் எம்.எஸ்.ஸி., எம்.ஏ.பட்டங்களும் பெற்று தற்போது எம்.ஃபில் செய்து கொண்டிருக்கிறார்.

"திருமணத்தின்போது நீங்கள் ஆசிரியராக இருந்தீர்களா?"

"ஆமாம். திருமணத்தின்போது அயனாவரம் டேவிட்சன் ஆங்கிலப் பள்ளியில் பணிபுரிந்து கொண்டிருந்தேன். இப்போது முகப்பேரு சாம்ராக் மெட்ரிகுலேஷன் ஸ்கூலில் தலைமை ஆசிரியையாகப் பணியாற்றிக் கொண்டிருக்கிறேன்."

"உங்கள் கணவர் பற்றி..."

"என்னுடைய கல்விச் சாதனைகளுக்கு முழுக்க முழுக்கக் காரணம் என் கணவர் திரு.வி.ரமேஷ்குமார் அவர்கள்தான். திருமணமான புதிதிலிருந்தே "நீ மேலே படிக்கணும். ஓர் உயர்ந்த நிலைக்கு வரணும்" என்றெல்லாம் அடிக்கடி சொல்லி என்னைத் தூண்டிப் படிக்க வைத்தார்... வைத்துக் கொண்டு இருக்கிறார். என் கணவர் சென்னை சுப்பற் கூடத்துறையில் பொறியாளர் பிரிவில் ஜூனியர் அஸிஸ்டெண்டாகப் பணியாற்றிக் கொண்டிருக்கிறார். ஒவ்வொரு கோர்ஸ் படிக்கும்போதும் அப்ளிகேஷன் பார்ம் வாங்குவதிலிருந்து, நுழைவுக் கட்டணம் கட்டி, பரிட்சை சமயம் தேர்வுக் கட்டணம் செலுத்தி தானே அவ்வப்போது ரெக்கார்டு, சார்ட் ஓர்க் இதெல்லாம் கூட செய்து கொடுத்து தேர்வுகளின் போது ஒவ்வொரு முறையும் ஊக்கப் படுத்தி என்னை இந்த நிலைக்குக் கொண்டு வந்திருக்கிறார்.

மேலும் இப்போது கூட வீட்டிலிருந்து என்னை தினமும் பள்ளிக்கு அவரது பைக்கில் அழைத்துக் கொண்டு வருவார். வீட்டிற்கும் பள்ளிக்கும் 7கி.மீ. தூரம். அங்கிருந்து அவரது ஆபீஸ் 14 கி.மீ. ஒவ்வொரு நாளும்



சளைக்காமல் என்னைப் பள்ளியில் விட்டு மாலையில் திரும்ப வீட்டிற்கு அழைத்துச் செல்வதும் அவர்தான். குழந்தைகளுக்கு உடல் நலமில்லாவிட்டாலும் கூட என்னை அவர் லீவு போட அனுமதிப்பது இல்லை. தானே லீவு போட்டு குழந்தைகளை கவனித்துக் கொள்வார். நான் இதுவரை ஒரு நாள் கூட லீவு எடுத்த தில்லை."

சொல்லிவிட்டுப் பெருமிதத்துடன் சிரிக்கிறார் சரளா.

"உங்கள் குடும்ப வாழ்க்கை பற்றி..."

"நான் திருமணமாகி குடும்ப வாழ்க் கையில் ஈடுபட்ட பிறகும் மேலே மேலே படித்துப் பட்டங்கள் வாங்கி இருந்தாலும் கூட குடும்ப வாழ்க்கையில் எவ்வித குறையும் வைத்ததில்லை. எங்களுக்கு இரண்டு குழந் தைகள். சமையலை கவனித்துக் கொள்வதி லிருந்து குழந்தைகள் மற்றும் அவரது தேவை களை அறிந்து கவனிப்பதுவரை குறைவின்றி செய்து விடுவேன்."

"உங்கள் எதிர்காலத் திட்டம் என்ன?"

"எம்ஃபில் முடித்ததும் பி.எச்.டி.செய்து டாக்டர் பட்டம் வாங்க வேண்டும் என்று என்னை என் கணவர் வற்புறுத்துகிறார். என் விருப்பமும் அதுவே."

"உங்கள் பள்ளிப் பணி பற்றி..."

"இந்த சாம்ராக் மெட்ரிகுலேஷன் பள்ளியின் முழுப் பொறுப்பையும் நிர்வகிக் கிறேன். இது அரசு அங்கீகாரம் பெற்ற பள்ளி. தற்போது எட்டாவது வகுப்பு வரை இருக்கிறது. அடுத்த வருடங்களில் 9,10 வகுப் புகள் வந்து விடும். 10-ம் வகுப்பு செல்பவர் களுக்கு செண்ட் பர்சண்ட் ரிஸல்ட் வரு வதற்காக உழைத்துக் கொண்டிருக் கிறோம். இந்தப் பள்ளியின் கரெஸ்பாண்டண்ட் ஹாஜ் முகம்மது இஸ்மாயில் என்பவர். இந்த சமு தாயத்தில் சிறந்த மாணவர்களை உரு வாக்குவதே அவரது குறிக்கோள். ஜாதி, மத வேறுபாடு பார்க்காமல் எல்லோரும் முன்னேற வேண்டும் என்கிற உயர்ந்த எண்ணம் உடையவர்.

எங்கள் பள்ளியில் நல்ல ஒழுக்கம் முதல் பாடமாக போதிக்கப்படுகிறது. தரமான கல்வி, நீதி போதனைகளுக்கு முக்கியத்துவம் கொடுத்து இந்தப் பள்ளியை ஒரு சிறந்த பள்ளிக் கூடமாக ஆக்க வேண்டும் என்பதே என் குறிக்கோள்."


பேட்டி: **கீதாதெய்வசிகாமணி.**

சரஸ்வதி கோவில்

இரட்டை நகரங்கள் என்று பெருமைப்படும் ஹைதராபாத் பற்றிய சுவையான செய்தி ஒன்று உள்ளது. அங்கு வந்ததும் அனைவரும் கண்டு களிப்பது சார்மினார், பிர்லா மந்திர், கோல் கொண்டா கோட்டை, யாதகிரி குண்டா, சாலார் ஜங் மியூசியம், ஜு, நாகார்ஜுன் சாகர் இவற்றைத்தான்.




ஹைதராபாத்திலிருந்து இருநூறு கிலோ மீட்டர் தொலைவிலும், நிஜாமாபாதிலிருந்து முப்பது கிலோ மீட்டர் தொலைவிலும் உள்ள 'பாஸர்' **(Basar)** எனும் இடத் தில் உள்ள சரஸ்வதி கோவில் மிகப் பிரசித்தி பெற்று வரு கின்றது. பாறை வெடித்துச் சுயம்புவாக வெளிவந்த முகம், இருபாதங்களை சரஸ்வதி விக்ரமாக பிரதிஷ்டை செய்து,



பாதங்களில் மஞ்சள் குங்குமம் இவற்றால் பக்தர்களே அர்ச்சனை செய்கின்றனர். பொரியும், சர்க்கரை உருண்டைகளும் பிரசாதமாக வழங்கப்படுகின்றது. சரஸ்வதிக்கு அதிகமாகக் கோவில்களே இல்லாத நிலையில் இந்தக் கோவில் பத்து, பன்னிரண்டு வருடங்களாக அதிகம் பேசப்படுகின்றது. சுற்றுலா நகராக, ஆந்திர ப்ரதேச அரசாங்கம் அங்கீகரித்ததுடன், சிறப்புப் பேருந்துகள் வசதியும் செய்து தந்துள்ளனர். முதல்நாள் இரவு வந்து தங்கி, மறுநாள் காலை குழந்தைகளுக்கு 'அட்சராப்பியாசம் செய்து கொண்டு, பூஜை செய்து விட்டுச் செல்வது வழக்கமாகி வருவதால் சிலேட்டு, பலபம், பூஜா திரவியங்கள், பிரசாதங்கள் விற்கும் கடைகளும் தங்கும் விடுதிகளும் உள்ளன.

– மாலதி ராஜாராம்


AVT
SUNBEAM
SUPER-REFINED SUNFLOWER OIL
இதோ, உங்கள் குடும்ப டாக்டர்!
சுவையான உணவை இனி மனமாற சாப்பிடலாம், சன்பீமினால்!
சுத்திகரிக்கப்பட்ட சன்பீம் சூரியகாந்தி எண்ணெயில் குறைந்த
அளவில் கொழுப்புச் சத்தும், அதிக வைட்டமின்களும் உள்ளன.
மேலும், இரட்டிப்பு ஆரோக்கியத்திற்காக சன்பீம் பிரத்யேகமாக,
'டீ-வாக்ஸ்' செய்யப்படுகிறது. உங்கள் கைமணம்
மாறாத உணவு இனி
உங்கள் குடும்பத்தை
மகிழ்ச்சியாகவும்
ஆரோக்கியமாகவும்
வைத்திருக்கட்டும்.
LOW LOW LOW FAT
பிடித்ததை சாப்பிடுங்கள். கவலையின்றி வாழுங்கள்.
SUNBEAM



வைரம்

ஒரு ஆடம்பரம்தான்!

சின்னதாக ஒரு அடுப்புக் கரித் துண்டு, கோஹினூர் வைரம். "இரண்டுமே ஒன்றுதான்" என்று ஒருவர் சொன்னால் அவர் "பெரிய மகானாகவோ மனநிலை சரியில்லாதவராகவோ" இருக்க வேண்டுமென்பதில்லை. கரி, வைரம் இரண்டுமே கார்பனின் வெவ்வேறு வடிவங்கள்தான் என்கிறது விஞ்ஞானம். (அப்படியானால் ஒரு ஜோடி 'கரித்'தோடு செய்ய முடியாமல் தடைப்பட்டு நிற்கும் கல்யாணங்கள் எவ்வளவு என்று பெருமூச்சு விடத் தோன்றுகிறதோ?)

நம் நாட்டில் விற்கும் வைரங்களின் விலையை நிர்ணயிக்கும் சக்தி தென் ஆப்பிரிக்காவிலுள்ள ஒரு நிறுவனத்திற்கு இருக்கிறது என்றால் ஆச்சரியமாக இருக்கலாம். அந்த நிறுவனத்தின் பெயர் 'டயமண்ட் டிரேடிங் கம்பெனி'. இதன் உரிமையாளர்கள் பிரபல "டே பீர்ஸ்' என்பவர்கள். ரஷ்யா, தென்னாப்ரிக்கா, போட்ஸ்வானா, ஜயேர் போன்ற இடங்களில் வைரச் சுரங்கங்கள் அதிகம். இந்தச் சுரங்க உரிமையாளர்களிடம் ஒப்பந்தம் செய்து கொண்டு, தோண்டி எடுக்கப்படும் வைரத்தில் சுமார் எண்பது சதவீதத்தை வாங்கிக் கொண்டு சர்வதேச அரங்கில் வெவ்வேறு நாடுகளுக்கு விற்கிறது 'டயமண்ட் டிரேடிங்' நிறுவனம். வைரத்தின் விலை இறங்காததற்குக் காரணம், உற்பத்தி அதிகம் இருந்தால் கூட இவர்கள் சீராக, குறைவாகவே அவற்றை ரிலீஸ் செய்வதுதான்.

இந்தியாவில் தொழிலாளிகளின் கூலி குறைவாகவே இருக்கிறது என்றாலும் இங்கு சுமாரான தரமுள்ள வைரங்கள்தான் பட்டை தீட்டப்படுகின்றன. இதற்குக் காரணம் இங்கு இதற்கான சிறந்த தொழில் நுட்பமும், அதற்கான கருவிகளும் போதிய அளவில் இல்லை. விலை உயர்ந்த வைரக்கற்கள் பெரும்பாலும் பெல்ஜியம் போன்ற நாடுகளில்தான் பட்டை தீட்டப்படுகின்றன.

வைரம் என்பது ஒரு இயற்கையான பொருள். பூமியிலிருந்து கிடைப்பது. பல்லாயிரம் ஆண்டுகள் பூமியில் புதைக்கப்பட்ட நிலையில் தான் கரித்துண்டு வைரமாகிறது.




அந்த நிலையில் வைரத்துடன் பல பொருட்கள் சேர்ந்து விடுகின்றன. இவற்றை நீக்குவதும், பட்டை தீட்டுவதன் ஒரு முக்கிய நோக்கம். ஆனால் ஒன்று. வைரத்தின் மேல் பாகத்தில் இந்த அதிகப்படி பொருள்கள் இருந்தால் அவற்றை அகற்றி விடலாமே தவிர, வைரத்தின், உட்பகுதியில் மணல் துகளோ, கரித்துண்டோ காணப்பட்டால் (இவற்றை 'ப்ளாக் ஸ்பாட்' என்பார்கள்) அவற்றை நீக்க முடியாது. இவற்றை தோஷமுள்ள வைரங்கள் என்று கருதி பலர் நிராகரிப்பது வழக்கம். மைக்ராஸ்கோப்பில் பார்க்கும் போதுதான் இந்தக் குறையைக் கண்டுபிடிக்க முடியும்.

வைரங்களில் மிகவும் பிரபலமானவை வெள்ளை மற்றும் நீலம் கலந்த வெள்ளை (இதைத்தான் ப்ளூ ஜாக்கர் என்கிறார்கள்) வண்ணக் கற்கள்தான். "கண்ணைப் பறிக்கும் அளவுக்குப் பிரதிபலிப்பு இருப்பதால் வெள்ளை வைரம்தான் மிக உயர்ந்தது - தரத்திலும் சரி, விலையிலும் சரி. என்றாலும் தென்னக மக்கள் ப்ளூ ஜாக்கரைத்தான் அதிகம் விரும்புகிறார்கள். ஊதா, மஞ்சள், பச்சை ஆகிய நிறங்களில் கூட ஒரிஜினல் வைரங்கள் உண்டு என்று சொன்னால் பல வாடிக்கையாளர்கள் ஆச்சரியப்படுகிறார்கள்" என்கிறார் எண்பது வருடங்களுக்கும் மேலாக வைர வியாபாரத்தில் தனிப் பெயர் பெற்றிருக்கும் பாபாலால் அண்ட் கம்பெனி நிறுவனத்தை தற்போதுதான் தந்தையுடன் நிர்வகிக்கும் திருமதி ஷீதல் பட். வெண்மை, நீலம் கலந்த வெண்மை ஆகியவற்றைத் தவிர மற்றவற்றை ஏதோ ஃபேன்ஸி கற்கள்தான் என்று கருதுகிறார்களாம் பலர்.

வைர நகைகளைப் பொறுத்தவரை க்ளோஸ்ட் (closed) செட்டிங், ஓப்பன் செட்டிங் என்று இரண்டு முக்கிய வகைகள் உண்டு. நம்மூர்களில் தங்கத்துக்கு நடுவே வைரத்தைப் பதித்து வாங்குகிறோம் இல்லையா? இது குளோஸ்டு செட்டிங். வட இந்தியாவில் ஓப்பன் செட்டிங்கில்தான் பெரும்பாலும் வைர நகைகளை வாங்குகிறார்கள். ஆங்காங்கே லேசான மெல்லிய கம்பிகளை மட்டும் ஆதாரமாகக் கொடுத்து (clawed) வைரத்தைப் பதிப்பதைத் ஓப்பன் செட்டிங் என்கிறார்கள். 'சேனல் செட்டிங்' என்றும் ஒரு வகை உண்டு. ரயில் தண்டவாளம் போல இரண்டு தங்கக் கம்பிகளுக்கு நடுவே வைரக்கற்களைப் பதிப்பதை இப்படிச் சொல்கிறார்கள்.

ஓப்பன் செட்டிங்கை விட குளோஸ்டு செட்டிங் வைரங்கள்தான் பாதுகாப்பானவை இல்லையா? "இது ஒரு ஆதாரமில்லாத எண்ணம். ஒன்றை மனதில் வைத்துக் கொள்ள வேண்டும். நகை என்பது அலட்சியமாகப் பயன்படுத்தக் கூடிய விஷயமல்ல. கையில் வைர மோதிரத்தைப் போட்டுக் கொண்டு பத்துப் பாத்திரம் தேய்ப்பதிலிருந்து மாவு இடிப்பது வரை அத்தனை காரியங்களையும் செய்வேன் என்றால் எந்தவகை செட்டிங்காக இருந்தாலும் வைரம் வெளியே வர வாய்ப்பு உண்டு. மற்றபடி சரியான முறையில் உருவாக்கப்பட்டால் இருவகை செட்டிங்குகளுமே பாதுகாப்பானவைதான். ஒருமுறை ஒரு வாடிக்கையாளருக்கு ஒரு வருத்தமான அனுபவம் ஏற்பட்டது. அவர் விரலில் போட்டுக் கொண்டிருந்த வைர மோதிரம் சற்று லூசாக இருந்திருக்கிறது. இதனால் அது லேசாக விரலில் சுழலவும் செய்தது. அவர் ஸ்கூட்டரில் போகும் போது ஹாண்டில் பாரில் அந்த வைரம் தொடர்ந்து பட்டுக் கொண்டே இருக்க ஒருநாள் அந்த வைரம் தனியே குதித்து வந்து விட்டது" என்கிறார் ஷீதல்.

முன்பெல்லாம் வைர அட்டிகைகளை அணிய விரும்பியவர்கள் பலர். இப்போது வைர நெக்லஸ்களுக்கு டிமாண்டாம். வைரத் தோடுக்கு எப்போதுமே ஒரு சீரான மார்க்கெட் உண்டு. முக்கியமாக தமிழ்நாடு, ஆந்திரப் பிரதேசம் ஆகிய மாநிலங்களில்தான் திருமணச் சீராக வைரத்தோடு செய்வது அதிகமாகப் பழக்கத்தில் உள்ளது. சமீப காலமாக கர்நாடகம் மற்றும் கேரளாவில் கூட இந்த 'வியாதி' தொற்றிக் கொண்டு வருகிறது. முன்பெல்லாம் வைர நகைகளை ஆர்டர் செய்வதுதான் வழக்கம். இப்போதெல்லாம் 'வைர நகைகள் ரெடிமேடாகக் கிடைக்கிறதா?' என்று கேட்டு வாங்கிச்



ஆவின் பால் பாக்கட் நிரப்பி அனுப்புவோரின் கவனத்திற்கு

ஆவின் பால் ½ லிட்டர், 1 லிட்டர் என பாக்கட்டுகளில் வருகிறது. அதில் 1 லிட்டர் பாக்கட்டில் சிறிது கூட இடம் இல்லாமல் பால் முழுவதும் நிரப்பப்படுகிறது. அதை எவ்வளவு ஜாக்கிரதையாக கையில் பிடித்துக் கொண்டு கத்தரித்தாலும், நம் கை அழுத்துவதால் பால் வேகமாக வெளியே வந்து சிறிதாவது வெளியே சிந்தும்படி ஆகிறது. அதுவே ½ லிட்டர் பாக்கட்டுகளில் பால் நிரப்பிய பின்னும் தாராளமாக காலி இடம் உள்ளது. ஆகையால் 1 லிட்டர் பாக்கட்டுகளின் நீளத்தையோ, அகலத்தையோ சற்றுப் பெரிதாக்கினால் பால் வீணாவதைத் தவிர்க்கலாம்.

- ஆர். ஜானகி ரங்கநாதன்

செல்பவர்கள் அதிகரித்து வருகிறார்களாம்.

தங்கத்தைப் போலவே வைரத்தையும் காரட் அடிப்படையிலேயே குறிப்பிடுகிறார்கள். ஆனால் இரண்டிற்கும் ஒரு முக்கிய வித்தியாசம் உண்டு. தங்கத்தைப் பொருத்தவரை அதிக காரட் என்றால் அதிகத் தரம் என்று பொருள். வைரத்தைப் பொறுத்தவரை காரட் என்பது எடை அளவைக் குறிக்கிறது. நூறு சென்ட் எடை கொண்ட வைரத்தை ஒரு காரட் என்று சொல்கிறார்கள்.

வைர நகைகளைப் பாதுகாப்பது பற்றி சில வழிமுறைகளை ஷீதலிடம் கேட்டோம். "முக்கியமாக நான் சொல்ல விரும்புவது என்னவென்றால் வைர நகைகளை அணிந்து கொண்ட பிறகு சென்ட் போன்ற வாசனை திரவியங்களைத் தடவிக் கொள்ள வேண்டாம் என்பதுதான். இதனால் சென்ட்டில் உள்ள ஆல்கஹால் பட்டு வைரம் பாதிக்கப் பட்டுவிடும் என்பதல்ல. என்றாலும் வைரம் பார்ப்பதற்கு மங்கலாகத் தோற்றமளிக்கும். கடையில் வைரத்தைத் துடைப்பதற்கு என்றே தனிப்பட்ட துணி ஒன்றைத் தருவோம். வைர நகைகளைத் துடைத்துச் சுத்தம் செய்ய அந்தத் துணியை மட்டுமே பயன்படுத்த வேண்டும். சோப்பு கலந்த வெதுவெதுப்பான நீரில் வைர நகைகளைப் போட்டும் சுத்தம் செய்யலாம். உடலின் எந்த பாகத்திலாவது எண்ணெய் பட வாய்ப்பு உண்டானால் அதற்கு முன் மறக்காமல் வைர நகைகளைக் கழற்றி வைத்து விடுங்கள். முக்கியமாக குனோஸ் செட்டிங்கில் எண்ணெய் புகுந்து விட்டால் அதை வெளியே எடுப்பது கஷ்டம். வைரத்தையே வெளியே எடுத்து விட்டு ரீ-செட் செய்ய வேண்டியிருக்கும்.

பொதுவாக வாடிக்கையாளர்கள் தரமுள்ள வைரத்திற்கும், தரக்குறைவான வைரத்திற்கும் வேறுபாடு கண்டுபிடிக்க முடியாது. எனவே இந்தத் துறையில் ஏற்கெனவே நற்பெயர் பெற்றுள்ள கடைகளில் வைர நகைகளை வாங்குவதுதான் நல்லது. தங்களிடம் வாங்கும் நகைகளுக்கு ஆயுட்கால உத்தரவாதம் எழுத்து வடிவில் கொடுக்கிறார்களா என்பதையும் பார்ப்பது நல்லது.

வைரத்தைப் பொறுத்தவரை தமிழக மக்களின் சென்டிமெண்ட் உச்சமோ உச்சம். ஒரு குறிப்பிட்ட வைர நகையைத் தேர்ந்தெடுத்து விட்டு "இதை ஒரு வாரம் வைத்திருந்து பார்க்கிறேன். வீட்டில் எந்த அச்சானியமான விஷயங்களும் நடைபெறவில்லை என்றால் வைத்துக் கொள்கிறேன். இல்லையென்றால் அதைத் திருப்பிக் கொடுத்துவிட்டு வேறே நகை வாங்கிக் கொள்வேன்" என்ற வேண்டுகோளை வைக்கும் வாடிக்கையாளர்கள் உண்டு. இதனால்தான் இறக்குமதி செய்யும் வைரங்களைத் தேர்ந்தெடுக்க எங்களுக்கு உரிமை இல்லையென்றாலும் ப்ளாக் ஸ்பாட் உள்ள கற்களை நிராகரித்து விட்டு மற்றவற்றை மட்டுமே விற்பனைக்கு வைக்கிறோம்" எனும் ஷீதல் பட்டப் படிப்பில் இலக்கியமும் பிறகு ஜர்னலிஸமும் படித்திருந்தாலும், வைரங்களைப் பிரித்தறியவும், டிசைன் செய்வதற்குமான கோர்ஸ்களை பம்பாயிலும், ஆன்ட்வெர்ப்பிலும் பயின்றிருக்கிறார். "உலகின் பல்வேறு பகுதிகளில் நடைபெறும் வைர நகைக் கண்காட்சிகளுக்கு அடிக்கடி சென்று வருவேன். இரண்டு மூன்று வருடங்களுக்கு ஒரு முறை டிசைன்கள் மாறும். இவற்றை மனதில் கொள்வேன். ஏனென்றால் வட இந்தியாவில் டிசைன்களில் கவனம் செலுத்துவார்கள். தென்னிந்தியாவை விட வட இந்தியாவில் வைர நகைகளின் விலை குறைவுதான். ஏனென்றால் நல்ல டிசைன் என்றால் சற்று தரம் குறைந்த வைரத்தையும் அவர்கள் வாங்கத் தயார். ஆனால் இங்கே தரம்தான் ரொம்ப முக்கியம். "பதினைந்து வருடங்களுக்கு முன்னே எனக்குச் செய்த அதே டிசைனிலேயே என் தங்கைக்கும் ஒரு ஜதை வைரத் தோடு வேணும்" என்பவர்கள் அதிகம்.

நான் வைர நகை வியாபாரத்தில் ஈடுபட்டிருந்தாலும் ஒன்று நிச்சயம் சொல்வேன். வைரம் என்பது ஒரு ஆடம்பரம்தான். அதை ஆடம்பரப் பொருளாகவேதான் கருத வேண்டும். அதை விட்டு விட்டு அதை ஏதோ வாழ்க்கைக்கு அவசியமான பொருள் போல் எண்ணி திருமணம் நடப்பதற்கே வைர நகை கட்டாயம் என்கிற நிலை இருப்பது மிகவும் துரதிஷ்டமானது" என்கிறார் முத்தாய்ப்பாக.

— ஜி. எஸ். எஸ்.



எப்படியும் பண்டிகை தினம் பற்றி முன் கூட்டியே தெரியும். அந்தச் சமயங்களில் பால் சேர்த்துச் செய்யும், பாயாசம் மற்றும் தின்பண்டங்களுக்கு, 2-3 நாள் சேமித்து வைத்த பாலாடையைச் சேர்த்துச் செய்யலாம். இதனால் "மில்க் மெய்ட்"க்குச் சமமான மணமும், சுவையும், நிறமும் கிடைக்கும். செலவும் கம்மி; செய்துதான் பாருங்களேன்.

- ஜெயா

ப்ரிய

காயத்ரி

7

வசந்தா ஆச்சரியமாகப் பார்வை பார்த்தாள்.

ப்ரியா முகத்தில் இருந்த ஆர்வம் அவளை யும் தொற்றியது.

"ஏன் மேடம்! இது என்ன? துப்பறியற வேலையா இருக்கு?" என்றாள்.

வசந்தாவின் முகத்தில் முதல் புன்னகை யைப் பார்த்ததும் மகாவுக்குக் கண் விரிந்தது.

""பார்த்தீங்களா? இப்போ உங்களுக்கே இன்ட்ரஸ்ட் வந்துடுத்து! எனக்கும் இப்படி வந்துதான் தவிச்சேன்!" என்றாள் ப்ரியா.



"ஏன் மேடம்! இது உண்மையா? இது போல ஏதாவது நடந்துச்சா?" என்றாள் வசந்தா.

"நடந்திருக்கு. அதனாலேதானே தவிக்கப் போயிட்டேன்! எட்டு வருஷமாச்சு! இன்னும் இந்தப் புதிர் அவிழவில்லை! அதனாலே அந்தரத்திலே நிக்கறேன்..."

"ஏன், மேலே எதுவும் கண்டுபிடிக்க லையா?" என்றாள் மகா!

"பிரசாத் திரும்ப வந்து சொல்வாருன்னு எதிர்பார்த்தேன். அவர் அப்புறம் திரும்பி வரவே இல்லை. அவர் உயிரோட சௌக்கியமா இருக்கார்னு சொன்னீங்களே! அதுவே எனக்குப் பெரிய திருப்தி!" என்றாள் ப்ரியா.

"உங்களுக்கு ஏன் சந்தேகம் வந்திச்சு?" என்றாள் மகா.

"ஆமாம்மா! ஏதோ ஒரு பெரிய கேஸ், யாருக்கும் தெரியாத கேஸ், அதனோட முதல் துப்பு அவருக்குக் கிடைச்சிருக்குன்னு சொன்னார்! அதை எடுத்திட்டுப் போய் எங்கேயாவது மாட்டிக்கிட்டாரோன்னு நினைச்சேன்! எனக்கு அவரைப் பார்க்க ணுமே...!" என்று ஆவலுடன் சொன்னாள் ப்ரியா.

வசந்தாவின் முகத்தைப் பார்த்தாள் மகா!

பிறகு ஒரு யோசனையுடன் திரும்பினாள்.

"மேடம்... நீங்க... அப்புறம் அவரைப் பார்க்கலாம்... இப்போ... எங்களுக்கு ஒரு பிரச்னை! அவரை உடனே பார்க்க முடி யாது! அப்படி ஏதோ நடந்திருக்குன்னு வச் சுக்குங்க... இப்போ இந்தக் கேஸ்லே நாமே நுழைஞ்சு என்ன நடந்திருக்குன்னு பார்க்க லாமா...?"

என்றாள் மகா! அடிக்கொருதரம் வசந்தா மீது பார்வை விட்டுக் கொண்டாள்.

வசந்தா எந்தவித சைகையும் செய்ய வில்லை! அதுவே அவளும் அதில் இசை கிறாள் என்பதைக் காட்டிற்று!

"ஓ! பேஷா நாம கண்டுபிடிக்கலாம். இந்தப் பாரம்மா! என் ஊகம் சரியானதா பாரு! இப்போ இந்தப் புத்தகத்திலேர்ந்து வார்த்தைகளை வெட்டி எடுத்து ஒரு காகி தத்திலே ஒட்டி அதை யாருக்கோ போஸ்ட் பண்ணி அனுப்பியிருக்காங்க, சரிதானே?" என்றாள் ப்ரியா!

ஸ்ரீவேணுகோபாலன்

"கரெக்ட் மேடம்! அப்படித்தான் நடந் திருக்கணும்! இது ஒரு கடத்தல் கேஸ்னு தோணுது" என்றாள் மகா.

"ரைட்! அதை அடியோடு ஊகிச்சாச்சு! ஆனா பாருங்க! கன்னிமாரா லைப்ரரி போய் அந்த நாள் தினசரி பேப்பர் கட்டை வாங்கிப் பார்த்தேன்! அதிலே கடத்தல் விஷயம் எதுவும் நடந்ததாத் தெரியலை..."

"அது தெரியாட்டி பரவாயில்லை! இப்போ யாரோ யாருடைய மகனையோ கடத்தி வச்சுக்கிட்டு அந்த மகனை விடுவிக்க ணும்னா, லட்சம் ரூபாய் கொடுன்னு கேட் டிருக்காங்க, இல்லையா...?" என்றாள் மகா.

"ஆமாம்!" என்றாள் ப்ரியா.

"இப்படிக் கேட்டவன் யாருன்னு கண்டு பிடிக்கலாம் இல்லே?"

ப்ரியா கிட்டத்தட்ட எழுந்து விட்டாள். மகாவின் கைகளைப் பிடித்து ஒரு குலுக்கு குலுக்கினாள். "பிரமாதம்! உங்களுக்குத் துப் பறியற மூளை இருக்கு!" என்று பாராட்டிப் ப்ரியா மேலே தொடர்ந்தாள்.

"கடத்தலுக்குப் பணயம் கேட்டு எழுதி யவன், தன் கையாலே அந்தக் கடிதத்தை எழுத விரும்பலை! அப்படி எழுதினா



அவனை எப்படியாவது போலீஸ் கண்டு பிடிச்சுடும்னு பயம்! அதனாலே என்ன செஞ்சிருக்கிறான், இந்த நாவலை எடுத்து, இதிலே உள்ள ஒரு பக்கத்திலேர்ந்து வார்த்தைகளை வெட்டி எடுத்து அதை ஒரு கடுதாசியிலே ஒட்டி அதை போஸ்ட் பண்ணிட்டான்...”

“அதைச் செஞ்சவன் யாரு?” வெகுளியாகக் கேட்டாள் வசந்தா.

“அந்த நாவலை யார் படிச்சானோ, அவன் தான் அதுபோலச் செஞ்சிருக்க முடியும்!” என்றாள் மகா.

“அதைத்தான் நான் கண்டுபிடிச்சு வச்சிருக்கேன்! எங்க லைப்ரரியிலேருந்து இந்த நாவலை யார் யார் எடுத்தான்னு எங்க லெட்ஜர்லேர்ந்து லிஸ்ட் எடுத்து வச்சிருக்கேன்... கடைசியா எடுத்தவர் பேரு போதும்!” என்றாள் ப்ரியா.

“யாரு சொல்லுங்க!”

“எஸ். ஆர். ராஜ், 9, சதாசிவம் அவென்யூ, மீனாட்சி நகர்...”

மகாவின் புருவம் மேலே உயர்ந்தது.

“யார்தெரியுமா?” என்று கேட்டாள் ப்ரியா.

“தெரியாது.”

“நாம்ப கண்டுபிடிக்கலாமா?” என்றாள் ப்ரியா!

“ஆபத்தான விஷயம் இல்லே?” என்றாள் வசந்தா.

“அந்த ஆபத்து எல்லாம் இதுக்குள்ளே மறைஞ்சிருக்குமே! எட்டு வருஷ காலம் ஓடிடுத்தே!” என்றாள் மகா.

“சுமான் மேடம்! என்னோட நீங்க துணைக்கு வந்தால் போதும்!” என்று மகாவைப் பார்த்துக் கூறினாள் ப்ரியா.

சந்தேகம் ஒரு மனசில் புகுந்துவிட்டால், ஒருவரை அல்லோலகல்லோலப்படுத்திவிட முடியும்.

வசந்தா அந்த நிலையில் இருந்தாள்.

லைப்ரரி போய்ப் பேசிவிட்டு வீட்டுக்கு வந்த பிறகு அவள் மனம் மேலும் சஞ்சலித்தது.

எட்டு வருடம் முன்னால் அந்த நாட்களை வற்புறுத்தி நினைத்துப் பார்த்தாள். பிரசாத் தாமதமாக வீட்டுக்கு வருவான்! ஏதோ பேசுவான்! ஆபீஸில் நிறைய வேலை இருக்கிறது என்பான்.

அப்போது அவர்களுக்குத் திருமணமான ஆரம்ப வருடங்கள்! கணவனைப் பற்றி அவளுக்கு எந்தச் சந்தேகமும் வந்ததில்லை.

மணி ஐந்து சுமாருக்கு பள்ளியிலிருந்து கவிதா வந்துவிட்டாள்!

அவளைப் போன்ற சமர்த்துப் பெண்ணைப் பார்க்க முடியாது. பள்ளியில் நடந்ததை எல்லாம் கூறினாள். பிறகு அவளது அறைக்குச் சாதுவாகப் போய்விட்டாள்.

சிறிது நேரத்திலே வசந்தாவே எழுந்து அவள் அறையுள் எட்டிப் பார்த்தாள்.

மேஜை விளக்கு போட்டுக் கொண்டு கவிதா வெகு சிரத்தையாக காமிக் படித்துக் கொண்டிருந்தாள்.

“என்ன அருமையான பெண்! தான் உண்டு தன் வேலையுண்டு என்று இருக்கிறாளே! நல்லவேளை, இவள் வேறு எனக்குத் தொந்தரவு கொடுப்பதில்லையே!” என்று நினைத்தாள்.

வாசலில் ஆட்டோ வந்து நிற்கும் சப்தம்!

அவசரமாக ஹாலுக்கு வந்தாள்.

மகா உள்ளே வந்து கொண்டிருந்தாள்.

“என்ன மகா?”

“நான் புறப்பட்டாச்சு! உங்களுக்கு ஏதாவது தகவல் வந்ததா?” என்றாள்மகா.

“எதைப் பற்றி?”


“உங்க கணவர் பற்றி! போன்லே பேசினாரா?”

“இல்லை, ஒரு லெட்டர் வந்திருக்கு!”

“என்ன?”

கிரகங்கள் ஒன்பது. ஒவ்வொன்றுக்கும் ஒரு தனிப்பட்ட குணம், தனிப்பட்ட பாதை. இருந்தாலும் அத்தனையும் அதன் பாதை மாறாமல், சூரியனைச் சுற்றியே வருகிறது. அதுபோல், குடும்பத்தினர் குணங்களில் மாறுபட்டிருந்தாலும் அனைவரும் ‘அன்பு’ என்ற ஆதவனைச் சுற்றியே வரவேண்டும். ஒன்று பாதை மாறினாலும் அழிவு அத்தனை கிரகங்களுக்கும்தானே!

– கோமதி





நாட்டை அழிக்க ஒரு அணுகுண்டு என்றால், மனிதன் தன்னைத்தானே அழித்துக் கொள்ள அவன் உள்ளத்தில் குடியிருக்கும் கோபம் ஒன்றே போதும். கோபத்தால் அனைவரையும் அடக்கிவிடலாம் என்று தவறாகக் கணக்கிட்டு விடாதீர்கள். அன்பும் அரவணைப்புமே ஒருவரை உங்களோடு உண்மையாகப் பிணைத்து வைக்கும்.

- கோமதி

"டெலிபோன் தொடர்பு இல்லாத இடங்களிலே இப்போ 'பாக்டரி ஸைட்' தேடறாங்களாம்! அதனாலே லெட்டர் எழுதினாராம்! 'அங்கங்கே பூமியை டெஸ்ட் பண்ணிப் பார்க்கிறோம். ஒரு வாரம், இரண்டு வாரம் ஆனாலும் ஆகும். காரியத்தை முடித்துவிட்டுத்தான் வரவேண்டி இருக்கிறது'ன்னு எழுதி இருக்கிறார்," என்றாள் வசந்தா.

கடிதத்தைக் கொண்டு வந்து காண்பித்தாள்.

போஸ்டில் வந்திருந்தது அது!

"வீடு திரும்பி வந்தவுடனே இதைப் பார்த்தேன்! காலையிலே கிடைச்ச கொஞ்ச நிம்மதியும் போயிடுத்து... நீ உட்கார் மகா... என் சந்தேகத்துக்குத் தகுந்தபடி... இவர் நடவடிக்கை இருக்கு பாரு...!" என்று கூறிய வசந்தா அவள் எதிரே உட்கார்ந்து கொண்டாள்.

மகா ஒரு பெருமூச்சு விட்டாள்!

பழையபடி வேதாளம் முருங்கை மரம் ஏறிவிட்டதே என்று நினைத்தாள்.

"ஏன் மேடம்! இந்த நடவடிக்கைன்னு சொல்றீங்களே! எந்த நடவடிக்கை?" என்று கேட்டாள் அவள்.

"திடீர்னு ஆபீஸ் விஷயம்னு புறப்பட்டார்! இப்போ பாரு! ஏதோ ஃபாக்டரி ஸைட் பார்க்கிறேன்னு லெட்டர் எழுதறார்! போன் இல்லாத இடத்திலே இருக்கிறேன்னு சொல்றார்! ஏன் இப்படிச் சொல்றார்? நீ நம்பறியா?"

மகா யோசித்தாள்!

பிரசாத்தின் நடவடிக்கைகள் விசித்திரமாகத்தான் இருக்கின்றன! இருந்தாலும் அவை எல்லாமே உண்மையாகவே இருக்கலாம்!

எத்தனையோ விஷயங்களை வாழ்க்கையில் பார்த்திருக்கிறாள் அவள்.

ஆனால் அதை வசந்தா சரியாக எடுத்துக் கொள்ள மாட்டாளே!

"ஏன் மேடம்! போன இடத்திலே திடீர்னு வேறு காரியங்கள் வந்து சேரும்! அதிலே அதிசயமே இல்லை... வீணா மனசை அலட்டிக்கறீங்க!"

வசந்தா அவளைக் கூர்மையாகக் கவனித்தாள்.

"மகா! உன் உள்மனசிலேர்ந்து இப்படிப் பேசறியா?"

"ஆமாம் மேடம்... இதப் பாருங்க! நீங்க நினைக்கிற இந்த விஷயத்திலே இரண்டு கோணங்கள் உண்டு."

"என்ன கோணம்?"

"ஒரு கோணம் சந்தேகம் என்கிற கோணம்! அதிலேர்ந்து பார்த்தால் நல்ல அப்பட்டமான உண்மையே தலைகீழாத் தோணும். அலங்கோலமாத் தெரியும்! பொருத்தமில்லாமத் தெரியும்.

ஆனா அதே விஷயத்தைச் சந்தேகமில்லாக் கோணத்திலிருந்து பாருங்க! அப்படியே எல்லாம் சுத்தமா, அதனதன் இடத்திலே இருக்கிறாப்போலத் தெரியும்."

"ஓ! அப்போ நான் சந்தேகக் கோணத்திலிருந்து பார்க்கிறேன்னு சொல்றே?"

"அப்படித்தான் தோணுது மேடம்! ஆனா உங்க நிலையில் யார் இருந்தாலும் அப்படித்தான் பார்ப்பாங்க... ஆனா எனக்கு இதிலே வேற மாதிரி தோணுது. அதை உங்களுக்கு நிருபிச்சுக் காட்டத்தான் நான் இந்த விஷயத்திலே தீவிரமா இறங்கி இருக்கேன். உண்மையை எப்படியும் கண்டுபிடிச்சுடுவேன் பாருங்க!"

"கண்டுபிடி! அந்த உண்மை என் பக்கமாத்தான் இருக்கும்!"

"பார்ப்போமே!"

"சரி! இப்போ என்ன செய்யப் போறே?"

"மீனாட்சி நகர் போகப் போறேன்... ப்ரியாவைக் கூட்டிக்கிட்டு! நீங்களும் கிளம்புங்க!"

"நானா?"

"ஏன்?"



ஒரு நிலையான தொழிலில் எந்த நிறுவனம் உறுதியா

உங்கள் பணத்தை ஒரு நிதி நிறுவனத்தில் டெபாசிட் செய்யும் போது நீங்கள் என்ன எதிர்பார்க்கிறீர்கள்? அதன் மூலம் ஒரு நிலையான வருமானத்தைப் பெற வேண்டும்; பொருளாதார மாற்றங்கள் அந்த வருமானத்தைப் பாதிக்கக் கூடாது... என்பதுதானே! அந்த வகையில், நீங்கள் டெபாசிட் செய்ய மிகவும் ஏற்ற நிறுவனம் ஸ்ரீராம்தான். காரணம்—

நாட்டின் பொருளாதாரத்துக்கு இன்றியமையாத அடிப்படைச் சேவையில் ஈடுபட்டிருப்பவை லாரிகள். அந்த லாரிகளுக்கு நிதியுதவி அளிக்கும் ஒரு நிலையான தொழிலில் ஸ்ரீராம் ஈடுபட்டுள்ளது. தவிர, லாரிகளைத் தயாரிக்கும் டெல்கோ, அசோக் லேலண்ட் நிறுவனங்களும் ஸ்ரீராம் நிறுவனங்களில் முதலீடு செய்துள்ளன. லாரிப் போக்குவரத்து ரொக்க அடிப்படையில் நடைபெறும் தொழில். உரிமையாளருக்கு ஒவ்வொரு நிமிடமும் வருமானத்தை ஈட்டித் தரும் சாதனமாக லாரி விளங்குகிறது. எனவே, லாரி உரிமையாளரால் தவணைத் தொகைகளை ஒழுங்காகச் செலுத்திவிட முடிகிறது. அப்படி அவரால் செலுத்த முடியவில்லையா? அந்த லாரியைக் கையகப்படுத்தி விற்பனை செய்து கடனை எளிதில் வசூலித்து விட முடியும்.

இதர நிதி நிறுவனங்கள் வெகுவாக ஈடுபட்டிருக்கும் பில் டிஸ்கவுன்டிங் எனும் கடனுதவி முறையை இதே அளவு நிலையான தொழிலாகக் கருத முடியாதா?

நிச்சயமாக முடியாது. பில் டிஸ்கவுன்டிங் ஒரு குறுகிய கால வர்த்தகம். நிதியுதவி முழுவதையும் 3 மாதங்களுக்கு ஒரு முறை வெவ்வேறு இனங்களின் மீது மாற்ற வேண்டியது அவசியம். அதுவும், அவ்வப்போது நடப்பில் உள்ள வட்டி விகிதத்தில் அளிக்கும் நிதியுதவியைத் திரும்பப் பெற முடியாத போது, எந்தச் சொத்தையும் கையகப்படுத்துவதும்

பணத்தின் அருமை தெரிந்தவர்கள் நாங்கள். அதைவிட



உங்களுக்குக் கோபம் வந்தால், 'இவனுக்கு/இவளுக்கு எதற்குத்தான் கோபம் வராது' என்று அலட்சியமாகப் போகும் வண்ணம், உங்களையும், உங்கள் கோபங்களையும் செல்லாக் காசாக்கிக் கொள்ளாதீர்கள். உங்கள் கோபத்தில் நியாயம் நிச்சயம் இருக்கும் என்று பாதிக்கப்பட்டவரே ஆணித்தரமாக நம்பி உணரும்படி இருக்க வேண்டும் உங்கள் கோபம்.

- கோமதி

"எனக்கு என்னவோ போல இருக்கு! மனசு சரியில்லை."

"மேடம்! ப்ரியா ரெடியா இருப்பாங்களோ?"

"நீ மட்டும் போ...! நான் இங்கேயே இருக்கேன்..."

இருட்டி விட்டது.

நகரத்தின் உருவம் மெள்ள மெள்ளக் கறுத்துக் கொண்டிருந்தது.

எங்கும் நிழல்கள் விழுந்து ஒன்றோடு ஒன்று கலக்க ஆரம்பித்தன.

நகரை விட்டு வெளிப்புறம் செல்லும் அந்த நீண்ட ரோட்டில் ப்ரியா தனது மாருதியைச் செலுத்திக் கொண்டு போனாள்.

நகரத்தின் இறுக்கம் தளர்ந்ததில் ஒரு வித புதுக் காற்று அந்தக் காரின் சன்னல்களில் வந்து மோதியது!

விளக்குக் கம்பங்கள் பூஞ்சையாக வெளிச்சத்தைக் காட்டின!

ரோட்டில் சுமாரான போக்குவரத்து!

இரு பக்கமும் 'அந்த நகர்', 'இந்த நகர்' என்று போர்டுகள் தோன்றி மறைந்தன.

மகா புதுமையோடு வெளிப்புறங்களை நோக்கினாள்.

நெஞ்சு ஏனோ பெரிய 'படக்'குகளாக அடித்தது.

அந்த அனுபவமே நூதனமாக இருந்தது.

ப்ரியா வெகு லாகவத்தில் ஓட்டினாள்!

இடையிடையே மகாவிடம் பேசினாள்.

அந்த வெளிச் சாலையில் பத்து நிமிடம் போயிருப்பார்கள்.

"ஓ! இதுதான் மீனாட்சி நகர்!" என்று சொல்லிக் காரைச் சட்டென்று நிறுத்தினாள் அவள்.

காரைப் பின்னுக்கு ஓட்டி இடதுபுறம் திரும்பினாள்.

ஆச்சரியம்!

எட்டத்தில் அந்தக் குடியிருப்பு நகர் சற்று மிகையான வெளிச்சங்களோடு தெரிந்தது.

அருகில் நெருங்க நெருங்க கடற் காற்று மூக்கில் ஏறியது...

"ரொம்ப பாஷ் இடம் போ! கடல் பக்கம் இப்படி ஒரு நகரம் இருக்கிறதே தெரியாது!" என்றாள் ப்ரியா.

நகரத்தின் முதல் வீதியே தனி லாவண்யத்துடன் வந்தது.


அதில் செல்லும் போது ப்ரியா சட்டென்று பிரேக் போட்டாள்.

மகா முன்புறம் பார்த்தாள்.

(தொடரும்)

ஒருவரைப் பற்றி ஏதோ ஒரு சந்தர்ப்பத்தில் தவறான கருத்து ஒன்று விழுந்துவிட்டால், அதையே 'அவனுடைய குணத்துக்கான அளவுகோலாகக் கொண்டு ஆயுளுக்கும் மாற்றாமல் கல்வெட்டாய் மனத்தில் பதித்துக் கொள்ளாதீர்கள். சந்தர்ப்பம், சூழ்நிலை, காரிய, காரணங்களை ஆராய்ந்து முடிவு எடுங்கள். தவறுபவர்களையும், தவறு செய்பவர்களையும் தவிர்த்துக் கொண்டே வந்தால் அப்புறம் யாருமே மிஞ்ச மாட்டார்கள்.

- கோமதி



நானும் உங்களைப் போலத்தான்...

சிரித்த முகம்.

சிவந்த நிறம்.

குறும்புகள் கொப்பளிக்கும் கண்கள்.

சிரிக்கும் போது அங்கங்கே கன்னங்களில் குழி விழுந்து பார்ப்பவர்களைப் பரவசப்படுத்தும் சிரிப்பழகி.

அரட்டை அடிக்க ஆரம்பித்தால் உலகத்தின் அத்தனை விஷயங்களையும் பற்றிப் பேசுபவர்.

அதே சமயத்தில் - செய்யும் வேலையில் மிகவும் கவனம். எந்தத் தகவலும் ஒரு நொடிக்குள் கிடைக்கும். தரும் தகவலை நம்பி தீர்மானங்கள் எடுக்கலாம். எடுக்கும் தீர்மானங்களினால் லாப நஷ்டங்கள் நிறைய உண்டு. கால்களில் கொலுசு - காதுகளில் மாடர்னாக இரண்டு தோடுகள்.

தான் வாழும் உலகத்தின் மீதும் தன்னைச் சுற்றி உள்ள மனிதர்கள் மீதும் அபார நம்பிக்கை.

'மனித நேயம்' என்ற வார்த்தைக்கு அர்த்தத்தை பூரணமாக உணர்ந்தவர். உணர வைத்துக் கொண்டிருப்பவர்.

இவர்தான் -

சித்ரா.

இவருக்கு எந்தச் சுடிதாரும் இரண்டு மாதத்திற்கு மேல் வருவதில்லை.

'இரண்டு மாதத்திற்கு மேல் வருவதில்லை' என்று குறிப்பிட்டேனே தவிர, அவர் அதற்கு மேல் போடுவதில்லை என்று குறிப்பிடவில்லை.

அப்படி, அடிக்கடி வாங்கிய ஆடைகளை போடப் பிடிக்காமல் தூக்கி எறியக்கூடிய அபார வசதி படைத்த குடும்பத்தைச் சேர்ந்தவர் அல்ல அவர்.

சாதாரண நடுத்தர குடும்பத்தைச் சேர்ந்தவர்தான். பிறகு ஏன் அவர் தான் வாங்கிய சுடிதாரை இரண்டு மாதத்தில், உபயோகிக்காமல் தூக்கி எறிந்து விடுகிறார்? காரணம் -

துணிகள் முழங்காலின் அருகே நைந்து கிழிந்து போவதுதான்.

ஆம்.

அவரால் நடக்க முடியாது.

ஆபீசில், வீட்டில். இன்னும் இதர இடங்களில் அவர் தவழ்ந்து தான் போகிறார்.

போலியோ வியாதியால், வலுவிழந்து வளைந்த கால்கள் அவருடையவை. மூட்டுக்கு கீழே சூம்பிப் போன கால்கள். இப்படி நாளெல்லாம் தவழ்ந்து போகும் போது எத்தகைய உறுதியான துணியாக இருந்தாலும் நைந்து போகாமல் இருக்குமா? அதனால்தான் அவர் தன் சுடிதார் செட்டு களை இரண்டு மாதத்திற்கு ஒருமுறை மாற்ற வேண்டிய அவசியம் ஏற்படுகிறது.



தனக்கு அப்படி ஒரு ஊனம் இருக்கிறது என்பதை யாராவது சுட்டிக்காட்டிப் பேசினால்தான் அவருக்கு அதைப் பற்றிய நினைவு வரும். இல்லாவிட்டால் அவர் ஒரு சாதாரண பெண்களுக்கு ஏற்ற சராசரி ஆசைகளோடு உலகை பட்டாம்பூச்சி போல சுற்றி வரும் ஆசைகளோடு வேக வேகமாக பறக்காமல் தவழ்ந்து கொண்டிருப்பவர்.

இந்தத் தவழும் பெண்ணை அவர் வேலை

செய்யும் அலுவலகத்திலேயே வைத்து பேட்டி கண்டோம். காரணம் -

பெற்றோர்கள் வாயில் இருந்து அவரைப் பற்றி தெரிந்து கொள்வதை விட அவர் வேலை செய்யும் இடத்தில் உள்ள மேலதிகாரிகள் சக ஊழியர்களின் பார்வையில் எவ்வாறு மதிக்கப்படுகிறார் என்பதைத் தெரிந்து கொள்ள ஆசைப்பட்டதே.

சித்ரா வேலை செய்வது, சென்னை கே.கே.நகரில் பத்தாவது அவின்யூவில் உள்ள 'திவ்ய ஸ்வரூபா' என்கிற கம்பெனியில். ஃபைனான்ஷியல் சர்வீஸஸ் மற்றும் ஷேர் சப்-புரோக்கர் பணியில் ஈடுபட்டுள்ள கம்பெனி இது.

இதில் சித்ரா கம்ப்யூட்டர் ஆபரேட்டராக இருக்கிறார். சித்ரா வேலை செய்யும் கம்பெனியின் உரிமையாளர்களில் ஒருவராகிய ராப பிரசாத் அவர்களை பேட்டி கண்ட போது,

"என்னை பற்றியோ எங்கள் கம்பெனி பற்றியோ ஒன்றும் எழுதாதீர்கள். சித்ராவைப் பற்றி எழுதுங்கள். ஷி.. டிஸர்வ்ஸ் இட்..." என்றார்.

சித்ராவைப் பற்றி அவர் சொன்னது...

"நாங்கள் பேப்பரில் வேலைக்கு ஆள் வேண்டும் என்று கொடுத்த விளம்பரத்தைப் பார்த்து விட்டு நூறு பேர் வந்திருந்தார்கள். தனக்கு இது மாதிரி ஒரு குறை இருந்தும் சாதாரணமானவர்களோடு சரிசமமாகப் போட்டியிட வந்த அவரது தைரியம், தன்னம்பிக்கை எங்களை வெகுவாகக் கவர்ந்தது. உடல்பலத்தைக் காட்டிலும் ஆத்ம பலம் (மன உறுதி) அவரிடம் மிக அதிகமாக இருப்பது அவரது ஒவ்வொரு பேச்சிலும் செய்கையிலும் வெளிப்பட்டது. அவரது உடலின் குறை எங்களுக்கு ஒரு குறையாகப்படவில்லை. அவரைத் தேர்ந்தெடுத்தோம். முதலில் கிளரிகல் ஜாப், டைப்பிங் என்று படிப்படியாக வேலை கொடுத்து, கம்ப்யூட்டரில் டிரெயினிங் கொடுத்து இன்று ஒரு கம்ப்யூட்டர் ஆபரேட்டராக இருக்கிறார். எதையும் மிகச் சுலபமாக... விரைவில் கற்றுக் கொள்ளும் திறமை படைத்தவர்."

"உங்களது கம்பெனிக்கு வருபவர்களின் 'ரியாக்ஷன்' எப்படி இருக்கிறது?"

"பலருக்கும் அவருடைய குறை தெரியவே தெரியாது. சேரில் உட்கார்ந்திருக்கும் போது அவர் பேசும்விதம், அவர் வேலை செய்யும் விதம், அவருடைய தன்னம்பிக்கையான செயல்கள் அவருடைய குறையை அடையாளம் காட்டிக் கொடுக்காது... சேரில் இருந்து இறங்கி தவழ்ந்து வேறு ஒரு இடத்திற்கு சித்ரா போகும் போதுதான் அவர்களுக்கு மிக ஆச்சரியமாக இருக்கும். இப்படிப்பட்ட பெண்ணா இவ்வளவு சுறுசுறுப்பாக, புத்திசாலித்தனமாக, நகைச்சுவை உணர்வோடு பேசுகிறார் என்று அதிசயப்படுவார்கள்."

அவர் 'சித்ரா' 'சித்ரா' என்று சொல்லும் போது அவருடைய பேச்சில் தன்னிடம் வேலை செய்யும் ஒரு ஊழியரைப் பற்றி பேசுகிறோம் என்ற பாவனை வெளிப்படவில்லை. ஒரு வாத்சல்யம்... அளவு கடந்த அன்பு புலப்படுகிறது. ஒரு 'எமோஷனல்



அட்டாச்மெண்ட்' புலப்பட்டது.

"தாங்கள் இவ்வளவு எமோஷனலாக சித்ராவைப் பற்றி பேச அவர் ஒரு உடல்குறை உள்ளவர் என்ற காரணத்தைத் தவிர வேறு ஏதும் காரணம் உண்டா?"

"இதுவும் ஒரு காரணமாக இருக்கலாம்... என்னுடைய பத்தாவது வயதிலே டயாபடிஸ் வியாதியினால் இரண்டு கால்களையும் இழந்திருந்த என்னுடைய தாத்தாவுக்குப் பணிவிடை செய்திருக்கிறேன். பலரும் பணிவிடை செய்வதைப் பார்த்திருக்கிறேன். அதனால் இது போன்ற குறையுள்ளவர்களின் தேவைகள்.. கஷ்டங்கள் நன்கு தெரியும். ஆக இதுவும் ஒரு காரணமாக இருக்கலாம்."

மேலே தொடர்ந்தார்...

"நாங்கள் சித்ராவுக்காகச் செய்வது மிகச் சாதாரணமான காரியங்களாகத்தான் எங்

களுக்குத் தோன்றியது. இரவு நேரத்தில் லேட்டாகப் போகும் போது சக ஊழியர் ஒருவரை உடன் அனுப்புவோம். அவருடைய மூன்று சக்கர சைக்கிளில் அவருடன் அடுத்துள்ள தன் வீட்டுக்குச் செல்லுவார். சித்ரா தரையில் இருந்து கையை வைத்துக் கொண்டு பிடித்து ஏறுவதற்கு, உட்காருவதற்கு சௌகரியமாக டேபிள், சேர்களின் உயரங்களை அவருக்குத் தகுந்தபடி அமைத்திருக்கிறோம் அவ்வளவே... மாடியில் இருக்கும் எங்களுடைய கம்பெனிக்கு ஏறக்குறைய 20 படிகள் தவழ்ந்தபடி ஏறியே வருகிறார். இறங்கியே செல்கிறார். எங்கள் வீட்டு நிகழ்ச்சிகளில் எந்தத் தயக்கமும் இல்லாமல் கலந்து கொள்கிறார். லிப்ட் இல்லாத ப்ளாட்டுகளாக இருந்தால் கூட படிகளில் தவழ்ந்து ஏறி வரத் தயங்குவதில்லை. அவருடைய சிரமம் தெரிந்து அவர் இருக்கும் இடத்தில் அவருக்கென்று ஆகாரங்கள் கொண்டு வந்து கொடுப்பதை அவர் விரும்புவதில்லை. மற்றவர்களைப் போல... மற்றவர்கள் சாப்பிடும் இடத்திலேயேதான் தானும் அமர்ந்து சாப்பிடுவேன் என்று அடம்பிடிப்பார். அவருடைய இந்தச் செய்கை 'நான் என்னுடைய குறையை மறந்து விட்டேன்... நீங்கள் ஏன் எனக்கு நினைவுபடுத்துகிறீர்கள்?' என்று கேட்பது போல இருக்கும்.

அவர் எங்களுடைய ஸ்தாபனத்திலேயே இன்னும் உயரலாம். இன்னும் எங்களது கம்பெனி வளர வளர, அவரும் வளருவார். அவருக்குக் கீழே நாலைந்து கம்ப்யூட்டர் ஆபரேடர்கள் வேலை செய்து அவரை ஒரு செக்ஷனின் பொறுப்பாளராக உயர்த்த வேண்டும் என்பது எங்களது ஆசை.'' (படத்தில் நின்று கொண்டிருப்பவர் ராமபிரசாத்)

கம்பெனியின் உரிமையாளர்களில் மற்றொருவரான குமார் சொல்லுகிறார்... (படத்தில் போன் செய்பவர்)

"இண்டர்வியூ நடந்த இடத்துக்கு அவர் தவழ்ந்து வந்தாலும் அவரது முகத்தில் சோகம் இல்லை. எரிச்சல் இல்லை. தன்னம்பிக்கையான சிரிப்பு இருந்தது. அந்தத் தன்னம்பிக்கையான சிரிப்பே எங்களுக்கு அவருடைய குறையை மறக்கச் செய்து அவருக்கு வேலை தரத் தூண்டியது. அவருக்கு என்ன வேலை தருவது என்று நாங்கள் தீர்மானிக்கவில்லை. இருந்தாலும் எடுத்துக் கொண்டோம். அக்கௌண்ட்ஸ் பற்றி ஒரு அனுபவமும் இல்லாத அவரை நன்கு டிரெயினிங் செய்து எங்களது தொழிலுக்குத் தேவையான எல்லாவற்றையும் கற்றுக் கொடுத்துக் கொண்டிருக்கிறோம்.

மிக சுலபமாக எதையும் புரிந்து கொள்கிறார். நாம் கற்றுக் கொண்டது போதும் என்று அவருக்கு என்றும் தோன்றாது இருந்தால் புதிது புதிதாக பல துறைகளில் பல விஷயங்களைக் கற்றுக் கொண்டே வேலையில் உயர்ந்து கொண்டே வருவார். இன்றைய நிலைமையை அவர் அடைந்திருப்பதற்கே அவருடைய கடுமையான உழைப்பு ஒரு மிக முக்கியமான காரணம்.''

சித்ரா தன்னைப் பற்றிச் சொன்னது...

"அப்பா பெயர் சங்கரன். அம்மாவின் பெயர் சாந்தா சங்கரன். இரண்டு வயதில் போலியோ அட்டாக் வந்தது. கொஞ்ச நாட்கள் 'ஸ்கெலிட்ச்' போட்டுக் கொண்டு நடந்தேன். அதற்குப் பிறகு அப்படியும் நடக்க முடியவில்லை. தவழ ஆரம்பித்தேன். அதுவே நிரந்தரமாகி விட்டது. படித்தது +2 வரை. அசோக்நகர் கவர்மெண்ட் கேர்ள்ஸ் ஹைஸ்கூலில்.


சிறிய வயதில் அம்மா தூக்கிக் கொண்டு போய் வகுப்பில் உட்கார வைப்பார். நான் ஏறிச் சென்ற ரிக்ஷா ஓட்டியவர்கள் பல முறை என்னைத் தூக்கிக் கொண்டு போய் வகுப்பில் உட்கார வைத்ததுண்டு. கூடப் பிறந்தவர்கள் இரண்டு அக்கா, ஒரு அண்ணன். நடுத்தரக் குடும்பம். அதற்குள்ள பணப் பிரச்னைகள் இடப் பிரச்னைகள் இவ்வளவையும் சகித்துக் கொண்டு என்னை இந்த அளவுக்கு என் பெற்றோர்கள் ஆளாக்கி இருக்கிறார்கள்.

'இனி இவ பொழைச்சுப்பா...' என்ற நம்பிக்கை அவர்களுக்கு என்மேல் வந்து விட்டது. எனக்கும் அந்தத் தன்னம்பிக்கை வந்து விட்டது' என்று ஒரே மூச்சில் தன்னுடைய குடும்பத்தைப் பற்றிச் சொல்லி முடித்தார் சித்ரா.

"சிறு வயதில் - தகுந்த வயதில் - உங்களுக்கு போலியோ வாக்ஸினேஷன் கொடுக்காதது தான் உங்களுக்கு இந்தக் குறை ஏற்படக் காரணம் போல் தோன்றுகிறதே'' - என்னுடைய மனதில் நெருடிக் கொண்டிருந்த கேள்வியைக் கேட்டேன்.

"எங்கள் வீட்டில் யாருக்கும் கொடுத்ததாகத் தெரியவில்லை. எனக்கு மட்டும்தான் இந்தக் குறை. விதி என்று சொல்வதை இங்கே நம்புகிறேன்'' என்று அந்தப் பேச்சுக்கு முற்றுப்புள்ளி வைத்தார் அவர்.

''உங்களை வருத்தப்பட வைத்த சம்பவங்கள் உண்டா?''



வாங்கி வந்த 'பிரட்' மீந்து உலர்ந்து விட்டால் அதை நன்றாகத் தூள் செய்து சர்க்கரை, முந்திரி, ஏலக்காய் சேர்த்து மிக்ஸியில் அரைத்துச் சூடாக நெய் ஊற்றி உருண்டை பிடித்துக் குழந்தைகளுக்குக் கொடுக்கலாம் 'பிரட் லட்டு' குழந்தைகளுக்குச் சுவை மிக்க டிபன்.

- எஸ்.விஜயாசீனிவாசன்

கொலாஜ்

கொலாஜ் என்று அழைக்கப்படும் இக்கலை மிகவும் சிறப்பு வாய்ந்தது. எல்லோராலும் எளிமையாகச் செய்யக்கூடியது. செலவே இல்லாமல், கற்பனையை வளர்க் கக்கூடிய பொழுதுபோக்குக் கலை யாகும். உங்களுக்குத் தேவையானது வெறும் நாளிதழ் (News paper) மட்டுமே. இதில் பல உருவங்களை வெட்டி ஒட்ட வேண்டும். இங்கு மாதிரிக்கு 4 உருவங்களைக் காட்டி யுள்ளேன். இதனைச் செய்து வரவேற் பறையிலும் வைக்கலாம். அல்லது வாழ்த்து அட்டையாகவும் செய்து அனுப்பலாம்.

இதற்குத் தேவையானவை :
சார்ட், (அ) அட்டை,
நாளிதழ்கள், பசை.

உங்களுக்குப் பிடித்த உருவத்தை நாளிதழில் வரைந்து அதனை தனித் தனியாக வெட்டியெடுத்து அட்டையிலோ (அ) வாழ்த்து அட்டையிலோ ஒட்டவும். நீங்கள் செய்த படம் இதோ தயார்.


– ஆர். வித்யா




IS

குழந்தைகள் விளையாடும் சொப்பு சாமான்கள் அவர்கள் வளர்ந்ததும் பரண்மேல் ஏறிவிட்டதா? அலுமினியக் கிண்ணிகளை எண்ணெய் தூக்கில் போட்டு வைத்தால் எடுத்து ஊற்ற வசதியாய் இருக்கும். பிளாஸ்டிக் குட்டி டிபன் கேரியரில் திரி, அட்சதை, குங்குமம், கற்பூரம் என்று போட்டு சுவாமி அலமாரிகளில் வையுங்கள். பார்க்க அழகாக இருப்பதுடன் சமயத்திற்கு 'உன்னைக் கண் தேடுதே...' என்று தேட வேண்டாம்.

–கி.மஞ்சுளா



"அதிகம் இல்லை. எங்களைப் போன்ற வர்களுக்கும் மற்றவர்களைப் போன்ற ஆசைகள் இருக்கும் என்பதைப் பலரும் புரிந்து கொள்வதில்லை. ஒரு சமயம் உதயம் தியேட்டரில் 'தேவர் மகன்' பார்க்கப் போயி ருந்தேன். பல ஆட்டோ ரிக்ஷாக்காரர்களும் என்னை தியேட்டரின் உள்ளே எவ்வளவு அருகில் நிறுத்த முடியுமோ அவ்வளவு அருகில் நிறுத்தி இறங்கி போக வசதி செய்து தருவார்கள். ஆனால் அன்று ஒரு ஆட்டோ ரிக்ஷாக்காரன் இது மாதிரி இருக்கிறவங்க எல்லாம் தியேட்டரில் சினிமா பார்க்க ஏன் வர்றீங்க? வீட்டிலே வீடியோவிலே பார்க் கறதுதானேன்னு சப்தம் போட்டான். எனக்கு மனசு ரொம்ப வேதனைப்பட்டது."

"உங்களுடைய ஆசைகள் என்ன?"

"என்னை வளர்த்த பெற்றோர்களுக்கு நானும் திருப்பி ஏதாவது செய்யணும்னு ஆசை. எனக்கு உதவி செய்தவர்களுக்கு திருப்பி ஏதாவது செய்யணும்னு ஆசை. மற்றபடி சாதாரண பெண்களைப் போல கல்யாணம் செய்து கொண்டு குடித்தனம் நடத்தவும் ஆசை உண்டு. பிரயாணங்கள் செய்ய ஆசை. பொது இடங்களில் கலை நிகழ்ச்சிகள் காண ஆசை. மூன்று சக்கர ஸ்கூட்டர் ஓட்ட ஆசை. இன்னும் என் னென்னவோ ஆசைகள் உண்டு.

"உங்களைப் போன்றவர்கள் எல்லா இடங்களுக்கும் போய் வர முடிகிறதா?"

"எங்கே போனாலும் ஆட்டோ, கூட ஒருவர் தேவைப்படுகிறது. சூப்பர் மார்க்கெட் போன்ற இடங்களில் சக்கர வண்டிகள் வைத் திருந்தால் எங்களைப் போன்றவர்களுக்கு வசதியாக இருக்கும். முடிந்த அளவுக்கு பொது இடங்களில் படிகள் இல்லாமல் சாய் வான படிகள் (RAMP) இருந்தால் சக்கர நாற்காலியில் இருந்து செல்ல வசதியாக இருக்கும்."

அவருடன் வேலை செய்யும் ஒரு சக ஊழியர் தெரிவித்த ஒரு நெகிழ்ச்சியான சம்பவம் -

"ஒருநாள் சித்ரா மணி நான்கு ஆகியும் சாப்பிடப் போகவில்லை. இருந்த இடத்தை விட்டு நகர மறுத்து விட்டார். அவருடைய கண்கள் கலங்கி இருந்தன. அவருடைய சீட்டுக்குக் கீழே ஒரே ஈரம். குமார் சாருக்கு சித்ராவின் நிலைமை புரிந்து விட்டது. உடம்பு சரியில்லாத காரணத்தினால் இருந்த இடத்தில் இருந்து அவசரமாக எழுந்து போய் பாத்ரூமில் சிறுநீர் கழிக்கும் அளவுக்கு பொறுத்துக் கொள்ள முடியாமல் தன்னை யறியாமல் சிறுநீர் வெளியேறி விட்டது என்பது புரிந்தது. அதனாலேயே சித்ரா கூச்சப்பட்டுக் கொண்டு இருந்த இடத்தை விட்டு எழுந்து போகாமல் இருந்திருக்கிறார் என்பதும் புரிந்தது. சித்ராவின் சக ஊழியர் ஒருவரிடம் தான் வீட்டுக்குப் போன பிறகு சித்ராவை வீட்டில் கொண்டு விட்டு வரும்படி சொன்னார்.

மறுநாள் ஆபீசில் உள்ளவர்கள் முகத்தில் எப்படி முழிப்பது என்று சங்கடப்பட்டுக் கொண்டிருந்த சித்ராவை சமாதானப்படுத்தி வேலைக்கு வரச் செய்தார். மகா மனசு அவருக்கு."

இந்தச் சம்பவத்தைக் கேட்டதும் என் உள்ளம் அப்படியே நெகிழ்ந்து போய் விட் டது.

அசுர வேகத்தில் பணம் சம்பாதிக்க வேண்டிய கம்ப்யூட்டர் யுகத்தில் இப்படிப் பட்ட மனிதர்களும் இருக்கிறார்களா? என்று எனக்கு வியப்பாக இருந்தது.

உள்ளத்தில் மனிதநேயம் நிறைந்த நிர் வாகிகள், அன்பு காட்டி அரவணைத்துச் செல்லும் சக ஊழியர்கள், போராடி வெற்றி பெற்ற பெற்றோர்கள், வாய் விட்டுச் சிரித் தால் நோய் விட்டுப் போகும் என்று நினைக் கும் சித்ரா -

இவர்கள் எல்லாம் வித்தியாசமானவர்கள்.

தன் உடலில் ஊனம் இருந்தாலும் தான் வசிக்கும் சூழ்நிலையில், தான் வேலை செய் யும் சூழ்நிலையில் உள்ள மனிதர்களின் உள் ளங்களில் ஊனம் இல்லை என்பதை உணர்ந்த சித்ரா, ஆபீசுக்கு வரும் போது 'ஒரு வீட்டில் இருந்து கிளம்பி இன்னொரு வீட்டிற்கு வருகிறேன்' என்ற உணர்வே எனக்கு ஏற்படுகிறது என்று சொல்வதில் ஆச்சரியப்பட என்ன இருக்கிறது?

கட்டுரையும், படங்களும் : **கமலநாதன்**

மேஷ ராசி :

அசுவினி, பரணி, கிருத்திகை 1- ஆம் பாதம்.

செல்வாக்குப் பெருகும். கூடுதல் இலாபமும் உண்டு. இது தொழில் மூலமும் வரலாம். அல்லது பதவி உயர்வு மூலமும் வரலாம். தாம்பத்திய உறவில் சிறு சலசலப்பு ஏற்படும். வாழு, வாழவிடு, விட்டுக் கொடுத்தல், சகிப்புத்தன்மை போன்ற பாரதத்தின் அடிப்படைப் பண்பாட்டினை வீட்டிலேயே கடைப்பிடிக்க வேண்டிய நேரம். பரணி 1, 4 -ம் பாதங்களில் பிறந்தவர்கள் பொறுமையைக் கடைபிடித்தே ஆக வேண்டும். மற்றபடி தொழிலில் நஷ்டம் ஏற்பட நியாயமில்லை. பணிபுரியும் பெண்கள் தங்களுடன் பழகுபவர்களிடம் எச்சரிக்கையுடன் இருக்க வேண்டிய நிலை. சகஜமாகப் பழகும் அழகிய பெண்களுக்குச் சுக்கிரனால் சில பிரச்னைகள் ஏற்படலாம். கண்ணும், வயிறும் கூட பாதிக்கப்படலாம். புதிய பதவியோ, அல்லது விரும்பிய இடத்திற்குப் பணி மாற்றமோ வரலாம். சுபச் செலவு ஒன்றுக்கும் வாய்ப்பு உள்ளது. எதிர்பார்த்த கல்லூரியில் இடம் கிடைத்ததன் காரணமாகக் கூட இத்தகைய செலவு ஏற்படலாம். உங்கள் ராசிநாதனுக்கு அதிதேவதையான ஆறுமுகனுக்கு அர்ச்சனை செய்யுங்கள். கூடுதலான நற்பலனைப் பெறுவீர்கள்.



ரிஷப ராசி :

கிருத்திகை 2, 3, 4 - ஆம் பாதங்கள், ரோகிணி, மிருகசீரிஷம் 1, 2 - ஆம் பாதங்கள்.

மாதத்தின் முற்பகுதியில் சுகமுண்டு. செல்வச் செழிப்பும் உண்டு. பதவி உயர்வு கூட கிடைக்கும். அத்துடன் விவகாரங்களில் நீதித்துறையின் மூலம் வெற்றி உங்களுக்குக் கிடைக்கும். இந்த மாதத்தில் உங்களுக்குச் சூரியனும் புதனும் முரண்பட்ட நிலையில் அதாவது சூரியன் நல்லதைச் செய்யும் போது புதன் மாறான நிலையில் மனக் குழப்பத்தை தருவார். புதன் உதவும் போது சூரியன் பிற்பகுதி யில் தடைகள் உண்டாக்கலாம். வீட்டில் தந்தை வழிப் பாட்டனார் போன்றவர்களுக்குச் சதாபிஷேகம் போன்ற சுப நிகழ்ச்சிகள் நடக்கலாம். என்றோ உங்களுக்கு ஆசானாக இருந்த ஒரு வரைச் சந்தித்து ஆசி பெறுவீர்கள். ஒரு சுப நிகழ்ச்சியின் போது இச் சந்திப்பு நடக்கலாம். மற்றபடி இந்த மாதத்தில் நீங்கள் யாரிடமாவது ஏமாந்து போகும் நிலை ஏற்படும். எனவே எந்தத் துறையிலும் பணப் பொறுப்பில் உள்ளவர்கள் எச்சரிக்கையுடன் செயல்படுங்கள். பணம் பெறுவதிலும், கொடுப்பதிலும் படபடப்பின்றி பணிபுரிவது நல்லது. சனி பகவான் சகாயமே செய்வார். சகோதர நிலை சரியில்லை. மனக் கசப்பு ஏற்பட வாய்ப்பு உள்ளது. கேது கொடுக்காவிட்டாலும் கெடுக் காமலிருக்க, இவருக்கும், விநாயகருக்கும் சேர்த்தே அர்ச்சனை செய் யுங்கள்.

மிதுன ராசி :

மிருகசீரிஷம் 3, 4 - ஆம் பாதங்கள், திருவாதிரை, புனர்பூசம் 1, 2, 3 - ஆம் பாதங்கள்.

ஏற்றத் தாழ்வுகள் நிறைந்த மாதம்தான், ஆயினும் வருமானத்திற்குக் குறையிருக்காது. ஆனால் வந்த செல்வம், செல்வோம் என்று போய்க் கொண்டேயிருக்கும். இதுவரை புத்திர பாக்கியம் இல்லாதவர்களுக்குக் குறை நீங்கக் குரு அருளுவார். இந்த நிலை அக்டோபர் வரை உண்டு.

ஒருசிலருக்கு உறவினர்களே பகையாக மாறலாம். எனவே இனம் கண்டு பழகுங்கள். தாய் மாமன் வகையில் எதிர்பார்த்த எந்த உதவியும் தாமதமாகத்தான் கிடைக்கும். கேது கொடுக்கும் நிலையிலே இருப்பதால் குழந்தைகளின் மேல்படிப்புக்குரிய எதிர்பார்த்த கல்லூரிகளில் அல்லது துறைகளில் சேர இடம் கிடைக்கும். கடன் தொல்லை, எல்லை மீறும் நிலைக்கு வரலாம். குரு, கேது, சனி முதலானவர்கள் அனுகூலமாகச் சஞ்சரித்தாலும் மற்ற கிரகங்களின் நிலை சரியாக இல்லை. ஸ்ரீ சுதர்ஸன ஜபத்தைச் செய்வது நல்லது. ஸ்ரீசத்திய நாராயண பூசையையும் ஆவணி அவிட்டத்தன்று செய்யலாம். அன்றும் அதற்கு முதல் நாளும் சந்திர தரிசனம் செய்வது நல்லது. சைவ சித்தாந்த நெறிப்படி அனுபவித்துக் கழிக்க வேண்டிய மாதம்.

கடக ராசி :

புனர்பூசம் 4 - ஆம் பாதம், பூசம், ஆயில்யம்.

சுக இலாபாதிபதியான சுக்கிரன் நீச்சம் பெற்றதுடன், அங்காரகனின் பார்வையையும் பெறுவதால் விபரீத ராஜயோகம் எனப்படும் திடீர் யோகமும் வரலாம். அல்லது தசாபுக்தி சரியில்லாதவர்களுக்குச் சிரமமும் ஏற்படலாம். மற்ற எந்த கிரகமும் உதவும் நிலையில் இல்லை. எனவே வீட்டில் மஞ்சள் கௌரி செய்து, அதற்குரிய விதிப்படி பூஜை செய்யலாம். அல்லது அந்த பூஜையின் வரலாற்றைக் கேட்கலாம். இராஜராஜேஸ்வரி படம் வைத்து பூஜையும் செய்யலாம். அலுவலகத்திற்குப் போகும் பெண்கள் இன்றியமையாத நகைகளை மட்டும் அணிந்து செல்வது நல்லது. பௌர்ணமியன்று சந்திர தரிசனம் செய்து, ஸ்ரீசத்திய நாராயண விரதத்தை ஏற்று பூஜை செய்வதாகச் சங்கல்பம் செய்து கொள்வது நலம். சிரமங்கள் தீர்ந்த பிறகு இந்த பூஜையும் செய்யலாம். தசாபுத்தி நன்கு அமைந்தவர்களுக்கு, இந்த எதிர்மாறான கோட்சாரமும் ஒன்றும் செய்யாது. மொத்தத்தில் அக்டோபருக்குப் பின் உங்களுக்கு ஏற்றதொரு சூழ்நிலை வந்தே தீரும். தடைபட்ட காரியங்கள் வெற்றியுடன் நடந்தே தீரும். வீட்டில் திங்கட்கிழமை சந்திரனுக்குரிய மாக்கோலம் போட்டு, அதன் மத்தியில் கிழக்கு முகம் பார்த்து திரியை நிறுத்தி விளக்கு ஒன்றை மாலையில் ஏற்றுங்கள். நல்லதே நடக்கும். அக்டோபர் வரை இவ்வாறு ஏற்றுவது நல்லது.

நாம் வீடுகளில் வைத்திருக்கும் முருங்கை மரங்களில் அடிக்கடி கம்பளிப் பூச்சிகள் வந்துவிடும். பூச்சிகள் கூட்டமாக இருக்கும் இடத்தில் துணிக்குப் போடும் சோப்பைக் கரைத்து பூச்சிகளின்மேல் ஊற்றினால் கம்பளிப் பூச்சிகள் ஒழியும்.

- எஸ். விசாலம்



சிம்ம ராசி :

மகம், பூரம், உத்திரம் 1 - ஆம் பாதம்.

மாதத்தின் முற்பகுதியில் சகல விதத்திலும் சீரும் சிறப்பும் இருக்கும். வேலை மாற்றமோ, பதவி உயர்வோ, பணலாபமோ கிடைத்து குடும்பத்தில் மகிழ்ச்சி நிலவும். இந்த நிலை எத்துறையினர்க்கும் பொருந்தும். அரசிடமிருந்து கௌரவப்பட்டம் கிடைக்கும். மே, ஜூன் மாதங்களில் இந்த ராசியில் பிறந்துள்ள அரசியல்வாதிகளுக்கு எழுதப்பட்ட பலன்கள் உள்ளபடியே நடந்தனவா என்பதை எண்ணிப் பார்க்கவும். அதே சூழ்நிலை இந்த மாதப் பிற்பகுதியில் ஏற்பட இருக்கிறது. சற்று மனசஞ்சலமும், பார்க்கும் பதவி, முடிக்கப்பட்ட ஒப்பந்தங்கள் ஆகியவை கைவிட்டுப் போய் விடுமோ என்கிற மனப்பான்மையையும் தோற்றுவிக்கும். ஆனால் 3ல் வெற்றி நிலையில் அமர்ந்துள்ள ராகு ஆபத்சகாயனாக உதவுவார். சிறந்ததொரு நண்பரின் உதவி உங்களுக்கு உரிய நேரத்தில் கிடைக்க இருக்கிறது. இந்த நண்பர், ஆணாகவும் இருக்கலாம். அல்லது பெண்ணாகவும் இருக்கலாம். கலையுலகில் கூட இந்த இராசியில் பிறந்து வெற்றிக் கொடி நாட்டி வருபவர்களுக்கு இத்தகையதொரு இக்கட்டான நிலை ஏற்பட்டுச் சரியாகும். வியாபாரிகளுக்கு, விலைவாசியின் ஏற்ற இறக்கங்களால் குழப்பமான சூழ்நிலை உலவும்; பொருளாதாரம் நன்றாகவே இருக்கும். ஆயினும் சிந்தித்துச் சிக்கனத்தை மேற்கொள்ளுங்கள். சுபநிகழ்ச்சிக்கு இடம் உண்டு. எழுத்துலக மேதைகள் பாராட்டப்படுவார்கள், கௌரவப் பட்டம் ஒன்று கிடைக்கும். இந்த

ராசிக்குரிய சூரிய னைக் குறித்த ஸ்தோத்திரம் படிப்பது அல்லது கேட்பது நன்று. எல்லா வற்றிற்கும் மேலாக கோளறு பதிகத்தைப் பக்தி நெறியுடனும், நம்பிக்கையுடனும் படிக்கிறவர்கள் உள்ளத் தில் அப்பரமன் வந்து கட்டாயம் புகுந்து, வேண்டியதைச் செய்வார். பதிகத்தின் கடைசியில் "அரசாள் வார் ஆணை நமதே" என அடியவர் கூறியது பொய்க் கூற்றாகாது என நம்பிக்கையுடன் படிக்கவும்.

கன்னி ராசி :

உத்திரம் 2, 3, 4 - ஆம் பாதங்கள், ஹஸ்தம், சித்திரை 1, 2 - ஆம் பாதங்கள்.

மாதத்தின் முற்பகுதி எதிலும் எப்படியும் நன்மை என்ற நிலை. ஆனால் பிற்பகுதியில் சற்று தேக்கம் ஏற்படும். மாதம் பூராவும் தொழி லிலும் சரி, உத்தியோகத்திலும் சரி ஒருவித டென்ஷன் நிலவும். குரு நல்ல நிலையில் இருப்பதால் நீதிமன்றத்தில் உள்ள உங்கள் வழக்கில் உங்களுக்குச் சாதகமான தீர்ப்பே வரும். சேர வேண்டிய பூர்வீகச் சொத்துக்கள் நிலமாகவோ, வீடாகவோ அல்லது பணமா கவோ உங்களை வந்தடையும். இதுவரை உங்களுக்குத் தொல்லை தந்து வந்த நோய் ஒன்று பரிபூரணமாகக் குணம் அடையும் கட்டத்திற்கு வந்துள்ளது. அதே சமயம் இரத்த சம்பந்தமான முழுப் பரிசோதனை ஒன்றை மேற்கொள்ளுதல் அவசியம். சுபகாரியம் ஒன்று கைகூடி வருவது போன்ற மாயை உண்டாக்கிப் பின் தடங்கல் ஏற்பட்டு நின்று விடும். எனவே ஸ்ரீலக்ஷ்மி சஹஸ்ரநாமம் படியுங்கள்.

துலா ராசி :

சித்திரை 3, 4 - ஆம் பாதங்கள், சுவாதி, விசாகம் 1, 2, 3 - ஆம் பாதங்கள்.

பாராட்டும், பரிசும், பட்டமும் உங்களுக்கு வர வேண்டிய நேரம், நீண்டகால முயற்சியில் வெற்றிவாகைசூட இருக்கிறீர்கள். அது உங்க ளுக்காகவும் இருக்கலாம் அல்லது மற்றவர் களுக்காகக் கூட இருக்கலாம். இராசிநாதன் 12ல் நீச்சம் பெற்று நிற்க, குருவும், இராகுவும் இராசியிலே இருக்க மனக் குழப்பம் ஏற்படத்தானே செய்யும். தொழிலிலும் சரி, குடும்ப வாழ்க்கையிலும் சரி இந்த நிலை இம் மாதம் பூராவும் நீடிக்கும். எனினும் புதனும் சூரியனும் எந்தப் பிரச்சினையையும் நன் முறையில் தீர்க்க உதவுவார்கள். சாதாரண மாதம்தான். எதிலும் அகலக்கால் வைக்க வேண்டாம். விநாயகர், முருகன் வழிபாடும் மனதிற்கு அமைதியை அளிக்கும். சற்று சிக்க னத்தை மேற்கொள்ள வேண்டிய மாதம். திருமண விஷயம் ஒன்று தடைபட்டு நிற்கும். அது உங்கள் மகள் சம்பந்தமாகவும் இருக்க லாம். அல்லது திருமணமாகாதிருந்தால் இந்த ராசியைச் சேர்ந்த உங்களுக்கே கூட இந்த நிலைதான். எனவே சிறிது காலம் எந்த முயற்சி யிலும் ஈடுபட வேண்டாம். அக்டோபருக்குப் பின் அனைத்தும் நன்றாகவே நடக்கும். மனை வியின் உடல்நிலை பாதிக்கப்பட்டு சரியாக லாம். சுக்கிரன் உங்களது ராசிக்கு வரும் போது உங்கள் ஆசைகள் நிறைவேறும்.

விருச்சிக ராசி :

விசாகம் 4 - ஆம் பாதம், அனுஷம், கேட்டை 1, 2, 3 - ஆம் பாதங்கள்.

மாத ஆரம்பத்தில் பிரச்சினைகள் உண்டு. தம்பதியர்களிடையே கருத்து வேற்றுமை வர லாம். குறிப்பாக மண்காரகனாகிய செவ்வாய் தனது 4ஆம் பார்வையால் நீச்ச சுக்கிரனைப் பார்ப்பது எதிர்பாராத விளைவுகளை ஏற் படுத்தும். குழந்தைகளைப் பற்றிய கவலையும் ஏற்படும். ஆனால் மாதத்தில் பிற்பகுதியில் நல்லதொரு சூழ்நிலை உருவாகிறது. மனக் கவலை நீங்கும். 10-ம் வீட்டில் உள்ள புதனும், சூரியனும் சேர்ந்தே நன்மை புரிய இருக் கிறார்கள். வேலை விஷயமாக அல்லது வேறு எந்தவிதமான நிலுவையும், இந்த மாதத் தில் வந்து சேர்ந்து விடும். ஆளுமிடத்துக் கேது நல்லதையே செய்வார். சற்று விட்டுக் கொடுத்துப் பழகினால் உங்களுக்குச் சகல விதத்திலும் ஆதாயம் தரும் நிலை உண்டாகும்.

தேய்சலான சிறு சிறு
சோப்புத் துண்டுகளைக்
கரைத்து எண்ணெய்
பாத்திரங்களைச் சுத்தம்
செய்யலாம்.

– எஸ். விசாலம்





குடும்பம் என்றிருந்தால் இடையிடையே சின்னச் சின்னத் தகராறுகள், குழப்பங்கள் ஏற்படத்தான் செய்யும். உடனே இதுதான் சமயம் என்று ஒதுங்கியும் ஒதுக்கியும் விடாதீர்கள். ''ஆசிரியர் நடத்தும் பரீட்சையே ஒரு மாணவனின் திறமையை வெளிப்படுத்தும்'' என்று உணர்ந்து எழுதும் ஒரு மாணவன், ஒரு நாளும் வினாத்தாளை வெறுக்க மாட்டான். அதைத் தந்த ஆசிரியரையும் பழிக்க மாட்டான். ஆண்டவனை ஆசிரியராகக் கொள்ளுங்கள். நம் மனம் புண்படும் வண்ணம் நடப்பவர்களை அவர் நமக்குத் தந்த வினாத்தாளாக ஏற்றுக் கொள்ளுங்கள். வெற்றி உங்களுக்குத்தான்.

- கோமதி

வட்டிக் கடைக்குச் சென்ற நகைகள் வீட்டிற்கு வரும். வீட்டில் சுபநிகழ்ச்சி ஒன்றுக்கு ஏற்பாடு ஆகும். எனவே மாத ஆரம்பத்தில் அமைதியாகத் தங்கள் பணிகளைச் செய்பவர்களுக்கும் தசாபுக்தி நன்கு நடப்பவர்களுக்கும் கவலையில்லை. ஸ்ரீஷண்முகக் கவசத்தை ஆழ்ந்த பக்திப்பூர்வமாகப் படிப்பது நலம்.

தனுசு ராசி :

மூலம், பூராடம், உத்திராடம் 1 - ஆம் பாதம்.

நில சம்பந்தமான பிரச்னை உங்களின் நிம்மதியைக் குறைக்கலாம். எனினும் அதற்குக் காரகனாகிய அங்காரகனை குரு பார்ப்பதால் கவலை தேவையில்லை. மனைவியின் உடல் நிலை சற்று பாதிக்கப்பட்டு பின்பு சரியாகி விடும். ராகுவும், குருவும் இலாப நிலையில் சஞ்சரிப்பதால் ஏதோ ஒரு காரணத்தால் ஏற்பட்டிருந்த தொழில் முடக்கம் நீங்கி இப்பொழுது முதல் நன்கு இயங்கும். இலாபமும் கிடைக்கும். மாடு வாங்கலாம், மாட்டுத் தீவனம், கோழித் தீவனம் விற்கும் வியாபாரிகளுக்கு இலாபம் பெருகும். அது போலவே கால்நடை, கோழிப் பண்ணை வைத்திருப்பவர்களுக்கும் நிலைமை நன்றாக இருக்கும். புதன் மாத ஆரம்பத்தில் நல்லது செய்ய இருக்கிறார். அதனால் நகைகள் மீட்கப்படலாம். அல்லது புதிதாக வாங்கவும் முடியும். பணியில் இருக்கும் பெண்களுக்கு ஆதாயம் உண்டு. மதிப்பும் உயரும். என்ன தான் இருந்தாலும் பத்தாமிடத்தில் இலாபாதிபதியும், களஸ்திரகாரகனுமாகிய சுக்கிரன் நீச்சம் பெற்றுள்ளது நல்லதல்ல. தாம்பத்திய உறவில் விரிசல் தோன்றி சரியாகும். எனவே கூச்சமின்றிப் பலருடன் சுமுகமாகப் பழகும் தன்மையடையவர்கள், பிறரின் சந்தேகத்திற்கு ஆளாகாதவண்ணம் நடப்பது நல்லது. இது ஆண், பெண் ஆகிய இருபாலாருக்கும் பொருந்தும். மாமியார், மருமகள் உள்ள கூட்டுக் குடும்பத்தில் உள்ளவர்கள் விட்டுக் கொடுத்து, அனுசரணையாகப் பழகினால் குடும்பத்தில் அமைதி இருக்கும். இது ஓர் அனுபவப்பூர்வமானப் (Practical Remedy) பரிகாரமாகும்.

மகர ராசி :

உத்திராடம் 2, 3, 4 - ஆம் பாதங்கள், திருவோணம், அவிட்டம் 1, 2 - ஆம் பாதங்கள்.

மகர ராசிக்காரர்களுக்குச் சற்று முகராசி இல்லாத மாதம் எனலாம். சிந்தித்துச் செயல்பட வேண்டிய மாதம். சனிபகவான் ஆட்சியில் இருப்பினும் 50 வயதுக்கு மேற்பட்ட இந்த ராசிக்காரர்களுக்குச் சற்று தொல்லைகள் ஏற்படும். எனவே வழுக்கும் தரையில் நடக்க வேண்டிய காலத்தில் சற்று கவனமுடன் நடப்பது நல்லது. மாதத்தின் பிற்பகுதியில் நல்ல நிலை தெரிகிறது. புதியதொரு பதவி கூட உங்களைத் தேடி வரலாம். இது வரை இருந்த உடல் நோய் உங்களை விட்டுச் சென்று விடும். ஆரோக்யத்திற்குக் குறை வில்லை. எதிர்பாராத நேரத்தில் சகோதரர் ஒருவரின் உதவி உங்களை வியப்பில் ஆழ்த்தும். அத்துடன் பொருளாதார சிக்கலிலிருந்து விடுபடுவீர்கள். காவல் துறையினரால் விசாரிக்கப்பட்டு வரும் உங்களைப் பற்றியதொரு விஷயம் நீங்கள் நிரபராதி என்பதை நிரூபிப்பதுடன், இழந்ததைப் பெற்றுத் தரும் நிலையையும் அங்காரகன் உருவாக்குகிறார். எனவே கந்தனைப் பிரார்த்தித்துக் கொள்

வசதி, பாதுகாப்பு, நம்பிக்கை ஆகியவை வாழ்வில் இடம் பெற... வழிகாட்டுகிறது எல்டிசி.



பென்ஷனர் பெனிஃபிட் திட்டம்

பாதுகாப்புப் பெறுவது உங்கள் பணம் மட்டுமல்ல. உங்களுடைய மன அமைதியும் கூட.

வயது 60 கடந்தால் என்ன? அதன் பின்னரும் நீங்கள் மன நிறைவோடு வாழ முடியும். அதற்கு உதவியாக இதோ ஒரு சிறப்பு டெபாசிட் திட்டம் — முதியவர்களுக்கு மட்டும். இத்திட்டத்தின் மூலம் ஒரு டெபாசிட்தாரர் என்கிற முறையில் நீங்கள் மாதாமாதம் ஒரு நிலையான உயர் வருமானத்தைப் பெறுகிறீர்கள். இதற்கான வட்டி வாரண்டுகள் பின் தேதியிடப் பட்டு முன்னதாகவே உங்களுக்கு அளிக்கப்பட்டு விடுகின்றன.

எனவே, கவலைகளிலிருந்து விடுபட்டு நீங்கள் மன நிறைவையும் அமைதியையும் நிச்சயமாகப் பெற முடிகிறது.

உங்கள் வளமைக்கு வழிகாட்டும் ஐந்து வெவ்வேறு டெபாசிட் திட்டங்களை லக்ஷ்மி டிரேட் கிரெடிட்ஸ் லிமிடெட் உங்களுக்கு அளிக்கிறது: ஃபிக்சட் டெபாசிட், குமுலேடிவ் டெபாசிட், ரொக்க சர்ட்டிஃபிகேட், ரெக்கரிங் டெபாசிட், பென்ஷனர் பெனிஃபிட் திட்டம்... ஒவ்வொரு டெபாசிட்தாரரும் இத்திட்டங்களின் மூலம் பெறுவது: சிறப்பான பலன்கள், தனிப்பட்ட சேவை.

எல்டிசியின் டெபாசிட் தொகைகள் 1993-94ல், ஒரே ஆண்டில் 100% வளர்ச்சி கண்டுள்ளதற்கு இவைதான் காரணம். இந்த வெற்றியினால் ஊக்குவிக்கப்பட்டு எல்டிசி மற்றுமொரு லட்சியத்தை நோக்கி முன்னேறிக் கொண்டிருக்கிறது: 31 மார்ச் 1995 அன்று அடைய நிர்ணயித்துள்ள டெபாசிட் தொகை இலக்கு ரூ.25 கோடி.

பி.ஜி. சரவணன்
சேர்மன்

டெபாசிட்டுகள் ஏற்கப்படுகின்றன!

லக்ஷ்மி டிரேட் கிரெடிட்ஸ் லிமிடெட்

கார்ப்பொரேட் அலுவலகம்:
37/1, கதீட்ரல் சாலை,
ஸ்டெல்லா மேரிஸ் கல்லூரி எதிரில்
சென்னை 600 086.
தொ.பே: 8281826/8281930

கிளைகள்: சென்னை • **அம்பத்தூர்**, போன்: 681860 • **அண்ணா நகர்**, போன்: 6212047 • **குரோம்பேட்டை**, போன்: 401267 • **கே.கே. நகர்**, போன்: 4833917 • **மடிப்பாக்கம்**, போன்: 2346586 • **நங்கநல்லூர்**, போன்: 2348593 & 2346066 • **விருகம்பாக்கம்**, போன்: 4830846 • **மேற்கு மாம்பலம்**, போன்: 4830150 • **திருச்சி**, போன்: 25323 • **மதுரை**, போன்: 30626 • **கோயம்புத்தூர்**, போன்: 43576 • **திருநெல்வேலி**, போன்: 322073 • **காரைக்குடி**, போன்: 2023 • **வேலூர்**, போன்: 21902 • **பாண்டிச்சேரி**, போன்: 31859 • **பெங்களூர்**, போன்: 366433.

எல்டிசி: உங்கள் வாழ்வின் வளமைக்குப் பொன்னான பாதை.

10.3.94 தேதியிட்ட தமிழ் நாளிதழில் வெளியான 25.10.93 தேதியிட்ட சட்ட பூர்வமான விளம்பரத்தின் தொடர்ச்சி.

ADWAVE/LTC/4729 TAM A

ளுங்கள். வேதனைகளும் அகலும். வேண்டியதும் கிடைக்கும்.

கும்ப ராசி :

அவிட்டம் 3, 4 - ஆம் பாதங்கள், சதயம், பூரட்டாதி 1, 2, 3 - ஆம் பாதங்கள்.

அக்டோபர் வரை குருபார்வை உண்டு. புதனும், சூரியனும் மாத ஆரம்பத்தில் உதவுவார்கள். புத்திரர்களால் ஏற்பட்டுள்ள கவலைகள் அகலும் காலகட்டம். மாதத்தின் பிற்பகுதியில் குடும்பத்தில் சற்று அமைதி குறையலாம். அது தாம்பத்திய உறவைப் பாதிக்கலாம். எனினும் குருவின் பார்வையால் சரியாகி விடும். எனவே அத்தகைய நிலையே உருவாகாதவாறு கேதுவால் கிடைக்கும் ஞானத்தினைக் கொண்டு தடுக்கலாமே! வாக்குவாதமின்றி, எதையும் ஏற்று சமாளிக்கும் பக்குவத்தைப் பலவந்தமாக உண்டாக்கிக் கொள்வது நல்லது. இது பெரியதொரு தொழில் நிறுவனத்தின் தலைவருக்கும், தொழிலாளிகளுக்கும் கூட பொருந்தும். வீட்டுப் பிரச்சினைக்கும், நாட்டுப் பிரச்னைக்கும் கூட விட்டுக் கொடுத்தல், வளைந்து கொடுத்தல், மனிதாபிமானம் எனும் தன்மைகள் அவசியமே. கலைத்துறை, அரசியல் மற்றும் தொழில் மேதைகள் ஆகிய இந்த ராசி யைச் சேர்ந்தவர்கள் மேற்கண்ட குணங்களுடன் நடந்து கொள்ள குருவின் பார்வை உதவும் நிலையில் உள்ளதால் பிரச்னைகளைச் சமாளித்துக் கொள்ளலாம். ஏழரைச்சனியின் கடுமை, இராசிநாதன் ஆட்சியில் இருப்பதால் குறையலாம்.


மீன ராசி :

பூரட்டாதி 4 - ஆம் பாதம், உத்திரட்டாதி, ரேவதி.

மாதத்தின் பிற்பகுதியில் எந்தத் துறையினர்க்கும் வெற்றி உண்டு. மகிழ்ச்சியும் உண்டு. முற்பகுதியில் நிதிப்பற்றாக்குறை ஏற்பட்டு அலைகழிக்க வைக்கும். குடும்பத்தில் சற்று கணவன் மனைவியரிடையே கருத்து வேறுபாடு தோன்றிக் கவலையைத் தோற்றுவிக்கும். அக்டோபர் வரை சற்றுக் கவனமுடன் பிரச்சினைகளை அணுகுவது நல்லது. எந்தச் செயலிலும் தாமதம்தான். திருமணம் கைகூடி வந்தும் சில தடைகள் ஏற்படும். விரயச் சனியும் தன் பங்கிற்கு ஏதேனும் தேவையற்ற சங்கடத்தை உண்டாக்கலாம். தாயாரின் உடல்நிலை கூட ஒருநாள் இருந்தது போல மறுநாள் இருக்காது. எனவே ஆழ்ந்த தியானத்தின் மூலம் குருவையும், தக்ஷிணாமூர்த்தியையும் நினைத்து, வீட்டில் வியாழன் தோறும் ஒரே ஒரு நெய் விளக்கைக் காலையில் ஏற்றி வையுங்கள். இந்தத் தீபஒளியில் தீயவை அனைத்தும் கரையும். நம்பிக்கையுடன் செய்யுங்கள். நம்பிக் கைதொழுதவர்களை நாளென் செய்யும்! கோளென் செய்யும்!

அருளும் பொருளும் தருபவர் யார்?

கிரகங்களில் மிகவும் நல்லவர் எனவும் சுபர் எனவும் போற்றப்படுபவர் பிரகஸ்பதி எனும் தேவகுரு ஆவார். அவருக்கு ஜாதகத்தில் அமைகின்ற இடத்தை விட, அவரது பார்வைக்குத்தான் அதிக பலமும் பலனும் உண்டு என்பர். அதே சமயம் சுக்கிரன் ஒரு சுபர் என்றாலும், சுபர்களின் பட்டியலில் இரண்டாவது இடம்தான் பெறுகிறார். ஏனெனில் அவர் அசுரர்களுக்குக் குருவல்லவா? இவ்விருவருடைய அருளும் ஆசியும் ஒருங்கிணைந்து ஒருவருக்குக் கிடைத்தால்தான் அவர் மண்ணுலகில் மங்காத புகழுடன் வாழ முடியும். மாடு, மனை, வீடு மக்கள் சுகம் என அனைத்தையும் அருளுபவர் சுக்கிரன். ஞானம், பக்தி, ஒழுக்கம், ஓங்கு புகழ் அனைத்தையும் அருளுபவர் குரு. ஆக இவ்விருவரும் முறையே பொருளையும், அருளையும் தருபவர்கள். பொருளில்லார்க்கு இவ்வுலகில்லை, அருளில்லார்க்கு அவ்வுலகமில்லை எனும் வள்ளுவன் வாக்கை மெய்ப்பித்துக் காட்டுபவர்களாகிய சுக்கிரனும், குருவும் உள்ளங்கையிலும், ஜாதகத்திலும் எப்படி அமைய வேண்டும் என்பதை கவனிக்க வேண்டும்.



உள்ளங்கையில் குரு மேடு (J) நன்கு உப்பலாகவும் அதன் மேல் சாலமன் ரேகை (S-R) மற்றும் முக்கோணம் (T) அல்லது நேர் கோடுகள் போன்ற ரேகைகள் (L) அமைந்து, புத்திரேகை (x-y) ஆயுள் ரேகையிலிருந்து (a-b) பிரிந்து உள்ளங்கையின் மத்தியில் நேராகச் சென்று முடிய வேண்டும். ரேகையின் நுனி கிளை போன்று (F) பிரிந்திருக்க வேண்டும். ஜாதகத்தில் தனுசு, மீனம், கடகம் ஆகிய ஏதாவது ஒரு ராசியில் குரு ஏதாவது ஒரு கிரகத்துடன் கூடி நிற்பது நல்லது. ஜாதகக் கட்டத்தில் + குறிபோட்ட இடம் சிறந்தது எனக் கொள்ள வேண்டும். குறிப்பாக ஒருவர் மீன லக்கி னத்தில் பிறந்து, அவரது ஜாதகத்தில் குருவும், செவ்வாயும் விருச்சிகத்தில் இருந்தால் பிரபல யோக ஜாதகம் என்று கூற வேண்டும். 9க்கும் 10க்கும் உடைய செவ்வாய், குரு ஆகிய வர்கள் தரும கருமாதிபதி யோகத்தைத் தரு வார்கள். இந்த யோகத்தால் ஸகலவித சம்பத் துகளும் நிறைந்து இருக்கும். அதே சமயம் மீனத்தில் சுக்கிரன் நின்றிட்டாலோ பிரபல யோக ஜாதகமாக ஆகி விடும். உள்ளங்கையில் சுக்கிர மேட்டின் மேல் (V) அநேக சிறு ரேகைகள் படத்தில் உள்ளது போல் இருக்க வேண்டும். செவ்வாய் மேட்டின் மேல் (M) நேரான ரேகை சென்றிருக்க வேண்டும். புதன் ஜாதகத்தில் கன்னியில் இருக்க வேண் டும். புதனும் செவ்வாயும் முறையே கல்வி, வீரம் இவற்றிற்குக் காரணமாகிறார்கள்.

மேலே கூறியுள்ளது போன்ற உள்ளங்கை அமைப்புடையவர்களுக்கு, அநேகமாக ஜாத கத்தில் குரு, சுக்கிரன், செவ்வாய், புதன் போன்ற கிரகங்கள் நல்ல இடத்தில் அமைந் திருக்கும் எனலாம். அப்படி இருப்பவர்கள் அரசியலில் பெரும் புள்ளியாக இருப்பார் கள். எழுத்தாளர்கள், எழுத்துலகில் தனக் கென ஒரு தனி பாணியைக் கொண்டு புகழில் மிதப்பார்கள். நடிப்புத் துறையில் தன்னிகரற்று விளங்குவர். கலைத் துறையில் மாமேதை என்ற பட்டத்தைப் பெறுவர். சிறந்த திரைப்பட இயக்குனர்கள், கதா சிரியர்கள், இசை அமைப்பாளர்கள் மற்றும் நடிக நடிகைகள் ஆகிய அனைவருக்கும் நவ நாயகர்களின் அருள் இருந்தால்தான் பொருள் சேரும் புகழ்கூடும். நாடும் ஏடும் அவர்களை நாளும் போற்றும். செவ்வாய், புதன் இவ்விரு கிரகங்களைப் பற்றிய சிறப்பினை அடுத்து படிப்படியாகப் பார்க்கலாம்.

- ஜெயலட்சுமி கிருஷ்ணன்

இம்மாத இல்லத்தரசி

சமையல் கூப்பன்

பொருள் : 'திடீர்' உணவு

கடைசி தேதி : 15.8.'94

என்ற தலைப்பில் சமையல் குறிப்பை இதனுடன் அனுப்பியுள்ளேன். இச்சமையல் குறிப்பு இதுவரை எந்தப் பத்திரிகையிலும் வெளி யானதல்ல என்று உறுதி கூறுகிறேன்.

கையொப்பம்

EXPRESS FINANCIAL EXCHANGE LTD.

வழங்குகிறது

பரபரப்பான டெபாசிட் திட்டங்கள்

எக்ஸ்பிரஸ் ஏர்னிங்ஸ் 1 (EXPRESS EARNINGS)	மணி பேக் 2 (MONEY BACK)
பேமிலி டிரஸ்ட் 3 (FAMILY TRUST)	சைல்ட் கேர் 4 (CHILD CARE)

விண்ணப்பபடிவங்களும் மேற்கொண்டு மற்ற விவரங்களும் Integrated Enterprises (India) Ltd-ன் எல்லா கிளைகளிலும் மற்ற முன்னணி முதலீடு ஆலோசகர்களிடமும் கிடைக்கின்றன

எல்லாத் திட்டங்களுமே உடனடியாக ரொக்கம் பெறும் வசதியும் உங்கள் டெபாசிட்டுகளை எளிதில் கையாளும் வசதியையும் அளிக்கின்றன. மேலும்...

1. டெபாசிட்டுகளின் பேரில் கடன் வழங்கும் வசதி.
2. டெபாசிட்டுகளை குறித்த காலத்திற்கு முன்பே திரும்பி எடுத்துக்கொள்ளுதல்.
3. ஒவ்வொரு நிதியாண்டிற்கும் பின்தேதியிடப்பட்ட மாதாந்திர/காலாண்டு வட்டி வாரண்டுகள் முன்கூட்டியே அனுப்பப்படும்.

வழங்குகிறது எளிதான கடன் உதவி	
	ரூ.10,000/- (பத்தாயிரம் வரை) குறைந்த வட்டியில் பணியில் இருக்கும் மகளிருக்காக.
	25 வயது வரையிலுள்ள மாணவர்களின் கல்விக்காக - பணியில் இருக்கும் மகளிருக்காக.

எங்களுடன் தொலைபேசியில் அல்லது கடிதம் மூலம் தொடர்பு கொள்ளவும்

எக்ஸ்பிரஸ் ஃபைனான்ஷியல் எக்ஸ்சேஞ்ச் லிட்.

கார்ப்பரேட் அலுவலகம்: அட்வேவ் டவர்ஸ்,
9, தெற்கு போக் சாலை, சென்னை - 600 017.
போன் : 4340325/4340329/4341403. ஃபேக்ஸ்: 4341518

18.6.94 தேதியிட்ட எகனாமிக் டைம்ஸ் பத்திரிக்கையில் எங்களது சட்டபூர்வமான விளம்பரத்தைப் பார்க்கவும்.

Trinity EFE2012.5

மங்கையர் மலர் &
ஃபாஹிமா ஜுவெல் ஹவுஸ்
(78, உஸ்மான் ரோடு, தி. நகர், சென்னை – 17)
இணைந்து நடத்திய சிறுகதைப் போட்டியில் மூன்றாவது பரிசு பெற்ற கதை

இனி ஓடுவதில்லை

காஞ்சனா ஜெயதிலகர்

கனவிலும் ஓட்டம்தான். முகமற்ற, மீசை பருத்த ஆகிருதியான ஆட்கள் துரத்த, அவள் பதறி ஓடுவதாகத்தான் பெரும்பாலும் கனவு வந்தது. பாதை இருண்டு மூட, அவள் வியர்த்து, அலற வாய் திறக்கையில் விழிப்பு வந்துவிடுகிறது.

இப்போது ஓடுவது நிஜம். மூச்சிரைக்கிறது தான். ஆனாலும் இன்னும் இரண்டே எட்டு வைத்து எம்பினால் நகரும் பஸ்ஸினுள் ஏறி விடலாம். டிபன் பாத்திரமும் குடையுமாய் பருத்த கைப்பையை இறுக்கிக் கொண்டவள் எட்டிக் கம்பியைப் பற்ற, வியர்த்த உள்ளங்கை வழுக்கியது. சில கைகள் அவள் கைப்பற்றி இழுக்க, பஸ் படியில் இரு பாதங்களும் ஏறிப் பதிந்தன.

ஆனாலும் இதயம் எகிறித் துடித்தது.

"பையனுங்கதான் இப்படீன்னா, பொண்ணுங்களும் புடைவையோட ஓடற பஸ்ஸிலே தொத்தறதா? ஏம்மா, விழுந்திருந்தியானா, யாருக்கு என்ன சொல்றது? என் தலை உருளும்; உன்னப் போம்மா" - கண்டக்டர் கோபித்தார். அசுவாரஸ்யமாய் அவளைத் திரும்பிப் பார்த்த பல ஜோடிக் கண்களில் புது ஆர்வம் அப்பிக் கொள்ள, விலகாது வெறித்தன.

விஜயா குனிந்து கொண்டாள். அங்கிருந்தும் ஓடி ஒளிய மனம் துடித்தது.

மெருகிட்ட பொன் விளக்காய் மின்னுவது அவள் தப்பல்ல. வனைவோடு உயரம், பம்மென்று அடர்ந்த கூந்தல், செதுக்கிய முகமும் அகன்ற விழிகளும்... எட்டு மணி நேரம் உழைப்பும் உளைச்சலுமாய் அலுத்த பின்னும் அலுங்காத அழகு. அம்மா தந்து போன அழகு.

"ஏன் இத்தனை நேரம்? கடையை விட்டு இறங்கினா காலை பஸ்ஸிலே வை."

"பஸ் கிடைக்கணுமேப்பா."

"எவனாவது கிடைச்சா பஸ்ஸு கிடைக்காது" - சீறும் அப்பாவிற்கு அஞ்சிதான் அவள் இப்படி பதைத்து ஏறியிருக்கிறாள்.

பஸ்ஸ்டாப்பில் நிற்கும் வரை கட்டியவன் போல "என்ன விஜி?" என்றழைத்து இழையும் சுந்தரத்திடமிருந்து தப்பி ஓடவும்தான்.

இந்தத் துணிக் கடையில் வேலைக்குச் சேர்ந்த முதல் வாரத்திலேயே இவள் பம்மிப் பதுங்க, பார்த்தவர்களின் கொடி உயர்ந்தது.

'விஜி— நூத்து முப்பதுக்கு ஒரு பில் போடு.'

'ஏய் விஜி, நாலு டீக்குச் சொல்லி விடேன்.'

'மீட்டர் ஸ்டிக்கை இப்படிப் பிடிச்சு அளக்கணும்' - கை பிடித்துக் காட்டினர்.

'துணியை இப்படி மடிச்சு, கத்திரியை சர்ருன்னு ஓட்டு - பிசிறில்லாம வெட்டிடும்' - மூச்சு, தோளில் வெப்பமடிக்கும் நெருக்கத்தில் கற்றுத் தந்தனர்.

ஆறு ஆண்களிடையே அவள் பெண்மைக்கு மூச்சடைத்தது. ஒரு வேளை ஆண் என்ன பெண் என்ன என்ற சமத்துவ இயல்பில்தான் பழகுகிறார்களோ?

'விஜி வந்த பிறகு கடையிலே கூட்டம் டபுள். நீ போன பிறகுதான் விளக்கு வைக்கிறோம்மா. ஆனாலும் இருளோடிடுது.'

'இப்போ முதலாளி கூட 'டீக்கா' உடுத்தி அடிக்கடி விசிட் வரார்ப்பா' - கண்ணடித்



தார்கள்.

'மதுரைக்கார பொண்ணுங்களுக்கு விவரம் பத்தாது. 12 வயசுவரை ஃப்ராக் போட்டுட்டு பிறகு மிடி, பாவாடைன்னு இறங்கிடுதுங்க. 16 வயசுக்கு மேலேதான் உடுப்பு எடுப்பு - என்ன விஜி?'

வக்கிரம் வெளிப்பட அவள் மேலும் ஒதுங்கினாள். கல்லா கணக்குப் பொறுப்பிலிருந்த இரு பெரியவர்கள் 'கண்டுகொள்ளாது' விட, மற்ற நால்வரிடமும் புது உற்சாகம் பிய்த்துக் கொண்டது.

பத்திரிகை, பூ, புத்தகம், இனிப்பு என்று வாங்கி நீட்டினார்கள் - அவள் மறுப்பு முறைப்பு எதுவும் எடுபடவில்லை. அதில் மூவருக்குத் திருமணமாகி, குழந்தைகளும் இருப்பது தெரிந்த போது குழப்பமும் கவலையுமாயிருந்தது.

சுந்தரத்திற்கு சர்வ சுதந்திரம்.

பின்புறமிருந்த டாய்லெட்டிற்கு அவள் போக தொடர்ந்து வாசலில் விசிலுடன் நிற்பான். உள்ளே விளக்குக் கூட போடாமல் இருட்டு நாற்றத்திற்குள் அவள் பல நாட்கள் மௌனமாய் அழுதிருக்கிறாள்.

சில சமயங்களில் தகரக் கதவைச் சுரண்ட, இவள் பதறிப் போய் வெளியே வந்தால்...

'நேரமாயிடுச்சேன்னு பார்த்தேன் விஜி - முகங் கழுவினியா?'

முதலாளியிடம் கோடி காட்டினாள் -

'நீதாம்மா முதல் பொண்ணு. இப்போ சேல்ஸ் கூடியிருக்கா, கூட ஒரு பொண்ணைப் போடலாமான்னு யோசிக்கேன்' என்றார்.

பதில் விடுதலையாயில்லா விட்டாலும், குகையின் துளி வெளிச்சமாய் நம்பிக்கை தந்தது.

இன்னுமொரு பெண் துணையில் இத்தனை சிரமமிருக்காது. வந்த ருக்மணி சுரேலென்று முயற்பற்களுடனிருக்க, அவளைச் சீந்துவாரில்லை!

பேரை உருட்டி 'ருக்கு' என்று பேச்சுக்குப் பத்து முறை அழைப்பாரில்லை!

தீய்ந்த திரி புகைந்தது -

"பளிங்கு கணக்கா நிறமிருந்தா? கஸ்டமருங்க கூட சிரிச்சு பேச மாட்டாம பாறை மாதிரி நிக்குறா - மித்த ஆம்பளைங்க 'விஜி விஜி'ன்னு தாங்கற கர்வம்" - பொறாமை ருக்குவை எட்டவே வைத்தது. அவள் நெருங்க முயன்ற சுந்தரம் அவளை அண்ட விடவில்லை.

இரவு படுக்கையில் இந்நினைவுகளைப் புரட்டிப் பார்க்க சோகையாய்ச் சிரிப்பு வரும்.

"என்ன உல்லாசமா நீட்டி நிமுந்திட்ட? காலைக்குத் தண்ணி இல்லை. அடிச்சு, குடிக்க ஒரு குடம் காய்ச்சி வை" என்று அப்பா சிடுசிடுப்பார்.

போன வருடம் ஒரு நாள் இருட்டில் பம்ப் அடிக்கும் போதுதான் கோபாலை முதன் முறையாகப் பார்த்தது.

வெள்ளிக் கீறலான மூன்றாம் பிறையைப் பார்த்தபடி நின்றவள் அரவம் கேட்டு அவசரமாய்ஓங்கியடித்தாள்.

"என்னங்க இந்த நேரத்தில?"

"யாரு?" - நிமிர்ந்து புருவஞ் சுருக்கினாள்.

"புரொபசர் சார் வீட்டுக்கு அடிக்கடி. எம். ஃபில் பண்றது விஷயமா வர்றேன். சார் உதவியா இருக்கார்."

அவள் பதிலளிக்காது இயங்க குடம் தளும்பித் தெறித்தது.

'வேலைக்குப் போனா இதான் சிரமம்...'

நிரம்பாத வாளியுடன் உள்ளே நடந்தாள் அவள்.

நான்காம் நாள் அவளது அலுவலகத்திற்கு வந்தான்.

"உங்ககூட பேசணுங்க."

"யாரு?" - விழிகள் உறையக் கேட்டாள்.

"நினைவில்லை? பம்ப் நீங்க... மூணாம் பிறை" - தடுமாறினான்.


"இதெல்லாம் எனக்குப் பிடிக்கலை."

அவன் மேலே தொடரவில்லை.

மறுநாளே அடுத்த போர்ஷன் புரொபசர் சார் வந்து சம்பந்தம் பேசினார். "கோபால் எங்க காலேஜ் லெக்சரர். எம். ஃபில் முடிச்சு பர்மனென்ட் ஆயிடுற கட்டம். நல்ல குடும்பம், நேரான பிள்ளை."

சிப்ஸுக்கு வாழைக்காய் ஸ்லைஸ் செய்யும்போது, காம்பை வெட்டாமல், தோலை காம்பு வரை சீவி அப்படியே வெட்டி எடுத்து விடலாம். பிறகு காம்பைப் பிடித்துக் கொண்டு ஸ்லைஸ் செய்தால், ஸ்லைஸ் செய்வதும் எளிது, கைக்கும் பாதுகாப்பு, காயும் வேஸ்ட் ஆகாது.

— எஸ். கல்யாணி



நான் அமெரிக்கா சென்றபொழுது என் பெண் வீட்டிற்குச் சில விருந்தினர்கள் வந்திருந்தார்கள். அவர்களுக்குத் தோசை மேல் ஆசையாம். என்ன செய்வது? புழுங்கல் அரிசியோ, கிரைண்டரோ கிடையாது. நேரமோ குறைவு.

இரண்டு மணி நேரத்தில் குசேலர் தோசை (நான் செய்த நாமகரணம்) ரெடி.

1 தம்ளர் பச்சரிசி
தம்ளர் அவல்
கொஞ்சம் புளித்த மோர் - 1 தம்ளர்
உப்பு - தேவைக்கேற்ப

அரிசியை வெந்நீரில் ஊற வைத்து, அவலை மோரில் ஊற வைக்கவும். கல் களைந்து ஒரு மணி நேரம் கழித்து மிக்ஸியில் தண்ணீர் குறைவாக விட்டு நைசாக தோசை மாவு போல் அரைத்து, அவலையும் மோருடன் நைசாக அரைத்து இரண்டையும் ஒன்றாக தோசை மாவு போல் உப்புப் போட்டுக் கலந்து அரை மணி நேரம் வைத்துப் பின் ஊத்தப்பம் போல் எண்ணெய் விட்டு வார்த்து மூடி வைக்கவும். திருப்பிப் போட அவசியம் இல்லை. (வேண்டுமானால் போடலாம்) ஓரமெல்லாம் கரகரவென்று தேங்காய் சட்னியுடன் சுடசுடச் சாப்பிட ருசி அருமை.

- டி. கண்ணம்மாள்.



"அப்ப ஏன் அவனைத் துரத்தறான்?" அப்பா நிஷ்டூரமாய் நிமிண்டினார்.

"அப்படி ஒன்னுமில்லையே சார். விஜயா விருப்பம் தெரிஞ்சு கல்யாணம் பேச ஆசைப் பட்டான். அவ்வளவுதான். விஜயாவைப் பற்றி மூணு மாசமா எங்கிட்டே ஒரே சிலாகிப்பு - அந்தக் கால பத்மினி போல ஒரு கம்பீரமான அழகு சார் அவங்க. அமைதியும் கறாருமா குணம் கூட அழகுதான்னு சொல்லிக்கிட்டே யிருப்பான். - பைசா எதிர்பார்க்கலை. பூவா வைச்சுக்குவான்."

அவனுக்குள் சந்தோஷக் காற்று - அஞ்சி ஓடும் அவன் சுபாவம் அவனுக்குக் கம்பீர மாகப் பட்டதாமா?

"அநாதைப் பயலா? கேட்க உறவில்லை?" வாய் கோணி கன்னத்தைச் சொறிந்து கேட் டார்.

"பெத்தவங்க கடையத்திலே இருக்காங்க. செயலான குடும்பம். ரெண்டு பக்கமும் தெரிஞ்சவன்ற முறையிலே என்னையக் கேட்டுக்கிட்டான்."

"விசாரிச்சுக்கிட்டுச் சொல்லி விடறேன்."

"சரி. விஜயாவையும் ஆறேழு வயசுக் குழந்தையிலிருந்து எனக்குத் தெரியும். கோபா லும் நல்லா தெரிஞ்ச பையன் - அதான் சொல்றேன்..."

"போருமய்யா. தொழிலை மாத்திக்காதியும். நாலையும் யோசிக்கணும்னா புரிஞ்சு ஒதுங்கு மேன்."

சார் முகம் கன்டித் திரும்பினார்.

அவன் உள்ளே பரவிய காற்று அடங்கி வறண்டது.

மறுமுறை கோபாலன் வந்திருந்த வேளை பார்த்து அவள் பின்புறமாய் சார் வீட்டில் நுழைந்து வலியப் பேசினாள்.

"சார் சொன்னார்." ரப்பர் வளையல் களை மேலும் கீழுமாக ஓட்டியபடி சொன் னாள்.

"என்கிட்டேயும் சொன்னார்" - வருத்த மாய் தலையசைத்தான்.

"அப்பாவுக்கு பயம். அம்மா இறந்து 15 வருஷமாச்சு. தம்பி 20 வயசிலேயே ஒரு கேரளப் பொண்ணைக் கட்டிக்கிட்டு அவ ஊர்ப் பக்கமா போயிட்டான். எஞ்சியது நான் மட்டுந்தான் சம்பாதிக்க, சமைக்க, துணையா..."

"கலியாணத்துக்குப் பிறகு நம்ம கூடத்தானே இருக்கப் போறார்?"

"யோசிச்சுதான் சொல்றீங்களா?"

"அவரு ஒண்டின்னு தெரியுமே."

"உங்க அப்பா அம்மா...?"

"கடையத்திலே நிலமிருக்கு. அண்ணியைச் சொந்தத்திலேதான் எடுத்தோம். வீடு கொள்ளாம பேரன் பேத்தி. குற்றாலச் சாரல், குளியல் - அவங்க ஊரை விட்டு அசைய மாட்டாங்க."

"அப்பாகிட்டே பேசறேன் நான்."

"முடிவு எப்போ... தெரியும்?" முகம் மலர்ந் தான்.

"தெப்பக்குளம் பக்கத்திலே நாளைக்கு வந்திருங்க."

மறுநாள் தளும்பிய குளத்தருகே கோபா லின் மலர்ச்சி வற்றிப் போனது.

"ஏங்க விஜயா? வரதட்சணை எதிர்பார்க் கலை. அவரை ஒதுக்கலை - பிறகென்ன? நான் வந்து பேசட்டுமா?"

"பயங்கரமா கத்தறாரு. அவள் வீட்டிலே, சம்பாத்தியத்துல நானிருக்கறது கேவலம்ங் கறார். எனக்கு விஷம் வச்சுட்டு நீ போய் தாலி கட்டிக்கோன்றார்."

அட்வைஸ் அம்புஜம்

"என் வயசுக்கு, எத்தனையோ பார்த்தாச்சு. ஒண்ணைப் பார்த்ததுமே, அது நல்லதா இல்லையான்னும், உடனே தெரிஞ்சுடறது. மனசிலே பட்டதை பட்டுன்னு சொல்லிடறதாலே, எனக்கு "அட்வைஸ் அம்புஜம்"னு எங்க ஆத்துக்காரர் அந்த காலத்திலேயே பேர் வைச்சிருந்தார்.

இன்னைக்கும்சரி, என் பேச்சை மீறி யாரும் நடக்கறதே கிடையாது. என்பிள்ளை, இந்த வயசுலேயும் என்னைக் கேட்காம எதுவும் செய்ய மாட்டான். நேத்துகூட, ஆத்துக்குள்ள வந்ததும் நேரே என்னண்ட வந்து உட்கார்ந்துண்டான். "ஏம்மா... அனுபவ் தேக்குப் பண்ணைகளிலே முதலீடு பண்ணலாம்னு இருக்கேன், என்ன சொல்றே"ன்னு கேட்டான்.

அவன் கேட்ட தொனியிலேயே, அனுபவ்லே முதலீடு செய்ய அவனுக்கு ரொம்ப ஆசைன்னு எனக்குப் புரிஞ்சு போயிடுத்து.

என்னைக்குமே, தேக்கு மரங்கிறது, ரொம்ப அத்தியாவசியமான தேவையா இருந்து வந்திருக்கு. வர்ற காலங்களிலே, தேக்கோட மதிப்பு இன்னும் அதிகமாகத்தான் போறது. அரசாங்கத்தோட குறைஞ்சபட்ச மதிப்பீட்டிலே கணக்குப் போட்டாலும், இருபது வருஷங்களிலே, அனுபவ் தேக்குப் பண்ணைகளிலே தரப்போற 1440 கன அடி தேக்கோட விலை, 36 இலட்சங்களுக்குக் குறையாம இருக்குமே!

அதுவும், அனுபவ் தேக்குப் பண்ணைகளிலே முதலீடு பண்ணினா, 3600 சதுர அடி நிலம் நமக்கே சொந்தமாயிடறது. நிலத்தைவிட நிலையான சொத்து வேற இருக்கா என்ன?

அனுபவ் தேக்குப் பண்ணைகளிலே முதலீடு பண்ணிட்டு, இருபது வருஷங்கள் காத்திருக்க வேண்டிய அவசியமில்லை. ஆறாவது, பன்னிரண்டாவது வருஷங்களிலே இடைக்கால வருமானமும் தர்றாளாம்.

அதுமட்டுமில்லாம, அனுபவ் குடியிருப்புகள், பழத்தோட்டங்கள், ஓய்வு இல்லங்கள், அனுபவ் பைனான்ஸ் பற்றி எல்லாம் நிறைய கேள்விப்பட்டிருக்கேன். ஒரு நல்ல நிறுவனத்திலேயிருந்து, நிறைய லாபம் தர்ற திட்டம் அறிமுகமாயிருக்கறப்போ,



இதே பேச்சை அவன் வேலை பார்த்த அலுவலகத்திலும் வந்து அவர் மேஜை மேஜையாய் நின்று பேசி தன் கட்சிக்கு ஆள் சேர்க்க, அவன் ராஜினாமா செய்து விட்டு மூன்று மாதங்கள் வீட்டிலிருந்தான்.

குந்தித் தின்ன நிமிஷத்தில் குன்றிமணி கரைந்தது. பணத் தேவையை விட தகப்பனிடமிருந்து தப்பிக்கும் வேகத்தில் தான் அவன் துணிக்கடை வேலையில் சேர்ந்தது.

சட்டியிலிருந்து அனலுள் குதித்த கதையாய் இங்கு மனம் மேலும் பொசுங்கியது. ஓடுதலும் அலுத்து விட்டது.

அடிக்கடி வந்து பார்க்கும் கோபாலனும் அவன் கண்ணியமும்தான் ஒரே குளிர் மருந்து.

"ஏம்மா ஒத்தை ரூவா டிக்கெட்டுல பஸ்ஸையே வாங்கிட்டாப்பலே சப்ஜாடா உக்காந்திருக்கியே. பிள்ளையைத் தூக்கும்மா. அந்தப் பொண்ணு இன்னும் இளைச்சுகிட்டு நிக்குது பாரு- விரிச்சு அடைச்சிரணும் சீட்டை."

கண்டக்டரின் கூச்சல் தனக்குப் பரிந்து தான் என்ற உணர்வில் விழிகளை நிமிர்த்தினாள் விஜயா. உடல் நடுக்கம் இன்னும் அடங்கவில்லை.

நெஞ்சு விம்மியது.

கண்களின் கொத்தலில் குன்றி குறுகினாள்.

ஓட கால் பரபரத்தது.

வாரி சுருட்டிய கொண்டையும், பிசுக்கேறிய நகையுமாயிருந்த பெண் அமர்த்தலாயிருக்க மீண்டும் அதட்டல்.

"உன்னைத்தான் - காது செவிடா? பிள்ளையைத் தூக்கேன்."

"ஒத்த ரூவா டிக்கெட்டுதான். - பிள்ளைக்குமா சேர்த்து ரெண்டு எடுத்துருக்கோமில்லே? எதுக்குத் தூக்கணும்?"

"ஆமா, ரெண்டு ரூவாயில பஸ்ஸே உன்னுதாயிடுது."

"என்னுதில்லைய்யா. மாசக்கூலி வாங்குற உன்னுதுமில்ல. மொட்டை அம்பலம் பண்ணாத. சொல்றத நயந்து சொல்லேன் - உன் ரப்பு தோரணையில நா ஓடணுமாக்கும்?"

அமர்த்தலான குரல்தான் -

ஆனால் அந்தக் கிராமத்து அச்சமில்லா தோரணையில், உண்மையில் தன் பதற்றம் அடங்கினாற் போலிருந்தது விஜயாவிற்கு.

மேலும் கூட்டம் ஏற, முன்னே நகர்ந்தவளின் கையைத் தொட்டு,

"உக்காரும்மா," கிராமத்துப் பெண் பிள்ளையையும் எழுப்பி மடியிலேற்றிக் கொண்டாள்.

"பரவாயில்லை."

"உக்காரு நீ... பயந்துட்டியா? அவிட்டு அதிகாரத்துக்குப் பணிஞ்சு போகப்படாதுன்னு பேசினேன். வேலைக்குப் போயிவர்றியா?"

"ம். நீங்க சொல்றதும் சரிதான்."

"எண்ணெயும் தூசுமா இருக்கோமில்லே? விரட்டுவானுங்க. முதுகு காட்டினா எக்களிப்பா குத்தி நெம்புவானுங்க. நின்னு பேசிடணும். ஓடுனா கல்லெடுக்கக் குனிவாங்க. நாய் நின்னு திரும்பினா கிலிதானே?"

"ம்."

"நீயுந்தான் ஏன் அப்படி ஓடி வந்து ஏறுனே? வழுக்கி விட்டிருந்தா இத்தனை அழகும் டயருக்கும் ரோட்டுக்குத்தானே?"

சில நொடிகள் கண் மூடித் திறந்தவள் சொன்னாள்.

"இல்லை - இனி ஓடலை."

மறுநாள் காலை, கடையின் மானிக்குயின் பொம்மைக்கு மேல் நைட்டி மாட்டிக் கொண்டிருந்த சுரேஷ் இவளிடம் கிசுகிசுத்தான்.




மோர் பாகற்காய்

புளித்த மோரில் தேவைக்கேற்ப உப்பு, மிளகாயை அரைத்துச் சேர்த்து, பாகற்காயை வட்ட வில்லைகளாக நறுக்கி ஒருநாள் முழுவதும் ஊற வைத்து அடுத்த நாள் வெயிலில் நன்கு உலர்த்தி டப்பியில் அடைத்து வைத்துக் கொண்டால் வேண்டுமென்ற போது பொரித்துச் சாப்பிட்டால் அதன் ருசிக்கு இணை உண்டோ?

- எம். எஸ். சரஸ்வதி

OWN YOUR FLAT AT MADRAS

FLATS UNDER CONSTRUCTION



அக்ஷயா
16, 3 வது மெயின் ரோடு,
நங்கநல்லூர்,
சென்னை - 61.

ஐஸ்வர்யா
பிளாட் 1 & 2,
7வது மெயின் ரோடு,
தண்டீஸ்வரர் நகர்,
வேளச்சேரி, சென்னை - 42.

ஆசீர்வாத்
1, முதல் லேன்,
2-வது மெயின் ரோடு,
டிரஸ்ட்புரம்,
கோடம்பாக்கம்,
சென்னை - 24.

ஆதித்யா
15/4, ஜெயம்மாள் தெரு
விரிவு,
அமிஞ்சிக்கரை,
சென்னை - 29

- ▲ உங்கள் பட்ஜெட்டுக்கு ஏற்றவகையில் டீலக்ஸ் ஃபிளாட்டுகளும் பங்களாக்களும் சென்னை நகரின் பல்வேறு கௌரவமான பகுதிகளில் கிடைக்கும்.
- ▲ கட்டடப்பணியின் முன்னேற்றத்தையொட்டி, வட்டியில்லாத தவணைமுறையில் கட்டணம் செலுத்தலாம். அல்லது மொத்த கட்டணமும் செலுத்தி பத்து சதவிகிதம் தள்ளுபடி பெறலாம்.
- ▲ முன்னணி நிதி நிறுவனங்கள் மூலம் கடன் வசதி செய்து தரப்படும்.
- ▲ நவீன வசதிகளுடன் கூடிய கட்டடங்கள் ரசனையுடன் அழகாக வடிவமைக்கப்படுகின்றன.
- ▲ தரமான கட்டமைப்பு; நிர்ணயித்த காலக்கெடுவுக்குள் முடிக்கப்படும்.

CREATORS
NOT JUST BUILDERS

ASSOCIATED BUILDERS

2nd Floor, 26,Ranganathan Street, T.Nagar, Madras - 600 017. INDIA
Ph : Off : 4340224 / 4340210. Res : 2345244. Fax : (044) 2344333

500 X 36 = 20,000

கணக்கு சரிதான்... நம்புங்கள்!

ஸ்ரீ ருத்ரப்ரியா ஃபைனான்ஸ் அளிக்கும் மணியான சேமிப்புத் திட்டங்களில் இதுவும் ஒன்று... உங்கள் வளமான வருங்காலத்திற்காக ஸ்ரீ ருத்ரப்ரியா ஃபைனான்ஸ் நான்கு திட்டங்களை வழங்குகிறது. எதிர்காலம் சிறக்க, உங்களுக்கு ஏற்றதொரு திட்டத்தைத் தேர்ந்தெடுங்கள்.

மகத்தான பலன்தரும் மணியான சேமிப்புத் திட்டம்

☆ மாதந்தோறும் செலுத்தும் ரூ.500/- தொகை, 36 மாதங்களுக்குப் பிறகு ரூ.20,000/- ஆக உங்களுக்குத் திரும்பக் கிடைக்கும்.

☆ அதைவிட முக்கியமான ஒன்று மாதம் தோறும் நடைபெறும் அதிர்ஷ்டக் குலுக்கலில் வெற்றி பெற்றால், அதைத் தொடர்ந்து மாதத் தவணைகளைச் செலுத்தாமலேயே 30 நாட்களுக்குள் நீங்கள் ஒரு பெரும் தொகையைப் பரிசாகப் பெறும் வாய்ப்பும் உண்டு!

☆ மூன்றாவது மாதத் தொகையைச் செலுத்தியவுடன் வியக்க வைக்கும் ஓர் அருமைப் பரிசும் உங்களுக்கு கிடைக்கும்--இலவசமாக!

☆ 36 வது மாதத்திலும் மீதமுள்ள மெம்பர்களுக்கு ஓர் இலவசப் பரிசு.

ரொக்க சர்ட்டிபிகேட் திட்டம்

ஒரே ஒரு முறை ரூ.2,500/- செலுத்தி, நான்கே ஆண்டுகளில் அதை இரண்டுமடங்காக, ரூ.5,000/- ஆகத் திரும்பப் பெறலாம். இந்த திட்டத்தில் சேரும் எல்லா உறுப்பினர்களுக்கும் குலுக்கல் முறையில் தேர்வு செய்யப்பட்டு அதன்படி அன்பளிப்பு வழங்கப்படும்.

பிக்சட் டெபாசிட் திட்டம்

காலம்	காலாண்டுக் கால அளவுகளில் ஆண்டு ஒன்றுக்கு வட்டி விகிதம்	ஆண்டு ஒன்றுக்கு மாதாந்திர வட்டி
1 ஆண்டு மற்றும் அதற்கு மேல்	18%	17.78%
2 ஆண்டுகள் மற்றும் அதற்கு மேல்	19%	18.77%
3 ஆண்டுகள் மற்றும் அதற்கு மேல்	21%	20.75%

குமுலேட்டிவ் டெபாசிட் திட்டம்

காலம் (மாதங்களில்)	24	36	48	60
டெபாசிட் தொகை (ரூ.)	1,000	1,000	1,000	1,000
முதிர்வடையும்போது அளிக்கப்படக்கூடிய தொகை (ரூ.)	1,422	1,745	2,267	2,782
சம மதிப்பான வருடாந்தர வருமானம்	21.1%	24.83%	31.68%	35.64%

ஏற்றதொரு திட்டத்தைத் தேர்ந்தெடுத்து,
ஒளிமயமான எதிர்காலத்திற்கு வழிவகுத்துக் கொள்ளுங்கள்
மேலும் விவரங்களுக்கு அணுகவும் :

SRF

ஸ்ரீ ருத்ரப்ரியா ஃபைனான்ஸ்
(பதிவு செய்யப்பட்டது)
4, அல்லா ரீஜன்சி, 165, எல்டாம்ஸ் ரோடு,
சென்னை - 600 018. போன் : 4992361

திறமையுள்ள டெபாசிட் கேன்வாசிங் ஏஜண்டுகள் நேரில் அணுகவும்

"டிரெஸ் வெளிச்சம் போடுது. பொம்மையைப் பார்க்கிறவனே வழிவான். பொண்ணுக்குப் போட்டு நிறுத்தினா... என்ன விஜி?" - அவன் விழிகள் வஞ்சனையாய்ச் சுருங்கிச் சிண்டின.

''போட்டு விடுங்களேன். வீட்டிலே அண்ணி இருக்காங்கள்ல. போட்டு எங்க வேணா நிக்க விடுங்க.''

கனிரென்ற பதிலில் விதிர்த்துக் குனிந்தான்.

"சுந்தரம், பதினோரு மணி டீக்கு நீயே சொல்லிடு - தவிர உன் கஸ்டமர் பில்லை நீதான் போடணும்'' சொன்னபின் எதையும் சமாளிக்கலாம் என்ற தெம்பேறியது. கோபாலுடன் என்றுமில்லாத உல்லாசத்துடன் பேசினான்.

இரண்டாம் நாள் கைக்கொரு பெட்டியுடன் நின்றவளைப் பார்த்த தந்தை தொய்ந்தார் -

''எங்கே... என்ன பெட்டியைத் தூ... தூக்கிட்ட...?''

"வர்ற புதன்கிழமை எனக்குக் கல்யாணம்பா... பிரியமும் மதிப்புமா உங்களை வச்சுக்கக் கடமைப்பட்டவ நான். ஆனா, உங்களுக்கு அந்த நம்பிக்கை இல்லைங்கறப்போ... போறேம்பா..."

அப்பா கத்த ஆரம்பிக்க அவள் வெளியேறினாள்.

"எங்கே போறே நீ?'' பின்னால் ஓடி வந்தார்.

''சார் வீட்டுக்கு - கோபால் குடும்பமெல்லாம் வந்தாச்சு. நாளைக் காலை ஜவுளி எடுக்கப் போறோம். நீங்களும் வந்தா சேர்ந்தே போகலாம்பா.''

படியிறங்க பெட்டிகளைக் கோபால் வாங்கிக் கொண்டான். பயந்தது போல மனம் பாரமாயில்லை. மூன்றாம் பிறை போலத் தகடாய், மெல்லிசான ஒளியாய் உணர்ந்தாள்.

அப்பா இனி முரண்ட மாட்டார் என்று பட்டது.

அவருக்கும் நல்லதாய் வேட்டி, சட்டை எடுக்க வேண்டும். அவர் பயஜுரம் நீங்க, கல்யாணத்தன்று குளிரக் குளிர அவர் காலில் விழுந்து வணங்க வேண்டும். அவர் மனம் வாடாது கடைசி வரை வைத்துக் கொள்ள வேண்டும்.

கோபாலுக்கும் குறையே வரக் கூடாது. தான் சந்தோஷமாய் இருந்தால்தான் இதெல்லாம் சாத்தியம் என்று பட முக்கியமாய் ஒன்றை மனத்துள் குறித்து வைத்தாள்.

இனி ஓடுவதில்லை...

மனம் வெகு நிம்மதியாயிருந்தது.

ஆங்கிலம்

30 ஆண்டுகளாக பணியாற்றி வரும் SNTCயில் உளவியல் அடிப்படையில்மிக மிகப் புதுமையான முறையில் தமிழ் மூலம் ஆங்கிலம் தபாலில் படியுங்கள். இலக்கணப் பிழையின்றி எழுதலாம், பேசலாம்

டெலிவிஷன்

ரேடியோ சர்விஸிங் டிப்ளமா தபாலில் படியுங்கள். எளிதில் வேலை கிடைக்கும். சொந்தத் தொழில் செய்யலாம் தமிழ் தெரிந்தவர்கள் படிக்கலாம்.

SSLC HSC ESLC

வீட்டிலிருந்தே தபாலில் படித்து அரசுத் தேர்வு எழுதலாம். எழுதி பாஸாகாதவர்கள் தவறிய பாடத்தை மட்டும் தபாலில் படிக்கலாம்

அக்கவுண்டன்சி

*SSLC*தேறியவர்கள் தபாலில் படித்து அரசுத் தேர்வு எழுதலாம். வியாபாரிகள் வியாபாரக் கணக்கு தபாலில் படிக்கலாம்

விபரமறிய எழுதுக.

S N T C

24, பட்டமங்கலத்தெரு,
மயிலாடுதுறை-609 001 இந்தியா

காஞ்சி மியூச்சுவல் பெனிபிட் பண்டு லிமிடெட்

துவக்கம் 1987

மத்திய அரசால் அங்கீகரிக்கப்பட்ட நிதி நிறுவனம்.

No.9, வாக தெரு, கீழ்பாக்கம், சென்னை 10.
போன்: 642 8577, 642 7441.

பிக்சட் டெபாசிட் திட்டம்

3 மாதம்	6 மாதம்	9 மாதம்
12%	13%	14%

1 ஆண்டு	2 ஆண்டு	3 ஆண்டு அதற்கு மேலும்
16%	17%	18%

மாதா மாதம் காசாகவோ, காசோலையாகவோ வட்டியை பெற்றுக் கொள்ளலாம்

கேஷ் சர்டிபிகேட்

1 ஆண்டு	2 ஆண்டு	3 ஆண்டு அதற்கு மேலும்
16%	17%	18%

தங்கள் சேமிப்பு 46 மாதங்களில் இரட்டிப்பாகிறது.

பென்ஷனர் நலத் திட்டம்

வட்டி 19%

விதவைகள், ஊனமுற்றோர், கல்வி மற்றும் அறக்கட்டளை பயன் பெறலாம்

ரெக்கரிங் டெபாசிட்

1 ஆண்டு	2 ஆண்டு	3 ஆண்டு அதற்கு மேலும்
14%	15%	16%

கடன்	நகைகளின் பேரில் கிராம் 1க்கு ரூ. 275 வழங்கப்படும். சென்னை மாநகரில் உள்ள சொத்துக்கள் பேரிலும் வழங்கப்படும்	வட்டி விகிதம் **1.75%**

சேவிங்ஸ் கணக்குகள் மீது 9% வட்டி வழங்கப்படும்

TUESDAY HOLIDAY

BUSINESS HOURS: WEEK DAYS:
9.30 A.M. To 1.30 P.M. AND 2 P.M. To 5 P.M.
SUNDAY 9.30 A.M. To 1.30 P.M.

சேமித்து எங்களுடன் வளர்வீர்



• மங்களா





• சாவித்திரி



• லலிதா முரளி



• சாந்தா

பொருள்: எரிபொருள் சிக்கன உணவு

முதற் பரிசு ரூ.300/-

பாப்கார்ன் உப்புமா

தேவையான பொருள்கள் :

பாப்கார்ன் - 1 பாக்கெட் (200 கிராம்)
வெங்காயம் - 1 பெரியது (சிறு துண்டுகளாக அரிந்து கொள்ளவும்)
பச்சைமிளகாய் - 2 சிறிதாக அரிந்து கொள்ளவும்
இஞ்சி - 1 சிறிய துண்டு, பொடியாக அரிந்து கொள்ளவும்
கறிவேப்பிலை - கொஞ்சம்
தக்காளி - 1
கடுகு - 1 டீஸ்பூன்
மஞ்சள்பொடி - ஒரு சிட்டிகை
சீரகம் - 1 டீஸ்பூன்
தயிர் - 2 டீஸ்பூன்

செய்முறை : சூடான வாணலியில் போட்டுப் புரட்டிய

இந்த மாத ஆலோசகர்

பாப்கார்னை மிக்ஸியில் சிறுசிறு துண்டுகளாக பொடித்துக் கொள்ளவும். 1 கப் கொதிக்கும் நீரில், பொடித்த பாப்கார்னை, உப்பு, தயிருடன் சேர்த்துப் பிசறி 15 நிமிடம் வைக்கவும். எல்லா உப்புமாவைப் போல், வாணலியில், 2, 3 டீஸ்பூன் எண்ணெய் விட்டு, கடுகை தாளித்து, சீரகம் சேர்த்து வெங்காயம், பச்சை மிளகாய் (சிறிதாக நறுக்கியது), இஞ்சி, கறிவேப்பிலை போட்டு, வதக்கி, மஞ்சள் பொடி ஒரு சிட்டிகை சேர்த்து, வெங்காயம் வதங்கியதும், பாப்கார்ன், பிசறி வைத்திருப்பதைப் போட்டு, நன்றாக வதக்கவும். தேவையானால் கொஞ்சம் நீர் தெளித்துக் கொள்ளலாம். சூட்டோடு மூடி வைத்து தீயை நிறுத்தி விடலாம். பரிமாறும் பொழுது நறுக்கிய தக்காளி, கொத்தமல்லியால் அலங்கரித்துப் பரிமாறலாம். சூப்பராக இருக்கும்.

(எரி பொருள் நேரம், தண்ணீர் கொதிக்க வெங்காயம் வதங்க 5 அல்லது 6 நிமிடங்களே)

கொஞ்சம் கொசுறு குறிப்புகள் :

1. சிற்றுண்டிகளுக்கு எரிபொருள் சிக்கனமாக செய்ய, ஊறவைத்து முளை கட்டிய பச்சைப் பயறு, கடுகு, பெருங்காயம், மிளகாய், கறிவேப்பிலை தாளித்து பயறுடன் உப்பு சேர்த்து 2 நிமிடம் சேர்த்துக் கிளறும் சுண்டல் ஜோர்தான். (எரிபொருள் நேரம் 2 நிமிடம்தான்.)

2. எரிபொருள் செலவே இல்லாமல் செய்யும் பயத்தம்

பருப்பு (கோசுமல்லி (அ) வடைபயறு) மிக ருசியாக இருக்கும். ஊறவைத்த பாசிப் பருப்பை, களைந்து வடியவைத்து, உப்புப் பொடி சேர்த்து, சிறிது எலுமிச்சம்பழச் சாற்றையும் பிழிந்து பிசறி ஊறவைத்து, மாங்காய்த் துருவல், தேங்காய்த் துருவல், வெள்ளரித் துருவல் சேர்த்து கடுகு, பெருங்காயம், கறிவேப்பிலை தாளித்து விட்டால், மாலை சிற்றுண்டியாக சாப்பிட ஜோர்.

3. கடையில் வாங்கும் பனீர் - அதைச் சிறுசிறு சதுர துண்டுகளாக்கி, பச்சை வெங்காயம், பச்சை மிளகாய், பச்சை கொத்தமல்லி தூவி சிறிது எலுமிச்சை சாறும், உப்பும், மிளகுப் பொடியும் சேர்த்து, டீயுடன் சாப்பிட அருமையாக இருக்கும். (எரிபொருளே தேவையில்லை.)

- மங்களா
சென்னை-18.

இரண்டாம் பரிசு ரூ.200/-

இனிய இயற்கை உணவு

தேவையான பொருட்கள் :

முளைகட்டிய பாசிப்பயறு
முளைகட்டிய கொண்டைக்கடலை
முளைக்கட்டிய பட்டாணி நான்கும் - சேர்ந்து 200 கிராம்
முளைக்கட்டிய காராமணி
மாதுளம் பழம் - 1
மாம்பழம் - 1
சப்போட்டா பழம் - 2
பீட்ரூட் - 1
கேரட் - 1
திராட்சை - 50 கிராம்
அன்னாசிப் பழம் - 50 கிராம்
தேங்காய் பத்தை - 4
செர்ரி பழம் - 25 கிராம்
விதை நீக்கிய பேரீச்சம் பழம் - 50 கிராம்
தர்பூசணி பழம் - 1 பத்தை
வெள்ளரிப் பிஞ்சு - 2
எலுமிச்சம்பழம் - 2
மிளகுப் பொடி - தேவையான அளவு
உப்பு - தேவையான அளவு

செய்முறை :

முதலில் பயறு வகைகளை தண்ணீர் விட்டு 12 முதல் 14 மணி நேரம் ஊறவைத்து வடித்து எடுத்து, துணியில் காற்றுப்புக முடியாமல் கட்டி வைக்கவும், 2, 3 நாட்கள் கழித்துப் பிரித்துப் பார்க்க முளை விட்டிருக்கும் (இவைகள் சாப்பிடுவதற்குச் சுவையாகவும், உயிர்ச்சத்துக்கள் அதிகம் கலந்ததாகவும்

இருக்கும்).

இப்படித் தயார் செய்த தானியங்களுடன் உரித்த மாதுளை முத்துக்கள், தோல் நீக்கிய மாம்பழத்துண்டுகள், தோல் விதை நீக்கிய சப்போட்டா துண்டுகள், கொட்டை நீக்கிய திராட்சைத் துண்டுகள், தோல் நீக்கிய அன்னாசிப்பழத் துண்டுகள் சேர்த்து, பீட்ரூட்டையும், கேரட்டையும் துண்டு களாக்கிச் சேர்க்கவும். பின் துண்டுகளாக்கிய தர்பூசணியையும், வெள்ளரிப் பிஞ்சையும் கலக்கவும், செர்ரிப் பழத்தை துண்டுகளாக்கிச் சேர்த்து, வேண்டிய அளவு ருசிக்குத் தக்கவாறு மிளகுப் பொடி, உப்புக் கலந்து எலுமிச்சம்பழம் பிழியவும். இப்படித் தயார் செய்து வாரம் இருமுறை காலை உணவாகவோ, மதிய உணவாகவோ எடுத்துக் கொள்ளலாம்.

இத்துடன் 1 டம்ளர் மோரில் கருவேப்பிலை பெருங்காயம், சீரகம் இஞ்சித் துண்டு, கொத்தமல்லி இலை சேர்த்து மதிய உணவுடன் அருந்திடலாம். உணவு எளிதில் ஜீரணமாகும். உடலுக்கு வேண்டிய சத்துக்களும் நிரம்ப கிடைக்கும்.

- பி. லலிதா பாய்
சென்னை-10.

மூன்றாம் பரிசு ரூ.100/-

வெஜிடபிள் தயிர் அவல்

தேவையான பொருட்கள் :

அவல் - 100 கிராம்
தயிர் - 1 கப் (புளிப்பில்லாதது)
கேரட் - 2 சிறியது (துருவியது)
வெள்ளரிக்காய் - 1 (துருவியது)
தக்காளி - 2 (நறுக்கியது)
பச்சைமிளகாய் - 2 (நறுக்கியது)
மல்லித்தழை, கறிவேப்பிலை - (தூவி அலங்கரிக்க)
உப்பு - தேவையான அளவு
கடுகு - 1 தேக்கரண்டி
உளுத்தம்பருப்பு - 1 தேக்கரண்டி
எண்ணெய் (தாளிக்க) - 1 மேஜைக் கரண்டி

செய்முறை :

அவலைச் சுத்தம் செய்து தண்ணீரில் ஒன்றுக்கு இரண்டு தரம் களைந்து தண்ணீரை ஒட்டப் பிழிந்து வைத்துக் கொள்ளவும். பத்து நிமிடம் கழித்து ஊறின அவலில் உப்பு, தயிர், துருவின கேரட், வெள்ளரிக்காய் சேர்த்து மேலும் நறுக்கிய தக்காளி, பச்சை மிளகாயுடன் நன்கு கலக்கவும். அடுப்பைப் பற்ற வைத்துக் கடாயில் எண்ணெய் ஊற்றி கடுகு, உளுத்தம் பருப்பு தாளித்து அவல் கலவையுடன் சேர்த்து நன்றாகக் கலக்கவும். இந்த வெஜிடபிள் தயிர் அவல் நல்ல சத்துள்ள உணவு. தாளிப்பதற்கு மட்டுமே எரிபொருள் உபயோகிப்பதால் எரி பொருளும் மிகக் குறைவாக செலவு ஆகும். புதினாச் சட்னி அல்லது தக்காளி சாஸ்சுடன் சாப்பிட நன்றாக இருக்கும்.

- சாவித்திரி சுப்பிரமணியம்
தூத்துக்குடி-628 005.

ஆறுதல் பரிசு ரூ.50/-

பச்சை மோர்க்குழம்பு

தேவையான பொருட்கள் :

கெட்டியாகக் கடைந்த மோர் - 3 கப்
பச்சை மிளகாய் - 10 (அ) 15
தேங்காய்த் துருவல் - ½ கப்

தீபாவளி சமயத்தில் பனியன்கள் வாங்கும் அட்டைப் பெட்டிகளை தூர எறிந்து விடாமல் ஆடியோ கேஸட்டுகளை அடுக்கி வைத்துக் கொள்ளலாம். பெட்டியின்மேல் கலர் பேப்பர்கள் ஒட்டி இருப்பதால் பார்க்க கவர்ச்சியாக இருக்கும். இன்னும் நன்றாக இருக்க அதே அளவில் பிளாஸ்டிக் கவர் போட்டு வைத்துக் கொண்டால் தூசி படாமல் பளிச்சென்று இருக்கும்.

- உஷாநாராயண்



சீரகம் - 1 ஸ்பூன்
உப்பு - தேவையான அளவு
பெருங்காயத் தூள் - சிறிதளவு
இஞ்சித் துண்டு - சிறிதளவு

செய்முறை :

தேங்காய், பச்சை மிளகாய், சீரகம், உப்பு மற்றும் சிறிய இஞ்சித் துண்டு இவற்றை நீர் விடாமல் கொஞ்சம் மோர் விட்டு மிக்ஸியில் கெட்டியாக அரைத்துக் கொள்ளவும். பின்னர் கெட்டியாகக் கடைந்த மோரில் பெருங் காயத்தூள் சேர்த்து இந்த அரைத்த கலவையைக் கலக்கவும். கடுகு, வெந்தயம் மற்றும் பெருங்காயத்தூள் போட்டுத் தேங்காய் எண்ணெயில் தாளிக்கவும்.

கறிவேப்பிலையை வாசனைக்குச் சேர்த் தால் பச்சை மோர்க்குழம்பு தயார். இதை அடுப்பில் வைத்து சமைக்க வேண்டிய அவ சியம் இல்லை. இந்த மோர்க்குழம்பு தேங்காய்த் துவையலுக்கு நல்ல காம்பினே ஷன்.

- லலிதா முரளி
செங்கல்பட்டு-1.

ஆறுதல் பரிசு ரூ.50/-

கடலை மாவு லட்டு

இதை வட இந்தியாவில் மகச் லட்டு என்று சொல்வார்கள்.

தேவையான பொருட்கள் :

கடலை மாவு, சர்க்கரை, ஏலக்காய், முந்திரிப் பருப்பு, நெய் (அ) டால்டா 300 கிராம்.


செய்முறை :

கடலை மாவை நன்றாகச் சலித்துக் கொள்ளவும். ½ கிலோ கடலை மாவிற்கு ¾கிலோ சர்க்கரை என்று அளவு எடுத்துக் கொள்ளவும். சர்க்கரையை மிக்ஸியில் நன்றாக மாவாக அரைத்துக் கொள்ளவும். கடலை மாவை கொஞ்சம் கொஞ்சமாக, அடுப்பை சன்னமாக எரிய விட்டு, டால்டா (அ) நெய்யை விட்டுப் பொன்னிறத்திற்கு வறுத்துக் கொள்ளவும். அதே போல் இரண்டு பாகத்தை யும் வறுத்து ஒரு பாத்திரத்தில் போட்டுக் கொள்ளவும். வறுத்தவுடன் மாவை அளந்து கொள்ளவும். டம்ளர் (அ) ஒரு கிண்ணம் எடுத்து அளந்து கொள்ளவும். வறுத்தவுடன் மாவு குறைந்து விடும். ஒரு டம்ளருக்கு ¾ அல்லது தித்திப்பு அதிகம் வேண்டுமானால் ஒரு டம்ளர் சர்க்கரைப் பொடி வீதம் கலந்து முந்திரிப் பருப்பு, ஏலக்காய்ப் பொடி போட்டு நன்றாகப் பிசைந்து அல்லது கலந்து ரவா உருண்டை பிடிப்பது போல் உருண்டைகளாக பிடித்துக் கொள்ளவும். இந்த லட்டு வட இந்தியாவில் விநாயக சதுர்த்திப் பிரசாதமாக உபயோகிப்பார்கள்.

- சாந்தா ஜெயராமன்
ஜெபல்பூர்-1

விடுமுறை கண்டுபிடிப்பு!

எனது மகள் கேரம் ஆடி அலுத்துப் போய் விட்டதால் கேரம் போர்டை வைத்து ஓர் புதிய விளையாட்டைக் கண்டு பிடித்திருக்கிறாள். வேறு ஒரு விளையாட்டில் இருந்த சிறிய சிறிய பால்கள் (Ball)



மற்றும் பழைய ஆன்டனா (Antenna) கம் பியையும் வைத்து ஸ்நூகர் (Snooker) விளையாட ஆரம்பித்து விட்டாள்.

இதே போல் பழைய கேரம் போர்டை வைத்துச் சுவரில் மாட்டி நிறைய வட்டங்கள் போட்டு (வெவ்வேறு கலர்களில்) அம்புகள் தயாரித்து அதைச் சுவரில் உள்ள கேரமை நோக்கி எறிய ஆரம்பித்து விட்டாள்..

- ஆர்.பத்மா

சினிமா சிறப்பிதழ்


கல்கி

ஆகஸ்ட் 7 ஆண்டுமலர்...

கே.பாலசந்தர் எழுதும்

நினைவலைகள்

அனுபவத் தொடர் ஆரம்பம்!



மற்றும்

●● ஜி.வி.அய்யரின் விவேகானந்தர்

●● தமிழ் சினிமா கதாநாயகிகளின் நிலை என்ன?


●● மலையாளம், தெலுங்கு, கன்னடம், இந்தி, வங்காளத் திரையுலகின் இன்றைய நிலை...

●● இந்தி முன்னணி நடிகை மனிஷா கொய்ராலா சிறப்புப் பேட்டி

●● இன்னும் இன்னும் ஏராளமான விஷயங்கள் அலசப்படுகின்றன...

அதிகப் பக்கங்கள்; அதிக வண்ணங்கள்; அதே விலை!

சினிமா சிறப்பிதழ்



Hexagon
Boutique
காற்றின் தேவை எங்கேயோ, கேதான் நிச்சயம் அங்கே!
Mini Pedestal
Mini Super
Tycoon Rainbow
Sona Pedestal
Freshair Deluxe
கேதான்
பெயர் ஒன்றே போதுமானது

திருமண மலர்

மணமகள் தேவை

* Vadamal, fair, healthy goodlooking Athreya Gothram Girl 20, B. A., with excellent family background seeks alliance from well placed Iyer Boys sub-sect no bar. Reply with horoscope and family details to Box No. 11137

* Alliance invited from fair Graduate, employed/unemployed Girl within 28 years for Brahacharanam Iyer Boy. Haritha, Punarpoosam 4th Padham, 31, 169 cms, 4000/-, M. Sc., PGDEE., Mars in second place. Working in a reputed concern near Salem. Subsect no bar. Moolam acceptable. Apply to Box No. 11138.

* வடமாள், சிவ பிராமின், காசியப கோத்திரம், பூராடம், சிவில் இன்ஜினியர், 28, 173 செ.மீ., 10,000/- சென்னையில் சொந்த இன்ஜினியரிங் கம்பெனி. வரனுக்கு அழகான வேலையில் இருக்கும் பெண் தேவை. உட்பிரிவுகள் சம்மதம். ஜாதகமும் விவரமும் எழுதவும். பெட்டி எண் : 11140

* தனியார் நிறுவனமொன்றில் நிரந்தரப் பணியாளராக ரூ. 2000/- மாத வருமானமுள்ள கள்ளர் இன மணமகனுக்கு (வயது 34) அதே இனத்தைச் சேர்ந்த அல்லது முக்குலத்தோர் இனத்தைச் சேர்ந்த அரசாங்க, தனியார் துறையில் நிரந்தரப் பணியாற்றும் பெண் ஜாதகத்துடன் விண்ணப்பிக்கவும். பெட்டி எண் : 11141

* சைவ வெள்ளாளர் இனத்தைச் சார்ந்த அழகான 29 வயது, 5' 9", பம்பாயில் வசித்துவரும், கைத்தொழில் புரியும் இஞ்சினியர் பையனுக்கு ஏற்ற படித்த குடும்பப்பாங்கான அழகான பெண் தேவை. எவ்வினத்தைச் சார்ந்தவரும் குடும்ப விவரங்களுடன் அணுகவும். வரதட்சணை ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது. எளிமையான திருமணம். பெட்டி எண் : 11142

* வயது 26, உயரம் 173 செ.மீ., மாத சம்பளம் ரூ. 2600/- இராணுவத்தில் கிளார்க்காகப் பணிபுரியும் மணமகனுக்கு +2 வரை படித்த முத்துராஜா/முத்திரையர்/அம்பலக்காரன் இனத்தைச் சேர்ந்த மணமகள் தேவை. பெட்டி எண் : 11143

* தமிழ், விஸ்வகர்மா, திருவாதிரை, தனுர் லக்னம், வயது 29, பி. ஏ., 180 செ. மீ. உயரம், தமிழக அரசு காவல் துறை, சென்னையில் பணிபுரியும் ஆணுக்கு மாத வருமானம் ரூ. 2000/- தமிழ் விஸ்வகர்மா மணமகள் தேவை. ஜாதகம் மற்ற விவரங்களுடன் அணுகவும். பெட்டி எண் : 11144

* Alliance invited from qualified employed Girls for Vadama, Bharadhwajam, Rohini, 34, 187 cms, B.Sc., B.E., very fair Groom working in a reputed firm in Madras. Apply with horoscope to Box No. 11145

* Suitable Vegetarian Bride for Tamil Viswakarma Post Dip. Engineer, Bombay, fair, Poorattathi (legally divorced), 39, height 172 cms, 3500/- p.m. Mars - Saturn in 7th house. Send full details with horoscope. Widows Can apply. Box No. 11147

* Sozhia Vellala Pillai B.E., 27, 169 cms, Central Govt. employed at Madras seeks slim, fair, homeloving Girl from decent family. Subsect acceptable. Reply with horoscope to Box No. 11148

* வடமாள் நைத்ருப காசியப கோத்திரம், வயது 37, அவிட்டம் நட்சத்திரம், மாதம் 2000 ரூபாய் வருமானமுள்ள வரனுக்கு வேலைக்குச் செல்லாத/வேலைக்குச் செல்லும் படித்த, குடும்பப்பாங்கான பெண் தேவை. (எளிய திருமணம்) பெட்டி எண் : 11149

* Saiva Pillai Doctor, 30 years, M. S., M.ch., seeks alliance. Doctors preferred. Reply with Biodata to Box No. 11150

* Vadamal Kousikam Poorattathi, 170 cms, 30 years, private firm, Bangalore, salary Rs. 4000/- plus seeks Graduate goodlooking knowledge of Typewriting, Shorthand, employed/unemployed domestically well trained Girls for immediate marriage. No dowry. Send horoscope to Box No. 11151

* சிதம்பரம் சைவ வேளாளர், ஆயில்யம், 30, 165 செ.மீ., பி.எஸ்ஸி., எம்.பாட்., விவசாயம், போதுமான வசதியும், சிதம்பரம் நகரிலும் கிராமத்திலும் சொந்த வீடுகள் உள்ள மணமகனுக்கு தெய்வ நம்பிக்கையும், நல்ல குணமும் உடைய, வேலையில் உள்ள பெண் தேவை. ஆசிரியை பணியில் இருப்பது நலம். பெட்டி எண் : 11152

* சைவ வேளாளர் பொண்ட். ரோஜா-வேட், ஹானர்ஸ் டிப்ளமோ, வயது 25, 175 செ.மீ., அவிட்டம், சொந்த கம்ப்யூட்டர் சென்டர், சென்னையில் பங்களா, நிலபுலன்கள் வருமானம் பத்தாயிரம். நல்ல குடும்பப்பாங்கும் கல்வியும் உடைய பெண்களின் பெற்றோர் தொடர்பு கொள்ளவும். பெட்டி எண் : 11153

* Alliance invited from Non-Haritha Iyer Girls for a Kerala Iyer Boy Brahacharanam, Bharani, 39 years, 162 cms, own Business, bachelor, economically sound. Subsect no bar. Decent marriage expected. Box No. 11154

* மாத்வ கன்னடம், கௌசிகம், விசாகம், வயது 27, பி. ஈ. (மெக்), டி.எம்.எஸ், 5'.10" வருட வருமானம் 1.05 லட்சம், உள்ள இளைஞருக்கு அழகான, அதே இனத்தைச் சேர்ந்த படித்த குடும்பப்பாங்கான பெண் தேவை. முழு குடும்ப விவரங்களுடனும், ஜாதகத்துடனும் தொடர்பு கொள்ளவும். பெட்டி எண் : 11155

* Alliance invited from Brahmins/Nairs for a Tamil speaking Nair Boy, 30, 170 cms, M.Sc., Defence Scientist, settled in North. Subsect no bar. Box No. 11156

* சைவ வேளாளர், ஒரே மகன், எம்.எஸ்ஸி (கணிதம்), சென்னையில் தனியார் கம்பெனியில் மாதம் ரூ. 4000/- சம்பளம் வாங்கும் 26 வயதுடைய நல்ல தோற்றம் கொண்ட மணமகனுக்கு டிகிரி படித்த, அழகான நல்ல குடும்பத்தைச் சேர்ந்த பெண் தேவை. ஜாதகத்துடன் அணுகவும். பெட்டி எண் : 11157

* Vadamal Kousika Thiruvadiral, 34, 175 cms, B.Sc., having Small Engineering Industry income Rs. 3000/- seeks decent employed Girl. Subsect no bar. Apply with horoscope and family details to Box No. 11158

* Alliance invited from P & T, Railways, LIC, Bank employed Girl, for Iyer, Vadama, Bharani, Athreya 36 years. 5'.9", B. A., fair, well employed drawing Rs. 4000/- + perks. In a Export Oriented Textile Mill in Udumalpet (Non-Transferable). Hails from well reputed family. Early marriage. Reply to Box No. 11159

* சைவப் பிள்ளை, (தமிழ்) பிறந்த தேதி 7.12.1968 திருவாதிரை நட்சத்திரம், 178 செ.மீ. பி. ஏ. ஹானர்ஸ், ரூ. 4200/- மத்திய அரசில் (புது தில்லியில்) பணிபுரியும் மணமகனுக்கு மத்திய அரசு, வங்கி, பொதுத் துறை, ஆசிரியராகப் பணிபுரியும் பட்டப் படிப்புள்ள பெண் தேவை. பெட்டி எண் : 11161

* Palghat Iyer, Vadamal, Viswamitra Gothram, Krithigai Star, 42, Bank Officer seeks goodlooking Graduate. Decent family details around 35. Apply to Box No. 11163

* தமிழ் விஸ்வகர்மா குலத்தைச் சேர்ந்த தற்பொழுது லண்டனில் நல்ல வேலையில் இருக்கும் டாக்டர் வரனுக்கு (வயது 31, உயரம் 160 செ.மீ., மாநிறம்) அதே இனத்தைச் சேர்ந்த நன்கு படித்த பெண் தேவை. ஜாதகத்துடன் விண்ணப்பிக்கவும். பெட்டி எண் : 11164

* Suitable alliance invited for well educated fair, handsome Andhra Kshatria (Raju) Boy 34, 5'.11", Gulf employed with clean habits, interested in fine arts from broad minded well cultured family. Willing to settle in Madras seeks fair, convent educated, homely, charming & affectionate Girl from well settled cultured family. Girl is the main consideration, caste no bar. Reply full details with horoscope to Box No. 11165

* Educated employed Girl for Thenkalai Iyengar Boy Kousika Magam, Technician in BPL Company, Madras, 32, 2000/- 163 cms. Reply with horoscope. Subsect no bar. Box No. 11166

* For Ashtasahasram Iyer Boy, Athraya, Utthiram, 30, 5'.7", M.Sc., Section Officer, South Central Railway from decent, Graduate, good looking Girl below 25. Apply with horoscope and family details to Box No. 11167

* Wanted preferably Vadama Iyer employed/unemployed Non-Bharadwaja Graduate good looking domestically trained Girl for Senior Finance Executive of a reputed firm 36, 165 cms, 5000/- Krithikai, B. Sc., C. A., intermediate. Reply to Box No. 11168

* வடகலை ஐயங்கார், பாரத்வாஜம், கிருத்திகை, 35 வயது, பி. காம்., இன்கம்டாக்ஸ் சேல்ஸ் டாக்ஸ், பிராக்டிஷனர், மாத வருமானம் ரூ. 4000/- உள்ள 5'.1" உயரமுள்ள வரனுக்கு மணப்பெண் தேவை. ஜாதகம் தேவை இல்லை. குடும்ப விவரங்களுடன் தொடர்பு கொள்ளவும். பெட்டி எண் : 11170

* Vadamal, B. Com., 33, 176 cms, Haritha Kettai Mars 8th House - employed reputed Pvt. Ltd. Co. Madras. Annual earnings Rs. 30,000/- seeks employed/ unemployed Girl - Subsect acceptable. Send horoscope with full Biodata and family details to Box No. 11171

* கன்னட மாத்வா, உபமன்ய வசிஷ்ட கோத்திரம், பனக நாடு, வயது 32, ரூ. 1800/- தனியார் கம்பெனியில் சேல்ஸ் ரெப்ரசன்டேடிவிற்கு நல்ல குடும்பத்தைச் சேர்ந்த அழகான குடும்பப் பாங்கான பெண் தேவை. உட்பிரிவுகள் சம்மதம். ஜாதகம், குடும்ப விவரங்களுடன் தொடர்பு கொள்ளவும். பெட்டி எண் : 11172

* பிரஹசரணம் லோஹித கோத்திரம், பூராடம், கை வருமானம், ரூ. 5000/- மாத வருமானமுள்ள (33, 5'.5", பி. காம், பையனுக்குக் குடும்பப்பாங்கான 25 - 28 வயதிற்குள் பெண் தேவை. உடன் திருமணம். எல்லா விவரங்களுடன் விண்ணப்பிக்கவும். பெண் +2 படித்து இருக்க வேண்டும். பெட்டி எண் : 11173

* Wanted only Vadamal with at least one Brother, fair, good looking, Height 160 cms, not employed for Boy aged 32 B. Sc., B. Tech. Engineer at Gulf. Decent immediate marriage required. Box No. 11174

* Arunthathiyar (Sc), lower middle class family, 28, B.E., 5300, Central Govt. Gazetted Officer Sathya Sai devotee, non-smoking, teetotaler, seeks alliance from educated, God fearing simple home loving Girls. Box No. 11175

* Alliance invited from non-Srivatsa Brahmin, fair, good looking Girl for Boy 27, 170 cms, Rs. 6000/, employed in Public Ltd. Co. in Managerial Cadre. Star Revathy, Vadama. Apply with horoscope and family details to Box No. 11176

Srivatsa, Vadama, Brahmin Boy 29, 170 cms, Rs. 2500/- Private employment requires alliance from employed Girl, Homely God fearing. Apply to Box No. 11177

* Wanted alliance for Vadama Boy Kousika Swathi 32, 160 cms, 4000/-, Graduate employed in Enfield India seeks goodlooking educated employed Girl from respected family subsect no bar. Reply with horoscope and details to Box No. 11178

* வடமாள் ஐயர், கௌசிக கோத்திரம், 27, கேட்டை, ஐ.டி.ஐ. படித்து எலக்ட்ரிகல் வேலையில் நல்ல திறமையுள்ள பையனுக்கு வேலை வாங்கிக் கொடுத்து அல்லது பிசினஸ் வைத்துக் கொடுக்கக் கூடிய வரன் தேவை. வரதட்சணை, எதிர்பார்ப்புகள் கிடையாது. நல்ல குடும்பத்துப் பெண்ணாக இருக்க வேண்டும். எளிய முறையில் திருமணம் போதும். பெட்டி எண் : 11179

* வன்னியகுல க்ஷத்திரியர், 28, பி.எஸ்ஸி., பூசம், சதர்ன் ரயில்வே, சென்னையில் பணிபுரியும் சொந்த வீடுள்ள ஒரே மகனுக்கு பொதுத் துறை, மத்திய/மாநில அரசு பணியிலுள்ள மணமகள் குடும்ப விவரம் மற்றும் ஜாதகத்துடன் விண்ணப்பிக்கவும். பெட்டி எண் : 11180

* Saiva Vellala 30, 158 cms, 1 Lakh per annum. B. Com., P. G. Dip. in Public Relations knows German. Self employed. Clean habits seeks Fair beautiful Girl. Must be vegetarian. Horoscope optional. Apply to Box No. 11181

* ஐயர், ஸ்மார்த்தான், பாரத்வாஜ கோத்திரம், உத்திரம், 35, 160 செ. மீ., ரூ. 2800/- பேங்கில் வேலை, படித்த, வேலைக்குச் செல்லும் பிரஹசரணம் வடமாள் பெண் தேவை. பெட்டி எண் : 11182

